# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்
தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி– 630003.

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# பி.லிட்., தமிழ்

## மூன்றாம் பருவம்

# 10733 - தமிழிலக்கிய வரலாறு

**Copy Right Reserved** **For Private Use Only**

**Author :**
**Prof . M. KARMEGAM**
Professor & Head (Retd),
Department of Tamil
Alagappa Govt. Arts College,
Karaikudi.

"The Copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

**Reviewer:**
**Dr. V. THIRUVENI**
Assistant Professor of Tamil,
Directorate of Distance Education,
Alagappa University,
Karaikudi -630003.

## பாடத் திட்டம் - பொருளடக்கம்

## தாள் 10733 – தமிழிலக்கிய வரலாறு

**நோக்கம் :**

**பண்டைய காலம் முதல் தற்காலம் வரை, தமிழகத்தில் இலக்கியங்களை பயன்படுத்திய வரலாற்றை தொகுத்துக் கூறுதல்**


**பிரிவு 1 : தமிழின் தொன்மை**

**கூறு 1 :** தமிழின் தொன்மை – தொல்காப்பியம் அமைப்பும் நூல் பொருளும் எழுத்து சொல் பொருள் என்ற மூன்றிலக்கணம் ஐந்தாக வளருதல் – பாட்டியல் இலக்கண நூல்கள் 1

**கூறு 2 :** தமிழகத்தில் சங்கமிருந்தமையின் வரலாறு – சங்கமிருந்தமைக்குச் சான்று – பதினெண்மேல் கணக்கு நூல்களும் அவற்றைப்பற்றிய குறிப்புகளும் – சங்க இலக்கியங்களின் தனிச்சிறப்பு 14

**கூறு 3 :** பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – அறநூல்கள்ள தோற்றத்திற்கான காரணங்கள் – வச்சிர நந்தியின் தமிழ்ச்சங்கம் – சமணர்களின் தமிழ்ப்பணி 37

**கூறு 4 :** தமிழ்க் காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – ஐம்பெருங்காப்பியம் - ஐஞ்சிறு காப்பியம் - பௌத்தர்களின் தமிழ்ப்பணி – பிற்காலச் சோழர் காலத்தில் காப்பிய வளர்ச்சி 60

**பிரிவு 2 : தமிழ்ப் பணி**

**கூறு 5 :** முதலாழ்வார்கள்– திருமழிசையாழ்வார் – திருமங்கையாழ்வார் – பெரியாழ்வார்– ஆண்டாள் – குலசேகரர் – தொண்டரடிப் பொடியாழ்வார் – திருப்பாணாழ்வார் – நம்மாழ்வார் – மதுரகவி 80

**கூறு 6 :** ஆழ்வார்களின் தமிழ்ப்பணி , பன்னிரு திருமுறை – சம்பந்தர் – திருநாவுக்கரசர் – சுந்தரர் –மாணிக்கவாசகர் – திருமூலர் 90

**கூறு 7 :** காரைக்காலம்மையார் – திருமுறைகண்ட வரலாறு – பாட்டியல் இலக்கண நூல்கள் 103

**கூறு 8 :** பிள்ளைத்தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் – பரணியின் தோற்றமும் வளர்ச்சியும் – கலம்பகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 108

**பிரிவு 3 : சிற்றிலக்கியம் - உரைநடை – சிறுகதை**

**கூறு 9 :** அந்தாதி மடல் கோவை போன்ற சிற்றிலக்கியங்களின் அமைப்பும் தோற்றமும்– இசுலாமியரின் சிற்றிலக்கியத் தமிழ்த் தொண்டு 115

**கூறு 10 :** உரைநடையின் தோற்றம் – உரை நூல்கள் தோன்றல் – நாடக இலக்கிய வளர்ச்சி – கீர்த்தனை,குறவஞ்சி நாடகங்கள் – தமிழிலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் இசைத்தமிழ் வளர்ச்சி – மேடை நாடகங்கள் 119

**கூறு 11 :** சிறுகதைகளின் வளர்ச்சி – வ.வே.சு. ஐயர் – புதுமைப்பித்தன் சிறுகதை வரலாற்றில் பெறுமிடம், ஜெயகாந்தன் சிறுகதைப் பணி பத்திரிக்கைகளும் சிறுகதைவளர்ச்சியும் 132

**பிரிவு 4 : புதினம் - கவிதை – புதுக்கவிதை**

**கூறு 12 :** மேலைநாட்டார் தொடர்பால் தமிழுக்குப் பரவிய இலக்கிய வடிவங்களில் நாவல் பெறும் முதன்மை – வேதநாயகம் பிள்ளையின் புதினங்கள் – புதினங்கள் வெவ்வேறு வகையான வடிவங்கள் 138

**கூறு 13 :** இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை – மரபுக் கவிதை – பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், வெ. இராமலிங்கம் பிள்ளை 145

**கூறு 14 :** கவிஞர் முடியரசன் – புதுக்கவிதை – ந. பிச்சமூர்த்தி, நா. காமராசன், கவிஞர் மேத்தா, அப்துல் ரகுமான், வைரமுத்து 152

**பிரிவு 1 - கூறு 1** **1**

1.1:தமிழின் தொன்மை

1.1.1 தமிழகத்தின் தொன்மை

1.1.2 அயல்நாட்டுத் தொடர்பு

1.1.3 தமிழகமும் வடஇந்தியாவும்

1.1.4 தமிழின் தனித்தன்மை

1.1.5 தமிழின் பெருமை

1.2 தொல்காப்பியம் அமைப்பு

1.2.1 தொல்காப்பியம்

1.2.2 தொல்காப்பியத்தின் காலம்

1.2.3 நூல்அமைப்பு

1.2.3.1 எழுத்து அதிகாரம

1.2.3.2 சொல்லதிகாரம்

1.2.3.3 பொருளதிகாரம் இநூலின் பொருள் இஎழுத்துக்களின் வகைஇபிறப்பு முதலானவை அகம் , புறம், மெய்ப்பாடு , உவமை

1.3 மூன்றிலக்கணம் ஐந்தாக வளருதல்

1.3.1 ஐந்திலக்கண நூல்கள்

1.3.2 வீரசோழியம்

1.3.3 இலக்கண விளக்கம்

1.3.4 தொன்னூல் விளக்கம்

1.3.5 முத்துவீரியம்

1.3.6 சுவாமிநாதம், நன்னூல், நேமிநாதம் , நம்பியகப் பொருள் ,புறப்பொருள் வெண்பாமாலை , யாப்பருங்கலக்காரிகை,தண்டியலங்காரம்

1.4 பாட்டியல் நூல்கள்

1.4.1 பாட்டியல் நூல்கள்

1.4.2 பன்னிரு பாட்டியல்

1.4.3 வெண்பாப் பாட்டியல்

1.4.4 பிற நூல்கள்

**கூறு 2.1** **14**

2.1 முச்சங்க வரலாறு

2.2 சங்கம் இல்லை என்பாரின் கருத்துகள்

2.3 மூன்று சங்கங்கள் இருந்தமை உண்மை

**கூறு 2.2**

2.1 எட்டுத்தொகை

2.1.1 அகநூல்கள் - நற்றிணை

2.1.2 குறுந்தொகை

2.1.3 ஐங்குறு நூறு

2.1.4 அகநானூறு

2.1.5 கலித்தொகை

2.1.6 பரிபாடல்

2.1.7 பதிற்றுப்பத்து

2.1.8 புறநானூறு

2.2 பத்துப்பாட்டு

2.2.1 பத்துப்பாட்டு

2.2.2 திருமுருகாற்றுப்படை

2.2.3 பொருநராற்றுப்படை

2.2.4 சிறுபாணாற்றுப்படை

2.2.5 பெரும்பாணாற்றுப்படை

2.2.6 கூத்தராற்றுப்படை

2.2.7 முல்லைப்பாட்டு

2.2.8 பட்டினப்பாலை

2.2.9 குறிஞ்சிப்பாட்டு

2.2.10 மதுரைக்காஞ்சி

2.2.11 நெடுநல்வாடை

**கூறு 2.3**

2.3.1 சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்பு

2.3.1.1 தாய்மை

2.3.1.2 தூய்மை

2.3.1.3 செம்மை

2.3.1.4 வடிவம்

2.3.1.5 பொருள்

2.3.1.6 மரபு

2.3.1.7 வாழ்க்கை

2.3.1.8 இயற்கை

2.3.1.9 உவமை, உள்ளுறை

2.3.1.10 உணர்ச்சிப் பாடல்கள

2.3.1.11 கற்பனை

2.3.1.12 உயர்ந்த கொள்கை

**கூறு 3 :** **37**

3.1 பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - அறிமுகம்

3.1.1 நாலடியார்

3.1.2 நான்மணிக்கடிகை

3.1.3 இனியவை நாற்பது

3.1.4 இன்னா நாற்பது

3.1.5 கார் நாற்பது

3.1.6 களவழி நாற்பது

3.1.7 ஐந்திணை ஐம்பது

3.1.8 ஐந்திணை எழுபது

3.1.9 திணைமொழி ஐம்பது

3.1.10 திணைமாலை நூற்றைம்பது

3.1.11 திருக்குறள்

3.1.12 திரிகடுகம்

3.1.13 ஆசாரக்கோவை

3.1.14 பழமொழி நானூறு

3.1.15 சிறுபஞ்சமூலம்

3.1.16 கைந்நிலை

3.1.17 முதுமொழிக்காஞ்சி

3.1.18 ஏலாதி

3.2 அறநூல்கள் தோற்றத்திற்கான காரணங்கள்

3.3 வச்சிரநந்தியின் தமிழ்ச்சங்கம்

3.4 சமணர்களின் தமிழ்ப்பணி

3.4.1 இலக்கண நூல்கள்

3.4.2 பெருங்காப்பியங்கள்

3.4.3 ஐஞ்சிறுகாப்பியங்கள்

3.4.4 அறநூல்கள்

3.4.5 உரைநூல்கள்

3.4.6 நிகண்டு நூல்கள்

3.4.7 சிற்றிலக்கியங்கள்

3.4.8 நூலாசிரியர்கள்

**கூறு 4 :** **60**

4.1 தமிழ்க்காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

4.1.1 பழங்காப்பியங்கள்

4.1.2 காப்பியங்கள் வகைப்பாடு

4.2 ஐம்பெருங்காப்பியம்

4.2.1 சிலப்பதிகாரம்

4.2.2 நூலின் அமைப்பும் கதையும்

4.2.3 சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கள்

4.2.4 மணிமேகலை

4.2.5 இரட்டைக் காப்பியம்

4.2.6 குண்டலகேசி

4.2.7 வளையாபதி

4.2.8 சீவகசிந்தாமணி

4.3 ஐஞ்சிறு காப்பியங்கள்

4.3.1 சூளாமணி

4.3.2 நீலகேசி

4.3.3 உதயணகுமார காவியம்

4.3.4 நாககுமார காவியம்

4.3.5 யசோதர காவியம்

4.4 பௌத்தர்களின் தமிழ்ப்பணி

4.4.1 பௌத்தக் காப்பியங்கள்

4.4.2 விம்பசாரக் கதை

4.4.3 சித்தாந்தத்தொகை

4.4.4 இலக்கணம்

4.5 பிற்காலச் சோழர் காலத்தில் காப்பிய வளர்ச்சி

4.5.1 பெரிய புராணம்

4.5.2 கம்பராமாயணம்

4.5.3 கந்தபுராணம்

4..5.4 பாரத நூல்கள்

**பிரிவு 2 - கூறு 5** **80**

5.1 ஆழ்வார்கள்

5.2 முதலாழ்வார் மூவர்

5.2.1 பொய்கையாழ்வார்

5.2.2 பூதத்தாழ்வார்

5.2.3 பேயாழ்வார்

5.3 திருமழிசை ஆழ்வார்

5.4 திருமங்கை ஆழ்வார்

5.5 பெரியாழ்வார்

5.6 ஆண்டாள்

5.7 குலசேகர ஆழ்வார்

5.8 தொண்டரடிப்பொடி ஆழ்வார்

5.9 திருப்பாணாழ்வார்

5.10 நம்மாழ்வார்

5.11 மதுரகவியாழ்வார்

**கூறு 6** **90**

6.1 ஆழ்வார்களின் தமிழ்ப்பணி

6.1.1 ஆழ்வார் பாடல்களின் தொகுப்பு

6.1.2 ஆழ்வார்களின் இலக்கியத் தொண்டு

6.2 : பன்னிரு திருமுறைகள்

6.2.1 பன்னிருதிருமுறைகள்

6.2.2 திருஞானசம்பந்தர்6.2.3 திருநாவுக்கரசர்

6.2.3 திருநாவுக்கரசர்

6.2.4 சுந்தரர்

6.2.5 மாணிக்கவாசகர்

6.2.6 திருமூலர்

**கூறு 7** **103**

7.1 காரைக்காலம்மையார்

7.2 திருமுறைகண்ட வரலாறு

7.3 பாட்டியல் இலக்கண நூல்கள்

7.3.1 பன்னிருபாட்டியல்

7.3.2 பிற்காலப் பாட்டியல் நூல்கள்

**கூறு 8** **108**

8.1 பிள்ளைத்தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்

8.1.1 காப்புப் பருவம்

8.1.2 தாலாட்டுப் பருவம்

8.1.3 செங்கீரைப் பருவம்

8.1.4 சப்பாணி, முத்த, வருகைப் பருவங்கள்

8.1.5 அம்புலிப் பருவம்

8.1.6 சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப் பருவங்கள்

8.1.7 நீராடல், அம்மானை, ஊசல் பருவங்கள்

8.2 பரணியின் தோற்றமும் வளர்ச்சியும்

8.3 கலம்பகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**பிரிவு 3 - கூறு 9** **115**

9.1 அந்தாதி

9.2 மடல்

9.3 கோவை

9.4 இசுலாமியரின் சிற்றிலக்கியத் தொண்டு

9.4.1 உமறுப்புலவர்

9.4.2 சவ்வாதுப்புலவர்

9.4.3 குணங்குடி மஸ்தான்

9.4.4 சர்க்கரைப் புலவர்

9.4.5 செய்குத்தம்பிப் பாவலர்

**கூறு 10** **119**

10.1 உரைநடையின் தோற்றம்

10.1.1 உரைநூல்கள்

10.1.2 ஐரோப்பியர் காலத்தில் உரைநடை வளர்ச்சி

10.1.3 வீரமா முனிவரும் உரைநடையும்

10.1.4 உரைநூல் தோன்றல்

10.1.5 இலக்கண உரை

10.1.6 இலக்கிய உரைகள்

10.1.7 மணிப்பிரவாள உரை

10.2 நாடக இலக்கிய வளர்ச்சி

10.2.1 17ஆம் நூற்றாண்டில் நாடகம்

10.2.2 18ஆம் நூற்றாண்டில் நாடகம்

10.2.3 19ஆம் நூற்றாண்டு

10.2.4 பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

10.2.5 சூரியநாராயண சாஸ்திரியார்

10.2.6 இருபதாம் நூற்றாண்டு

10.2.7 கீர்த்தனை நாடகம்

10.2.8 குறவஞ்சி

10.3 நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம்

10.4 இசைத்தமிழ் வளர்ச்சி

10.5 மேடை நாடகங்கள்

**கூறு 11.1** **132**

11.1.1 சிறுகதை

11.1.2 சிறுகதையின் தோற்றம்

11.1.3 வ.வே.சு ஐயர்

11.1.4 புதுமைப்பித்தன்

11.1.5 ஜெயகாந்தன்

11.1.6 பத்திரிகைகளும் சிறுகதை வளர்ச்சியும்

**பிரிவு 4 கூறு 12 :** **138**

12.1 வளர்ச்சி நிலை

12.2 வேதநாயகம் பிள்ளையின் புதினங்கள்

12.3 புதினங்களின் வெவ்வேறு வகையான வடிவங்கள்

12.4 மேனாட்டு அறிஞர்கள் தமிழ்ப்பணி

12.4.1 ராபர்ட் டி நொபிலி

12.4.2 சீகன் பால்கு

12.4.3 வீரமா முனிவர்

12.4.4 எல்லீசர்

12.4.5 ரேணியஸ்

12.4.6 டாக்டர் ஜி.யு.போப்

12.4.7 கால்டுவெல் ஐயர்

12.4.8 பிற அறிஞர்கள்

12.4.9 தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள்

**கூறு 13** **145**

13.1 மரபுக்கவிதை

13.1.1 மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

13.1.1.1 தேசியக் கவிஞர்

13.1.1.2 தமிழ்க் கவிஞர்

13.1.1.3 சமுதாயக் கவிஞர்

13.1.1.4 பக்திக் கவிஞர்

13.1.2 பாரதிதாசன்

13.1.2.1 காப்பியக் கவிஞன்

13.1.2.2 தமிழ்க் கவிஞன்

13.1.2.3 கற்பனைக் கவிஞன்

13.1.2.4 சமூகக் கவிஞன்

13.1.3 நாமக்கல் கவிஞர்

**கூறு 14** **152**

14.1 முடியரசன்

14.2 புதுக்கவிதை

14.2.1 ந.பிச்சமூர்த்தி

14.2.2 நா. காமராசன்

14.2.3 மு. மேத்தா

14.2.4 அப்துல்ரகுமான் கவிதைகள்

14.2.5 வைரமுத்து

# பிரிவு 1 - கூறு 1.1:தமிழின் தொன்மை



குறிப்பு

## நோக்கம் - தமிழ் பற்றி அறிதல்

## 1.1 தமிழின் தொன்மை

இந்திய மொழிகளில் திராவிட மொழிகள் தொன்மையானவை. அவற்றுள் தமிழ்மொழி முதன்மையானதும் மிகப் பழமையானதும் ஆகும். இதனை வரலாற்றாசிரியர்கள் விளக்கிக் காட்டியுள்ளனர். தமிழ் என்ற சொல்லே திராவிடம் எனத் திரிந்தது என்றும் கூறுகின்றனர்.

### 1.1.1. தமிழகத்தின் தொன்மை :

தமிழ் பேசிய மக்கள் தமிழகத்தின் மூத்த குடிமக்கள் ஆவர். தமிழகத்தில் உள்ள ஆறுகள், அருவிகள், நகரங்கள், கிராமங்கள் போன்றவற்றிற்கு வழங்கும் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவே அமைந்துள்ளமையைக் கொண்டே இதனை அறியலாம். மனித இனம் தென்னிந்தியாவிலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டும். பிறகுதான் உலகம் முழுவதும் இங்கிருந்தே பரவியிருக்க வேண்டும் என்று ஈவான்ஸ் என்ற அறிஞரும் குறிப்பிடுகிறார்.

### 1.1.2. அயல்நாடுகளில் தமிழ் :

தமிழ்நாட்டு மக்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். அயல்நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பைத் தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. அயல்நாட்டாரின் குறிப்புகளும் தெரிவிக்கின்றன. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் என்ற அரசருக்குத் தமிழ் நாட்டிலிருந்து மயில்தோகை, யானைத் தந்தம், நறுமணப் பொருள்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

ரைஸ் (Rice), சாண்டல் (Sandal) என்னும் சொற்கள் அரிசி, சந்தனம் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபுகள் ஆகும். இச்சொற்கள் கிரேக்க மொழியின் வழியாக ஆங்கிலத்திற்குச் சென்றுள்ளன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னரே அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் பாபிலோனியாவிற்கு ஏற்றுமதி செய்யப் பெற்றுள்ளன. ரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்தில் ரோம நாட்டுடன் தமிழ்நாடு நல்ல தொடர்பு கொண்டிருந்திருக்கிறது. கடல் வணிக உறவு இருந்துள்ளது. ரோம நாணயங்கள் தமிழ்நாட்டில் புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்துள்ளன. பிலிப்பைன்ஸ் தீவுகளுடன் தமிழகம் வணிகக் தொடர்பு கொண்டிருந்ததை அறியமுடிகிறது. பிளைநி, பெரிப்ளூஸ் போன்ற மேனாட்டவரின் குறிப்புகள் தமிழர்கள் கொண்ட வணிகத் தொடர்பைக் குறிப்பிடுகின்றன. தாலமி என்பவர் சேரர், சோழர், பாண்டியர்களைப் பற்றியும் கருவூர், நாகப்பட்டினம், புதுச்சேரி போன்ற ஊர்களைப் பற்றியும் தம்முடைய குறிப்புகளில் குறித்துள்ளார்.

கி.மு. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளிலேயே சுமித்திராவுக்கும் தமிழகத்திற்கும் இடையே தொடர்பு இருந்தது என்பதை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சயாம் நாட்டில் மணிமேகலை என்கிற கடல் தேவதையைக் கடல்தெய்வமாகக் கருதி வழிபடுவது குறிக்கத் தக்கதாகும்.

### 1.1.3 தமிழகமும் வட இந்தியாவும் :

வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே தமிழகத்திற்கும் வட இந்தியாவிற்கும் பல தொடர்புகள் இருந்திருக்கின்றன. வால்மீகி இராமாயணத்தில் தமிழகத்தின் மூவேந்தர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இராமாயணத்தில் குறிக்கப் பெற்றுள்ள கவாடம் என்பது பாண்டியர்களின் கபாடபுரத்தைக் குறிப்பதாகும். திரௌபதியின் திருமண விழாவில் சேர சோழ பாண்டியர்கள் கலந்து கொண்டனர் என்னும் குறிப்பு மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது.

பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற சேரமன்னன் பாரதப் போரில் ஈடுபட்டிருந்த வீரர்களுக்கு உணவளித்தான் என்று புறநானூறு கூறுகின்றது.

வடநாட்டு மன்னன் சந்திரகுப்தனின் அமைச்சன் சாணக்கியன் கபாடபுரத் துறையில் குளித்த முத்தின் வகையைப் பாண்டிய கபாடகம் என்று குறிப்பிடுகிறார். பாடலிபுத்திரம் பற்றியும் நந்தர்கள், மௌரியர்கள் பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. வடமொழி இலக்கண அறிஞர் காத்தியாயனர் சோழ பாண்டியர்களைப் பற்றித் தம் நூலில் குறிப்பிடுகிறார். இந்தியாவை ஆண்ட அசோகர் தமிழக அரசர்கள் தனி அரசு புரிவதாகத் தம் கல்வெட்டில் குறித்துள்ளார். இக்குறிப்புகள் வடநாட்டோடு தமிழகம் கொண்டிருந்த தொடர்பை உணர்த்துகின்றன.

### 1.1.4 தமிழின் தனித்தன்மை :

திராவிட மொழிகளில் தமிழ் தன்தனித் தன்மையை இழக்காமல் விளங்குகிறது. தெலுங்கு மொழி சங்க காலத்திலேயே பிரிந்துவிட்டது. கன்னடம் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் பிரிந்தது என்பர். மலையாள மொழி மிகப்பிற்காலத்தில் தமிழிலிருந்து பிரிந்தது என்பர். இவ்வாறு பிரிந்த மொழிகள் வடமொழியோடு கலந்து தத்தம் இயல்பை இழந்தன. தமிழ் மட்டுமே தனித்துவமான தொன்மையுடன் திகழ்கிறது எனலாம்.

வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்தபோதும் வடிவம் மாறித் தமிழ்ச் சொற்கள் போலவே திரிந்து விட்டன. திராவிட மொழிகளில் வழங்கும் சொற்கள் பலவும் தமிழ்மொழியில் வழங்குகின்றன. கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் வழங்கும் நாடுகளில் மிகப் பழமையான கல்வெட்டுகள் வடமொழியில்தான் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் தூய தமிழில் பழங்கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன எனலாம். மலையாளக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியின் இலக்கண இயல்புகளையும் மரபுச் சொற்களையும் தழுவி விளங்குகின்றன. செந்தமிழ் என்னும் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்த நிலை தமிழின் தொன்மையை

வலியுறுத்தும் செய்தியாகும்; தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய நூல்கள் மிகமிகப் பழமையானவை என்று ஜெ.பிளாக் என்ற மேனாட்டு அறிஞர் குறிப்பிடுகிறார். இதனால் தமிழின் தனித் தன்மையை அறிய முடிகிறது.

## 1.1.5 தமிழின் பெருமை :

கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற தொன்மையான மொழிகள் வழக்கொழிந்து போயின. ஆனால் தமிழ் மட்டும் தான் உலகவழக்கு அழியாமல் உயர்தனிச் செம்மொழியாக விளங்குகிறது. தமிழில் உள்ள இலக்கிய இலக்கணங்கள் பழமையானவை. பெஸ்கி, போப் போன்ற அறிஞர்கள் தமிழில் வழங்கும் அகத்துறை இலக்கியங்கள் போன்று உலகில் வேறு எங்கும் இல்லை என்கின்றனர். மனித உள்ளத்தை வளப்படுத்தும் பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியில் மட்டுமே சிறப்பாக உள்ளன. வணிகத்திற்கு ஆங்கிலம், தூதிற்குப் பிரெஞ்சு; காதலுக்கு இத்தாலியம்; தத்துவத்திற்கு ஜெர்மானியம்; பக்திக்குத் தமிழ் என்று தனிநாயகம் அடிகள் தமிழைப் பாராட்டுகிறார். இத்தகைய சிறப்புப் பெற்ற தமிழில் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர், இசுலாமியர் என எல்லா மதத்தினரும் இலக்கியங்கள் படைத்துள்ளனர் என்பது தமிழுக்கு மேலும் சிறப்பைச் சேர்ப்பதாகும்.

## 2 மதிப்பெண் வினாக்கள் :

**1. தமிழ்நாடு பற்றிய குறிப்புள்ள வட நூல்கள் யாவை ?**

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் தமிழ்நாடு பற்றிக் குறிக்கின்றன.

**2.பாரதப் போரில் உணவளித்த தமிழ் மன்னன் யார் ?**

பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப்போரில் உணவளித்த தமிழ் மன்னன் ஆவான்.

**3.தனிநாயகம் அடிகள் தமிழை எவ்வாறு பாராட்டுகிறார் ?**

வணிகத்திற்கு ஆங்கிலம், தூதிற்குப் பிரெஞ்சு; காதலுக்கு இத்தாலியம்; தத்துவத்திற்கு ஜெர்மானியம்; பக்திக்குத் தமிழ் என்று தனிநாயகம் அடிகள் தமிழைப் பாராட்டுகிறார்.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1.தமிழகமும் வடஇந்தியாவும் கொண்டிருந்த தொடர்பினை விளக்கு.**

வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே தமிழகத்திற்கும் வட இந்தியாவிற்கும் பல தொடர்புகள் இருந்திருக்கின்றன. வால்மீகி இராமாயணத்தில் தமிழகத்தின் மூவேந்தர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இராமாயணத்தில் குறிக்கப் பெற்றுள்ள கவாடம் என்பது பாண்டியர்களின் கபாடபுரத்தைக் குறிப்பதாகும். திரௌபதியின் திருமண விழாவில் சேர சோழ பாண்டியர்கள் கலந்து கொண்டனர் என்னும் குறிப்பு மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது.

பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற சேரமன்னன் பாரதப் போரில் ஈடுபட்டிருந்த வீரர்களுக்கு உணவளித்தான் என்று புறநானூறு கூறுகின்றது.

வடநாட்டு மன்னன் சந்திரகுப்தனின் அமைச்சன் சாணக்கியன் கபாடபுரத் துறையில் குளித்த முத்தின் வகையைப் பாண்டிய கபாடகம் என்று குறிப்பிடுகிறார். பாடலிபுத்திரம் பற்றியும் நந்தர்கள், மௌரியர்கள் பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. வடமொழி இலக்கண அறிஞர் காத்தியாயனர் சோழ பாண்டியர்களைப் பற்றித் தம் நூலில் குறிப்பிடுகிறார். இந்தியாவை ஆண்ட அசோகர் தமிழக அரசர்கள் தனி அரசு புரிவதாகத் தம் கல்வெட்டில் குறித்துள்ளார். இக்குறிப்புகள் வடநாட்டோடு தமிழகம் கொண்டிருந்த தொடர்பை உணர்த்துகின்றன.

**2.தமிழின் தனித்தன்மை பற்றிக் கூறு.**

திராவிட மொழிகளில் தமிழ் தன்தனித் தன்மையை இழக்காமல் விளங்குகிறது. தெலுங்கு மொழி சங்க காலத்திலேயே பிரிந்துவிட்டது. கன்னடம் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் பிரிந்தது என்பர். மலையாள மொழி மிகப்பிற்காலத்தில் தமிழிலிருந்து பிரிந்தது என்பர். இவ்வாறு பிரிந்த மொழிகள் வடமொழியோடு கலந்து தத்தம் இயல்பை இழந்தன. தமிழ் மட்டுமே தனித்துவமான தொன்மையுடன் திகழ்கிறது எனலாம்.

வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்தபோதும் வடிவம் மாறித் தமிழ்ச் சொற்கள் போலவே திரிந்து விட்டன. திராவிட மொழிகளில் வழங்கும் சொற்கள் பலவும் தமிழ்மொழியில் வழங்குகின்றன. கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் வழங்கும் நாடுகளில் மிகப் பழமையான கல்வெட்டுகள் வடமொழியில்தான் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் தூய தமிழில் பழங்கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன எனலாம். மலையாளக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியின் இலக்கண இயல்புகளையும் மரபுச் சொற்களையும் தழுவி விளங்குகின்றன. செந்தமிழ் என்னும் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்த நிலை தமிழின் தொன்மையை வலியுறுத்தும் செய்தியாகும்; தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய நூல்கள் மிகமிகப் பழமையானவை என்று ஜெ.பிளாக் என்ற மேனாட்டு அறிஞர் குறிப்பிடுகிறார். இதனால் தமிழின் தனித் தன்மையை அறிய முடிகிறது.

## 10 மதிப்பெண் வினாக்கள் :

**1.தமிழின் தொன்மை பற்றி விளக்கிக் கூறு.**

தமிழின் சிறப்பு முதல் தமிழின் பெருமை என்பது வரையுள்ள செய்திகளை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

1. தமிழிலிருந்து பிரிந்த மொழிகள் யாவை ?
2. மணிமேகலையைத் தெய்வமாக வழிபட்ட நாடு எது ?
3. தமிழகத்திலிருந்து பாபிலோனியாவிற்கு ஏற்மதியான பொருள்கள் யாவை ?
4. தமிழ்நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த நாணயங்கள் எவை ?
5. கபாடபுரத்தைக் குறிப்பிடும் வடநாட்டு அமைச்சன் யார்?

# பிரிவு 1 - கூறு 1.2 : தொல்காப்பியம் - அமைப்பும் - நூல்பொருளும்

## 1.2.1 தொல்காப்பியம் :

தமிழ்மொழியில் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் ஆகும். இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார். இந்நூலுக்குப் பனம்பாரனார் என்பவர் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். இவர் தொல்காப்பியருடன் பயின்றவர் என்று கூறப்பெறுகின்றது. தமிழ் வழங்கிய எல்லையை

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்"

என்று இப்பாயிரம் சுட்டுகிறது.

பேச்சுவழக்கு, செய்யுள் வழக்கு இவற்றை ஆராய்ந்து எழுத்து, சொல், பொருள் மூன்றையும் பற்றிச் செந்தமிழ் வழங்கும் நாட்டை எல்லையாகக் கொண்ட பாண்டிய மன்னன் அவையிலே அதங்கோட்டு ஆசான் என்பவருக்கு எழுத்துமுறை காட்டி எழுதப்பெற்றது தொல்காப்பியம் என்கிறது பாயிரம்.

தொல்காப்பியம் எழுதப்படுவதற்கு முன்னரே இலக்கண நூல் இருந்தது என்பதையும் இந்நூல்வழி அறியலாம்.அகத்தியர் என்பவரின் பன்னிரண்டு மாணவர்களில் தொல்காப்பியரும் ஒருவர். இவர் தலைமாணாக்கராகத் திகழ்ந்தார் என்று கருதப் பெறுகிறார். இடைச்சங்க காலத்து நூலாகத் தொல்காப்பியம் குறிக்கப்பெறுகிறது. ஐந்திரம் என்ற வடமொழி இலக்கண நூலை நன்கு அறிந்தவர் தொல்காப்பியர் என்பதும் பாயிரத்தின் வழிச் சுட்டப்பெறுகிறது.

## 1.2.2 தொல்காப்பியத்தின் காலம் :

தொல்காப்பியர் பல இடங்களில் என்ப, மொழிப, என்றிசினோரே, என்மனார் புலவர் என்று குறிப்பிடுவதால் இவர் காலத்திற்கு முன்பே பல இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. சங்க நூல்களுக்கெல்லாம் முந்தியதாகத் தொல்காப்பியம் திகழ்கிறது. எனவே கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியதாகக் கருதப்படுகிறது.

## 1.2.3 நூல் அமைப்பு :

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களை உடையது. 1610 சூத்திரங்களைக் கொண்டது. பொது விதிகளை முன்னர்க் கூறிப் பின்னர் சிறப்பு விதிகளை எடுத்துரைத்து முடிவில் புறநடை விதி கூறுகிற அமைப்பை இந்நூலில் காண முடிகிறது.

### 1.2.3.1 எழுத்ததிகாரம் :

நூல்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்று எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. தமிழ்மொழியின் முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள், உயிர் எழுத்து, மெய்யெழுத்தின் வகை, சுட்டெழுத்து, வினா எழுத்து ஆகியவையும் மொழிமுதல் எழுத்து, மொழி இறுதிஎழுத்து ஆகியவையும் இவ்வதிகாரத்தில் பேசப்பெறுகின்றன. எழுத்துக்களின் பிறப்பு, புணர்ச்சி, என்ற பகுதிகளும் இடம்பெறுகின்றன.

### 1.2.3.2 சொல்லதிகாரம் :

கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்னும் ஒன்பது இயல்கள் சொல்லதிகாரத்தில் உள்ளன. திணை, பால், எண், இடம், வேற்றுமை வகை, வேற்றுமை மயக்கம், பெயர் வகைகள், வினை வகைகள், பகுபத உறுப்புகள், இடைச் சொற்கள், உரிச்சொற்கள்,இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் போன்ற பல இலக்கண நுட்பங்கள் இவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

### 1.2.3.3 பொருளதிகாரம் :

அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பது இயல்களைக் கொண்டது பொருளதிகாரம். அகம், புறம் என்னும் திணைகளையும், மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு ஆகியவற்றையும் பொருளதிகாரம் விரித்துரைக்கிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்று அகத்திணை பகுக்கப்படுகிறது. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்; கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். பிறதிணைகள் அன்பின் ஐந்திணை எனப்படும். இவற்றுக்கு நிலம், பொழுது என முதற்பொருள் வகுக்கிறார் தொல்காப்பியர்; உரிப்பொருள், கருப்பொருள் என்ற பகுப்பினையும் காட்டுகிறார்.

புறத்திணையை ஏழு பிரிவுகளாகச் சுட்டுகிறார் தொல்காப்பியர். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை. தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. மெய்ப்பாட்டியலில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டுவகைச் சுவைகளைப் புலப்படுத்துகிறார்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

## 2 மதிப்பெண் வினாக்கள் :

**1.தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவர் யார்?**

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவர் பனம்பாரனார்.

**2.தமிழகத்தின் எல்லை எது?**

வடக்கே வடவேங்கடம், தெற்கே தென்குமரி என்று தமிழகத்தின் எல்லை கூறப்பட்டுள்ளது.

**3.தொல்காப்பியம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது? ஒவ்வொன்றிலும் உள்ள இயல்கள் எத்தனை?**

தொல்காப்பியம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொன்றும் அதிகாரம் எனப்படுகின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்,பொருளதிகாரம் என்பவை அவை. அவை ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்கள் உள்ளன. மொத்தம் 27 இயல்கள் உள்ளன.

**4. தொல்காப்பிய உரையாசிரியர்கள் யார் யார்?**

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஆவர்.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1.தொல்காப்பியத்தின் அமைப்பினை விளக்குக.**

**நூல் அமைப்பு :**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களை உடையது. 1610 சூத்திரங்களைக் கொண்டது. பொது விதிகளை முன்னர்க் கூறிப் பின்னர் சிறப்பு விதிகளை எடுத்துரைத்து முடிவில் புறநடை விதி கூறுகிற அமைப்பை இந்நூலில் காண முடிகிறது.

**எழுத்ததிகாரம் :**

நூல்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்று எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. தமிழ்மொழியின் முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள், உயிர் எழுத்து, மெய்யெழுத்தின் வகை, சுட்டெழுத்து, வினா எழுத்து ஆகியவையும் மொழிமுதல் எழுத்து, மொழி இறுதிஎழுத்து ஆகியவையும் இவ்வதிகாரத்தில் பேசப்பெறுகின்றன. எழுத்துக்களின் பிறப்பு, புணர்ச்சி, என்ற பகுதிகளும் இடம்பெறுகின்றன.

**சொல்லதிகாரம் :**

கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்னும் ஒன்பது இயல்கள் சொல்லதிகாரத்தில் உள்ளன. திணை, பால், எண், இடம், வேற்றுமை வகை, வேற்றுமை மயக்கம், பெயர் வகைகள், வினை வகைகள், பகுபத உறுப்புகள், இடைச் சொற்கள், உரிச்சொற்கள், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் போன்ற பல இலக்கண நுட்பங்கள் இவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

**பொருளதிகாரம் :**

அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பது இயல்களைக் கொண்டது பொருளதிகாரம். அகம், புறம் என்னும் திணைகளையும், மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு ஆகியவற்றையும் பொருளதிகாரம் விரித்துரைக்கிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்று அகத்திணை பகுக்கப்படுகிறது. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்; கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். பிறதிணைகள் அன்பின் ஐந்திணை எனப்படும். இவற்றுக்கு நிலம், பொழுது என முதற்பொருள் வகுக்கிறார் தொல்காப்பியர்; உரிப்பொருள், கருப்பொருள் என்ற பகுப்பினையும் காட்டுகிறார்.

புறத்திணையை ஏழு பிரிவுகளாகச் சுட்டுகிறார் தொல்காப்பியர். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை. தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. மெய்ப்பாட்டியலில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டுவகைச் சுவைகளைப் புலப்படுத்துகிறார்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

## 10 மதிப்பெண் வினாக்கள் :

**1.தொல்காப்பியத்தின் காலம் மற்றும் சிறப்புக் குறித்து எழுதுக.**

விடை : தொல்காப்பியம் என்ற தலைப்பில் தொடங்கி நிறைவு வரி முடிய எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

**1. அகத்திணை எவ்வாறு பகுக்கப்படுகிறது ?**

**2. புறத்திணையின் பிரிவுகள் யாவை ?**

**3.எழுத்ததிகாரத்தில் இடம்பெறும் இயல்கள் யாவை ?**

**4. சொல்லதிகாரத்தில் இடம்பெறும் இயல்கள் யாவை ?**

**5. பொருளதிகாரத்தில் இடம்பெறும் இயல்கள் யாவை ?**

# பிரிவு 1 - கூறு 1.3 : எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிலக்கணம்ஐந்தாக வளருதல்

**நோக்கம் : ஐந்து இலக்கண நூல்களை அறிதல்**

தமிழில் எழுத்து, சொல், பொருள் என்பனவற்றிற்கு இலக்கணம் கூறிய முதல் நூல் தொல்காப்பியம் ஆகும். பொருள் பற்றிய இலக்கணம் தமிழுக்கே உரிய சிறப்பிலக்கணம் ஆகும். பின்னர் இவ்விலக்கணப் பகுதிகளுக்கென்று தனித்தனியான நூல்களும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன பற்றிய ஐந்திலக்கண நூல்களும் தோன்றின. அவற்றை விரிவாகக் காணலாம்.

## 1.3.1 ஐந்திலக்கண நூல்கள் :

இவற்றில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு பகுதிகளோடு பொருளதிகாரம் என்ற பகுதியையும் கொண்டதாகும். பொருளதிகாரத்தில் அகப்பொருள், புறப்பொருள் பற்றிப் பொருளிலக்கணமும் உவமையியலில் அணியிலக்கணமும் செய்யுளியலில் யாப்பிலக்கணமும் கூறுவதால் ஐந்திலக்கண நூல்களில் முதன்மையான நூல் தொல்காப்பியம் எனலாம்.

## 1.3.2 வீரசோழியம் :

பிற்காலத்தில் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் சில எழுதப் பெற்றன. பொன்பற்றி என்னும் ஊரில் பிறந்த புத்தமித்திரர் என்பவரால் வீரசோழன் என்பவனின் பெயரில் எழுதப் பெற்றது வீரசோழியம் ஆகும். பெருந்தேவனார் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

## 1.3.3 இலக்கண விளக்கம் :

அடுத்து இலக்கண விளக்கம் என்ற நூல் தோன்றியது. இதனை எழுதியவர் வைத்தியநாத தேசிகர். குட்டித் தொல்காப்பியம் என்ற சிறப்புப் பெயர் இந்நூலுக்கு வழங்குகிறது.

## 1.3.4 தொன்னூல் விளக்கம் :

இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ்கற்ற வீரமாமுனிவர் எழுதியது தொன்னூல் விளக்கம்.

## 1.3.5 முத்துவீரியம் :

15 இயல்களையும் 1228 நூற்பாக்களையும் கொண்ட முத்துவீரியம் என்னும் நூல் திருச்சி உறையூரில் வாழ்ந்த முத்துவீரப்ப உபாத்தியாயரால் எழுதப்பெற்றது. திருப்பாற்கடல்நாதன் கவிராயர் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

## 1.3.6 சுவாமிநாதம் :

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக் குறிச்சியில் பிறந்த சுவாமிநாதக் கவிராயரால் எழுதப்பெற்றது.

பிற்காலத்தில் எழுத்து, சொல் இரண்டிற்கு மட்டும் பவணந்தி முனிவர் எழுதிய நன்னூல், நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் குணவீர பண்டிதர் எழுதிய நேமிநாதம், சுவாமிநாததேசிகர் எழுதிய இலக்கணக் கொத்து ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

அகப்பொருளுக்கு இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், மாறன் அகப்பொருள் போன்ற நூல்கள் எழுந்தன. இறையனார் என்ற புலவர் எழுதியது இறையனார் அகப்பொருள். நற்கவிராச நம்பி என்பவரால் எழுதப் பெற்றது நம்பியகப் பொருள்.

புறப்பொருளுக்கு ஐயனாரிதனார் எழுதிய புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடத்தக்க நூலாகும். பன்னிரு படலம் என்னும் நூலைத் தழுவிப் பன்னிரண்டு புறத்திணைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

யாப்பிலக்கணத்திற்கென்று யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்று இரண்டு நூல்கள் அமிர்த சாகரர் என்பவரால் எழுதப்பெற்றுள்ளன.

அணி இலக்கணம் பற்றித் தண்டி என்பவரால் எழுதப்பெற்ற தண்டியலங்காரம் என்னும் நூல் உள்ளது. காவியதர்சம் என்ற வடமொழி நூலினைப் பின்பற்றி இந்நூல் எழுதப்பெற்றது என்பர்.

## 2 மதிப்பெண் வினாக்கள் :

**1. ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் யாவை ?**

வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியவை ஐந்திலக்கணம் கூறும் நூல்களாகும்.

**2.குட்டித் தொல்காப்பியம் எனப்படும் நூல் எது ?**

இலக்கண விளக்கம் என்னும் நூல் குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப் பெறுகிறது.

**3.யாப்பிலக்கணம் கூறும் நூல்கள் யாவை ?**

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல்கள் யாப்பிலக்கணம் கூறுகின்றன.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1. பிற்கால இலக்கண நூல்கள் பற்றி எழுதுக.**

**வீரசோழியம் :**

பிற்காலத்தில் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் சில எழுதப் பெற்றன. பொன்பற்றி என்னும் ஊரில் பிறந்த புத்தமித்திரர் என்பவரால் வீரசோழன் என்பவனின் பெயரில் எழுதப் பெற்றது வீரசோழியம் ஆகும். பெருந்தேவனார் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

**இலக்கண விளக்கம் :**

அடுத்து இலக்கண விளக்கம் என்ற நூல் தோன்றியது. இதனை எழுதியவர் வைத்தியநாத தேசிகர். குட்டித் தொல்காப்பியம் என்ற சிறப்புப் பெயர் இந்நூலுக்கு வழங்குகிறது.

**தொன்னூல் விளக்கம் :**

இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ்கற்ற வீரமாமுனிவர் எழுதியது தொன்னூல் விளக்கம்.

**முத்துவீரியம் :**

15 இயல்களையும் 1228 நூற்பாக்களையும் கொண்ட முத்துவீரியம் என்னும் நூல் திருச்சி உறையூரில் வாழ்ந்த முத்துவீரப்ப உபாத்தியாயரால் எழுதப்பெற்றது. திருப்பாற்கடல்நாதன் கவிராயர் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

**சுவாமிநாதம் :**

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக் குறிச்சியில் பிறந்த சுவாமிநாதக் கவிராயரால் எழுதப்பெற்றது.

பிற்காலத்தில் எழுத்து, சொல் இரண்டிற்கு மட்டும் பவணந்தி முனிவர் எழுதிய நன்னூல், நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் குணவீர பண்டிதர் எழுதிய நேமிநாதம், சுவாமிநாததேசிகர் எழுதிய இலக்கணக் கொத்து ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

அகப்பொருளுக்கு இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், மாறன் அகப்பொருள் போன்ற நூல்கள் எழுந்தன. இறையனார் என்ற புலவர் எழுதியது இறையனார் அகப்பொருள். நற்கவிராச நம்பி என்பவரால் எழுதப் பெற்றது நம்பியகப் பொருள்.

புறப்பொருளுக்கு ஐயனாரிதனார் எழுதிய புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடத்தக்க நூலாகும். பன்னிரு படலம் என்னும் நூலைத் தழுவிப் பன்னிரண்டு புறத்திணைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

யாப்பிலக்கணத்திற்கென்று யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்று இரண்டு நூல்கள் அமிர்த சாகரர் என்பவரால் எழுதப்பெற்றுள்ளன.

அணி இலக்கணம் பற்றித் தண்டி என்பவரால் எழுதப்பெற்ற தண்டியலங்காரம் என்னும் நூல் உள்ளது. காவியதர்சம் என்ற வடமொழி நூலினைப் பின்பற்றி இந்நூல் எழுதப்பெற்றது என்பர்.

**பயிற்சி வினாக்கள் :**

1. **புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் யார் ?**
2. **புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைகள் எத்தனை ?**
3. **தொன்னூல் விளக்கத்தை எழுதியவர் யார் ?**
4. **சுவாமிநாத தேசிகர் எழுதிய இலக்கண நூல் எது ?**

# பிரிவு 1 - கூறு : 1.4 பாட்டியல் இலக்கண நூல்கள்



## 1.4.1 பாட்டியல் நூல்கள்

தொல்காப்பியர் மூன்றாகப் பகுத்திருந்த இலக்கணம் பின்னர் ஐந்தாக வளர்ச்சி பெற்றது. அதன் பின்னர் ஒவ்வோர் இலக்கணத்திற்கும் ஒவ்வொரு நூல் எழுந்ததையும் காணலாம். அந்த வரிசையில் யாப்பிற்கென்றே தோன்றிய நூல்கள் பாட்டியல் நூல்கள் ஆகும்.

பாட்டியல் என்பது புதிதாகத் தோன்றிய இலக்கண நூல்; சிற்றிலக்கியங்களுக்கான இலக்கணங்களைக் கூறுவது பாட்டியல் நூல்களாகும். நான்கு வருண வேறுபாடுகளுக்கு ஏற்றபடி பாட்டின் எண்ணிக்கையும் அமைய வேண்டிய இலக்கணம் கூறுகிறது.

## 1.4.2 பன்னிரு பாட்டியல் :

இந்திர காளியார் முதலான பல புலவர்களால் செய்யப் பெற்றது. 96 வகைப் பிரபந்தங்களின் இலக்கணம் இந்நூலில் இடம் பெறுகிறது.

## 1.4.3 வெண்பாப் பாட்டியல் :

குணவீர பண்டிதரால் இயற்றப் பெற்றது. இந்நூலுக்கு வச்சணந்தி மாலை என்ற பெயரும் உண்டு. மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல்களைக் கொண்டது. வச்சணந்தி முனிவரால் செய்யப் பெற்றது.

## 1.4.4 பிற நூல்கள் :

சம்பந்தப் பாட்டியல் சம்பந்த முனிவரால் எழுதப் பெற்றது. சிதம்பரப் பாட்டியல் பரஞ்சோதி முனிவரால் எழுதப் பெற்றது. இலக்கண விளக்கப் பாட்டியல் வைத்தியநாத தேசிகரால் எழுதப்பட்டது. வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கப் பாட்டியலை எழுதினார். முத்துவீர உபாத்தியாயர்முத்துவீரியப் பாட்டியலை எழுதியுள்ளார். இவர் பிரபந்த மரபியல் என்ற நூலையும் எழுதியுள்ளார்.

## 2 மதிப்பெண் வினாக்கள் :

**1.வெண்பாப்பாட்டியல் ஆசிரியர் யார்?**

வெண்பாப்பாட்டியலின் ஆசிரியர் குணவீர பண்டிதர்.

**2. யாப்பிற்கென்றே தோன்றிய நூல்கள் எவை ?**

பாட்டியல் நூல்கள் யாப்பிற்கென்றே தோன்றிய நூல்கள் ஆகும்.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1.யாப்பிற்கென்றே தோன்றிய பாட்டியல் நூல்கள் பற்றி எழுதுக.**

**பாட்டியல் நூல்கள்**

தொல்காப்பியர் மூன்றாகப் பகுத்திருந்த இலக்கணம் பின்னர் ஐந்தாக வளர்ச்சி பெற்றது. அதன் பின்னர் ஒவ்வோர் இலக்கணத்திற்கும் ஒவ்வொரு நூல் எழுந்ததையும் காணலாம். அந்த வரிசையில் யாப்பிற்கென்றே தோன்றிய நூல்கள் பாட்டியல் நூல்கள் ஆகும்.

பாட்டியல் என்பது புதிதாகத் தோன்றிய இலக்கண நூல்; சிற்றிலக்கியங்களுக்கான இலக்கணங்களைக் கூறுவது பாட்டியல் நூல்களாகும். நான்கு வருண வேறுபாடுகளுக்கு ஏற்றபடி பாட்டின் எண்ணிக்கையும் அமைய வேண்டிய இலக்கணம் கூறுகிறது.

**பன்னிரு பாட்டியல் :**

இந்திர காளியார் முதலான பல புலவர்களால் செய்யப் பெற்றது. 96 வகைப் பிரபந்தங்களின் இலக்கணம் இந்நூலில் இடம் பெறுகிறது.

**வெண்பாப் பாட்டியல் :**

குணவீர பண்டிதரால் இயற்றப் பெற்றது. இந்நூலுக்கு வச்சணந்தி மாலை என்ற பெயரும் உண்டு. மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல்களைக் கொண்டது. வச்சணந்தி முனிவரால் செய்யப் பெற்றது.

**பிற நூல்கள் :**

சம்பந்தப் பாட்டியல் சம்பந்த முனிவரால் எழுதப் பெற்றது. சிதம்பரப் பாட்டியல் பரஞ்சோதி முனிவரால் எழுதப் பெற்றது. இலக்கண விளக்கப் பாட்டியல் வைத்தியநாத தேசிகரால் எழுதப்பட்டது. வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கப் பாட்டியலை எழுதினார். முத்துவீர உபாத்தியாயர் முத்துவீரியப் பாட்டியலை எழுதியுள்ளார். இவர் பிரபந்த மரபியல் என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**பயிற்சி வினாக்கள் :**

**1. சிதம்பரப் பாட்டியலை எழுதியவர் யார் ?**

**2. பிரபந்த மரபியல் என்னும் நூலை எழுதியவர் யார் ?**

# பிரிவு 1 - கூறு 2.1 : தமிழகத்தில் சங்கம் இருந்தமையின் வரலாறு



## முச்சங்கங்கள் இருந்த இடங்கள் பற்றியது

தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் தமிழ் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருந்தனர். மூவேந்தர்களிலும் தமிழை வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே சேரும். புலவர்களைக் கூட்டிச் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தவர்கள் பாண்டியர்கள். தமிழ்ப் புலவர்களின் கூட்டம் சங்கம் என்றழைக்கப் பட்டது. சங்கம் இருந்தமைக்கான வரலாறுகளில் முரண்பாடு இருப்பதைக் காணமுடிகிறது. சங்க வரலாறு இறையனார் களவியல் உரை வழியாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 2.1 முச்சங்க வரலாறு :

தலைச்சங்கம், இடைச்சங்கம். கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் இருந்தன என்றும் அகத்தியரும் சிவபெருமானும் முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் ஆகிய புலவர்கள் சங்கத்தில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. 549 புலவர்கள் உள்ளிட்ட 4449 புலவர்கள் பாடினர் என்றும் முதுநாரை முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் இயற்றப் பெற்றன என்றும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தை ஆதரித்ததாகவும் கூறப்படுகிறது. இச்சங்கம் கடலால் கொள்ளப்பட்டதாகவும் அந்நூல் கூறுகிறது.

இடைச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர் போன்ற 59 புலவர்கள் இருந்தனர். 3700 புலவர்களும் உடனிருந்தனர். இச்சங்கத்தில் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம் என்னும் நூல்கள் இயற்றப்பட்டன என்றும் இச்சங்கம் அமைந்திருந்த கபாடபுரமும் கடலால் கொள்ளப்பட்டது என்றும் கூறப் பெறுகிறது.

கடைச் சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர் கிழார்,நல்லந்துவனார், நக்கீரனார் முதலான 49 புலவர்கள் இருந்து தமிழை ஆராய்ந்தனர். 149 புலவர்களும் உடனிருந்தனர். நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, 70 பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்ற நூல்கள் இயற்றப் பெற்றன. பாண்டியன் முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 மன்னர்கள் சங்கம் வளர்த்தனர். இச்சங்கம் இருந்த இடம் உத்தர மதுரை ஆகும்.

தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பு எப்போதுமே இருந்ததில்லை என்றும் கற்பனையான செய்தி என்றும் கட்டுக்கதைகள் என்றும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் தமிழக வரலாற்றாசிரியர்கள் பலரும் கூறுகின்றனர். இருப்பினும் சிலர் சங்கம் இருந்தது உண்மை என்றும் மறுத்துரைக்கின்றனர்.

## 2.2 சங்கம் இல்லை என்பாரின் கருத்துகள் :

கே.என். சிவராஜபிள்ளை, பி.டி. சீனிவாச ஐயங்கார் போன்றோர் சங்கம் இல்லை என்று உறுதி செய்கின்றனர். அவர்கள் கூறும் காரணங்கள் சிலவற்றைப் பார்க்கலாம்.

1. இறையனார் களவியல் உரைக்கு முன்னர்த் தோன்றிய சங்க இலக்கியங்கள் முதலாக மணிமேகலைக் காலம் வரை சங்கம் என்ற சொல் தமிழில் இல்லை. சங்கம் பற்றிய செய்திகளும் இல்லை.
2. சமணம், பௌத்தத்தில் காணப்பெறும் சங்கம் போன்று தமிழகத்தில் இருந்தது என்று கூறவே இந்தக் கற்பனைக் கதைகள் உண்டாயின.
3. இறையனார் களவியல் உரை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியது.
4. இச்சங்கங்களில் கடவுளர் கலந்து கொண்டு தமிழ் வளர்த்தனர் என்பது ஏற்புடையதாக இல்லை.
5. மூன்று சங்கங்களும் 10000 ஆண்டுகள் நடைபெற்றன என்பதும் புலவர், அரசர் எண்ணிக்கையும் பொருந்துவதாக இல்லை.
6. இறையனார் களவியல் உரை கூறுவது போல் முதல் நூல் அகத்தியம் என்றால் அதற்கு முன் தோன்றிய நூல்கள் பற்றிய குறிப்பு அந்நூலில் இல்லை.
7. சேர, சோழ, பாண்டியர்களில் தமிழ் வளர்ச்சிக்கும் பாண்டியர் மட்டுமே துணை செய்தனர் என்பது பொருந்துவதாய் இல்லை.

இவ்வாறு சங்கம் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை என்று கூறிச் சங்கம் இருந்தமையை மறுக்கின்றனர். எனினும் சேஷகிரி சாஸ்திரியார், இராமச்சந்திர தீட்சிதர் போன்றோர் கருத்தால் ஒரே ஒரு சங்கம் மட்டுமே இருந்திருக்கலாம் என்று கருதலாம்.

## 2.3 மூன்று சங்கங்கள் இருந்தமை உண்மை :

இறையனார் அகப்பொருள் உரை ஆசிரியர் கூற்றினை ஏனைய உரையாசிரியர்களும் வழிமொழிந்து முச்சங்கங்கள் உண்மை என்று கருதுகின்றனர். முதல் சங்கமும் இடைச்சங்கமும் கடல்கோளால் அழிந்துவிட்ட செய்தியைத் தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

"மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வெளவலின்" என்றும்

"குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. கபாடபுரம் இருந்தது என்பதனை வால்மீகியும், வியாசரும் தம் காப்பியங்களில் குறிப்பிட்டுள்ளனர் என்பதால் கபாடபுரம் இருந்தது என்பது உறுதிப்படுகிறது.

எனினும் இலக்கியச் சான்றுகள் சில சங்கம் இருந்தமையை உறுதிசெய்கின்றன எனலாம்.

"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய

அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து"

என்ற தொல்காப்பியப் பாயிரச் செய்தியும்

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளும் சங்கப் புலவர்கள் பற்றிக் கூறுகின்றன.

மேலும் சில இலக்கியத் தொடர்கள் சங்கம் இருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

"தமிழ்கெழு கூடல்"
"தென்தமிழ் மதுரை"
"சங்கமுத் தமிழ்"
"சங்கமலி தமிழ்"
"சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்"

என்றெல்லாம் வரும் தொடர்கள் சான்றாக அமைகின்றன. இருப்பினும் சங்கம் என்ற சொல்லாட்சி கிபி. ஏழாம் நூற்றாணடில்தான் அமைகிறது.

வச்சிரநந்தி என்னும் சமண முனிவர் திரமிள சங்கம் என்னும் அமைப்பை மதுரையில் நிறுவினார். அதன் பின்னரே அது வழக்கில் வந்தது. பிற சமயத்தாரும் சங்கம் வைத்ததைப் பேசும் நிலை உண்டாயிற்று. நிலந்தரு திருவின் பாண்டியன் அவையம் என்ற தொடர்தான் பிற்காலத்தில் சங்கம் என ஆகியிருக்க வேண்டும்.

இவ்வாறு இலக்கியச் சான்றுகள் இருப்பதோடு மட்டுமின்றி உரையாசிரியர்களும் சங்கம் இருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றனர். அடியார்க்கு நல்லார் தென்மதுரைத் தலைச் சங்கத்தையும் கபாடபுரத்து இடைச் சங்கத்தையும் சிலப்பதிகார உரையில் குறிக்கிறார்.

தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், மூன்று சங்கத்து நான்கு வர்ணத்தோடுபட்ட சான்றோரும் மூன்று வகைச் சங்கத்தாரும் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் எழுந்த காலத்தில் தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் செய்யுள் இயற்றினார்கள் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார். "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று சின்னமனூர்ச் செப்பேடு குறிக்கின்றது.

இவ்வாறான காரணங்களால் சங்கம் இருந்தது என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

### 2 மதிப்பெண் வினாக்கள் :

**1. மூன்று சங்கங்கள் இருந்த இடங்கள் யாவை ?**

தென்மதுரை, கபாடபுரம், உத்தர மதுரை ஆகிய இடங்களில் முறையே முதற்சங்கம்,இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகியவை இருந்தன.

**2. சங்கத்தைப் பற்றி முதலில் கூறிய நூல் எது ?**

சங்கத்தைப் பற்றி முதலில் கூறிய நூல் இறையனார் அகப்பொருள் உரை.

**3. திரிமிளசங்கம் என்ற அமைப்பை நிறுவியவர் யார் ?**

வச்சிரநந்தி என்பவர் திரிமிள சங்கத்தை நிறுவினார்.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1. சங்கங்களின் வரலாறு குறித்து எழுதுக.**

தலைச்சங்கம், இடைச்சங்கம். கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் இருந்தன என்றும் அகத்தியரும் சிவபெருமானும் முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் ஆகிய புலவர்கள் சங்கத்தில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. 549 புலவர்கள் உள்ளிட்ட 4449 புலவர்கள் பாடினர் என்றும் முதுநாரை முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் இயற்றப் பெற்றன என்றும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தை ஆதரித்ததாகவும் கூறப்படுகிறது. இச்சங்கம் கடலால் கொள்ளப்பட்டதாகவும் அந்நூல் கூறுகிறது.

இடைச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர் போன்ற 59 புலவர்கள் இருந்தனர். 3700 புலவர்களும் உடனிருந்தனர். இச்சங்கத்தில் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம் என்னும் நூல்கள் இயற்றப்பட்டன என்றும் இச்சங்கம் அமைந்திருந்த கபாடபுரமும் கடலால் கொள்ளப்பட்டது என்றும் கூறப் பெறுகிறது.

கடைச் சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர் கிழார், நல்லந்துவனார், நக்கீரனார் முதலான 49 புலவர்கள் இருந்து தமிழை ஆராய்ந்தனர். 149 புலவர்களும் உடனிருந்தனர். நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, 70 பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்ற நூல்கள் இயற்றப் பெற்றன. பாண்டியன் முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 மன்னர்கள் சங்கம் வளர்த்தனர். இச்சங்கம் இருந்த இடம் உத்தர மதுரை ஆகும்.

தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பு எப்போதுமே இருந்ததில்லை என்றும் கற்பனையான செய்தி என்றும் கட்டுக்கதைகள் என்றும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் தமிழக வரலாற்றாசிரியர்கள் பலரும் கூறுகின்றனர். இருப்பினும் சிலர் சங்கம் இருந்தது உண்மை என்றும் மறுத்துரைக்கின்றனர்.

## 10 மதிப்பெண் வினாக்கள்:

**1. சங்கம் இருந்தமைக்கான காரணங்களையும் இல்லை என்று சொல்வார் கூறும் காரணங்களையும் கூறுக.**

விடை : 2.2, 2.3 உள்ள செய்திகளை எழுத வேண்டும்.

குறிப்பு

**பயிற்சி வினாக்கள் :**

1. **இடைச்சங்கத்தில் இருந்த புலவர்கள் யார் ?**
2. **சங்கம் இல்லை என்று கூறும் அறிஞர்கள் யார் ?**
3. **சங்கம் இருந்தமையை உணர்த்தும் இலக்கியத் தொடர்களைக் கூறுக.**

# பிரிவு 1 - கூறு 2.2 : பதினெண் மேல்கணக்கு நூல்களும் அவற்றைப் பற்றிய குறிப்புகளும்

குறிப்பு

பதினெண் மேல்கணக்கு நூல்கள் எனப்படுபவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். தொகை நூல்கள் எட்டும், பாட்டாக அமைந்த நூல்கள் பத்தும் சேர்த்துப் பதினெண் மேல் கணக்கு நூல்கள் என வழங்கப் பெற்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வகைப்படுத்தப் பெற்றது போல இவையும் பெயரிடப்பட்டன.

## 2.1 எட்டுத்தொகை :

பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற பல்வேறு தனிப் பாடல்களின் தொகுப்பே எட்டுத்தொகை ஆயிற்று. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்பன அந்நூல்கள்.

கலித்தொகை கலிப்பாவால் ஆனது. பரிபாடல் பரிபாட்டு வகையில் அமைந்தது. பிற நூல்கள் ஆசிரியப்பாவால் ஆனவை. இந்நூல்களை நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வெண்பாவும் உள்ளது.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

என்பது அவ்வெண்பா.

## 2.2 பத்துப்பாட்டு :

பத்துப்பாட்டு நூல்களை நினைவில் கொள்ள ஒரு வெண்பா உள்ளது.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்பது அவ்வெண்பா.

பத்துப்பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபானாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை. மலைபடுகடாம் என்னும் ஐந்து நூல்களும் ஆற்றுப்படை நூல்களாகும். மதுரைக் காஞ்சியுடன் ஆறு நூல்கள் புற நூல்கள்; முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகியவை அக நூல்கள். நெடுநல்வாடை அகப்புற நூல் என்றும் கருதப் பெறுகிறது.

## 2.1 எட்டுத்தொகை நூல்கள் :

எட்டுத்தொகை நூல்களில் அகப்பொருள் பற்றிப் பாடும் நூல்கள் ஐந்து. புறப்பொருள் பற்றிப் பாடும் நூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவை.

நெடுநல்வாடை அகமும் புறமும் பற்றியது எனலாம். இவற்றுள் அகநூல்கள் பற்றி முதலில் காணலாம்.

## 2.1.1 அகநூல்கள் - நற்றிணை :

முதலில் அமைவது நற்றிணை ஆகும். ஆசிரியப்பாவால் அமைந்தது. 9 அடி முதல் 12 அடி வரை அமைந்த பாடல்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கு நற்றிணை நானூறு என்ற பெயரும் உள்ளது. இந்நூலைத் தொகுத்த புலவர் பெயர் தெரியவில்லை. தொகுப்பித்த மன்னன் பன்னாடு தந்த மாறன் வழுதி ஆவான்.

### நூலின் சிறந்த பகுதிகள் :

நட்பின் பெருமையை,

“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்” என்றும்

காதலின் பெருமையை,

“தாமரைத் தண்தா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை”

என்றும் நற்றிணை கூறுகிறது.

பல்வேறு உவமைச் சிறப்புகளுடன் பண்பாட்டுச் சிறப்புகளையும் எடுத்துரைக்கின்றது இந்நூல்.

“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்” என்று தலைவியின் சிறப்பும்,
“செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பு”

என்று செல்வம் பற்றியும் பேசப்பெறுகின்றன. தேய்புரிப் பழங்கயறு என்பது போன்ற உவமைகள் நிறைந்தது நற்றிணை ஆகும்.

## 2.1.2 குறுந்தொகை :

ஆசிரியப்பாவால் ஆனது; 4 அடி முதல் 8 அடி வரை உள்ள பாடல்களின் தொகுப்பு இந்நூல். இந்நூலைத் தொகுப்பித்தவன் பூரிக்கோ; தொகுத்தவர் உப்பூரிகுடி கிழார் ஆவார். குறுகிய அடிகளால் பாடல் தொகுப்பு ஆனதால் குறுந்தொகை என்ற பெயர் அமைந்தது. இறையனார் பாடியதாக அமைந்த ‘கொங்குதேர் வாழ்க்கை’ என்ற பாடல் இந்நூலில் உள்ளது. அணிலாடு முன்றிலார், குப்பைக் கோழியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார் என்று பாடலடியால் பெயர் பெற்ற புலவர்கள் உள்ளனர்.

### நற்கருத்துகள் :

ஆண்குரங்கு இறந்ததால் கைம்மை நோன்பு மேற்கொண்டு உயிர்வாழ விரும்பாத மந்தி ஒன்று மலையின் உச்சியில் ஏறிக் கீழே

குதித்து உயிர் விட்ட செய்தி விலங்கின் வழியாகக் காதலின் மேன்மையை உணர்த்துவதாகும்.

இரண்டு உள்ளங்களின் இணைவை,

"செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே"

என்றுரைக்கிறது ஒரு பாடல். ஆடவரின் கடமையை

"வினையே ஆடவர்க் குயிரே" என்ற தொடரும் தலைவி தன் காதல் நோயைக் காப்பதற்கு இயலாத நிலையை,

"கையில் ஊமன் கண்ணிற் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போல" என்ற

தொடரும் உணர்த்துகின்றன. இவ்வாறு தமிழ்ப்பண்பின் உயர்வைக் காட்டுவது குறுந்தொகை ஆகும்.

## 2.1.3 ஐங்குறு நூறு :

ஐந்து அகத்திணைகளுக்கும் தனித்தனியே நூறு நூறு பாடல்களைக் கொண்டது ஐங்குறுநூறு ஆகும். ஒவ்வொரு நூறு பாடலும் பத்துப்பத்துப் பாடல்களாக அமைந்துள்ளன.

குறிஞ்சித் திணை பற்றிய பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார்; முல்லைத் திணையை ஓதலாந்தையார் பாடியுள்ளார்; மருதத் திணையை ஓரம்போகியாரும் நெய்தல் திணையை அம்மூவனாரும் பாலைத் திணையைப் பேயனாரும் பாடியுள்ளனர். தொகுத்தவர் கூடலூர்கிழார்; தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

### சிறந்த செய்திகள் :

உடன்போக்குச் சென்று திரும்பி வந்த தலைவியிடம் தோழி தலைவன் நாட்டைப் பற்றி வினவுகிறாள். அதற்குத் தலைவி கூறும் பாடல் இனிமையானது.

"நம்படப்பைத்

தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு

உவலைக் கூவற் கீழ

மானுண் டெஞ்சிய கலிழி நீரே" என்கிறாள் தலைவி. தன்னுடைய தோட்டத்தில் கிடைக்கும் தேன் கலந்த பாலை விட அவனுடைய நாட்டில் சிறிய குட்டையில் மான் உண்டு மிஞ்சிய நீர் இனிமையானது என்று தலைவனுக்காக வாழும் தலைவியை இப்பாடலில் காண முடிகிறது.

"பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்" என்ற தொடர் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை உணர்த்தும் பாடல்.

## 2.1.4 அகநானூறு :

400 பாடல்கள் கொண்டது. நீண்ட அடிகளால் அமைந்த பாடல்களின் தொகுப்பு என்பதால் நெடுந்தொகை எனப் பெயர் பெற்றது.

தொகுத்தவர் உப்பூரிகுடிகிழான் மகன் உருத்திரசன்மன். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இந்நூல் களிற்றியானை நிரை (1-120 பாடல்கள்), மணிமிடை பவளம் (121 – 300 பாடல்கள்), நித்திலக்கோவை (301 – 400 பாடல்கள்) என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாலைத் திணையில் 200 பாடல்களும் நெய்தல் திணையில் 40 பாடல்களும் முல்லைத் திணையில் 40 பாடல்களும் குறிஞ்சித் திணையில் 80 பாடல்களும் மருதத் திணையில் 40 பாடல்களும் உள்ளன.

ஒற்றைப் படை எண் உள்ள பாடல்கள் பாலைத் திணை; 4, 14 எனறு முடிவன முல்லைத்திணை; 10, 20 என்று முடிவன நெய்தல் திணை; 6 என்று முடிவன மருதத்திணை; 2, 8 என்று முடிவன குறிஞ்சித்திணை.

பண்டைத் தமிழரின் திருமண முறை, பங்குனி விழா, கார்த்திகை விளக்கு, ஐம்படைத்தாலி போன்ற தமிழர் நாகரிகம் தொடர்பான செய்திகள் இந்நூலில் நிறைந்துள்ளன.

### 2.1.5 கலித்தொகை :

ஐந்து திணைகளுக்கும் இந்நூலில் பாடல்கள் உள்ளன. பாலைப் பாடல்கள் 35; இவற்றைப் பாடியவர் பெருங்கடுங்கோன்; குறிஞ்சிப் பாடல்கள் 29; இவற்றைப் பாடியவர் கபிலர் ; மருதத் திணைப் பாடல்கள் 35; இவற்றைப் பாடியவர் மருதன் இளநாகன்; முல்லைத் திணைப் பாடல்கள் 17; இவற்றைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன்; நெய்தல் திணைப் பாடல்கள் 33; இவற்றைப் பாடியவர் நல்லுந்துவனார். மொத்தம் 149 பாடல்கள், தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

இந்நூலில் பாண்டிய நாடு, பாண்டிய மன்னன் பற்றிய குறிப்புகள் மட்டுமே நிறையக் காணப் பெறுகின்றன. புராணக் கூறுகள் மிகுதியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பாலை நிலத்தின் கொடுமையை,

“புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு”

என்னும் தொடர் உணர்த்துகிறது.

கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம் செய்த கள்வன் என்று தலைவனைப் பேசும் தலைவியின் காதல் உணர்வு கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது.

“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்” என்று ஏறுதழுவுதலின் இன்றியமையாமையைச் சொல்கிறது கலித்தொகை.

இராவணன் கயிலையைப் பெயர்த்தது, வீமன் துரியோதனனைத் தொடையில் அடித்தது, துச்சாதனன் நெஞ்சைப் பிளந்தது போன்ற பாரதச் செய்திகள் கலித்தொகையில் இடம் பெற்றிருக்கின்றன.

### 2.1.6 பரிபாடல் :

இந்நூலுக்குப் பரிபாட்டு என்றும் பெயர் உண்டு. வையை, முருகன் பற்றிய அகப்பொருள் பாடல்கள் உள்ளன. திருமால் பற்றிய பாடல்கள் உள்ளன. பரிமேலழகர் பரிபாடலுக்கு உரை எழுதியுள்ளார். மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை, வையை இவற்றின் சிறப்புக்கள் பேசப் பெறுகின்றன. பரிபாடலில் 22 பாடல்கள் மட்டுமே உள்ளன.

### 2.1.7 பதிற்றுப்பத்து :

சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்களால் பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடப் பெற்ற நூல் பதிற்றுப்பத்து. முதற் பத்தும் இறுதிப் பத்தும் இப்போது கிடைக்கவில்லை. இரண்டாம் பத்தில் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார்; மூன்றாம் பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியுள்ளார். நான்காம் பத்து களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய பகுதியாகும். ஐந்தாம் பத்து கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியதாகும். ஆறாம் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடுகிறார். ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியுள்ளார். எட்டாம் பத்து பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் பாடியதாகும். ஒன்பதாம் பத்து குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடியதாகும்.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வண்ணம், தூக்கு, துறை ஆகியவை குறிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் பாடலடிகளிலிருந்து ஒருதொடர் தலைப்பாக அமைந்துள்ளது. சேரர் வரலாறு கூறும் அருமையான நூல் பதிற்றுப் பத்தாகும்.

### 2.1.8 புறநானூறு :

புறப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. புறம், புறப்பாட்டு, புறம்பு, நானூறு என்ற பெயர்களால் இந்நூல் வழங்கப்பெறுகிறது. இதனைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. அரசர்கள் மற்றும் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. வள்ளல்களின் கொடைப் பண்பு, அரசர்களும் புலவர்களும் கொண்டிருந்த நட்பு, உணவு. உடை, வாழ்க்கை முறை, வான நூற் புலமை, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று மன்னனைப் போற்றுதல், செல்வத்துப் பயனே ஈதல், அறநெறி முதற்றே அரசின் கொற்றம், பெரியோரை வியத்துலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்ற கோட்பாடு போன்றவை புறநானூற்றில் உணர்த்தப்பெறும் செய்திகளாகும்.

குறிப்பு

## 2.2.1 பத்துப்பாட்டு :

தனித்தனிப் பாட்டாக அமைந்த நூல்கள் பத்தும் பத்துப்பாட்டு நூல்கள் என்றழைக்கப்படுகின்றன. அனைத்தும் ஆசிரியப்பாவால் அமைந்துள்ளன. இவற்றுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்தும் மதுரைக்காஞ்சியும் புறப்பொருள் பற்றியன. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை என்னும் மூன்று நூல்களும் அகப்பொருள் பற்றியன. நெடுநல்வாடை அகமும் புறமும் தழுவியதாகும்.

நூல்களும் பாடியோரும்

1. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
2. பொருநராற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார்
3. சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார்
4. பெரும்பாணாற்றுப்படை - உருத்திரங்கண்ணனார்
5. மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார்
6. முல்லைப் பாட்டு - நப்பூதனார்
7. குறிஞ்சிப்பாட்டு - கபிலர்
8. பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்
9. மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதன்
10. நெடுநல்வாடை - நக்கீரர்

இவற்றுள் பாடல் அடிகளால் பெரிய நூல் மதுரைக்காஞ்சி; 782 அடிகள் கொண்டது. பாடல் அடிகளால் சிறிய நூல் முல்லைப்பாட்டு 103 அடிகள் கொண்டது.

## 2.2.2 திருமுருகாற்றுப்படை :

ஆற்றுப்படை நூல்கள் மொத்தம் ஐந்து. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவை ஆகும். அவற்றுள் ஒன்று திருமுருகாற்றுப்படை ஆகும்.

இந்நூலுக்கு முருகு என்றும் புலவராற்றுப்படை என்றும் வேறு பெயர்கள் உண்டு. இதனை எழுதியவர் நக்கீரர். 317 அடிகள் கொண்டது. இது பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

வீடுபேறு பெற்ற ஒருவன் வீடுபேறு பெறுவதற்கான முயல்கின்றவன் ஒருவனை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.

முருகனின் உயர்வு, மாலையின் சிறப்பு, சூரர மகளிர் செயல்கள், சூரபதுமன் அழிவு, திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளம் முதலியவை முதற்பகுதியில் பேசப்பெறுகின்றன.

முருகனின் யானை இயல்பு, ஆறுமுகங்களின் அருட்செயல், திருச்சீரலைவாயிலில் முருகன் எழுந்தருளியுள்ளமை ஆகியவை பற்றி இரண்டாம் பகுதி கூறுகிறது. முனிவர்களின் ஒழுக்கம், மகளிர் அழகு, திரு

ஆவினன்குடியின் சிறப்பு ஆகியவை மூன்றாம் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அந்தணர் இயல்பும் அவர்கள் வழிபடும் முறையும் நான்காம் பகுதியில் உள்ளன.

குன்றக்குரவை, மகளிர்தம் செயல்கள், முருகன் குன்றுதோறாடல் ஆகியவற்றை ஐந்தாம் பகுதி கூறுகிறது. முருகன் எழுந்தருளியுள்ள இடங்களையும் வழிபட வருவோரை ஆற்றுப்படுத்தும் முறைமை பற்றியும் ஆறாம் பகுதியில் பேசப்பெறுகின்றன.

### 2.2.3 பொருநராற்றுப்படை :

248 அடிகளைக் கொண்டது. முடத்தாமக் கண்ணியாரால் பாடப் பெற்றது. பரிசில்பெற்ற ஒரு பொருநன் பரிசில் பெற வேண்டிவரும் இன்னொரு பொருநனை ஆற்றுப்படுத்துவது. பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான் ஆவான். கரிகால் பெருவளத்தானின் சிறப்பு, வீரம்,ஈரம், வள்ளன்மை, சோணாட்டு வளம், வனப்பு, காவேரியின் பெருமை, முதலியன குறிக்கப்பட்டுள்ளன. செல்வச்சிறப்பும் வறுமையின் வாட்டமும் விளக்கப்படுகின்றன. பாலையாழ் வருணனை, விறலியின் வருணனை பேசப்படுகின்றன.

### 2.2.4 சிறுபாணாற்றுப்படை :

269 அடிகள் கொண்டது சிறுபாணாற்றுப்படை. இதன் ஆசிரியர் நல்லூர் நத்தத்தனார். பரிசு பெற்று வரும் சிறிய யாழினை ஏந்திய பாணன் ஒருவன் பரிசில்பெற இருக்கும் பாணன் ஒருவனை ஓய்மாநாட்டு நல்லியக்கோடனிடம் ஆற்றுப் படுத்துவதாக அமைந்தது இந்நூல்.

விறலிவருணனை, யாழ்வருணனை, வஞ்சி, மதுரை, உறையூர் ஆகிய நகரங்களின் சிறப்புகள், கடையெழு வள்ளல்களின் வள்ளல்தன்மை, நல்லியக்கோடன் பண்பு, அவன் பரிசு வழங்கும் முறைமை ஆகியவை பேசப் பெறுகின்றன.

### 2.2.5 பெரும்பாணாற்றுப்படை :

இந்நூல் 500 அடிகள் கொண்டது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. தொண்டைமான் இளந்திரையனிடம் பெரும்பாணனை ஆற்றுப்படுத்துவது. இந்நூலில் பேரியாழ் சிறப்பாக வருணிக்கப்படுகிறது.

எயினர், எயிற்றியர், மறவர், ஆயர் ஆகியோரின் வாழ்க்கை முறைகள், இளந்திரையனின் கொடை, வீரம், செங்கோல் சிறப்பு, ஐந்து நில மக்களின் வாழ்வு, விருந்தோம்பல், பொன்னை மாற்றுப் பார்த்தல், கலங்கரை விளக்கம், வணிகர்கள் மிளகுப் பொதியினைக் கழுதைமேல் ஏற்றிச் செல்லல் போன்ற அரிய செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

### 2.2.6 கூத்தராற்றுப்படை :

மலைபடுகடாம் என்ற நூலே கூத்தராற்றுப்படை என்னும் பெயரால் வழங்குகிறது. 583 அடிகள் கொண்டது. இதன் ஆசிரியர்

குறிப்பு

பெருங்கௌசிகனார். பரிசில்பெற்ற கூத்தன் பரிசில் பெறவரும் கூத்தனை ஆற்றுப்படுத்துவது இந்த நூலில் கூறப்பெறுகிறது. நன்னன்சேய் நன்னன் என்பவன் பாட்டுடைத் தலைவன் ஆவான். பல வகையான இசைக்கருவிகள் பற்றி இந்நூல் கூறுகிறது.

இவ்வாறு ஆற்றப்படை நூல்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

## 2.2.7 முல்லைப்பாட்டு :

பத்துப் பாட்டில் மிகச்சிறிய நூல் முல்லைப்பாட்டு; நப்பூதனார் பாடியது. பிரிந்த தலைவன் வரும் வரையில் தலைவி ஆற்றியிருக்கும் செய்தி இந்நூலில் பாடப் பெறுகிறது. அகப்பொருள் பற்றியது. 103 அடிகள் கொண்டது.

முதுபெரும் பெண்டிர் விரிச்சி பார்க்கும் வழக்கம், பாசறை அமைப்பு, பாகர்கள் யானைகளைப் பழக்கும் முறை, நாழிகைக்கணக்கர், மெய்க்காப்பாளர், புண்பட்ட வீரனை நினைத்து வருந்தும் அரசன், கார்கால ஓசை, தலைவனின் தேர்வரும் ஓசை, போன்ற செய்திகள் கூறப்பெறுகின்றன. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவான்.

## 2.2.8 பட்டினப்பாலை:

301 அடிகள் கொண்டது பட்டினப்பாலை; வஞ்சி நெடும்பாட்டு என்றும் வழங்கப்பெறுகிறது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. பாட்டுடைத் தலைவன் கரிகாற்பெருவளத்தான். பொருள் ஈட்டுவதற்காக வேற்று நாட்டிற்குச் செல்ல நினைத்த தலைவன் இடையில் தன் நெஞ்சைப் பார்த்து,

“முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே”

என்று கூறிச் செலவழுங்குதல் பற்றிப் பேசுகிறது பட்டினப்பாலை.

சோழநாட்டின் சிறப்பு, காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமை, கரிகாலன் வீரம், பரதவர் வாழ்க்கை, வணிகரின் இயல்பு, சுங்கப்பொருள்களின் மீது புலிப்பொறி பொறிக்கப்பட்டது, பல்வகைக் கொடிகள், கடல் வாணிகம், பொற்குழை கொண்டு கோழி விரட்டுதல் போன்ற பல செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## 2.2.9 குறிஞ்சிப்பாட்டு :

261 அடிகள் கொண்டது. பெருங்குறிஞ்சி என்று இந்நூல் சிறப்பிக்கப் பெறுகிறது. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகப் பாடப் பெற்றது என்பர். இதன் ஆசிரியர் கபிலர். தலைவன் தலைவியின் காதல் உணர்வு, களவொழுக்கம், குறிஞ்சி நிலச் சிறப்பு, மணவாழ்க்கையில் இல்லற மாண்பு காத்தல், 99 வகை மலர்கள் பற்றிய செய்தி போன்ற பல செய்திகளைக் கொண்டுள்ளது.

### 2.2.10 மதுரைக்காஞ்சி :

பத்துப்பாட்டு நூல்களில் அளவால் மிகப் பெரிய நூல். 782 அடிகளைக் கொண்டது. மாங்குடி மருதனாரால் இயற்றப்பெற்றது. காஞ்சி என்பது நிலையாமை ஆகும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு வகையான நிலையாமைச் செய்திகளை எடுத்துரைத்து நன்னெறிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

"கொன்னொன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்

கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்"

என்ற தொடரால் வீடுபேறு உணர்த்தப்படுவதைக் காணலாம்.

பாண்டிய நாட்டின் வளம், மதுரையின் பெருமை, அங்காடிகள் விவரம், சேரர், சோழர், ஐம்பெருவேளிரைப் பாண்டியன் வென்றமை, மன்னன் கடமைகள், இரவில் களவு, அதனைத் தடுக்கும் செயல், அந்தணர் இயல்பு, ஓணவிழா, போன்ற செய்திகள் இந்நூலில் குறிப்பிடத்தக்கவையாகும்.

### 2.2.11 நெடுநல்வாடை :

188 அடிகளைக் கொண்டது நெடுநல்வாடை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நெடிய வாடையாகவும், பாசறையில் தங்கியிருந்த தலைவனுக்கு நல்வாடையாகவும் இருந்த வாடையின் பெயரால் நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது இந்நூல். அகப்பொருள் தழுவிய நூலாக இருப்பினும்

"வேம்புதலையாத்த நோன்காழ் எ∴கம்" என்னும் தொடரால் புறப்பொருள் தழுவிய நூல் என்றும் கருதுவர்.

அரண்மனை அமைப்பு, கட்டிலின் அழகு, கோப்பெருந்தேவியின் கற்பு, கூதிர் காலத்தில் மாவும், புள்ளும், மக்களும், துயருறும் நிலை, பாண்டிய மன்னன் பாசறையில் வீரர்களுக்கு ஆறுதல் கூறுவது, யவனரின் பாவை விளக்கு, தமிழரின் செல்வச் செழுமை ஆகியன பேசப்பெறுகின்றன. தலைவியைப் புனையா ஓவியம் போல் என்று பாராட்டும் தொடர் பலரும் பாராட்டும் அருமையான தொடராகும்.

### 2 மதிப்பெண் வினாக்கள் :

**1. எட்டுத்தொகையில் அகநூல்கள் எத்தனை? அவை யாவை?**

எட்டுத்தொகையில் அகநூல்கள் ஐந்து. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை என்பன ஆகும்.

**2. நெடுந்தொகை எனும் பெயர் பெற்ற நூல் எது ?**

நெடுந்தொகை எனும் பெயர் பெற்ற நூல் அகநானூறு.

**3. சேரமன்னர்களைப் பற்றி மட்டுமே பாடும் நூல் எது ?**

சேரமன்னர்களைப் பற்றி மட்டுமே பாடும் நூல் பதிற்றுப்பத்து

**4. பத்துப்பாட்டு நூல்கள் யாவை ?**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்பன பத்துப்பாட்டு நூல்கள் ஆகும்.

**5. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் யாவை ?**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்பவை ஆற்றுப்படை நூல்கள் ஆகும்.

**6. பத்துப்பாட்டில் அளவில் மிகப் பெரிய நூல் எது ?**

பத்துப்பாட்டில் அளவில் மிகப் பெரிய நூல் மதுரைக்காஞ்சி ; 782 அடிகள் கொண்டது.

**7. பத்துப்பாட்டில் அளவில் மிகச் சிறிய நூல் எது ?**

பத்துப்பாட்டில் அளவில் மிகச் சிறிய நூல் முல்லைப்பாட்டு ; 163 அடிகள் கொண்டது.

**8. கடையெழு வள்ளல்கள் பற்றிப் பேசும் நூல் எது ?**

கடையெழு வள்ளல்கள் பற்றிப் பேசும் நூல் சிறுபாணாற்றுப்படை ஆகும்.

**9. 99 வகைப் பூக்களைக் கூறும் நூல் எது ?**

99 வகைப் பூக்களைப் பற்றிப் பேசும் நூல் குறிஞ்சிப்பாட்டு.

**10. மலைபடுகடாம் - வேறு பெயர் யாது ?**

மலைபடுகடாம் நூல் கூத்தராற்றுப்படை என்று அழைக்கப்பெறுகிறது.

## 5 மதிப்பெண் வினாக்கள் :

**1. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை குறித்து எழுதுக.**

**முல்லைப்பாட்டு :**

பத்துப் பாட்டில் மிகச்சிறிய நூல் முல்லைப்பாட்டு; நப்பூதனார் பாடியது. பிரிந்த தலைவன் வரும் வரையில் தலைவி ஆற்றியிருக்கும் செய்தி இந்நூலில் பாடப் பெறுகிறது. அகப்பொருள் பற்றியது. 103 அடிகள் கொண்டது.

முதுபெரும் பெண்டிர் விரிச்சி பார்க்கும் வழக்கம், பாசறை அமைப்பு, பாகர்கள் யானைகளைப் பழக்கும் முறை, நாழிகைக்கணக்கர், மெய்க்காப்பாளர், புண்பட்ட வீரனை நினைத்து வருந்தும் அரசன், கார்கால ஓசை, தலைவனின் தேர்வரும் ஓசை, போன்ற செய்திகள் கூறப்பெறுகின்றன. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவான்.

**நெடுநல்வாடை :**

188 அடிகளைக் கொண்டது நெடுநல்வாடை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நெடிய வாடையாகவும், பாசறையில் தங்கியிருந்த

தலைவனுக்கு நல்வாடையாகவும் இருந்த வாடையின் பெயரால் நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது இந்நூல். அகப்பொருள் தழுவிய நூலாக இருப்பினும்

"வேம்புதலையாத்த நோன்காழ் எ∴கம்" என்னும் தொடரால் புறப்பொருள் தழுவிய நூல் என்றும் கருதுவர்.

அரண்மனை அமைப்பு, கட்டிலின் அழகு, கோப்பெருந்தேவியின் கற்பு, கூதிர் காலத்தில் மாவும், புள்ளும், மக்களும், துயருறும் நிலை, பாண்டிய மன்னன் பாசறையில் வீரர்களுக்கு ஆறுதல் கூறுவது, யவனரின் பாவை விளக்கு, தமிழரின் செல்வச் செழுமை ஆகியன பேசப்பெறுகின்றன. தலைவியைப் புனையா ஓவியம் போல் என்று பாராட்டும் தொடர் பலரும் பாராட்டும் அருமையான தொடராகும்.

**2. மதுரைக் காஞ்சியின் சிறப்பை விளக்குக.**

பத்துப்பாட்டு நூல்களில் அளவால் மிகப் பெரிய நூல். 782 அடிகளைக் கொண்டது. மாங்குடி மருதனாரால் இயற்றப்பெற்றது. காஞ்சி என்பது நிலையாமை ஆகும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு வகையான நிலையாமைச் செய்திகளை எடுத்துரைத்து நன்னெறிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

"கொன்னொன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்"

என்ற தொடரால் வீடுபேறு உணர்த்தப்படுவதைக் காணலாம்.

பாண்டிய நாட்டின் வளம், மதுரையின் பெருமை, அங்காடிகள் விவரம், சேரர், சோழர், ஐம்பெருவேளிரைப் பாண்டியன் வென்றமை, மன்னன் கடமைகள், இரவில் களவு, அதனைத் தடுக்கும் செயல், அந்தணர் இயல்பு, ஓணவிழா, போன்ற செய்திகள் இந்நூலில் குறிப்பிடத்தக்கவையாகும்.

**3. பதிற்றுப்பத்து நூலின் சிறப்புகளைத் தருக.**

சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்களால் பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடப் பெற்ற நூல் பதிற்றுப்பத்து. முதற் பத்தும் இறுதிப் பத்தும் இப்போது கிடைக்கவில்லை. இரண்டாம் பத்தில் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார்; மூன்றாம் பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியுள்ளார். நான்காம் பத்து களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய பகுதியாகும். ஐந்தாம் பத்து கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியதாகும். ஆறாம் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடுகிறார். ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியுள்ளார். எட்டாம் பத்து பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் பாடியதாகும். ஒன்பதாம் பத்து குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடியதாகும்.

தமிழிலக்கிய வரலாறு

குறிப்பு

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வண்ணம், தூக்கு, துறை ஆகியவை குறிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் பாடலடிகளிலிருந்து ஒருதொடர் தலைப்பாக அமைந்துள்ளது. சேரர் வரலாறு கூறும் அருமையான நூல் பதிற்றுப் பத்தாகும்.

**4. கலித்தொகையின் சிறப்பினைக் கூறுக.**

ஐந்து திணைகளுக்கும் இந்நூலில் பாடல்கள் உள்ளன. பாலைப் பாடல்கள் 35; இவற்றைப் பாடியவர் பெருங்கடுங்கோன்; குறிஞ்சிப் பாடல்கள் 29; இவற்றைப் பாடியவர் கபிலர் ; மருதத் திணைப் பாடல்கள் 35; இவற்றைப் பாடியவர் மருதன் இளநாகன்; முல்லைத் திணைப் பாடல்கள் 17; இவற்றைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன்; நெய்தல் திணைப் பாடல்கள் 33; இவற்றைப் பாடியவர் நல்லுந்துவனார். மொத்தம் 149 பாடல்கள், தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

இந்நூலில் பாண்டிய நாடு, பாண்டிய மன்னன் பற்றிய குறிப்புகள் மட்டுமே நிறையக் காணப் பெறுகின்றன. புராணக் கூறுகள் மிகுதியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பாலை நிலத்தின் கொடுமையை,

“புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு”

என்னும் தொடர் உணர்த்துகிறது.

கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம் செய்த கள்வன் என்று தலைவனைப் பேசும் தலைவியின் காதல் உணர்வு கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது.

“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்” என்று ஏறுதழுவுதலின் இன்றியமையாமையைச் சொல்கிறது கலித்தொகை.

இராவணன் கயிலையைப் பெயர்த்தது, வீமன் துரியோதனனைத் தொடையில் அடித்தது, துச்சாதனன் நெஞ்சைப் பிளந்தது போன்ற பாரதச் செய்திகள் கலித்தொகையில் இடம் பெற்றிருக்கின்றன.

## 10 மதிப்பெண் வினாக்கள் :

**1. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து விளக்குக.**

விடை : ஆற்றுப்படை நூல்கள் பற்றிய பகுதிகளைத் தொகுத்துப் படிக்க வேண்டும்.

**2. எட்டுத்தொகையில் அமைந்த அகநூல்கள் பற்றி விளக்கி வரைக.**

விடை : 2.1.1 முதல் 2.1.5 வரை உள்ள பகுதிகளைச் சேர்த்து எழுத வேண்டும்.

பயிற்சி வினாக்கள் :

1. ஐங்குறுநூற்றுப் பாடல்களைப் பாடியவர்கள் யார் யார் ?
2. கலித்தொகையில் உள்ள பாடல்களைப் பாடியவர்கள் யார் ?
3. பத்துப்பாட்டில் நக்கீரர் பாடிய நூல்கள் யாவை ?
4. பத்துப்பாட்டில் நிலையாமை பற்றிப் பாடும் நூல்கள் யாவை ?



குறிப்பு

# பிரிவு 1 : கூறு 2.3 : சங்க இலக்கியங்களின் தனிச்சிறப்பு

குறிப்பு

## 2.3.1 சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்பு

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று பகுக்கப் பெற்றுள்ளன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்கள் ஆகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு. குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்பன பத்துப்பாட்டு நூல்கள் ஆகும்.

இத்தகைய இலக்கியங்கள் தமிழில் தோன்றிய சங்க காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். சங்க இலக்கியப் பாக்கள் அனைத்தும் தாய்மை, தூய்மை, செம்மை, மக்களின் வாழ்க்கை, புலமை, கொள்கை என்ற நிலையில் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டவை.

### 2.3.1.1 தாய்மை

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு தோன்றிய அற இலக்கியங்களுக்கும் பக்தி இலக்கியங்களுக்கும் முன்னோடியாகச் சங்க இலக்கியங்கள் உள்ளன.

தாயற்ற குழந்தையைப் போன்று உன் பகைவரின் நாடு துன்பம் அடையட்டும் என்று பரணர் பாடிய கருத்தையும் உவமையையும் திருத்தக்க தேவர் அப்படியே பயன்படுத்துகிறார். “தாயிலாக் குழந்தை போன்று சாதுயர் எய்துகின்றேன்” என்று சீவக சிந்தாமணியில் இத்தொடர் இடம்பெறுவதைக் காணலாம். இதுபோன்று அந்தாதி, தூது, பரணி, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களுக்கும் சங்க இலக்கியங்கள் தாயாக விளங்குகின்றன.

### 2.3.1.2 தூய்மை

சங்க இலக்கியங்கள் மொழி, நடை கருத்து ஆகியவற்றில் தமிழின் தூய்மையைப் பறை சாற்றுகின்றன. வடமொழிச் சொற்கள் அரிதாகவே பயன்படுத்தப் பெற்றுள்ளன எனலாம்.

“எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” என்றும்

“வாணிகப் பரிசிலன் அல்லேன்” என்றும்

“பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே” என்றும்

“நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்” என்றும் அமைந்த தொடர்கள் சங்க கால மக்களின் தூய நிலையை எடுத்துக்காட்டும் தொடர்கள் எனலாம்.

### 2.3.1.3 செம்மை

சங்க இலக்கியப் பாடல்களில் வடிவம், பொருள், மரபு முதலானவை ஒழுங்குபெற்ற வரையறையோடு திகழ்வதை ஆய்வறிஞர்கள்

உறுதிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு ஒழுங்குபட அமைவதைச் செம்மை என்று கூறுகின்றனர். இதனால் உயர்ந்த பாக்களாக இவை திகழ்கின்றன எனலாம்.

### 2.3.1.4 வடிவம்

சங்கப் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவால் அமைந்தவை. வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் என்னும் பாவகையினாலும் அமைந்துள்ளன. ஈரசைச் சொற்களை மிகுதியாகக் கொண்ட தமிழ் மொழியில் பாடல் எழுத ஆசிரியப்பா வடிவம் துணை செய்துள்ளது.

### 2.3.1.5 பொருள்

சங்க இலக்கியங்களில் அமைந்த பொருள் அகம், புறம் என்று இரண்டாக அமைந்தது. அகம் என்பது காதல் முதலான குடும்ப வாழ்வைக் குறிக்கும். இது ஐந்து திணைகளாகப் பகுக்கப் பெற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் கைக்கிளை, பெருந்திணை என்ற அமைப்பும் உள்ளது. இவற்றுக்கு முதல், கரு, உரிப்பொருள்கள் அமைத்துப் பாடல்களும் இலக்கணங்களும் புனைந்துள்ளனர்.

புறவாழ்வை, சமுதாய வாழ்வை, போர்வாழ்வை, ஏழு திணைகளில் அமைத்துப் பாடியுள்ளனர். புறப்பொருள் பற்றிய பாடல்களைப் பாடுவதைவிட அகப்பொருள் பற்றிப் பாட வரையறைகள் வகுக்கப் பெற்றன. அதனால் பொருட்செறிவு நிறைந்தனவாகச் சங்கப் பாடல்கள் அமைந்தன.

### 2.3.1.6 மரபு

சங்கப் பாடல்களில் குறிப்பாக அகப்பாடல்களில் தலைவன் பெயரோ, தலைவியின் பெயரோ சுட்டப்பெறாமல் பாடப்பெறுவது மரபாக இருந்துள்ளது. பெயர் சுட்டாத மரபு சங்க இலக்கியங்களுக்குத் தனிச்சிறப்பாகும்.

### 2.3.1.7 வாழ்க்கை

மக்கள் வாழ்க்கையைப் பாடிய சங்கப் புலவர்கள் இயற்கை, உவமை, உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றைத் தம் பாடல்களில் கையாண்டனர்.

### 2.3.1.8 இயற்கை

இயற்கையை இயற்கையாக மட்டுமே வைத்துப் பாடாமல் வாழ்க்கையோடு ஒட்டியதாக வைத்துப் பாடினர். சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பதற்கு இதுவே சான்றாகும்.

### 2.3.1.9 உவமை, உள்ளுறை

கருத்தை விளக்கப் புலவன் கையாண்ட உத்திகளுள் ஒன்று உவமை ஆகும். உவமையால் பெயர் அமைந்த சில புலவர்களும் காணப்படுகின்றனர். அணிலாடு முன்றிலார், தேய்புரிப் பழங்கயிற்றினார், விட்ட குதிரையார் என்பன சில எடுத்துக்காட்டுகள்.

“கையும் காலும் தூக்கத் தூக்கும்

குறிப்பு

ஆடிப் பாவை போல” என்று மனைவியின் சொல்லுக்கு ஆடும் கணவன் பற்றியும்,

“கையில் ஊமன் கண்ணில் காக்கும் உணங்கல்”

என்று காதலைச் சொல்ல முடியாதது பற்றியும் உள்ள உவமைகள் சிறப்பானவை. உவமைகளை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாக உணர்த்த உள்ளுறை, இறைச்சி என்ற முறையையும் கையாண்டனர்.

### 2.3.1.10 உணர்ச்சிப்பாடல்கள்

சங்க இலக்கியங்களில் அகப்பாடல்கள் பெரும்பாலும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவும் புறப்பாடல்கள் புறவுணர்ச்சிப் பாடல்களாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். நின்ற சொல்லர், நீடு தோன்றினியர் என்பதுவும் செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் என்பதுவும் தன்னுணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றன எனலாம்.

“சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே”

என்பது தன்னுணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

### 2.3.1.11 கற்பனை

சங்கப் புலவர்கள் கற்பனையை அளவு கடந்து பாடவில்லை. நம்பத் தகுந்ததாகவும், நடக்கக் கூடியதாகவும் உள்ள நிகழ்ச்சிகளையே கற்பனையாகப் பாடினர். இந்தப் புலவர்களின் கற்பனை நனவுலகக் கற்பனையாகவே இருந்தது.

### 2.3.1.12 உயர்ந்த கொள்கை

சங்க இலக்கியப் புலவர்கள் உயர்ந்த குறிக்கோளும், கொள்கையும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் எனலாம்.

“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே”

“ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று”

“யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”

என்பன போன்ற வரிகள் உயர்ந்த கருத்துக்களை உணர்த்தும் வரிகள் ஆகும். இவ்வாறு பல நிலைகளில் சங்க இலக்கியங்கள் சிறப்புக்குரியனவாகத் திகழ்கின்றன எனலாம்.

**2 மதிப்பெண் வினாக்கள் :**

**1. சங்க இலக்கியங்கள் எத்தகைய இலக்கியங்களுக்குத் தாயாக விளங்குகின்றன ?**

அந்தாதி, தூது, பரணி, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களுக்குத் தாயாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன.

**2. சங்க கால மக்களின் தூய நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

"பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதினினும் இலமே" என்ற தொடர் சங்க கால மக்களின் தூய நிலைக்குச் சான்றாகும்.

**3. சங்கப்பாடல்களின் சிறப்புகளை எவ்வாறு வகைப்படுத்துகின்றனர் ?**

தாய்மை, தூய்மை, செம்மை, வாழ்க்கை, புலமை, கொள்கை என்று சங்கப் பாடல்களின் சிறப்பை வகைப்படுத்துகின்றனர்.

**4. சங்கப்பாடல்களில் பயின்று வரும் பாக்கள் யாவை ?**

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியவை சங்கப் பாடல்களில் பயின்றுவரும் பாக்களாகும்.

**5 மதிப்பெண் வினாக்கள் :**

**1. சங்க இலக்கியங்களில் பின்பற்றப்பட்ட தாய்மை, தூய்மை, செம்மை குறித்து எழுதுக.**

## தாய்மை

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு தோன்றிய அற இலக்கியங்களுக்கும் பக்தி இலக்கியங்களுக்கும் முன்னோடியாகச் சங்க இலக்கியங்கள் உள்ளன.

தாயற்ற குழந்தையைப் போன்று உன் பகைவரின் நாடு துன்பம் அடையட்டும் என்று பரணர் பாடிய கருத்தையும் உவமையையும் திருத்தக்க தேவர் அப்படியே பயன்படுத்துகிறார். "தாயிலாக் குழந்தை போன்று சாதுயர் எய்துகின்றேன்" என்று சீவக சிந்தாமணியில் இத்தொடர் இடம்பெறுவதைக் காணலாம். இதுபோன்று அந்தாதி, தூது, பரணி, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களுக்கும் சங்க இலக்கியங்கள் தாயாக விளங்குகின்றன.

## தூய்மை

சங்க இலக்கியங்கள் மொழி, நடை கருத்து ஆகியவற்றில் தமிழின் தூய்மையைப் பறை சாற்றுகின்றன. வடமொழிச் சொற்கள் அரிதாகவே பயன்படுத்தப் பெற்றுள்ளன எனலாம்.

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்றும்

"வாணிகப் பரிசிலன் அல்லேன்" என்றும்

"பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்றும்

"நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" என்றும் அமைந்த தொடர்கள் சங்க கால மக்களின் தூய நிலையை எடுத்துக்காட்டும் தொடர்கள் எனலாம்.

## செம்மை

சங்க இலக்கியப் பாடல்களில் வடிவம், பொருள், மரபு முதலானவை ஒழுங்குபெற்ற வரையறையோடு திகழ்வதை ஆய்வறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு ஒழுங்குபட அமைவதைச் செம்மை

என்று கூறுகின்றனர். இதனால் உயர்ந்த பாக்களாக இவை திகழ்கின்றன எனலாம்.

**10 மதிப்பெண் வினாக்கள்:**

**1. சங்க இலக்கியங்களின் தனிச்சிறப்புப் பற்றி எழுதுக.**

விடை : 2.3.1 ல் உள்ளது தொடங்கி 2.3.1.12 வரை உள்ளவற்றை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

**1. உவமைத் தொடரால் அமைந்த புலவர்களின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

**2. சங்கப் பாடல்களில் பின்பற்றப்பட்ட மரபு என்ன ?**

**3. சங்கப்பாடல்களின் பொருள் எவ்வாறு பிரிக்கப்படுகிறது ?**

**4. சங்கப்பாடல்களில் மரபு எவ்வாறு போற்றப் பெறுகிறது ?**

குறிப்பு

# பிரிவு 1 - கூறு 3 : பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

## 3.1.1 பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

களப்பிரர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் தமிழகம் இருண்டகாலமாக இருந்தது. தமிழர் நாகரிகம் பண்பாடு ஆகியவை அழியத் தொடங்கின. அக்காலத்தில் தோன்றிய சமண முனிவர்களால் அறநூல்கள் மற்றும் பிற நூல்கள் எழுதப் பெற்றன. அவையே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்பட்டன. பெரும்பாலும் இவை வெண்பா யாப்பில் அமைந்தவை.

இந்நூல்களைப் பற்றிய வெண்பா ஒன்றுண்டு.

“நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு”

என்னும் வெண்பா பதினெட்டு நூல்களையும் நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிறது.

## 3.1.1 நாலடியார்

நாலடி என்னும் பெயருடையதாய் ஆர் என்னும் சிறப்பு விகுதி பெற்று “நாலடியார்” என்றாயிற்று. நானூறு பாக்கள் கொண்ட நூலாதலின் இது “நாலடி நானூறு” எனவும் வழங்கப்படுகின்றது. திருக்குறளைப் போன்று இந்நூலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இது

“இன்றுகொல் அன்றுகொல் என்னாது
பின்றையே நின்றத கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்”

என்று குறளைப் போன்று அறத்தை வலியுறுத்துகிறது. யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றை இந்நூல் திறம்பட எடுத்துரைக்கின்றது.

பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட இந்நாலடிப் பாடல்களைத் தொகுத்தவர் “பதுமனார்” என்னும் சமணப்பெரியார் ஆவார். இவரே இந்நூலுக்கு உரையும் செய்துள்ளார். அவ்வுரை இன்று கிட்டவில்லை.

இந்நூல் பெருமுத்தரையர்களின் வள்ளன்மையைக் குறிப்பதால் அவர்கள் பாண்டியர்களுக்கு அடங்கித் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முதலாம் பரமேச்சுரவர்ம பல்லவன் காலத்தில் சிறந்திருந்தனர்; எனவே இந்நூலின் காலம் ஏறத்தாழ 7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும் என்பர் திரு.எஸ்.வையர்புரிப் பிள்ளையவர்கள்.

எத்தகையாரது நட்பைக் கொளல் வேண்டும் என்பதனை,

“யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்”

எனும் பாடல் விளக்குகின்றது.

நண்பனிடத்துக் குறைகள் இருப்பது இயல்பே என்பதனை நெல்லுக்கு உமியுண்டு. நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்கும் உண்டு என்னும் உவமைகளால் கூறுகின்றார். “நாவின் கிழத்தி உறைதலால் சேராளே பூவின் கிழத்தி புலந்து” என அறிவும் திருவும் ஒன்று சேராமையைக் கூறுவர். “ஒருவர் பொறை இருவர் நட்பு”“மகனறிவு தந்தையறிவு”“பாற்சோற்றில் நெய் பெய்துண்டல்” எருமைக் கடாவினைப் பூட்டி ஏருழுதல், பிறன்மனை விழைந்தார்க்குக் கொலைத் தண்டனை, பிணத்தைச் சுடுதல், நாரினால் கட்டி இழுத்தல், தூய்மை செய்து புதைத்தல், கண்டவிடத்து எறிதல் எனும் பழக்கங்களும் பழமொழிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## 3.1.2 நான்மணிக்கடிகை

கடிகை – என்பது துண்டு என்னும் பொருளைத் தருவது. இதன் ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார். நான்கு மணிகளின் துண்டுகள் இணைந்த மாலையினைப் போன்று ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நீதிகள் உள்ளன. மணியான நற்கருத்துக்களைக் கொண்டு விளங்குவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

இந்நூல் தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்பில் “அம்மை” என்னும் வனப்புடையது என்பது உரையாசிரியர்களது கருத்தாகும். கடவுள் வாழ்த்து உட்பட நூற்றுநான்கு வெண்பாக்களை உடையது.

செய்யும் தொழிலால் மக்கள் இவ்வுலகில் சிறந்து விளங்குவர் என்பதையும் குறிப்பிடுகின்றார். நல்லவர்கள் பிறக்கும் குடியினை யாராலும் அறிய இயலாது என்பதை,

“கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும் மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குழ”

என இவர் விளக்குகின்றார்.

எல்லாம் பொருளில் பிறந்துவிடும்; இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக; வெல்வது வேண்டின் வெகுளி விடல்; தன்னொடு செல்வது வேண்டின் அறம் செய்க; மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள் தனக்குத்

தகைசால் புதல்வர்; மனக்கினிய காதற் புதல்வர்க்கு கல்வியே; கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு என்றெல்லாம் இனிய நற்கருத்துக்களை நூலில் பாடியுள்ளார். கொல்லாமையும், புலாலுண்ணாமையும் சிறந்த அறங்கள் என்று இவர் சுட்டுகின்றார்.

### 3.1.3 இனியவை நாற்பது :

இவை இவை இனியவை என்று 40 பாடல்களில் இயம்புவதால் இப்பெயர் பெற்றது. இதனைப் பாடியவர் பூதஞ்சேந்தனார். கி.பி. 5 ஆம் நூற்றாண்டினர். ஒவ்வொரு வெண்பாவிலும் 3, 4 இனிய பொருள்கள் இயம்பப்பட்டுள்ளன. ஆசிரியர் கடவுள் வாழ்த்துப் பாடலில் மும்மூர்த்திகளையும் போற்றுகின்றார். இவர் வேத ஒழுக்கத்தினராதல் வேண்டும் என்பர். இவர் சமண மதத்தினராகவும் இருக்கலாம் என்பது சிலர் கருத்து.

"பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே"

"நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்

புல்லா விடுதல் இனிது"

"மானம் படவரின் வாழாமை முன் இனிதே"

ஊனினைத் தின்று ஊனைப் பெருக்காமை, கடன்படா வாழ்வு, வருவாய்க்கேற்ற செலவு செய்தல் போன்ற நற்கருத்துக்கள் நூலில் உள்ளன. இன்னா, இனியவை ஆகிய இரு நாற்பதும் ஒருவராலேயே செய்யப்பட்டவை என்று எண்ணும் அளவுக்கு ஒற்றுமை இரண்டிற்கும் உள்ளது. குறட்கருத்துக்களும் பயின்று வருகின்றன.

### 3.1.4 இன்னா நாற்பது :

இவை இவை வாழ்வில் துன்பம் தரும் என்று, பாடல் ஒன்றுக்கு நான்கு நான்கு கருத்துக்கள் அமைத்து, 40 வெண்பாக்கள் உள்ளதால் இன்னா நாற்பது என்னும் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் கபிலர். உலகமானது இன்பம் ஒன்றினையே விரும்புகின்றது. துன்பத்தை நினைத்துப் கூடப் பார்ப்பதில்லை. இதனை நன்குணர்ந்து துன்பங்களைத் தொகுத்துக் கூறி இவைகளை நீக்கினால் இன்பமானது தானே வந்தெய்தும் என்ற நோக்கத்தால் எழுந்த நூலிது. குறளின் கருத்துக்களைக் கொண்டுள்ளது. இதில் 164 இன்னாச் செய்திகள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். மணியில்லா யானை மீது மன்னன் செல்லின் அவனுக்குத் தீங்கு நேரிடும். மதுவும் மாமிசமும் வெறுக்கப்பட வேண்டும். பெற்ற தாயைக் கண்ணெனக் காத்தல் வேண்டும், அந்தணர் வீட்டில் கோழியும் நாயும் புகுதல் கூடாது என்பன போன்ற கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

"பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா"

"வளமை யிலாளர் வனப் பின்னா இன்னா

இளமையுள் மூப்புப் புகல்"

"விழுத்தகு நூலும் விழையாதார் இன்னா"

என்பன போன்ற மணியான நற்கருத்துக்கள் இந்நூலில் உள்ளன.

### 3.1.5 கார் நாற்பது

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்த அருமையினை இயம்புகின்றது. ஆற்றியிருத்தல் முல்லைக்குரிய உரிப்பொருள். அகத்திணையின் பெரும் பொழுது கார்காலம். அக்கார்கால வருணனைகொண்டு இருத்தலை இயம்புவதாலும், ஒவ்வொரு பாட்டிலும் கார்காலம் பற்றிய குறிப்பு வருவதாலும், 40 பாடல் உள்ளமையாலும் இப்பெயர் பெற்றுள்ளது எனலாம். இதன் ஆசிரியர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மதுரைக் கண்ணன் கூத்தனார். வேள்வி, கார்த்திகை விளக்கு, முதல். கரு. உரிப்பொருள்கள் உவமையாக வருகின்றன. காலத்தால் பெயர் பெற்ற நூலிது. உயரிய உவமைகளோடு வளமான வருணனைகளும் இடம் பெற்றுள்ளன.

"கல்பயில் கானம் கடந்தார் வர ஆங்கே
நல்இசை ஏறொடு வானம் நடுநிற்பச்
செல்வர் மனம்போல் கவின்ஈன்ற, நல் கூர்ந்தார்
மேனிபோல் புல்லென்ற நாடு"

என்பதே சான்றாகும்.

தலைவன், தலைவி, தோழி, பாகன் ஆகிய நால்வர் கூற்றாகவே இப்பாடல்கள் உள்ளன. தலைவியின் ஏக்கம், அது தீர்க்க வரும் தலைவனின் வேகம், கார்காலம் தரும் வேதனை ஆகிய மூன்றும் இந்நூலில் நுட்பமாகச் சுட்டப்படுகின்றன.

### 3.1.6 களவழி நாற்பது

சோழன் கோச்செங்கணான் என்பவன் போரில் வெற்றி பெற்ற செய்தியைச் சிறப்பித்துப்பாடும் நூல் களவழி நாற்பது ஆகும். பொய்கையார் என்னும் புலவர் பாடியது. யானைப் போர் பற்றிய கற்பனைகள் மிகுதியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. சோழனோடு போரிட்டுத் தோற்ற சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னனை மீட்பதற்காகப் பொய்கையார் பாடியதாகக் கூறப்பெறுகிறது.

### 3.1.7 ஐந்திணை ஐம்பது :

அகப்பொருள் தழுவியது; முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் வைப்பு முறையினை உடையது. திணைக்குப் பத்துப்பாடல்கள் உடையது. இதனை இயற்றியவர் மாறன் பொறையனார். கி.பி – 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். "இதனை ஓதாதார் செந்தமிழ் சேராதார்" என்கிறது பாயிரம்.

களிறு பிடியைக் குளிப்பாட்டல், கலை, பிணையை நீருண்ணச் செய்தல், பிரிவாற்றாமையால் வளை கழலல், யானை புலிக்கு வெருவுதல் என்னும் சிறந்த கருத்துக்களும் கொல்லர் தெருவில் ஊசி விற்றல் எனும் பழமொழியும் உள்ளன. புண்ணுக்கு வெங்காரம் இடுதல், மணலில் கூடல்

இழைத்து எதிர்காலம் அறிதல், குழல், கொண்டை, சுருள், பணிச்சை, முடி எனும் கூந்தல் முடிப்பின் ஐவகைகளையும் காணலாம். வறண்ட பாதையில் நடக்கும் ஓர் அன்புக் காட்சியை,

“சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்ழக் - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி”

என்ற அருமையான பாட்டு ஒன்றில் காணலாம்.

### 3.1.8 ஐந்திணை எழுபது :

இஃது ஒவ்வொரு திணைக்கும் பதினான்காக, 70 வெண்பாக்களையுடைய அகநூல், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் முறை வைப்பினை உடையது. இந்நூலின் காப்புச் செய்யுள், பிள்ளையார் வணக்கத்தைக் கொண்டிருக்கிறது. இன்று கிடைப்பவை கடவுள் வாழ்த்து உள்பட அறுபத்து ஏழு பாடல்களாகும்.

இந்நூலை இயற்றியவர் மூவாதியார் என்பவர். காதலரைப் பிரிந்தவரிடம் மாலைக்காலம், கொலைக்களத்து ஏதிலார் போல வரும் என்னும் குறட்கருத்து,

“புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல”

என வருகின்றது. மகளிர்க்கு இடக்கண் துடித்தல், தும்மல் வருதல், ஆந்தை அலறல், நற்கனவு காண்டல் இவற்றை நன்னிமித்தங்களாகக் கருதினர். மணக்காலத்தே தலைவன் கூறும் உறுதிமொழிகளைத் தலைவி எழுதிப்பெறுவது போன்ற பண்டைப் பழக்க வழக்கங்கள் கூறப்படுகின்றன.

### 3.1.9 திணைமொழி ஐம்பது

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் வைப்பு முறையினை உடையது. திணைக்குப் பத்து வெண்பாக்களைக் கொண்டு ஐம்பது பாடல்கள் உள்ளன. சொற்பொருள் நயம் வாய்ந்தது. இந்நூலின் ஆசிரியர் கண்ணன் சேந்தனார் எனும் புலவராவர். இவர் கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூலில் குறிஞ்சி நிலத்தில் பாயும் அருவியின் அழகை ஆசிரியர் அழகுறப் புனைந்துள்ளார். இதனை,

“பவளமும் முத்தும் பளிங்கும் விரைஇப்
புகழக் கொணர்ந்து புறவடுக்கும் முன்றில்
தவழ்திரைச் சேர்ப்பன் வருவான்கொல் தோழி
திகழும் திருவமர் மார்பு”

என்ற அடிகளால் அறியலாம்.

### 3.1.10 திணைமாலை நூற்றைம்பது

இதுவும் அகப்பொருள் நூல். திணைக்கு முப்பது பாடல்களாக ஐந்திணைக்கும் நூற்றைம்பது பாடல்கள் பெற்றுத் திணைமாலை

நூற்றைம்பது என்ற பெயருடன் திகழ்கின்றது. இதனை இயற்றியவர் கணி மேதாவியார் ஆவார். இது தொல்காப்பிய அகத்திணையியல் துறைகளுக்கு இலக்கியமாகத் திகழ்வதுடன் கோவைத் துறைகள் சிலவற்றிற்கும் இலக்கியமாகத் திகழ்கிறது. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற முறையில் இதன் திணைகள் அமையப்பெற்றுள்ளன.

இந்நூல் ஆசிரியர் பாண்டிய வேந்தன் ஒருவனால் ஆதரிக்கப்பட்டவர் என்பது இதிலுள்ள அகச்சான்றுகளினால் காணக்கிடக்கின்றது.

இம்மையாற் செய்த வினை இம்மையிலேயே பலன் அளிக்கும் என்றோர் அரிய செய்தியினை இவ்வாசிரியர்,

"இம்மையாற் செய்ததை யிம்மையே ஆம்போலும்!
உம்மையே ஆமென்பர் ஓரார்காண்"

என்பதனால் குறிக்கின்றார்.

## 3.1.11 திருக்குறள்

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலேயே காலத்தாலும், பொருளாலும், பல்வகை மாட்சிமைகளாலும் சிறந்தது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களும். பல இயல்களும், 133 அதிகாரங்களும், அதிகாரத்திற்குப் பத்தாக 1330 குறட்பாக்களும் கொண்டது. குறள் வெண்பாவால் இயன்று,"திரு" என்னும் அடைமொழி கொண்டு "திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி. வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவ நூல், திருவள்ளுவப் பயன், திருவள்ளுவம்" எனும் புறப்பாட்டு "அறம்" என்னும் பதினொரு பெயர்களால் இந்நூல் அழைக்கப்படுகின்றது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் இந்நூற்கு உரை செய்துள்ளனர். இராமாநுஜ கவிராயர், சரவணப் பெருமாளையர், தண்டபாணி, அரசஞ்சண்முகனார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்றோரும் இதற்கு உரை செய்துள்ளனர்.

திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. தமிழிலக்கியத்தில் ஒன்றே முக்கால் அடிகளில் இயன்று சமணர், பௌத்தர், சைவர், வைணவர் அனைவர்க்கும் உரித்தாகி எந்நாட்டவர்க்கும், எக்காலத்துக்கும், முக்காலத்துக்கும், எத்திறத்தார்க்கும் உரிய நூலாக மிளிர்கிறது இது. எனவேதான் மாங்குடி மருதனார் "ஓதற்கு எளிதாய், உணர்வதற்கு அரியதாகி வேதப் பொருளாய், மிக விளங்கி," என்றும் செங்கண்ணனார் "வேதப்பொருளை விரகால் விரித்தும் என்றும் வண்ணக்கஞ் சாத்தனார்."“ஆரியம் வேதமுடைத்து, தமிழ் திருவள்ளுவனார் ஓதுகுறட்பா உடைத்து" என்றும் குறிப்பர். தமிழ் நாகனார்,“எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்கின்றார்.

இது உலக அரங்கில், உலக ஒருமைப்பாட்டை உணர்த்தும் அறநூல், பொது வாழ்வுக்கும் தனி வாழ்வுக்கும் அடிப்படை அறமே என்னும் போக்கினை உணர்த்தும் இந்நூலின் சிறப்பினை எடுத்துக் கூறவே திருவள்ளுவமாலை எனும் தனிநூல் இயற்றப்பட்டது. ஒரே நூலுக்குப் பதின்மர் உரை செய்து உள்ளனர். மேலை, கீழைநாட்டு மொழிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை, இதன் சிறப்பைச் சொல்லுகிறது.

**அறஇலக்கியம் :**

அறம் உணர்த்தும் நூல்களிலெல்லாம் திறம் மிக்க நூலாக விளங்குவது திருக்குறள். இவ்வறமே உயிர்க்கு ஆக்கம் தருவதாகவும், சிறப்பையும், செல்வத்தையும் தருவதாகவும் கருதுகிறார் வள்ளுவர்,

“அன்றறிவாம் என்னாது அறம் செய்க”

“ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை”– என்றும்

“என்றும் ஒருவுதல் வேண்டும் புகழோடு
நன்றி பயவா வினை”

என்றும் அறத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

**அறிவு இலக்கியம் :**

திருக்குறள் அறநூல் மட்டுமன்று வாழ்வுக்கு விளக்கம் தரும் அறிவு நூலும் ஆகும். வாழ்க்கை வழிகாட்டியும் ஆகும். திருவள்ளுவர் மனித வாழ்வை நன்கு நுணுகி நோக்கி ஆராயும் ஆற்றல் பெற்றவர். எனவே அவர்,

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற”

என அறத்தின் இயல்பையும்,

“உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்தின் உரு”

எனத் தவத்தின் இயல்பையும்,

“அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று”

எனக் கொல்லாமையின் சிறப்பையும் கூறுகின்றார். இவ்வாறு அறிவிலக்கியமாகத் திகழ்கின்றது திருக்குறள்.

**உணர்ச்சி இலக்கியம் :**

அறம், அறிவு இலக்கியமாக மட்டுமேயல்லாமல் இயற்கையை நன்கு நோக்கிப் பல அழகிய உவமைகளைக் கூறி, கற்போர் உள்ளத்தில் உணர்ச்சியை உண்டாக்கும் இலக்கியமாகவும் திகழ்கின்றது அது.

காமத்துப்பால் தூயகாதல் உணர்வுகளை ஊட்டவல்ல உணர்ச்சி இலக்கியமாகவே திகழ்வதைக் காணலாம்.

இல்லறத்தை,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்

போஒய்ப் பெறுவது எவன்"

என்று பாராட்டுகின்றார்.

துறவறத்தின் பெருமையை,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்

மற்றை யவர்கள் தவம்"

என்று புலப்படுத்துகின்றார்.

அரசன் எத்தகு குணங்களோடு விளங்கி எவ்வண்ணம் நாட்டை ஆள வேண்டும் என்பதை அரசியல் கூறுகின்றது. அரசனுக்கு அங்கமாய் அமையும் அமைச்சர், தூதுவர் முதலியோர் இலக்கணங்களை அங்கவியல் அறிவிக்கின்றது. ஒழுக்க வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புடைமை, நாணுடைமை முதலியவற்றினை ஒழிபியல் உணர்த்துகின்றது.

இவ்வாறு நீதி நூலாகவும், அறநெறி நூலாகவும், அற நூலாகவும் திகழ்கின்றது திருக்குறள்.

## 3.1.12 திரிகடுகம்

இது மருந்தின் பெயராகும்; சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த மருந்து உடல் நோய் நீக்குவது போல உள்ளத்தைத்திருத்தும் ஒழுக்க நெறிகள் மூன்றினை ஒவ்வொரு வெண்பாவும் உள்ளடக்கியுள்ளது. இதன்கண் நூறு பாடல்கள் உள்ளன. இதனைப் பாடியவர் நல்லாதனார். வைணவர்; கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியவர். வருவாயில் காற் பகுதியை அறஞ்செய்தல், குளித்த பின்னே உணவு உட்கொள்ளுதல், கொடுங்கோலரசன், பொய்யன், கூடா ஒழுக்கத்தினன் இவர்களால் மழை பெய்யாமை, வேள்வியின் பொருட்டும் கொலை கூடாது போன்ற அரிய கருத்துகள் இதில் உள்ளன. கணவனும் மனைவியும் எவ்வாறு வாழ்தல் வேண்டுமென்பதை இவர் முப்பத்தைந்து பாடல்களில் குறிப்பிடுகின்றார். இந்நூலின் நூறு பாக்களில், நன்மை தருவனவாக அறுபத்தாறும், தீமை தருவனவாக முப்பத்து நான்கும் குறிப்பிடப்பட்டுள்ளன.

"அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய

தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் - சொல்லின்

அரிலகற்றுங் கேள்வியர் நட்புமிம் மூன்றுந்

திரிகடுகம் போலும் மருந்து".

என்ற செய்யுளால் இப்பெருமையை நாம் உணரலாம்.

## 3.1.13 ஆசாரக்கோவை

ஒழுக்கம் நிரல்படக் கூறப்பெறுவதால் ஆசாரக்கோவை என்னும் பெயர் பெற்றது. இது பல்வேறு வெண்பா வகைகளும் விரவி, கடவுள் வாழ்த்துப்பாடல் நீங்கலாக நூறு பாடல்களைத் தன்னகதே கொண்டுள்ளது.

மக்கள் கொள்ள வேண்டியனவும், தள்ள வேண்டியனவுமான நெறிகளை நவிலும் இது வடமொழியை அடியொற்றிய நூல்; தௌமியர் பாண்டவர்க்குக் கூறிய உபதேசத்தை அடியொற்றியது என இது கூறப்படுகின்றது. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார். இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர்.

நீராடல், உண்ணல், தொழுதல், உறங்கல், உடுத்தல், உபசாரம், ஒழுகும் முறை ஆகிய அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைச் செய்திகளை இது கூறுகின்றது. ஆசாரம் என்பது நல்ல முறையில் நடத்தலும் உள்ளும், புறமும் தூய்மையுடன் உறைதலும் ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம் பற்றியன – 6; புறம் பற்றியன – 12 இவற்றில் அறம் பற்றியவை – 11, போர் பற்றியது – 1.

**அகம் பற்றியன – (6):**

## 3.1.14 பழமொழி நானூறு

இந்நூலாசிரியர் முன்றுறையரையனார் ஆவார். இந்நூலின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்திருக்கின்ற காரணத்தால் இந்நூல் இப்பெயர் பெற்றது. ஆன்றோர் தம் பட்டறிவின் வாயிலாய்க் கண்ட உண்மைகளை ஈடும் எடுப்பு மிலாத சொற்களால் குறித்துச் சென்றனர். அம்மந்திரச் சொற்கள் அன்று முதல் இன்று வரை வாழ்வில் பயின்று வருவதால், அவை பழமொழிகள் எனப்படுகின்றன. பழமொழி ஒவ்வொன்றும் ஈற்றடியில் அமையப் பாடப்பட்ட நானூறு பாடல்களின் தொகுப்பே இப்பழமொழி நூலாகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கும் நாலடியாருக்கும் அடுத்து எண்ணத்தகும் நூல் இதுவேயாகும்.

நாய் காணின் கல் காணாவாறு, குலவிச்சை கல்லாமல் பாகம் படும், முறைமைக்கு மூப்பு இளமை கல், நிறை குடம் நீர் தளும்பல் இல், திங்களை நாய் குரைத்தற்று, நுணலும் தன் வாயால் கெடும் என்பன போன்ற இந்நூற் பழமொழிகள் சிறப்பானவை. கல்வி, ஒழுக்கம், ஊழ், நட்பு, அரசியல், இல்வாழ்வு, வீடுபேறு ஆகிய அனைத்தையும் வகுத்துக் கூறுகின்ற இந்நூல், பண்டைத் தமிழர் பண்பாடு காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றது.

## 3.1.15 சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் என்பதும் மருந்தின் பெயரால் அமைந்ததாகும். மூலம் - வேர்; பஞ்சம் - ஐந்து; கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி ஆகியவற்றின் வேர்களினின்று செய்த மருந்து நோய் தீர்ப்பது போல, உயிருக்கு நலம் பயக்கும் ஐந்து உண்மைகளை ஒவ்வொரு வெண்பாவும் கொண்டுள்ளமையால் இது இப்பெயரினைப் பெறுகிறது. சிறப்புப்பாயிரத்தில் காணப்படும் இரண்டு செய்யுட்களைத் தவிர்த்து. இந்நூலில் நூற்றிரண்டு பாடல்கள் உள்ளன.

இந்நூலின் ஆசிரியர் காரியாசான் என்பவர்; இவர் கணிமேதாவியாருடைய ஒரு சாலை மாணாக்கர் என்பர். இவர் தம் நூலில் சமணசமயக் கருத்துக்களைச் சிலவாகவும் சமயப் பொதுக்கருத்துக்களை மிகுதியாகவும் கூறியுள்ளார். தோறக்கன்றைக்கட்டிப்பால் கறக்கும் வழக்கு. உண்மை ஞானத்தாலே வீடுபேறு கிட்டும் என்ற கருத்துக்களையும் இவர் கூறியுள்ளார்.

“மயிர்வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும்
உயிர்வனப்பும், காதின்வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும், வனப்பல்ல; நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு”

என்கின்றார். மெய்யுணர்வு ஒன்றால்தான் வீடு பேற்றினை ஒருவன் எய்த இயலும் என்பதனையும் கூறுகிறார்.

## 3.1.16 கைந்நிலை

இதுவும் அக இலக்கியம், திணைக்குப் பன்னிரண்டாக 60 வெண்பாக்களை உடையது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் அமைப்பினை உடையது. இவ்வெண்பாக்களில் பல சிதைந்து போயின. இந்நூலின் ஆசிரியர் புல்லங்காடனார். இவர் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாக இருக்க வேண்டும் என்பர் அறிஞர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூலைச் சார்ந்த நூல் இன்னிலையா, கைந்நிலையா என்பதில் அறிஞர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்நூலை “ஐந்திணை அறுபது” என்பர். தலைவியின் நெஞ்சநிலையினை,

“பொன்னிணர் வேங்கைப் புனம்சூழ் மலைநாடன்
மின்னின் அனைய வேல் ஏந்தி இரவினில்
இன்னே வரும்கண்டாய் தோழி! இடையாமத்து
என்னை இமைபொரு மாறு”

என்ற பாடலால் அறிந்து மகிழலாம்.

## 3.1.17 முதுமொழிக்காஞ்சி

உலக நிலையாமையை உணர்த்தும் நூல். இந்நூலை இயற்றியவர் கூடலூர்கிழார் என்பவராவர். குறட்டாழிசையால் இயற்றப் பெற்ற இனிய இந்நூல் பத்துப்பத்துச் செய்யுட்கள் அடங்கிய பத்துப் பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு பத்தும் “ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்” என ஒரே மாதிரி தொடங்குகின்றது. அவ்வப்பத்தில் எல்லாப் பாடல்களின் இறுதியிலும் தொடர்ந்து ஒரே மாதிரிச் சொற்களைக் கொண்ட அறிவுப்பத்து, அல்லபத்து என ஒவ்வொரு பத்தும் தலைப்புகளைப் பெறுகின்றன. இது குறள் வெண் செந்துறையால் இயன்ற பாடல்கள் கொண்டதாகும். முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித் திணையின் பல்வேறு துறைகளுள் ஒன்று எனலாம்.

"பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்

உலகியல் பொருள் முடிபுணரக் கூறின்று"

எனும் புறப்பொருள் வெண்பாமாலைக் கிணங்க உலகியலை உணர்த்தும் அறம், பொருள். இன்பங்களை இந்நூல் அறியச் செய்கின்றது.

"கல்வியினும் ஒழுக்கமே மேம்பட்டது" என்கின்றார் இவர்.

"ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்"

"ஓதலின் சிறந்ததன் றொழுக்கமுடைமை"

"நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று"

"நகையிற் பெரியதோர் நல்குர வில்லை"

"இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்"

என்பன போன்ற கருத்துக்களை இவர் உணர்த்துகின்றார்.

## 3.1.18 ஏலாதி

ஏலாதி என்பதும் ஒரு மருத்துவப் பெயரே; ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, சுக்கு. மிளகு, திப்பிலி ஆகிய ஆறு மருந்துகளின் கலவை உடல்நோய் தீர்க்கும் மருந்து ஆவதுபோல் இந்நூல் வெண்பாக்களில் விளங்கும் நீதிகள் "அறியாமையாகிய நோயைப்போக்கும்" ஆதலின் இப்பெயர் பெற்றது. எண்பது பாடல்கள் அடங்கிய இந்நூலைப் பாடியவர் கணிமேதாவியார் ஆவார். இவரே திணைமாலை நூற்றைம்பதினைப் பாடியவரும் ஆவார். சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட இந்நூலில் 82 செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர் வடமொழிப் புலமை மிக்கவர். இவரைச் சமணர் எனக் கருதுவர் அறிஞர்.

பிள்ளைகளின் வகையினை இவர் இரு பாடல்களில் நன்கு விளக்குகின்றார்; கொல்லாமையை வலியுறுத்துகின்றார். அன்புடையார் செயல்களைத் திறம்படச் சொல்கின்றார். மன்னர்க்குரிய மாண்புகளை இருபத்தொரு பாடல்களிலும், வீடுபேற்றைப் பற்றி ஏழு பாடல்களிலும் எடுத்தியம்புகின்றார்; உணவு கொடுப்பதே உயர்வான அறம் என்று பகர்கினறார்; நல்லொழுக்கம் மிக்கவர் கடவுளரினும் சிறப்புப் பெற்று நிலவுலகில் அரசராய்த் திகழ்வர்; காலன் பொல்லாதவன்; எனவே வீடு பேற்றினை விரைந்து பெறுக என்றும் கூறுகின்றார்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. களவழி நாற்பதின் ஆசிரியர் யார் ?**

களவழி நாற்பதின் ஆசிரியர் பொய்கையார்.

**2. பழமொழி நானூறு ஆசிரியர் பெயர் என்ன ?**

பழமொழி நானூறு ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார்.

**3. திரிகடுகம் பெயர்க் காரணம் கூறுக.**

சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று மருந்துகள் போல் மூன்று கருத்துக்கள் அமையப் பாடப் பெற்றிருப்பதால் திரிகடுகம் ஆனது.

குறிப்பு

5 மதிப்பெண் வினாக்கள்

**1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகநூல்கள் பற்றி எழுதுக.**

**ஐந்திணை ஐம்பது :**

அகப்பொருள் தழுவியது; முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் வைப்பு முறையினை உடையது. திணைக்குப் பத்துப்பாடல்கள் உடையது. இதனை இயற்றியவர் மாறன் பொறையனார். கி.பி – 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். "இதனை ஓதாதார் செந்தமிழ் சேராதார்" என்கிறது பாயிரம்.

களிறு பிடியைக் குளிப்பாட்டல், கலை, பிணையை நீருண்ணச் செய்தல், பிரிவாற்றாமையால் வளை கழலல், யானை புலிக்கு வெருவுதல் என்னும் சிறந்த கருத்துக்களும் கொல்லர் தெருவில் ஊசி விற்றல் எனும் பழமொழியும் உள்ளன. புண்ணுக்கு வெங்காரம் இடுதல், மணலில் கூடல் இழைத்து எதிர்காலம் அறிதல், குழல், கொண்டை, சுருள், பணிச்சை, முடி எனும் கூந்தல் முடிப்பின் ஐவகைகளையும் காணலாம். வறண்ட பாதையில் நடக்கும் ஓர் அன்புக் காட்சியை,

"சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

என்ற அருமையான பாட்டு ஒன்றில் காணலாம்.

**ஐந்திணை எழுபது :**

இ:்து ஒவ்வொரு திணைக்கும் பதினான்காக, 70 வெண்பாக்களையுடைய அகநூல், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் முறை வைப்பினை உடையது. இந்நூலின் காப்புச் செய்யுள், பிள்ளையார் வணக்கத்தைக் கொண்டிருக்கிறது. இன்று கிடைப்பவை கடவுள் வாழ்த்து உள்பட அறுபத்து ஏழு பாடல்களாகும்.

இந்நூலை இயற்றியவர் மூவாதியார் என்பவர். காதலரைப் பிரிந்தவரிடம் மாலைக்காலம், கொலைக்களத்து ஏதிலார் போல வரும் என்னும் குறட்கருத்து,

"புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல"

என வருகின்றது. மகளிர்க்கு இடக்கண் துடித்தல், தும்மல் வருதல், ஆந்தை அலறல், நற்கனவு காண்டல் இவற்றை நன்னிமித்தங்களாகக் கருதினர். மணக்காலத்தே தலைவன் கூறும் உறுதிமொழிகளைத் தலைவி எழுதிப்பெறுவது போன்ற பண்டைப் பழக்க வழக்கங்கள் கூறப்படுகின்றன.

**திணைமொழி ஐம்பது**

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் வைப்பு முறையினை உடையது. திணைக்குப் பத்து வெண்பாக்களைக் கொண்டு ஐம்பது பாடல்கள் உள்ளன. சொற்பொருள் நயம் வாய்ந்தது. இந்நூலின்

ஆசிரியர் கண்ணன் சேந்தனார் எனும் புலவராவர். இவர் கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூலில் குறிஞ்சி நிலத்தில் பாயும் அருவியின் அழகை ஆசிரியர் அழகுறப் புனைந்துள்ளார். இதனை,

“பவளமும் முத்தும் பளிங்கும் விரைஇப்
புகழக் கொணர்ந்து புறவடுக்கும் முன்றில்
தவழ்திரைச் சேர்ப்பன் வருவான்கொல் தோழி
திகழும் திருவமர் மார்பு”

என்ற அடிகளால் அறியலாம்.

**திணைமாலை நூற்றைம்பது**

இதுவும் அகப்பொருள் நூல். திணைக்கு முப்பது பாடல்களாக ஐந்திணைக்கும் நூற்றைம்பது பாடல்கள் பெற்றுத் திணைமாலை நூற்றைம்பது என்ற பெயருடன் திகழ்கின்றது. இதனை இயற்றியவர் கணி மேதாவியார் ஆவார். இது தொல்காப்பிய அகத்திணையியல் துறைகளுக்கு இலக்கியமாகத் திகழ்வதுடன் கோவைத் துறைகள் சிலவற்றிற்கும் இலக்கியமாகத் திகழ்கிறது. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற முறையில் இதன் திணைகள் அமையப்பெற்றுள்ளன.

இந்நூல் ஆசிரியர் பாண்டிய வேந்தன் ஒருவனால் ஆதரிக்கப்பட்டவர் என்பது இதிலுள்ள அகச்சான்றுகளினால் காணக்கிடக்கின்றது.

இம்மையாற் செய்த வினை இம்மையிலேயே பலன் அளிக்கும் என்றோர் அரிய செய்தியினை இவ்வாசிரியர்,

“இம்மையாற் செய்ததை யிம்மையே ஆம்போலும்!
உம்மையே ஆமென்பர் ஓரார்காண்”

என்பதனால் குறிக்கின்றார்.

**கார் நாற்பது**

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்த அருமையினை இயம்புகின்றது. ஆற்றியிருத்தல் முல்லைக்குரிய உரிப்பொருள். அகத்திணையின் பெரும் பொழுது கார்காலம். அக்கார்கால வருணனைகொண்டு இருத்தலை இயம்புவதாலும், ஒவ்வொரு பாட்டிலும் கார்காலம் பற்றிய குறிப்பு வருவதாலும், 40 பாடல் உள்ளமையாலும் இப்பெயர் பெற்றுள்ளது எனலாம். இதன் ஆசிரியர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மதுரைக் கண்ணன் கூத்தனார். வேள்வி, கார்த்திகை விளக்கு, முதல். கரு. உரிப்பொருள்கள் உவமையாக வருகின்றன. காலத்தால் பெயர் பெற்ற நூலிது. உயரிய உவமைகளோடு வளமான வருணனைகளும் இடம் பெற்றுள்ளன.

“கல்பயில் கானம் கடந்தார் வர ஆங்கே
நல்இசை ஏறொடு வானம் நடுநிற்பச்
செல்வர் மனம்போல் கவின்ஈன்ற, நல் கூர்ந்தார்
மேனிபோல் புல்லென்ற நாடு”

என்பதே சான்றாகும்.

தலைவன், தலைவி, தோழி, பாகன் ஆகிய நால்வர் கூற்றாகவே இப்பாடல்கள் உள்ளன. தலைவியின் ஏக்கம், அது தீர்க்க வரும் தலைவனின் வேகம், கார்காலம் தரும் வேதனை ஆகிய மூன்றும் இந்நூலில் நுட்பமாகச் சுட்டப்படுகின்றன.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் பற்றி எழுதுக.**

விடை : 3.1.1, 3.1.2, 3.1.3, 3.1.4, 3.1.11, 3.1.12, 3.1.13, 3.1.14, 3.1.15, 3.1.17, 3.1.18 எழுத வேண்டும்.

**2. திருக்குறள் பற்றி விரித்துரைக்க.**

விடை : 3.1.11 ல் உள்ள விடையை எழுத வேண்டும்.

# பிரிவு 1 - கூறு 3.2 : அறநூல்கள் தோற்றத்திற்கான காரணங்கள்

சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர்களும் பல்லவர்களும் முறையே சோழ பாண்டிய நாடுகளையும் நடுநாட்டையும் தொண்டை நாட்டினையும் கைப்பற்றி விட்டனர்.

இவர்கள் காலத்தில் வேற்றுமொழிகளும் வேற்றுச் சமயங்களும் தமிழகத்தில் பரவின. குறிப்பாக வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளைக் களப்பிரர்கள் ஆதரித்தனர். சமணம், பௌத்தம் போன்ற சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. தமிழையும் தமிழர் கலைகளையும் தமிழ்ப் பண்பாடுகளையும் இவர்கள் வளரவிடவில்லை. தமிழகம் இதுவரை கண்டிராத மாபெரும் வீழ்ச்சியடைந்ததாக, அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டின் முதற்பகுதி முதல் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரைக்குட்பட்ட காலப் பகுதியைத் தமிழ்நாட்டின் இருண்டகாலம் என்பர்.

பாண்டியர் நிறுவிய கடைச்சங்கம் அழிந்தபின் சமண முனிவர்கள் திராவிடச் சங்கம் ஒன்றை அமைத்தனர். இச்சங்கத்தார் இருண்ட காலத் தமிழ் மக்கள் தம் பண்டை அறவொழுக்கங்களைப் போற்றினார்கள்; அவற்றின் வழியில் நல் வாழ்க்கை நடத்த சிறுசிறு நீதி நூல்களை எழுதினார்கள். இச்சூழலில் அற நூல்கள்\ நீதிநூல்கள் மிகுதியாக எழுந்தன.

சங்க இலக்கியத்தில் திணை இலக்கியச் செல்வாக்கே மிகுதி. சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கியங்களின் செல்வாக்கே மிகுதி. பண்டைத் தமிழகத்தில் வீரயுகம் போற்றப் பெற்றது. போரும் பூசலும் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தது. பூசலுக்குப்பின் வாழ்க்கையில் நிகழ்ந்த சோர்வான வாழ்க்கை மனநிறைவை மக்களுக்குத் தரவில்லை. இந்நிலையிலிருந்து மீட்சிபெற அற இலக்கியங்கள் தேவையெனப் புலவர்கள் கருதியிருக்கலாம்.

எல்லாக் காலத்திலும், அற இலக்கியங்கள் தோன்றிய போதும் சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கியங்கள் மிகுதியாகவே தோன்றியிருக்கும் நிலை கருதத்தக்கதாகும்.

தொல்காப்பியர் காஞ்சித் திணையிலும் பாடாண் திணையிலும் கூறிய பல துறைகள் அறங்களாகவும் தத்துவங்களாகவும் பிற்காலத்தில் பரிணாமம் பெற்றன. சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் சிறந்த அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இவைபோன்ற அடிப்படையிலிருந்து தனித்த இலக்கிய வகைகளாக அற நூல்கள் தோற்றம் பெற்றது குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி நிலையாகவும் கருதலாம்.

பிற்காலத்தில் தோன்றிய திருக்குறள் அரிய அறக்கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்துத் தரும் ஆற்றல் தரும் இலக்கியமாக உதயமாகிறது. பிற்கால அறநூல்கள் தோன்றுவதற்குரிய அடிப்படையாகவும் ஆதரவையும் திருக்குறள் தந்தது எனலாம்.

சங்கப் பாக்களில் ஊன் உண்பதும், மது அருந்துவதும், பரத்தையரோடு இன்புற்று இருப்பதும் சமூகத்தில் பரவலாக இடம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. திருக்குறள் போன்ற கீழ்க்கணக்கு நூல்களோ அவ்வகை வழக்கங்களைக் கடுமையாகத் தாக்குகின்றன. இவ்வாறு சமூகத்தில் அறத்தின் தேவை குறித்த விழிப்புணர்வு ஓங்கியிருந்ததால் அற இலக்கியங்கள் பெருகின.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. யாருடைய ஆட்சிக்காலம் தமிழகத்தின் இருண்டகாலம் எனப்படுகிறது ?**

தமிழகத்தைக் களப்பிரர் ஆட்சி புரிந்த காலம் தமிழகத்தின் இருண்டகாலம் எனப்படுகிறது.

**2. அறக்கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்துத் தரும் நூல் எது ?**

அறக்கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்துத் தரும் நூல் திருக்குறள் ஆகும்.

**3. அறநூல்கள் எவ்வகை வழக்கங்களைக் கடுமையாகத் தாக்கின ?**

ஊன் உண்பது, மது அருந்துவது, பரத்தமை ஒழுக்கம் போன்ற வழக்கங்களை அறநூல்கள் கடுமையாகத் தாக்கின.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. அறநூல்களின் தோற்றத்திற்கான காரணங்களைக் கூறுக.**

3.2. பகுதியில் உள்ளதை அப்படியே படித்து எழுதுக.

**பயிற்சி வினாக்கள்**

**1. அறஇலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய காலம் எது ?**

குறிப்பு

# பிரிவு 1 - கூறு 3.3 : வச்சிரநந்தியின் தமிழ்ச்சங்கம்

பண்டைக் காலத் தமிழகத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனும் முச்சங்கங்கள் இருந்து தமிழ் மொழியை வளப்படுத்தின. தமிழர் ஆட்சி குன்றி, களப்பிரர். பல்லவர் ஆட்சி சிறப்புற்றது. இக்கால கட்டத்தில் கி.பி. 470ல் பூஜ்யபாதரின் மாணவராகிய வச்சிரநந்தி எனும் வண்டமிழ்த் தொண்டரான சமணத் துறவி மதுரையில் ‘திரமிள சங்கம்’ என்னும் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். பொதுவாகச் சமணர்கள் தங்கிய இடம் பள்ளி என அழைக்கப்பெற்றது. ஒவ்வொரு பள்ளியும் கல்வி கற்பிக்கும் நிலையமாக விளங்கியது.

கல்விப் பணியோடு கூடிய சமணப் பள்ளிகளை நிறுவியதோடு மட்டுமல்லாமல் திரமிள சங்கத்தையும் நிறுவினார். இச்சங்கம் நான்காம் தமிழ்ச்சங்கம் என்று அழைக்கப் பெறுகின்றது. இச்சங்கத்தினர் பல்வேறு புதிய நூல்களை இயற்றினர். பழைய தமிழ் நூல்களைத் தேடிச் சேர்த்தனர். இவற்றை ஆராய்ந்த வச்சிர நந்தியாரே இவற்றைப் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என்றும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் பிரித்துத் தொகுத்தார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை மதுரையில் இருந்த புலவர்கள் எழுதினார்கள் என்று ஒரு வெண்பா கூறுகிறது.

வச்சிரநந்தி தமிழ் நூல்களைத் தொகுத்தளிக்காமலிருந்தால், இருவகைக் கணக்கு நூல்களில் பலவற்றை நாம் இழந்திருப்போம் என்பது உறுதி. இருபதாம் நூற்றாண்டில் உ.வே.சாமிநாதையர் செய்த தொண்டை வச்சிரநந்தி செய்துள்ளார். இருண்ட காலத்துத் தோன்றிய தமிழ் நிலவு வச்சிரநந்தி என்றால் அது சாலப் பொருந்தும்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. வச்சிரநந்தி தோற்றுவித்த சங்கத்தின் பெயர் என்ன ?**

வச்சிரநந்தி தோற்றுவித்த சங்கம் திரமிள சங்கம் ஆகும்.

**2. வச்சிரநந்தியின் தமிழ்த்தொண்டு யாருடைய தொண்டு போன்றது ?**

வச்சிரநந்தியின் தமிழ்த்தொண்டு உ.வே. சாமிநாதய்யர் செய்த தொண்டு போன்றதாகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. வச்சிர நந்தியின் தமிழ்ச்சங்கம் பற்றி எழுதுக**

பண்டைக் காலத் தமிழகத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனும் முச்சங்கங்கள் இருந்து தமிழ் மொழியை வளப்படுத்தின. தமிழர் ஆட்சி குன்றி, களப்பிரர். பல்லவர் ஆட்சி சிறப்புற்றது. இக்கால கட்டத்தில் கி.பி. 470ல் பூஜ்யபாதரின் மாணவராகிய வச்சிரநந்தி எனும் வண்டமிழ்த் தொண்டரான சமணத் துறவி மதுரையில் ‘திரமிள சங்கம்’ என்னும் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். பொதுவாகச் சமணர்கள் தங்கிய இடம் பள்ளி என அழைக்கப்பெற்றது. ஒவ்வொரு பள்ளியும் கல்வி கற்பிக்கும் நிலையமாக விளங்கியது.

கல்விப் பணியோடு கூடிய சமணப் பள்ளிகளை நிறுவியதோடு மட்டுமல்லாமல் திரமிள சங்கத்தையும் நிறுவினார். இச்சங்கம் நான்காம் தமிழ்ச்சங்கம் என்று அழைக்கப் பெறுகின்றது. இச்சங்கத்தினர் பல்வேறு புதிய நூல்களை இயற்றினர். பழைய தமிழ் நூல்களைத் தேடிச் சேர்த்தனர். இவற்றை ஆராய்ந்த வச்சிர நந்தியாரே இவற்றைப் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என்றும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் பிரித்துத் தொகுத்தார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை மதுரையில் இருந்த புலவர்கள் எழுதினார்கள் என்று ஒரு வெண்பா கூறுகிறது.

வச்சிரநந்தி தமிழ் நூல்களைத் தொகுத்தளிக்காமலிருந்தால், இருவகைக் கணக்கு நூல்களில் பலவற்றை நாம் இழந்திருப்போம் என்பது உறுதி. இருபதாம் நூற்றாண்டில் உ.வே.சாமிநாதையர் செய்த தொண்டை வச்சிரநந்தி செய்துள்ளார். இருண்ட காலத்துத் தோன்றிய தமிழ் நிலவு வச்சிரநந்தி என்றால் அது சாலப் பொருந்தும்.

**பயிற்சி வினாக்கள்:**

**1. மேல்கணக்கு, கீழ்க்கணக்கு என்று பாகுபாடு செய்தவர் யார்?**

# பிரிவு 1 - கூறு 3.4 : சமணர்களின் தமிழ்ப்பணி

மௌரியப் பேரரசர் காலந்தொட்டுத் தமிழகத்தில் சமணச் செல்வாக்கு இருந்தது. கி.பி.3ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் தமிழகத்தில் மிகுந்தது. தமிழகத்தில் சமணர்கள் தங்களின் வாழ்விடங்களாகக் காஞ்சியையும் மதுரையையும் கொண்டனர். சமணர்களின் கொள்கைகளாகக் கொல்லாமை, துறவு, துன்பம் பொறுத்தல் என்பன தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. எனவே சமண சமயம் தமிழகத்தில் வேரூன்றியது. மதுரையில் வச்சிரநந்தி அமைத்த திரமிள சங்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியது. அச்சங்கத்தினர் தமிழ் மொழியின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தினர். இதனால் தமிழ்மொழி பலவகையான இலக்கியச் செல்வங்களைப் பெற்றது.

## 3.4.1 இலக்கண நூல்கள்

தொல்காப்பியரைச் சமணர் என்று கூறுவோரும் உளர். ஆனால் அக்கூற்றுப் பொருந்தாது என்பதை அந்நூலை ஆழமாகக் கற்றோர் அறிவர். எழுத்து, சொல், இலக்கணம் பற்றிக் கூறும் நன்னூல் பவணந்தி முனிவர் என்ற சமணரால் எழுதப் பெற்றதாகும். 'யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை' என்னும் இரு நூல்களும் யாப்புப் பற்றியன. இவை இரண்டையும் எழுதியவர் அமிதசாகரர் என்னும் சமணச் சான்றோர் ஆவர். எழுத்து, சொல் பற்றிக் கூறும் நேமிநாதத்தையும், வச்சணந்தி மாலை எனும் பாட்டியல் நூலையும் எழுதியவர் குணவீரபண்டிதர் என்னும் சமண முனிவர் ஆவார். நாற்கவிராச நம்பி என்ற சமணர் நம்பியகப் பொருளை எழுதினார். சமணர்கள் நெறிமுறைகளை வகுப்பதில் சிறந்தவர்கள் என்பதனை அவர்கள் இயற்றிய இலக்கண நூல்களின் வழி அறியலாம்.

## 3.4.2 பெருங்காப்பியங்கள்

காப்பியங்களுள் காலத்தால் முன் தோன்றியதும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக மதிக்கப் பெறுவதும் சிலப்பதிகாரம். இக்காப்பியத்தை சமணக் காப்பியம் என்று சிலர் கூறுவர். ஆனால், அக்கூற்று பொருந்தாது. சிலப்பதிகாரத்தை அடுத்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப் பெறுவது சீவக சிந்தாமணியாகும். இதுவே முதன்முதலில் தோன்றிய சமணக் காப்பியமாகும். இந்நூலின் ஆசிரியர் திருத்தக்க தேவர். பிற்காலத்தில் தோன்றிய விருத்தப் பாவால் இயன்ற காப்பியங்களுக்கெல்லாம் வழிகோலிய பெருமை சமணக் காப்பியமாகிய இதற்குரியதாகும்.

வளையாபதி என்னும் காப்பியம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இந்நூல் முழுமையும் நமக்குக் கிடைக்காமை நமது தவக்குறைவேயாகும். தற்பொழுது நமக்குக் கிடைக்கும் பாடல்கள் 66. இந்நூலுள் "துக்கம் துடைக்கும் துகளறு காட்சியர் நிக்கந்த வேடத்து இருடி கணங்களை"

என்ற தொடர் காணப்பெறுவதால், இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது என்பர்.

### 3.4.3 சிறுகாப்பியங்கள்

ஐஞ்சிறு காப்பியங்களாகிய சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், சமணசமயக் காப்பியங்களாகும். சூளாமணி என்னும் காப்பியம் தோலா மொழித் தேவரால் இயற்றப் பெற்றதால் இந்நூல் சீவகசிந்தாமணிக்கு ஒப்ப அமைந்த மிகச் சிறந்த காப்பியமாகும். நீலகேசி சிறந்த தர்க்க நூலாகும். பெருங்கதை என்னும் காப்பியமும் சமண சமயத்தைச் சார்ந்ததாகும்.

### 3.4.4 அறநூல்கள் :

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார், பழமொழி. நான்மணிக்கடிகை, ஏலாதி சிறுபஞ்சமூலம் போன்ற நீதி நூல்களை எழுதியவர்கள் சமணச் சான்றோர்கள் ஆவர். இவற்றுள் நாலடியார் திருக்குறளோடு ஒப்ப எண்ணத்தக்கதாகும். “ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி”“பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்” என்னும் பழமொழிகள் இந்நாலடியாரின் பெருமையை நன்கு விளக்கும்.

### 3.4.5 சமண நூல்களும், உரைநடை நூல்களும்

வாமன முனிவர், அறநூல்கள் மட்டுமின்றிப் புராண நூல்களையும் அதிகம் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய மேருமந்தர புராணம், மல்லி நாதர் புராணம், கபாட புராணம் போன்றவை குறிக்கத்தக்கன. ஸ்ரீபுராணம், உத்தர புராணம் என்பன உரைநடைப் புராணங்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உரைநடையை வளர்த்தவர்கள் சமணர்கள். இவர்கள் உரைநடையில் தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் மணிப்பிரவாள நடை காணப்பெற்றது. ஆகவே, மணிப்பிரவாள நடையைப் புகுத்தியவர்களும் சமணர்களே ஆவர்.

### 3.4.6 நிகண்டு நூல்கள்

இக்காலத்தில் சொற்களுக்குப் பொருள் காண்பதற்குப் பெரும் உதவியாக அமைவது அகராதியாகும். இவ்வகராதி தோன்றுவதற்கு முன்பு, சொற்களுக்குப் பொருள் அமையுமாறு நிகண்டு என்னும் ஒருவகை நூல்கள் பயன்பட்டு வந்தன. சூடாமணி நிகண்டை எழுதிய மண்டல புருடர் சமண சமயத்தவர் ஆவார். இந்நூலில் 1197 சூத்திரங்கள் உள்ளன. 11,000 சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளார். விருத்த யாப்பால் ஆகியது. இந்நூல் 16ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகும். திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு எனும் நூல்களும் சமண சமய நூல்களாகும்.

### 3.4.7 சிற்றிலக்கியங்கள்

இலக்கியம், இலக்கணம் எனும் இருதுறைகளிலும் இணையற்ற தொண்டாற்றிய சமணர்கள் சிற்றிலக்கியங்களைப் படைப்பதிலும் சிறந்த தொண்டாற்றினர். நரிவிருத்தம், எலிவிருத்தம், கிளிவிருத்தம், திருநூற்றந்தாதி, கலம்பகம், ஆதிநாதர் பிள்ளைத்தமிழ், நேமிநாதர்

பிள்ளைத் தமிழ், அப்பாண்டை நாதர் உலா போன்ற சிற்றிலக்கிய நூல்கள் சமணர்களால் இயற்றப் பெற்றதாகும்.

## 3.4.8 நூலாசிரியர்கள்

தொல்காப்பியத்திற்கு முதல் உரை எழுதிய இளம்பூரணரும், திருக்குறளுக்கு எழுதிய கலிங்கரும், நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதரும் சமண சமயத்தவர் ஆவர். தேவேந்திர முனிவர் எழுதிய சிவசம்போதனை சமண சித்தாந்த நூல். இதன் காலம் கி.பி.14ஆம்நூற்றாண்டு. நெல் இலக்க வாய்பாடு, சிறுகுறி வாய்பாடு என்பன சமணர் எழுதிய கணித நூல்கள் சினேந்திரமாலை சமணரின் சோதிடநூல். வானநூல், மருத்துவம் போன்ற துறைகளும் சமணரால் வளர்ச்சி பெற்றன.

இவ்வாறு சமணர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் எவரும் மறைக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. சமணர்கள் எழுதிய இலக்கண நூல்கள் யாவை ?**

பவணந்தி முனிவர் எழுதிய நூல் நன்னூல், அமிதசாகரர் எழுதியவை யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வச்சணந்தி மாலையை எழுதியவர் குணவீர பண்டிதர்; நம்பியகப்பொருளை எழுதிய சமணர் நாற்கவிராசநம்பி என்பவர்.

**2. பெருங்காப்பியங்களில் சமணநூல் எது ? ஆசிரியர் யார்?**

பெருங்காப்பியங்களில் சமணநூல் சீவகசிந்தாமணி, அதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் ஆவார்.

**3. மணிப்பிரவாள நடை என்பது யாது ?**

தமிழும் வடமொழியும் கலந்த உரைநடைக்கு மணிப்பிரவாள நடை என்று பெயர்.

**4. சமணர்கள் எழுதிய சிறுகாப்பியங்கள் யாவை ?**

சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம் ஆகிய ஐந்தும் சமணர்கள் எழுதிய சிறுகாப்பியங்கள் ஆகும்.

**5. அமிதசாகரர் எழுதிய நூல்கள் யாவை ?**

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்கள் அமிதசாகரர் எழுதிய நூல்கள் ஆகும்.

**6. குணவீர பண்டிதர் எழுதிய நூல்கள் யாவை ?**

வச்சணந்தி மாலை, நேமிநாதம் என்பவை குணவீர பண்டிதர் எழுதிய நூல்கள் ஆகும்.

**7. முதன்முதலில் தோன்றிய சமணக் காப்பியம் எது ?**

சீவகசிந்தாமணி

**8. சமணர்களின் உரைநடை எவ்வாறு அமைந்தது ?**

மணிப்பிரவாள நடையில் அமைந்தது.

**9. நிகண்டுகளில் சிலவற்றைக் கூறுக.**

சூடாமணி நிகண்டு, திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு என்பவை நிகண்டுகள் ஆகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. சமண நூல்கள் மற்றும் உரைநடை நூல்கள் பற்றி எழுதுக.**

**சமண நூல்களும், உரைநடை நூல்களும்**

வாமன முனிவர், அறநூல்கள் மட்டுமின்றிப் புராண நூல்களையும் அதிகம் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய மேருமந்தர புராணம், மல்லி நாதர் புராணம், கபாட புராணம் போன்றவை குறிக்கத்தக்கன. ஸ்ரீபுராணம், உத்தர புராணம் என்பன உரைநடைப் புராணங்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உரைநடையை வளர்த்தவர்கள் சமணர்கள். இவர்கள் உரைநடையில் தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் மணிப்பிரவாள நடை காணப்பெற்றது. ஆகவே, மணிப்பிரவாள நடையைப் புகுத்தியவர்களும் சமணர்களே ஆவர்.

**நிகண்டு நூல்கள்**

இக்காலத்தில் சொற்களுக்குப் பொருள் காண்பதற்குப் பெரும் உதவியாக அமைவது அகராதியாகும். இவ்வகராதி தோன்றுவதற்கு முன்பு, சொற்களுக்குப் பொருள் அமையுமாறு நிகண்டு என்னும் ஒருவகை நூல்கள் பயன்பட்டு வந்தன. சூடாமணி நிகண்டை எழுதிய மண்டல புருடர் சமண சமயத்தவர் ஆவார். இந்நூலில் 1197 சூத்திரங்கள் உள்ளன. 11,000 சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளார். விருத்த யாப்பால் ஆகியது. இந்நூல் 16ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகும். திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு எனும் நூல்களும் சமண சமய நூல்களாகும்.

**சிற்றிலக்கியங்கள்**

இலக்கியம், இலக்கணம் எனும் இருதுறைகளிலும் இணையற்ற தொண்டாற்றிய சமணர்கள் சிற்றிலக்கியங்களைப் படைப்பதிலும் சிறந்த தொண்டாற்றினர். நரிவிருத்தம், எலிவிருத்தம், கிளிவிருத்தம், திருநூற்றந்தாதி, கலம்பகம், ஆதிநாதர் பிள்ளைத்தமிழ், நேமிநாதர் பிள்ளைத் தமிழ், அப்பாண்டை நாதர் உலா போன்ற சிற்றிலக்கிய நூல்கள் சமணர்களால் இயற்றப் பெற்றதாகும்.

**நூலாசிரியர்கள்**

தொல்காப்பியத்திற்கு முதல் உரை எழுதிய இளம்பூரணரும், திருக்குறளுக்கு எழுதிய கலிங்கரும், நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதரும் சமண சமயத்தவர் ஆவர். தேவேந்திர முனிவர் எழுதிய சிவசம்போதனை சமண சித்தாந்த நூல். இதன் காலம் கி.பி.14ஆம் நூற்றாண்டு. நெல் இலக்க வாய்பாடு, சிறுகுறி வாய்பாடு என்பன சமணர் எழுதிய கணித நூல்கள் சினேந்திரமாலை சமணரின் சோதிடநூல். வானநூல், மருத்துவம் போன்ற துறைகளும் சமணரால் வளர்ச்சி பெற்றன.

இவ்வாறு சமணர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் எவரும் மறைக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. சமணர்களின் தமிழ்ப்பணி பற்றி விவரி**

3.4 இல் உள்ள பகுதி முழுவதும் எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

**1. நேமிநாதத்தை எழுதியவர் யார்?**

**2. முதன்முதலில் தோன்றிய சமணக் காப்பியம் எது ?**

**3. சூளாமணியின் ஆசிரியர் யார் ?**

**4. சூடாமணி நிகண்டை எழுதியவர் யார் ?**



குறிப்பு

# பிரிவு 1 - கூறு 4 : தமிழ்க்காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

குறிப்பு

பண்டைக் காலத்தில் கதைகள் பல இருந்திருக்க வேண்டும். நாடகங்களும் இருந்திருக்க வேண்டும். அவை நடிக்கப்பெற்றிருக்க வேண்டும். தொல்காப்பியத்தில் மெய்ப்பாடுகளைப் பற்றிக் கூறுகிற பகுதி கவனிக்கத் தக்கதாகும். அவைகளில் நாட்டியக்கலை பற்றிய செய்திகள் காணப்பெறுகின்றன. நாட்டியக் கலையில் தேர்ந்த விறலியர், கூத்தர், பொருநர் என்பவரைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் விரவிக்கிடக்கின்றன.

இவ்வாறு கதைகளும், கதை தழுவிய நாடகங்களும் பண்டைக் காலத்தில் இருப்பினும் அவை காப்பிய நிலைக்கு வளரவில்லை.

காவியம், காப்பியம் என்பன ‘காவ்யம்’ என்னும் வடசொல்லின் திரிபெனக் கூறுவர். கவியால் செய்யப்பெறுவது காவியம். அஃது இங்குப் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்பர். “கவியாற்பாடப் படுவனவெல்லாம் காப்பியமல்லவோ, பொருட்டொடர் நிலையைக் காப்பியமென்றது என்னையெனின், சேற்றுள் தோன்றுவனவெல்லாம் பங்கயமெனப் பெயர் பெறுமாயினும் அப்பெயர் தாமரை ஒன்றன் முதற்றேயாயினவாறு போல இப்பெயர் பொருட்டொடர் நிலைக்கே ஆயிற்று” எனத் தண்டியலங்கார உரையாசிரியர் கூறுவது இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

தொல்காப்பியத்திலேயே காப்பியங்களைப் பற்றிய குறிப்புகள் (தொடர்நிலைச் செய்யுள்) இருப்பதாலும் உரையாசிரியர்கள் பல காப்பியப் பெயர்களைச் சுட்டுவதிலிருந்தும் முதல், இடை, கடைச் சங்க காலங்களிலேயே இருந்திருக்க வேண்டுமென்பது புலனாகிறது.

### 4.1.1 பழங்காப்பியங்கள் :

தமிழில் கிடைக்கும் நூல்உரை பழைய நூல்களின் வழி, பழங்காப்பியங்களைப் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. அவை பின்வருமாறு :

(1) பெயரளவில் அறியப் பெறும் சில பழங்காப்பியங்கள் (2) உரையளவில் அங்கங்கே மேற்கோளாகச் சில செய்யுட்கள் மட்டிலும் எடுத்தாளப் பெற்ற காப்பியங்கள் (3) வழங்கி வரும் காப்பியங்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

பெயர்மட்டிலும் தெரியும் காப்பியங்கள் பருப்பதம், கவிவாணன் கதை, புராணசாகரன் என்பனவாகும். சங்க காலத்தில் ஓர் இராமாயணம் வழங்கப்பெற்றதாக உரையாசிரியர்கள் சுட்டுகின்றனர். அஃது வெண்பா,ஆசிரியப்பா யாப்பினால் ஆனது என்றும் குறிக்கின்றனர். தொடர்நிலைச் செய்யுளுக்குத் தேவையானது வனப்பு என்னும், இலக்கணப்

பகுதியாகும். தகடூர் யாத்திரை தொன்மை என்னும் வனப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பெறுகிறது.

கிடைத்திருக்கும் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காலத்தால் முற்பட்டவை. இவற்றை இரட்டைக் காப்பியங்கள் எனக் குறிப்பர். 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு' மன்னன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைக்கும் காலத்தில் தொடர்பு பெற்றவன். அவன் காலத்தை ஆராய்ந்து பார்த்ததில் கி.பி.2ஆம் நூற்றாண்டு எனத் தெரிவிக்கின்றனர். மணிமேகலை கதை சிலம்புடன் தொடர்புடையது. ஆகையால் அக்காப்பியமும் சிலப்பதிகாரக் காலத்தையொட்டியே அமையும்.

அடுத்து, சோழர்கள் காலத்தில்தான் மிகுதியான காப்பியங்கள் தோன்றுகின்றன. கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை சோழப் பேரரசு ஓங்கியிருந்த காலமாகும். இக்காலக் கட்டத்தில்தான் காப்பியங்கள் மிகுதியாகத் தோன்றின.

அம்முறையில் காப்பியக் காலத்தை முதற்காப்பிய காலமென்றும், பிற்காப்பியக் காலம் என்றும் பகுத்துக் கூறுவர். மூவேந்தர் ஆட்சியின் பயனாக அகமும் புறமும் வளர்ந்து கனிந்து இரட்டைக் காப்பியங்கள் உருவானது என்றும், சோழப் பேரரசின் பயனாக உருவானவை இடைக்காலத்தவை என்றும் அறிஞர்கள் பகுத்துக் கூறுவார்கள். தமிழ்க் காப்பியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். இவ்வகைப்படுத்தலின் வழி, காப்பியங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்துச் சற்று எளிமையாக விளங்கிக் கொள்ளலாம்.

### 4.1.2 காப்பியங்கள் வகைப்பாடு

நீண்ட செய்யுள் என்பது தொடர் நிலைச் செய்யுளாகும். தமிழில் பேரிலக்கியங்களைக் குறிப்பதற்குத் தொடர்நிலைச் செய்யுள் என்ற சொல் வழங்கப் பெற்றிருக்கின்றது. காவியங்களைப் பல்வேறு வகையில் வகைமைப்படுத்திப் பார்க்கலாம். பெரும்பாலும் ஐம்பெருங்காப்பியங்கள் என்ற வகைப்பாடு பின்பற்றப் பெறுகிறது.

## 4.2 ஐம்பெருங் காப்பியம்

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி போன்றவை ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். இவைகளைப் பஞ்ச காவியங்கள் என்றும் கூறுவர். காப்பியங்களைக் கூறியமுறையில் காலநிலை கருத்தில் கொள்ளப்பெற்றதாகத் தெரியவில்லை. ஐம்பெருங்காப்பியம் என்ற வழக்கு (கி.பி.13-14) மயிலைநாதர் காலத்தில்தான் காணப்பெறுகிறது. அதற்கு முன்னர் இல்லை என்று பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சமணத்தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுவார்.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டும் காலத்தால் முற்பட்டவை. இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்றும் குறிப்பிடுவர்.

### 4.2.1 சிலப்பதிகாரம்

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று சிறப்பிக்கப்பெறும் நூலாகும். தமிழ் மொழியில் தோன்றிய முதல் தனிக்காப்பியமாகும். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் இக்காப்பியத்தில் இடம் பெற்றிருப்பதால் முத்தமிழ்க் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்பெறும், காப்பியத்தின் இடையிடையே உரைநடையும் கலந்து வருவதால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும், உரைப்பாட்டு என்றும் வழங்கப் பெறும். இக்காப்பியத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவார்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்"

என்கிற உண்மைகள் கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றில் இருப்பதை இளங்கோவடிகளார் உணர்ந்து,'சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம்' என்னும் பெயரால், நாட்டுதும் யாம் ஒரு பாட்டுடைச் செய்யுள் என்று முடிவு செய்தார். சிலப்பதிகாரத்தைப் பாடி, தண்டமிழாசான் சாத்தனார் முன் அரங்கேற்றினார்.

### 4.2.2 நூலின் அமைப்பும் கதையும்

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களை உடையது. மொத்தம் 30 காதைகளைக் கொண்டது. புகார்க் காண்டத்தில் 10 காதைகள் இடம் பெற்றுள்ளன. மதுரைக் காண்டத்தில் 13 காதைகள் உள்ளன. 7 காதைகள் வஞ்சிக் காண்டத்திற்கு உரியதாகும்.

### 4.2.3 சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கள்

தமிழ் மூவேந்தர்கள் ஒற்றுமையில்லாமல் இருந்தனர். அவர்கள் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும் என்பதற்காக மூவேந்தர் காப்பியமாக இந்நூலை உருவாக்கினார்.

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக"

என்று பதிகத்தில் (61-62) இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். புகார்க் காண்டத்தில் சோழனைச் சிறப்பித்துப் பாடுகிறார். மதுரைக்காண்டத்தில் பாண்டியனைச் சிறப்பித்துப் பாடுகிறார். வஞ்சிக்காண்டத்தில் சேரனைச் சிறப்பித்துப் பாடுகிறார். தான் சேரநாட்டுக் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் மற்ற தமிழ் வேந்தர்களையும் சமமாகச் சிறப்பித்துப் பாடுகிறார். புகார் நகரத்தில் காப்பியக்கதை தொடங்கி மதுரையில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்து சேரநாட்டில் முடிவடைவதாகக் கதைப் போக்கை அமைத்திருக்கின்றார்.

தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை உருவாக்கித் தமிழ் வேந்தர்களையும் தமிழ் மக்களையும் ஒற்றுமைப்படுத்த முயலுகிறார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் பிற சமயங்களையும் ஒன்று

போலவே நோக்குகிறார். 'அடிகள்' என்ற பெயர் பெரும்பாலும் சமணத்தாரையே குறிக்கும். இவர் சமயப்பொறை மிகுந்தவர் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடலாம்.

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!"

என்று ஆய்ச்சியர் குரவைப் பாட்டில் பிற சமயங்களையும் தெய்வங்களையும் போற்றுகிறார். நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்ட இறைவனைப் பாடாமல் இயற்கைக்கு வாழ்த்துக் கூறிப்புதுமை செய்கிறார்.

இளங்கோவடிகள் காலத்திற்கு முற்பட்ட புலவர்கள் கையாளாத புதிய செய்யுள் வகைகளைக் கையாள்கின்றார். சிலப்பதிகாரத்தில் புதிய பல வகைச் செய்யுள் வடிவங்களைச் சிறப்பாகக் காணலாம். கானல்வரி, ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் இசைப் பாடல்களை யாத்துள்ளார். பாடல்கள் நாட்டுப்புற வடிவங்களைச் சார்ந்தும் அமைகின்றன. மேலும் அரங்கேற்று காதையில் நாடகங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறார். இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகளை மிகுதியாகத் தருகிறார். அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதை, கானல்வரி போன்ற காதைகளுக்கு உரை எழுதும்பொழுது மறைந்து போன இசை நூல்களையும் நாடக நூல்களையும் உரையின் வழியே குறிப்பிடுகின்றார். உலகப் பழைய காப்பியங்கள் பெரும்பாலும் அரச குடும்பத்தையே மையமிட்டிருக்கும். இளங்கோவடிகள் அதிலும் புதுமை செய்கிறார். தம் காப்பியத்தில் காப்பியத் தலைவர்களாக அரசனையும் அரசியையும் அமைக்காமல், வணிகர் குலத்தைச் சார்ந்த சாதாரணக் குடிமக்களையே காப்பியத் தலைமக்களாக்கிப் புதுமை செய்கிறார். இதன் தூண்டுதலால்தான் கணிகையர் குலத்தைச் சார்ந்த மணிமேகலையை மணிமேகலை என்ற காப்பியத்தின் தலைவியாக்கச் சாத்தனாரால் முடிந்தது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காப்பியத் தலைவியாகிய கண்ணகியை அடுத்து மாதவிக்கு முக்கியச் சிறப்புக் கொடுத்திருக்கிறார். கோவலன் ஓர் இடத்தில் அவளைப் பழித்த போதிலும் 'தன்தீது இலள்', என்று அவனே குறிப்பிடுகின்றான். மாதவியும் கோவலனுடன் அன்பு அறம் பூண்டு வாழ்ந்தவள். அதனால் இறுதியில் துறவியாய் ஆகிறாள். மாதவி மணிமேகலையைக் கண்ணகி மகள் என்று குறிப்பிடுவதும் பரத்தமையை ஒதுக்கிவந்த நிலையும் பெரும் புரட்சிநிலையாகும். சிலப்பதிகாரத்தில் இது குறிப்பிடத்தக்க நிலையாகும். பொதுவாகச் சமணம் சார்ந்த நூல்கள் இல்லறத்தைப் புகழ்ந்து பேசுவதில்லை. பெண்களை உயர்த்திக் கூறுவதும் இல்லை. அந்நூல்களிலிருந்து மாறுபட்டுச் சிலப்பதிகாரம் பெண்ணின் பெருமையைக் கூறும் நூலாக உள்ளது.

குறிப்பு

### 4.2.4 மணிமேகலை

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனக் கருதப்படும். இது தமிழில் தோன்றிய இரண்டாவது காப்பியமாகும். சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சி மணிமேகலையில் இருப்பதால் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன. கோவலனுக்கும் நாட்டியக் கலையரசி மாதவிக்கும் மகளாகப் பிறந்தவள் மணிமேகலை,அவள் வாழ்வை விளக்கும் காப்பியம் மணிமேகலையாகும் அவள் நாட்டியம் கற்றுப் பரத்தையாக வாழ வேண்டும் என்று பாட்டி விரும்பினாள். ஆனால் இவள் கலைவாழ்வையும் பரத்தை வாழ்வையும் துறந்து பௌத்த சமயத்தைச் சார்ந்தாள். மாதவியின் மகள் என்று கூறத் தொடங்கினாள்; பழைய வாழ்வியல் சிக்கல்கள் தொடரும் என்ற நிலையில் கண்ணகியின் மகள் என்று கூறிக்கொள்வதில் பெரும் விருப்பம் கொண்டாள்.

குடும்பத்தைத் துறந்த மணிமேகலைக்கும் வாழ்வில் இடையூறு தொடர்ந்தது. இவளுடைய இளமையழகைக் கண்டு நாட்டின் இளவரசன் பின் தொடர்ந்தான். அந்த அரசனின் பெயர் உதயகுமாரன் என்பதாகும். மணிமேகலையின் குலதெய்வம் உதவ மணிமேகலை மணிபல்லவத் தீவினுக்குச் சென்று புத்தரின் திருவடிகளைக் கண்டு முன்பிறப்பை உணர்ந்து நாட்டுக்குத் திரும்பினாள்.

அமுதசுரபி என்னும் தெய்வீகப் பாத்திரத்தைப் பெற்றுப் பலருடைய பசியைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றாள். பௌத்த நெறியின்படி வாழ்ந்து மக்களுக்கு அறக்கருத்துக்களை எடுத்துக் கூறினாள். இறுதியில் முக்தி பெற்றாள்.

மணிமேகலையின் வாழ்க்கையைக் காப்பியமாக்கியவர் கூலவாணிகன் சாத்தனார் ஆவார். காப்பியத்தின் போக்கில் இலக்கியச் சுவையைவிட பௌத்த சமயக் கருத்துக்களின் அறவுரையே மிகுந்துள்ளன.

மகாயான புத்தமதம் தென்நாட்டில் நிலவியதற்கு இந்நூல் சான்றாக அமைகிறது. இந்நூலில் விழாவறைகாதை முதலாகப் பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை ஈறாக 30 காதைகளாக விளங்குகின்றது. சிலப்பதிகாரம் சமயப் பொதுமை நூலாக விளங்க இந்நூலோ பௌத்த சமயத்திற்கு மட்டுமே உரியதாக விளங்குகிறது.

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மண்ணுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்லை"

என்று மணிமேகலை நூலில் அறக்கருத்துக்களை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் வெளிப்படுத்துகிறார்.

மணிமேகலையைப் பற்றி வ.சு.ப.மாணிக்கம் அவர்கள் குறிப்பிடும் பொழுது பரத்தை ஒழிப்போடு, மதுஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு என்றினைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியமாக இக்கதை விளங்குகிறது என்று குறிப்பிடுவார்.

இந்நூலில் உவவன வருணனை, புகார் நகர வருணனை அந்திப்பொழுதின் வருணனை போன்ற வருணனைகள் குறிக்கத்தக்கன.

## 4.2.5 இரட்டைக் காப்பியம்

இளங்கோவடிகள் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் முன் சிலப்பதிகாரத்தை அரங்கேற்றினார். இளங்கோ சாத்தனாரைத் தண்டமிழ் ஆசான் எனக் குறிப்பிடுவார். மேலும்,

“இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத் துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்”

என்பது மணிமேகலைப் பதிகமாம். காப்பிய ஆசிரியர்கள் இருவருக்கும் உள்ள தொடர்பு இதன் வழித்தெரிகிறது.

சிலப்பதிகாரம் கண்ணகி, மாதவி, கோவலன் கதையைக் குறிப்பிடும். கோவலன் மாதவி இருவரின் மகளான மணிமேகலையின் கதையை மணிமேகலைக் காப்பியம் பாடியுள்ளது.

மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும் என்பது சிலம்பின் இறுதிக்கட்டுரை வாக்கியமாகும்.

இந்நூலில் காணப்பெறும் சொல்ஒப்பு, தொடர்ஒப்பு, இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து இவ்விரு காப்பியங்களும் இரட்டைக் காப்பியங்கள் என்று டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்கள் கருதியுள்ளார். அக்கருத்தின் வழி விரிந்த நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் பிற்பட்டது மணிமேகலை என்றும் இரட்டைக் காப்பியங்கள் அல்ல என்றும் சிலர் கருத்தாகத் தெரிவிப்பார்கள். சிலப்பதிகாரம் சமயம் சாராதது. மணிமேகலையோ சமயம் சார்ந்தது. இரண்டிலும் காணப்பெறும் பதிகங்கள் பொய்யானவை. இவைகளைக் கருத்தில் கொண்டு, இவ்விரு காப்பியங்களையும் இரட்டைக் காப்பியங்கள் என்று கூறுவது பொருந்தாது என்பர்.

## 4.2.6 குண்டலகேசி

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியம் பௌத்தக் காப்பியமாகும். மணிமேகலை சமய வாதத்தைக் காப்பியமாக்கும் ஒரு புது முயற்சியைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக, குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்று வாதக் காப்பியங்கள் தோன்றின. விருத்தப்பாவால் இயன்ற இந்நூல் ஒரு தருக்க நூலாக யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்தாளப் பெற்றுள்ளது. இந்நூலிற்கு மறுப்பாகத் தோன்றியதே நீலகேசி என்ற நூலாகும். இ∴து ஒரு சமணக் காப்பியமாகும். குண்டலகேசி கூறும்

கதையையும் நீலகேசியின் உரையிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. இந்நூலின் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பர்.

"பிறர் சாவதற்காக அழும் நாம், குழந்தைத் தன்மை செத்து இளைஞனாகி, பிறகு அப்பருவம் செத்து முதியவனாக இவ்வாறு நாள்தோறும் சாகிறோமே, அதற்காக அழாதது ஏனோ? என்று பாடலில் கூறும் முறையில் வாழ்வின் நிலையாமையை அழகிய புலப்பாட்டு முறையில் தருவது குறிக்கத் தக்கதாகும்.

பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் இன்னே மேல்வரும் மூப்புமாகி
நாளும் நாம் சாகின்றேமால், நமக்கு நாம் அழாததுஎன்னோ

என்ற பாடல் வரிகள் சிறப்புடையன. இது போன்று அறவுரை பெறும் பாடல்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

### 4.2.7 வளையாபதி

இக்காப்பியமும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். வளையாபதி ஒரு காலத்தில் மிக்க புகழோடு விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில் உரையாசிரியர்கள் பலரால் இந்நூல் எடுத்தாளப் பெற்றுள்ளது. அடியார்க்கு நல்லார், பரிமேல் அழகர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், யாப்பருங்கல உரையாசிரியர் முதலியோரால் எடுத்தாளப் பெற்றுள்ளது. புறத்திரட்டிலும் சில பாடல்கள் உள்ளன. ஏறத்தாழ 70 செய்யுட்கள் தேடித் தொகுக்கப்பெற்றுள்ளன.

கற்பனை நலம்மிக்க பாடல்கள் பல இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. சான்றொன்றினைக் காணலாம். "நெல்கரும்புடன் போட்டியிட்டு அதனுயரம் வரை வளர்கிறது. கரும்பு கமுகை மீறி வளர வேண்டும் என முயல்கிறது. இதைக் கண்ட கமுகு இதைப் பார்க்கக்கூசி மேகத்தின் ஊடே முகம் புதைக்கிறது. மேகத்தையும் எட்டிப் பிடித்துப் பாக்குமரம் வளர்கிறது என்பதைக் கற்பனை நயத்துடன் கூறும் மனதில் பதிவதாக உள்ளது. அப்பாடல் வருமாறு

செந்நெல் அங் கரும்பினோடு இகலும் தீஞ்சுவைக்
கன்னலங் கரும்புதன் கமுகைக் காய்ந்தெழும்
இன்னவை காண்கிலன் என்று பூகமும்
முன்னிய முகில்களால் முகம்பு தைக்குமே

### 4.2.8 சீவக சிந்தாமணி

சிந்தாமணி என்றும் இக்காப்பியம் வழங்கப்பெறும்; சோழ மரபினராய்ச் சமணத் துறவியாகத் திகழ்ந்தவர் திருத்தக்கத் தேவர். அவரால் இக்காப்பியம் இயற்றப்பெற்றது. முன்னர் எழுந்த காப்பியங்கள் அகவற்பாவால் அமைந்தவை. விருத்தப்பாவால் எழுந்த முதல் தமிழ்க் காப்பியம் சீவக சிந்தாமணியாகும்.

சிந்தாமணி 13 இலம்பகங்களையும் 3000-க்கும் மேற்பட்ட செய்யுள்களையும் உடையது. நாமகள் இலம்பகம் தொடங்கி முக்தியிலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களும் மணவினை பற்றிக் கூறுகின்றன. இதனால் இந்நூல் மணநூல் என்றும் அழைக்கப்பெறுகிறது.

ஏமாங்கத நாட்டின் அரசன் சச்சந்தன். மனைவி விசயை மீது கொண்ட காதலால் அரசாட்சியைக் கட்டியங்காரனிடம் ஒப்படைத்து விடுகிறான். அவன் வஞ்சகமாய் மன்னனைப் போருக்கு அழைத்துக் கொன்று விடுகிறான்.

கருவுற்றிருந்த விசயை மயிற்பொறியின் உதவியால் வானவெளியில் பறந்து செல்கிறாள். ஓர் இடுகாட்டில் சீவகனைப் பெற்று, பிரிந்து தவ வாழ்க்கையினை மேற்கொள்கிறாள். கந்துக்கடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்த்து ஆளாக்குகிறான். அச்சணந்தி என்பவனிடம் கல்வி பயில்கிறான். அவர் அவனது பிறப்பின் உண்மையினைக் கூறித் தெளிவுபடுத்துகிறார்.

வேட்டுவர்கள் ஆயர்களது மாட்டு நிரைகளைக் கவர்கிறார்கள். கட்டியங்காரன் அவைகளை மீட்க இயலாத நிலையில் இருக்கிறான். சீவகன் ஆனிரைகளை மீட்டுவந்து, ஆயர்தலைவன் நந்தகோபனது மகளான கோவிந்தையைத் தன் நண்பன் பதுமுகனுக்கு மணமுடித்து வைக்கிறான்.

யாழ்ப்போரில் காந்தருவதத்தையை வென்று, அவளை மணந்து கொள்கிறான். பாம்பு கடித்த பதுமை என்பாளையும் நச்சு நீக்கி மணந்து கொள்கிறான். தன் கணவனாதற்குரியவனைத் தவிரப் பிற ஆடவர்களைக் கண்டு நாணாத கேமசரியார், சீவகனைக் கண்டு நாணிக் காதலுறுகிறாள். அவளை மணம் செய்கிறான். பின், அரசிளங்குமரர்க்கு வில் தொழில் கற்பித்துக் கனகமாலையை மணந்து இன்புற்று வாழ்கிறான். தோழர்களின் வாயிலாக விசயை வாழும் இடத்தை அறிகிறான். அங்கு செல்கிறான். அவளைத் தன் மாமன் கோவிந்தனிடம் அனுப்புகிறான். பின் சீவகன் ஏமாங்கத நாட்டிற்குத் திரும்புகிறான். இராசமாபுரத்தில் விமலை பந்தாடுகையில் அவளைச் சந்தித்து மணம் செய்து கொள்கிறான். சுண்ணப் போட்டியில் குணமாலைக்குத் தோற்ற சுரமஞ்சரி, சீவகனையே அடைய வேண்டும் என வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறாள். பின் அவளை மணந்து கொள்கிறான். தாயின் அறிவுரைப்படிக் கோவிந்தனிடம் சீவகன் செல்கிறான். எந்திரப் பன்றியை அம்பால் எறிந்து கோவிந்தையாரை மணந்து கொள்கிறான். கட்டியங்காரன் உள்பட பல மன்னர் அந்த எந்திரப் போட்டியில் தோற்றிருந்தனர்.

கோவிந்தன் சீவகன் யார் என்பதை வெளிப்படுத்துகிறான். போர் மூள்கிறது. சீவகன் கட்டியங்காரனைப் போரில் வெல்கிறான். அரசைக் கைப்பற்றித் தேவியருடன் இன்பம் அனுபவித்து, மக்களைப் பெறுகிறான். முடிவில் நிலையாமையை உணர்ந்து ஞானம் எய்தித் துறவு வாழ்க்கையை மேற்கொள்கிறான்.

இன்பச் சுவை தழுவி எழுதப்பெற்ற அவச்சொல்லை நீக்குவதற்காகத் தேவர் நரிவிருத்தம் என்ற நூலினைப் பாடியதாகக் கூறுவர். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரை முழுவதும் கிடைக்கிறது. மேநாட்டுத் தமிழறிஞர் ஜி.யு. போப்பையர் திருத்தக்க தேவரைத் தமிழ்க்கவிஞருள் அரசர் என்பார். மேலும் கிரேக்கக் காப்பியங்களுக்கு இணையானது என்றும் போற்றுவார். கம்பன் சீவக சிந்தாமணியில் காணப்பெறும் முறைகள் சிலவற்றை எடுத்துத் தன் காப்பியத்துள் அமைத்துள்ளான் என்ற வழக்கும் உண்டு.

இயற்கை வருணனை போன்றவற்றை இன்னிசைச் சுவையுடன் குழைத்துத் தருவதில் இக் காப்பியத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. சில எடுத்துக்காட்டுச் சிறப்புகளைக் காணலாம். கோதாவரி ஆற்றிற்குச் சான்றோர்தம் கவியை உவமையாக்கிக் காட்டும் கம்பனைப் போன்றே இவரும்

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே (நாமகள் : 24)

என்று வயல்களில் தலைசாய்த்து விளங்கும் நெற்கதிர்களுக்குக் கல்விசேர் மாந்தரை உவமையாக்கிக் கூறுவது கருதத்தக்கதாகும்.

## கூறு 4.3 : ஐஞ்சிறு காப்பியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களுள் ஒன்றோ பலவோ குறைந்து வருதல் சிறுகாப்பியம் என்று வழங்கப்பெறும். ஐம் பெருங்காப்பியம் என்று கூறப்பெறும் மரபிற்கு ஏற்ப ஐஞ்சிறு காப்பியம் என்று குறிப்பிடும் மரபும் எழுந்தது. சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம் என்பன ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகும்.

### 4.3.1 சூளாமணி

ஐஞ்சிறு காப்பியங்களில் சிறப்பானது சூளாமணி ஆகும். இ∴து ஒரு சமணக் காப்பியம் ஆகும். இக்காப்பியம் சிந்தாமணியைப் போன்று காப்பிய அழகு உடையது என்பர். பெருங்காப்பியத்திற்கு உரிய தகுதி உடையது. எனினும் சிறுகாப்பியத்தில் வைத்து எண்ணப் பெறுகின்றது. தோலாமொழித் தேவர் சிந்தாமணிக்குப் பிறகு இந்நூலை இயற்றியதாகக் கூறுவர். இந்நூல் 12 காண்டங்களையும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையும் உடையது.

சேந்தன் எனும் தமிழியற் கிழவன் அவைக்களத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது என்பது இதன் பாயிரச் செய்தியாகும். இந்தச் சேந்தன் என்பவன் அவனி சூளாமணி மாறவர்மன் என்னும் பாண்டியன் என்றும் இவனது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிற்பகுதி என்றும் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவதால் இக்காப்பியத்தின் காலமும் அக்காலமாகவே இருக்க வேண்டும்.

### 4.3.2 நீலகேசி

இந்நூலுக்கு நீலகேசித் தெருட்டு என்ற பெயரும் உண்டு. குண்டலகேசி என்ற நூலுக்கு மறுப்பாக எழுந்த வாத நூலாகும். இந்நூலில் வரும் 'நீலி' என்னும் பெண் சைன முனிவர் ஒருவரின் மாணவி ஆகின்றாள். அவள் குண்டலகேசியை எதிர்த்து வாதிட்டுத் தோல்வியுறச் செய்கிறாள். பின் பௌத்தத் துறவியரிடம் செல்கின்றாள். தொடர்ந்து பௌத்தத் துறவிகளைக் கண்டு சைன சமயச் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றாள். 894 விருத்தங்கள் கொண்ட இந்நூல் முழுதும் பிற சமய எதிர்ப்பும், சைன சமயப் போற்றுதலுமாக விளங்குகின்றது.

இந்நூலில் நாட்டுவளம், நகர்வளம் சிறப்பாகப் பாடப்பெறுகின்றன. கோடல், தோன்றி, காயா, முல்லை ஆகிய பூக்கள் மலரும் காட்சியை நீலகேசி காப்பியப் புனைதிறனுடன் நன்கு பாடும் திறம் நயம் உடைத்ததாகும். நீலகேசி என்றாலே கரியகூந்தலை உடையவள் என்று பொருள்.

### 4.3.3 உதயணகுமார காவியம்

இக்காப்பியம் உதயணன் கதையைக் கூறினாலும் பெருங்கதையினின்றும் வேறுபட்டது என்பர். மிகப்பிற்பட்ட காலத்தில் எழுந்த நூலாகும். 367 செய்யுட்களைக் கொண்டது. திருத்தமான நடை

உடையதன்று என்று இதன் பதிப்பாசிரியரான டாக்டர் ஐயர் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

### 4.3.4 நாககுமார காவியம்

இக்காப்பியத்தை எழுதியவர் சமண சமயம் சார்ந்த துறவியாக இருக்க வேண்டும். இந்த நூலிலிருந்து ஒரு செய்யுளும் கிடைக்கவில்லை. பெயரளவில் மட்டுமே இந்நூல் இருக்கிறது.

### 4.3.5. யசோதர காவியம்

ஐந்துசருக்கமும் 320 செய்யுட்களும் கொண்டு இக்காப்பியம் அமைகிறது. இக்காப்பியத்தின் ஆசிரியர் வெண்ணாவலுடையார் ஆவார். செய்யுட்கள் எல்லாம் விருத்தங்களாகும். உயிர்க்கொலை தீதென்று நிலைநாட்டவும், கருமத்தின் பயனை வற்புறுத்தவும் நீதியைப் புகட்டவும் இச்சமண நூல் எழுந்தது. உதய நாட்டு மன்னன் மாரிதத்தன் என்பவன் சண்டமாரி என்னும் தெய்வத்திற்கு அயரிஷி என்னும் இளம் சமணத் துறவியையும் அவன் தங்கை அவையமதியையும் பலியிடுவதாக அழைத்து வந்தான். அவர்கள் பஞ்ச பரமேட்டிகளைத் தொழுது உயிர்விடத் துணிகின்றனர். அவர்களது இன்முகத்தைக் கண்டு வியந்த மன்னன் காரணம் கேட்கிறான். அவர்கள் பழம்பிறப்பு வரலாற்றினைக் கூறுகின்றனர்.

புட்கந்தர் தம் கதையின் தமிழ் வடிவமே யசோதரகாவியம் என்று கூறுவர். இசை காமத்தை விளைவிப்பது என்பது சமண சமயத்தின் கொள்கையாகும். அக்கருத்தை வலியுறுத்துவது இக்காப்பியத்தின் நோக்கமாகும். யானைப்பாகன் பாடிய பாடல் மாளவப் பஞ்சமம் என்னும் பண் என்பர். இஃது 300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்பர். அம்முறையில் இந்நூல் விஜயநகர அரசுக்கு முற்பட்டதன்று என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## 4.4 பௌத்தர்களின் தமிழ்ப்பணி

பௌத்த சமயமானது கி.மு.5ஆம் நூற்றாண்டில் கௌதம புத்தரால் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழ்நாட்டில் இச்சமயமானது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அசோகர் காலத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்றது. இச்சமயக் கொள்கைகளில் தலையாயதாக விளங்குவன உயிர்களின் மேல் மிக்க அன்பு, குலவேறுபாடு இன்மை, அறநெறி நிற்றல் என்பனவாகும். இக்கொள்கைகள் தமிழ் மக்களைப் பெரிதும் ஈர்த்தன. இதனால் பலர் பௌத்தர்கள் ஆயினர். அதன் மூலம் சிறப்பிடம் பெற்றனர். சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இளம் போதியார் என்பவர் பௌத்த சமயத்தினர் ஆவர். அறவண அடிகள், மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சங்கமித்திரர், புத்தமித்திரர் முதலானவர்கள் பௌத்த சமயத்தைச் சார்ந்த தமிழ்ச் சான்றோர்கள் ஆவர். நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் தலைவராக விளங்கிய தின்நாகர், தருமபாலர். சீனம் சென்ற போதிதருமர். வச்சிரபோதி ஆகியோர் காஞ்சி நகரத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் ஆவர்.

பௌத்தர்களும் ஏனைய சமயத்தாரைப் போன்று தங்களது கொள்கைகளை மக்களிடையே பரப்பும் பொருட்டுத் தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளில் ஈடுபட்டனர். அவ்விலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்து சிறந்த படைப்புகளைத் தமிழுக்குத் தந்தனர். அவையெல்லாம் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. அழிந்தன போக எஞ்சியவை சில வாகும். அவற்றுள்ளும் சிறப்புமிக்கது மணிமேகலை எனும் காப்பியமாகும்.

## 4.4.1 பௌத்தக் காப்பியங்கள்

ஐம்பெருங் காப்பியங்களுள் மணிமேகலையும், குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியங்களாகும். இவற்றுள் மணிமேகலையை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இவர் தாம் இயற்றிய நூலுக்கு 'மணிமேகலை துறவு' எனப் பெயரிட்டுள்ளார். சாத்தனார் பௌத்த சமயக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்நூலை இயற்றினார் என்று அறிஞர்கள் சுட்டுவர். மணிமேகலையில்

'வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது.....'

எனும் அடிகள் பௌத்த சமயக் கருத்துகளை விளக்குவனவாகும். இதனால் இந்நூலினைச் சமயக் கருத்துக்களைக் கூறுவதற்கு எழுந்த முதல் நூல் என்று கூறுவர். இந்நூலில் சமயக் கருத்துக்களே அன்றி அறக்கருத்துகளும் கூறப் பெற்றுள்ளன. அறம் இது என்பதை.

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்லை" எனும் அடிகள் குறிப்பிடுகின்றது.

குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியமாகும். இதனை இயற்றியவர் நாதகுத்தனார் ஆவார். இந்நூல் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை. சில செய்யுட்கள் மட்டுமே கிடைத்துள்ளன. புத்தர் வாழ்ந்த காலத்தில் வட நாட்டிலிருந்த பௌத்த சமயப் பெண்துறவி ஒருத்தியின் வரலாற்றைக் கூறுவதே இக்காப்பியமாகும். இந்நூல் காப்பியமாகவும், தருக்க நூலாகவும் அமைந்தது. இதில் சமணசமய எதிர்ப்பைக் காணலாம். 'நாளும் நாம் சாகின்றோமென்றால் நமக்கு நாம், அழாத தென்னே' எனும் பொருள் பொதிந்த வரி, வாழ்க்கையின் தன்மையை அழகுற எடுத்துக்காட்டுகிறது.

## 4.4.2 விம்பசாரக் கதை

இந்நூல் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை. இதனை இயற்றியவர் யாரென்றும் தெரியவில்லை. விம்பசாரன் புத்தர் காலத்தில்

வாழ்ந்த மகத நாட்டு அரசன். புத்தருடைய சீடன். இவனது வரலாற்றைக் கூறுவதே இக்காவியம். விம்பசாரக் கதையின் பாடல் ஒன்று, நீலகேசியின் உரையிலும், சிவஞான சித்தியார், ஞானப்பிரகாசர் உரையிலும் காணப்பெறுகின்றது.

### 4.4.3 சித்தாந்தத் தொகை, திருப்பதிகம்

சித்தாந்தத் தொகை, திருப்பதிகம் என்னும் பெயர்களில் இரண்டு பௌத்த நூல்கள் இருந்தன என்று அறிகிறோம். இவ்விரண்டு நூல்களும் மறைந்து போன நூல்களாகும். நீலகேசி உரையிலும், சிவஞான சித்தியார், ஞானப்பிரகாசர் உரையிலும் இவ்விரண்டு நூல்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன.

### 4.4.4 இலக்கணம்

'வீரசோழியம்' என்னும் இலக்கண நூலும் பௌத்தர்களின் தொண்டால் கிடைத்ததாகும். இந்நூலின் ஆசிரியர் புத்தமித்திரர் ஆவார். இவரது பெயரே இவர் புத்த சமயத்தவர் என்பதைக் கூறுகிறது. வீரராசேந்திர சோழனின் விருப்பத்திற்கேற்ப இந்நூல் எழுதப்பெற்றதாகும். ஆதலால் தான் வீரசோழியம் என்னும் பெயர் பெற்றது. இந்நூல் எழுத்து முதலான ஐந்திலக்கணம் கூறும் நூலாகும். இந்நூலுக்கு உரை வரைந்த பெருந்தேவனார் பௌத்த சமயத்தவர் ஆவார். இந்நூலை வீர சோழியக் காரிகை எனவும் அழைப்பர். இந்நூலின் காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டாகும்.

பௌத்த சமயத்தால் தமிழ் மொழி வளம் பெற்றது. தமிழால் பௌத்தம் பல அறிஞர்களையும் பெற்றது.

## 4.5 பிற்காலச் சோழர் காலத்தில் காப்பிய வளர்ச்சி

தமிழ்க்காப்பியம் பல்வேறு வளர்ச்சிகளை அடைந்தது. சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியமாகும் (கி.பி.2) இரட்டைக் காப்பியம் என்ற நிலையில் மணிமேகலையும் இதனுடன் சேருகிறது. மணிமேகலை சிலம்புக் கதையுடன் தொடர்பு பெற்றிருந்தாலும் சமயச்சார்பால் சிலப்பதிகாரத்திலிருந்து வேறுபடுகிறது. அதற்கு அடுத்த நிலையில் சோழர்கள் காலத்தில்தான் மிகுதியான காப்பியங்கள் தோன்றியுள்ளன. கி.பி 9 முதல் 12 நூற்றாண்டுவரை சோழப் பேரரசு நன்கு ஓங்கியிருந்தது. இக்காலத்தில் தோன்றியவை சோழர் காப்பியங்களாகும்.

சோழர் காலத்தில் காப்பிய இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் முத்திரை பதிக்கத்தக்க அளவில் வளர்ந்தன.

### 4.5.1 பெரியபுராணம்

சேக்கிழார் என்பவரால் எழுதப்பெற்ற காப்பியமாகும். இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் உண்டு. சேக்கிழார் தொண்டர் சீர் பரவுவார் என்று அழைக்கப்பட்டார். மொழிபெயர்ப்பும் அல்லாமல் தழுவலும் அல்லாமல் தமிழ்நாட்டிற்கு உரியதாகவே இடைக்காலத்தில் எழுந்த காப்பியமாகும். இவர் சோழ அரசன் குலோத்துங்கனிடம் (கி.பி. 11-12)ஆம்

நூற்றாண்டுகளில் அமைச்சராக இருந்து, பிறகு சைவசமயத் தொண்டிற்காகவே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்.

சுந்தரமூர்த்தி நாயனார், அறுபது நாயன்மார்களைப் பற்றித் திருத்தொண்டத்தொகை என்பதை 11 பாடல்களில் பாடினார்; (கி.பி 8) பின்பு வந்த நம்பியாண்டார் நம்பி (கி.பி.11) திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்ட தொகையடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடல் வீதம் 89 பாடல்களால் ஆன திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினார். பிற்காலத்தில் வந்த அஃதாவது 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அருண்மொழித்தேவர் என்கிற சேக்கிழார் அவ்வந்தாதியைப் பாடினார். அந்தாதி காப்பியமாக விரிக்கப் பெறுகிறது. இந்நூல் 12 சருக்கங்களையும் 4000திற்கும் மேற்பட்ட செய்யுட்களையும் உடையது. காப்பியம் என்ற காரணத்தால் ஒப்பற்ற காப்பியத் தலைவரைப் படைக்க வேண்டிய நிலையில் சுந்தரமூர்த்தி நாயனாரைக் காப்பியத் தலைவராகப் படைத்தார்.

தமிழகத்தின் பல ஊர்களில் வாழ்ந்த அடியார்களைப்பற்றிய வரலாற்றை விளக்கும் முதல்நூல், அடியார்கள் வேறுவேறு குலத்தைச் சார்ந்தபோதிலும் பக்தி மற்றும் தொண்டு என்ற நிலையில் ஒன்றுபடுவதை இப்பெரியபுராணக் காப்பியம் வற்புறுத்துகிறது. இறைவனே ‘உலகெலாம்’ என அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் பாடியதாகக் கூறப்பெறுகின்றது.

## 4.5.2 கம்பராமாயணம்

மகாகவி பாரதியார் தமிழ்நாட்டைச் சிறப்பிக்கும்போது. ‘கம்பன் பிறந்த தமிழ்நாடு’ என்று குறிப்பிடுவார். மாயூரத்திற்கு அருகே ஒரு சிற்றூரில் காளிபூசை செய்யும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். சிறுவராக இருந்தபோது ஒரு கம்பங்கொல்லையைக் காவல் புரிந்தார். அக்காரணம் பற்றியே இவருக்குக் கம்பர் என்ற பெயர் வருவதாயிற்று. காளிகோயில் கம்பத்தின் அருகே கண்டெடுக்கப் பெற்ற காரணத்தால் இப்பெயர் வந்தது என்றும் கூறுவர்.

மானுடம் பாடும் காப்பியம் இக்காப்பியமாகும். கம்பரை இளமையில் ஆதரித்தவர் வள்ளல் சடையப்பர் ஆவார். தாம் இயற்றிய பாடலில் 1000 பாட்டிற்கு ஒருமுறை சடையப்பரின் புகழை இணைத்துக் கம்ப இராமாயணத்தில் பாடியுள்ளார்.

கம்பரின் புகழைப் பரப்பி நிற்பதில் கம்ப ராமாயணத்திற்குத் தனி இடம் உண்டு. தொடக்கத்தில் இவர்தம் நூலிற்கு இராமாவதாரம் என்றோ இராமகாதை என்றோ பெயர் சூட்டியிருக்கிறார். வால்மீகியின் வடமொழிக் காப்பியத்தைக் கம்பர் அப்படியே மொழி பெயர்க்கவில்லை. அதன் சிறப்புக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, தமிழ் நாகரிகத்திற்கு ஏற்பப் பாடியுள்ளார். “கம்பராமாயணம் இலியாது, ஏனீது, துறக்கநீக்கம், மகாபாரதம் போன்றவற்றை வெல்லும் சிறப்புடையது என்பது மட்டுமின்றித் தனக்கு முதல் நூலாக வால்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய

காப்பியமாகும்” என்று வ.வே.சு.ஐயர் குறிப்பிடுவது இவண் கருதத்தக்கதாகும்.

வால்மீகி இராமாயணத்தில் கதையெடுத்தாலும், இராமனை – சீதையை வழிபாட்டு நிலைக்கு உயர்த்திய பெருமை கம்பருக்கு உண்டு.

இயற்கைக் காட்சிகளை எடுத்துரைக்கும் முறையில் கம்பர் சிறப்புப் பெறுகிறார். கோசல நாட்டு வளமான வாழ்வை வருணிக்கும் இடத்தில் ஒப்பற்ற கவிஞராகவே தென்படுகிறார்.

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்

கம்ப இராமாயணத்தில் இராமனுக்கு எதிர்நிலையில் இராவணன் சித்தரிக்கப் பெறுகிறான். எதிர்த்தலைவனாக விளங்கும் அவனிடம் எல்லா நலன்களும் உள்ளன.

கதைப் பாத்திரங்களின் உணர்ச்சிகளுக்கும் பண்புகளுக்கும் ஏற்றவாறு பாட்டின் ஓசை வேறுபடுகிற நலனை இக்காப்பியம் முழுவதும் பரக்கக் காணலாம்.

## 4.5.3 கந்த புராணம்

தமிழில் தோன்றிய புராணங்களும் காப்பியங்கள் என்ற தகுதியைப் பெற்றுள்ளன. புராணங்கள் பெருகுவதற்குச் சமண சமயம் காரணமாகும். பிற் காலத்தில் சைவ, வைணவ சமயங்களில் புராணங்கள் பல தோன்றின.

பெரியபுராணம் குறிப்பிடத் தகுந்த சைவச் சமயக் காப்பியமாகத் திகழ்ந்தமை முன்னர் விளக்கப்பெற்றது. கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் என்ற நூலினை யாத்துள்ளார். இந்நூல் ஆறு காண்டங்களையும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களையும் உடையது. வடமொழியில் உள்ள சிவசங்கர சங்கிதையின் ஒரு பகுதியில் கூறப்பெறும் ஸ்கந்தனின் வரலாற்றைத் தமிழில் தருகிறது என்பர். ஆறுமுகக் கடவுளின் பிறப்பும் சிறப்பும் சூரபன்மாவுடன் போரிட்டு வென்றமையும், வள்ளி, தெய்வானை திருமணங்களும் விரித்துரைக்கப் பெறுகின்றன.

சோழர்காலம் ஏற்றமுற்றிருந்தபோது சைவசமயம் தழைத்தோங்கிய காலத்தில் அச்சமய உண்மைகளை வெளிப்படுத்த எழுதப்பெற்றது.

## 4.5.4 பாரத நூல்கள்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஒரு பாரதம் தோன்றியதைப் பற்றி மூன்றாம் குலோத்துங்களின் திருவாலங்காட்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. பிற்காலத்தில் கி.பி17ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் பாரதம் செல்வாக்குப் பெற்றதால் மற்ற பாரத நூல்கள் வழக்கொழிந்தன.

முன்னைய இதிகாச புராணங்களில் காணப்பெற்ற கிளைக்கதைகள் பிற்காலத்தில் தனிக் காப்பியங்களாயின. புகழேந்திப் புலவர் (கி.பி.13)

நளவெண்பா என்ற நூலினை யாத்துள்ளார். இந்நூல் 3 காண்டங்களையும் 424 வெண்பாக்களையும் கொண்டது.



**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. காப்பியம் என்பது எந்தச் சொல்லின் திரிபு எனக் கூறுவர் ?**

காப்பியம் என்பது “காவ்யம்” என்ற வட சொல்லின் திரிபு எனக் கூறுவர்.

**2. சிலம்பின் காலம் எது என்று கருதப்பெறுகிறது ?**

சிலம்பின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று கருதப்பெறுகிறது.

**3. இரட்டைக் காப்பியங்கள் எனப்படுபவை யாவை ?**

சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படுகின்றன.

**4. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை ?**

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்

என்பன சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் ஆகும்.

**5. மணிமேகலை எந்தச் சமயக் காப்பியம்? அது வலியுறுத்தும் கருத்து யாது ?**

மணிமேகலை பௌத்த சமயக் காப்பியம். அது அறக்கருத்துக்களை வலியுறுத்துகிறது.

**6. விருத்தப்பாவால் எழுந்த முதற்காப்பியம் எது ?**

விருத்தப்பாவால் எழுந்த முதற்காப்பியம் சீவகசிந்தாமணி.

**7. ஐஞ்சிறு காப்பியங்கள் யாவை ?**

சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம் என்பன ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகும்.

**8. சூளாமணியின் ஆசிரியர் யார் ?**

சூளாமணியின் ஆசிரியர் தோலாமொழித் தேவர் ஆவார்.

**9. யசோதர காவியத்தின் ஆசிரியர் யார் ?**

யசோதர காவியத்தின் ஆசிரியர் வெண்ணாவலுடையார் ஆவார்.

**10. பௌத்த சமயத்தைச் சார்ந்த இலக்கண ஆசிரியர் யார் ? அவர் எழுதிய நூல் எது ?**

பௌத்த சமயத்தைச் சார்ந்த இலக்கண ஆசிரியர் புத்தமித்திரர், அவர் எழுதிய நூல் வீரசோழியம்.

**11. சோழர் காலத்தில் சிறப்பிடம் பெறத்தக்க காவியங்கள் யாவை ?**

பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் என்பவை சோழர் காலத்தில் சிறப்பிடம் பெறத்தக்க காவியங்கள் ஆகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. இரட்டைக் காப்பியம் என்பதற்கான விளக்கத்தைக் கூறுக**

இளங்கோவடிகள் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் முன் சிலப்பதிகாரத்தை அரங்கேற்றினார். இளங்கோ சாத்தனாரைத் தண்டமிழ் ஆசான் எனக் குறிப்பிடுவார். மேலும்,

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத் துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்"

என்பது மணிமேகலைப் பதிகமாம். காப்பிய ஆசிரியர்கள் இருவருக்கும் உள்ள தொடர்பு இதன் வழித்தெரிகிறது.

சிலப்பதிகாரம் கண்ணகி, மாதவி, கோவலன் கதையைக் குறிப்பிடும். கோவலன் மாதவி இருவரின் மகளான மணிமேகலையின் கதையை மணிமேகலைக் காப்பியம் பாடியுள்ளது.

மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும் என்பது சிலம்பின் இறுதிக்கட்டுரை வாக்கியமாகும்.

இந்நூலில் காணப்பெறும் சொல்ஒப்பு, தொடர்ஒப்பு, இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து இவ்விரு காப்பியங்களும் இரட்டைக் காப்பியங்கள் என்று டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கருதியுள்ளார். அக்கருத்தின் வழி விரிந்த நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் பிற்பட்டது மணிமேகலை என்றும் இரட்டைக் காப்பியங்கள் அல்ல என்றும் சிலர் கருத்தாகத் தெரிவிப்பார்கள். சிலப்பதிகாரம் சமயம் சாராதது. மணிமேகலையோ சமயம் சார்ந்தது. இரண்டிலும் காணப்பெறும் பதிகங்கள் பொய்யானவை. இவைகளைக் கருத்தில் கொண்டு, இவ்விரு காப்பியங்களையும் இரட்டைக் காப்பியங்கள் என்று கூறுவது பொருந்தாது என்பர்.

**2. சிலப்பதிகாரத்தின் சிறப்பு குறித்து எழுதுக.**

தமிழ் மூவேந்தர்கள் ஒற்றுமையில்லாமல் இருந்தனர். அவர்கள் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும் என்பதற்காக மூவேந்தர் காப்பியமாக இந்நூலை உருவாக்கினார்.

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக"

என்று பதிகத்தில் (61-62) இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். புகார்க் காண்டத்தில் சோழனைச் சிறப்பித்துப் பாடுகிறார். மதுரைக்காண்டத்தில் பாண்டியனைச் சிறப்பித்துப் பாடுகிறார். வஞ்சிக்காண்டத்தில் சேரனைச் சிறப்பித்துப் பாடுகிறார். தான் சேரநாட்டுக் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் மற்ற தமிழ் வேந்தர்களையும் சமமாகச் சிறப்பித்துப் பாடுகிறார். புகார் நகரத்தில் காப்பியக்கதை தொடங்கி மதுரையில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்து சேரநாட்டில் முடிவடைவதாகக் கதைப் போக்கை அமைத்திருக்கின்றார்.

தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை உருவாக்கித் தமிழ் வேந்தர்களையும் தமிழ் மக்களையும் ஒற்றுமைப்படுத்த முயலுகிறார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் பிற சமயங்களையும் ஒன்று போலவே நோக்குகிறார். 'அடிகள்' என்ற பெயர் பெரும்பாலும் சமணத்தாரையே குறிக்கும். இவர் சமயப்பொறை மிகுந்தவர் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடலாம்.

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!"

என்று ஆய்ச்சியர் குரவைப் பாட்டில் பிற சமயங்களையும் தெய்வங்களையும் போற்றுகிறார். நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்ட இறைவனைப் பாடாமல் இயற்கைக்கு வாழ்த்துக் கூறிப்புதுமை செய்கிறார்.

இளங்கோவடிகள் காலத்திற்கு முற்பட்ட புலவர்கள் கையாளாத புதிய செய்யுள் வகைகளைக் கையாள்கின்றார். சிலப்பதிகாரத்தில் புதிய பல வகைச் செய்யுள் வடிவங்களைச் சிறப்பாகக் காணலாம். கானல்வரி, ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் இசைப் பாடல்களை யாத்துள்ளார். பாடல்கள் நாட்டுப்புற வடிவங்களைச் சார்ந்தும் அமைகின்றன. மேலும் அரங்கேற்று காதையில் நாடகங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறார். இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகளை மிகுதியாகத் தருகிறார். அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதை, கானல்வரி போன்ற காதைகளுக்கு உரை எழுதும்பொழுது மறைந்து போன இசை நூல்களையும் நாடக நூல்களையும் உரையின் வழியே குறிப்பிடுகின்றார். உலகப் பழைய காப்பியங்கள் பெரும்பாலும் அரச குடும்பத்தையே மையமிட்டிருக்கும். இளங்கோவடிகள் அதிலும் புதுமை செய்கிறார். தம் காப்பியத்தில் காப்பியத் தலைவர்களாக அரசனையும் அரசியையும் அமைக்காமல், வணிகர் குலத்தைச் சார்ந்த சாதாரணக் குடிமக்களையே காப்பியத் தலைமக்களாக்கிப் புதுமை செய்கிறார். இதன் தூண்டுதலால்தான் கணிகையர் குலத்தைச் சார்ந்த மணிமேகலையை மணிமேகலை என்ற காப்பியத்தின் தலைவியாக்கச் சாத்தனாரால் முடிந்தது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காப்பியத் தலைவியாகிய கண்ணகியை அடுத்து மாதவிக்கு முக்கியச் சிறப்புக் கொடுத்திருக்கிறார். கோவலன் ஓர் இடத்தில் அவளைப் பழித்த போதிலும் 'தன்தீது இலள்', என்று அவனே குறிப்பிடுகின்றான். மாதவியும் கோவலனுடன் அன்பு அறம் பூண்டு வாழ்ந்தவள். அதனால் இறுதியில் துறவியாய் ஆகிறாள். மாதவி மணிமேகலையைக் கண்ணகி மகள் என்று குறிப்பிடுவதும் பரத்தமையை ஒதுக்கிவந்த நிலையும் பெரும் புரட்சிநிலையாகும். சிலப்பதிகாரத்தில் இது குறிப்பிடத்தக்க நிலையாகும். பொதுவாகச் சமணம் சார்ந்த நூல்கள்

இல்லறத்தைப் புகழ்ந்து பேசுவதில்லை. பெண்களை உயர்த்திக் கூறுவதும் இல்லை. அந்நூல்களிலிருந்து மாறுபட்டுச் சிலப்பதிகாரம் பெண்ணின் பெருமையைக் கூறும் நூலாக உள்ளது.

குறிப்பு

**3. கம்பராமாயணம் பற்றி எழுதுக.**

மகாகவி பாரதியார் தமிழ்நாட்டைச் சிறப்பிக்கும்போது. 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று குறிப்பிடுவார். மாயூரத்திற்கு அருகே ஒரு சிற்றூரில் காளிபூசை செய்யும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். சிறுவராக இருந்தபோது ஒரு கம்பங்கொல்லையைக் காவல் புரிந்தார். அக்காரணம் பற்றியே இவருக்குக் கம்பர் என்ற பெயர் வருவதாயிற்று. காளிகோயில் கம்பத்தின் அருகே கண்டெடுக்கப் பெற்ற காரணத்தால் இப்பெயர் வந்தது என்றும் கூறுவர்.

மானுடம் பாடும் காப்பியம் இக்காப்பியமாகும். கம்பரை இளமையில் ஆதரித்தவர் வள்ளல் சடையப்பர் ஆவார். தாம் இயற்றிய பாடலில் 1000 பாட்டிற்கு ஒருமுறை சடையப்பரின் புகழை இணைத்துக் கம்ப இராமாயணத்தில் பாடியுள்ளார்.

கம்பரின் புகழைப் பரப்பி நிற்பதில் கம்ப ராமாயணத்திற்குத் தனி இடம் உண்டு. தொடக்கத்தில் இவர்தம் நூலிற்கு இராமாவதாரம் என்றோ இராமகாதை என்றோ பெயர் சூட்டியிருக்கிறார். வால்மீகியின் வடமொழிக் காப்பியத்தைக் கம்பர் அப்படியே மொழி பெயர்க்கவில்லை. அதன் சிறப்புக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, தமிழ் நாகரிகத்திற்கு ஏற்பப் பாடியுள்ளார். "கம்பராமாயணம் இலியாது, ஏனீது, துறக்கநீக்கம், மகாபாரதம் போன்றவற்றை வெல்லும் சிறப்புடையது என்பது மட்டுமின்றித் தனக்கு முதல் நூலாக வால்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகும்" என்று வ.வே.சு.ஐயர் குறிப்பிடுவது இவண் கருதத்தக்கதாகும்.

வால்மீகி இராமாயணத்தில் கதையெடுத்தாலும், இராமனை – சீதையை வழிபாட்டு நிலைக்கு உயர்த்திய பெருமை கம்பருக்கு உண்டு.

இயற்கைக் காட்சிகளை எடுத்துரைக்கும் முறையில் கம்பர் சிறப்புப் பெறுகிறார். கோசல நாட்டு வளமான வாழ்வை வருணிக்கும் இடத்தில் ஒப்பற்ற கவிஞராகவே தென்படுகிறார்.

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்

கம்ப இராமாயணத்தில் இராமனுக்கு எதிர்நிலையில் இராவணன் சித்தரிக்கப் பெறுகிறான். எதிர்த்தலைவனாக விளங்கும் அவனிடம் எல்லா நலன்களும் உள்ளன.

கதைப் பாத்திரங்களின் உணர்ச்சிகளுக்கும் பண்புகளுக்கும் ஏற்றவாறு பாட்டின் ஓசை வேறுபடுகிற நலனை இக்காப்பியம் முழுவதும் பரக்கக் காணலாம்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. சீவகசிந்தாமணியின் சிறப்புகள் யாவை ?**

விடை : 4.2.8 ல் உள்ள பகுதியைப் படித்து எழுத வேண்டும்.

**2. ஐஞ்சிறு காப்பியங்கள் பற்றிக் கட்டுரை வரைக.**

விடை : 4.3 பகுதியில் உள்ளவற்றை 4.3.5 வரை படித்துக் கொள்க.

**3. பௌத்தர்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.**

விடை : 4.4ல் உள்ளவை. 4.4.4. வரை படித்து எழுதிட வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

**1. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்கள் கொண்டது ?**

**2. சிலப்பதிகாரம் எந்த வேந்தர்களுக்கு உரியது ?**

**3. மணிமேகலை பெற்ற பாத்திரத்தின் பெயர் என்ன ?**

**4. மணநூல் என்று அழைக்கப்பெறும் காப்பியம் எது ?**

**5. பெரியபுராணத்திற்கு அடிப்படையாக அமைந்த நூல்கள் யாவை ?**

**6. மானுடம்பாடும் காப்பியம் எது ?**

**7. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார் ?**

# பிரிவு 2 - கூறு 5 : தமிழ்ப்பணி

## 5.1 ஆழ்வார்கள்

குறிப்பு

தமிழகத்தில் சிவவழிபாடும் திருமால் வழிபாடும் தொன்மைக்காலத்தில் இருந்தே நிலவி வருகின்றன. ஆழ்வார்கள் திருமால் வழிபாட்டோடு தொடர்புடையவர்கள் ஆவார்கள். அவர்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 1. பொய்கையாழ்வார் | 2. பூதத்தாழ்வார் |
| 3. பேயாழ்வார் | 4. திருமழிசையாழ்வார் |
| 5. நம்மாழ்வார் | 6. மதுரகவியாழ்வார் |
| 7. பெரியாழ்வார் | 8. ஆண்டாள் |
| 9.தொண்டரடிப் பொடியாழ்வார் | 10.திருப்பாணாழ்வார் |
| 11. திருமங்கையாழ்வார் | 12. குலசேகர ஆழ்வார் |

## 5.2 முதலாழ்வார் மூவர்

திருமாலின் பாஞ்சசன்யம் என்ற சங்கின் அவதாரமாகக் கருதப்பெறும் பொய்கையார் காஞ்சியில் ஒரு பொய்கையிலிருந்த தாமரை மலரில் தோன்றினார். அதற்கடுத்த நாள் பூதத்தார் கடல்-மல்லையில் பிறந்தார். பேயாழ்வார் திருமலையில் பிறந்தார். இவ்வாறு அவர்களின் தோற்றம் பற்றிக் குருபரம்பரை குறிப்பிடும்.

இவர்கள் மூவரும் திருக்கோவிலூரில் ஒருநாள் கூடினர். அப்போது பெருமழை பெய்தது. பொய்கையார் ஒரு வீட்டுத் திண்ணையில் ஒன்றிக் கொண்டிருந்தனர். அங்கு பூதத்தாரும் பேயாரும் வந்து இடம் கேட்டனர். அதற்குப் பொய்கையார்,'ஒருவர் கிடக்கலாம்,இருவர் இருக்கலாம்,மூவர் நிற்கலாம்' என்று கூறி இடம் விட்டார். அங்கு நான்காவது ஆள் ஒருவர் நிற்கவே இவரை உற்றுநோக்கி, அவரை நெடுமால் என்று உணர்ந்தார்கள். பின் மகிழ்ந்து நூறு நூறு பாடல்கள் இயற்றி அருளினர். இவைகள் இயற்பா திருவந்தாதிகள் என வழங்கப்பெறும்.

### 5.2.1 பொய்கையாழ்வார்

கி.மு.4303 இல் வாழ்ந்தவர் என்று வைணவக் குருபரம்பரைகள் கூறும். அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். வையமே தகளியாக வார்கடலே நெய்யாக, வெய்யகதிரோன் விளக்கமாச் சுடராழியானுக்குச் சூட்டுகின்ற செஞ்சொற்பாடல்கள் சுவை மிகுந்தவை.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று

பொய்கை ஆழ்வார், தம்பாடலைச் சொல்மாலை என்றே பாடுகிறார். திருமாலிடம் மாறாத அன்பு கொண்டிருப்பினும், அரியும் சிவனும் ஒன்றென்ற கொள்கை உடையவர்.

### 5.2.2 பூதத்தாழ்வார்

பூதத்தாழ்வார் பாடியுள்ள பாடலில் பக்தியும் ஞானமும் கலந்த வழிபாட்டை எடுத்துக் கூறுகிறார். அவர் வழிபாட்டிற்காக ஞானவிளக்கொன்று ஏற்றினார். அன்பே அந்த விளக்கின் தகளி. தம் ஆர்வமே அதற்கு நெய். பக்தியால் உருகும் மனமே அந்த விளக்கிற்கு உரிய திரி. இவ்வாறு நாராயணனுக்கு ஞானத் தமிழை விரும்பிப்பாடிய நான் நன்றாக உருகி ஞானவிளக்கு ஏற்றினேன் என்பதை,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

என்று பாடுகிறார்.

### 5.2.3 பேயாழ்வார்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் வைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று

என்று திருவேங்கடத்தில் கண்ட காட்சியைப் பாடுகிறார். சிவனும் திருமாலும், இணைந்த திருக்கோலத்தைக் காணும் சமநோக்கு உடையவராக விளங்குகிறார்.

## 5.3 திருமழிசை ஆழ்வார்

தொண்டை நாட்டில் காஞ்சிக்கு அருகிலுள்ள ‘திருமழிசை’ என்ற ஊரில் பிறந்தமையால் ‘திருமழிசை ஆழ்வார்’ என அழைக்கப்பெற்றார். இவருக்கு பத்திசாரர் என்ற பெயரும் உண்டு. இவர் நெடுங்காலமாகத் திருவல்லிக்கேணியில் யோகத்தில் ஆழ்ந்திருந்தார் என்பர். சைவத்திற்குத் திருமூலர் போன்று வைணவத்திற்குத் திருமழிசையாழ்வார் திகழ்ந்தார். கணிகண்ணன் இவருடைய தோழன் ஆவான். இவரிடம் மாறாத பக்தி பூண்டவன். காஞ்சியில் வாழ்ந்த பல்லவ மன்னன் தம்மை இகழ்ந்ததற்காகத் திருமாலையும் அழைத்துக் கொண்டு அவ்வூரை விட்டுச் சென்றார் என்றொரு வரலாறு உண்டு. காஞ்சியிலிருந்து வெளியேறியபோது,

“கணி கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணி வண்ணா நீயிங் கிராதே — துணிவுடனே
செந் நாப்புலவன் யான் செல்கின்றேன் நீயு முன்றன்
பைந் நாகப் பாய் சுருட்டிக்கொள்”

என்று பாடியுள்ளார்.

## 5.4 திருமங்கையாழ்வார்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் திருமங்கையாழ்வார் ஆவார். இவர் சோழ மண்டலத்தில் உள்ள

திருவாலி நாட்டில் திருக்குறையலூரில் கள்ளர் மரபில் நீலன் எனும் பெயருடன் அவதரித்தார். இவருக்கு கலியன்,கலிநாடன், மங்கையர் கோன், குறையலாளி, மங்கைவேந்தன், அருள்மாரி எனும் வேறு பெயர்களும் உண்டு. இவர் வைணவரின் மகளாகிய குமுதவல்லியை மணந்து வைணவரானார். தம் செல்வம் அனைத்தையும் திருமால் அடியவர்களுக்கு அமுதூட்டுவதில் செலவழித்தார். செல்வம் முடிந்த பிறகு வழிப்பறி செய்து தம் எண்ணத்தை நிறைவேற்றினார். ஒரு நாள் திருமால் தன் தேவியுடன் காட்டில் வர அவர்களிடம் நகைகளைப் பறித்து மூட்டையாகக் கட்டி அதைத்தூக்க முடியாமல் திணறியபோது "ஏதோ மந்திரம் போட்டுவிட்டீர்" என்று திருமாலிடம் சொன்னபோது, இறைவன் அவர் காதில் நாராயண மந்திரத்தைக் கூறியதாகக் கதை ஒன்றுண்டு. அதற்குப் பிறகு தான் திருமங்கையாழ்வார் பாடத் தொடங்கினார் என்பர்.

"முற்ற முத்துக்கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து,
இயற்ற கால்போல் தள்ளி மெள்ள விருத்தங் கிறையாண்,
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங்குவதுமே"

எனும் பாடலடிகளின் மூலம் இறைவனை இளமையில் வணங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

திருமங்கையாழ்வார் இயற்றிய நூல்களாகப் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல் எனும் ஆறு நூல்களாகும். நால்வேதத்திற்கு ஆறங்கம் போல்வன என்று இவை போற்றப்பெறும்.

திருமங்கையாழ்வார் பாடிய தாண்டகங்கள் அனைத்தும் உள்ளத்தை உருக்கும் தன்மை கொண்டன.

"நாடினேன் நாடி நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்"

எனும் பாடலடிகள் இவரது இறைப்பற்றை எடுத்துக்காட்டுவன. இவரின் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பர்.

## 5.5 பெரியாழ்வார்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் வேயர் குடியில் தோன்றினார். வேயர் என்பது பிராமணர் குலத்தின் ஒரு பிரிவாகும். இவர் விட்ணு சித்தர், பட்டர் பிரான் என்றும் அழைக்கப் பெறுகிறார்.

இவர் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் காலத்தவர் என்பர் ஆராய்ச்சியாளர்கள். அம்மன்னன் சீமாறன் சீவல்லவன் (835 – 862) எனக் கொண்டு, இவரின் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு என நிறுவுவர். இவருக்கு வேயர்கோன் என்ற பெயரும் உண்டு. திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழியும் இவர் எழுதிய நூல்களாகும்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு காப்புப் பாடி, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தளர்நடை முதலான குழந்தைப் பருவப் பாடல்களையும் பாடினார். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்திற்கு அடித்தளமாகவும் தோற்றமாகவும் இவர் நூல் விளங்குகிறது.

பெரியாழ்வார் கண்ணனது திருமேனியழகைப் பாதாதி கேசமாகப் பெரியாழ்வார் பாடும் அழகு உள்ளத்தை மகிழ்விக்க வல்லதாகும். மேலும் கண்ணனைத் தாலாட்டும் பாட்டு இலக்கியத் தாலாட்டுப் பாடல்களில் எல்லாம் முதன் முதலில் தோன்றியது, மிக இனிமையானது.

“மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!”

பெரியாழ்வார் பாடல்களைப் பொறுத்தவரையில் இனிமையும், இயல்பான ஓசையழகும் நாட்டுப்புறப் பாடல்மரபும் கொண்ட தனிச் சிறப்புடையனவாகும்.

## 5.6 ஆண்டாள்

பெரியாழ்வார் பயிரிட்ட நந்தவனத்தில் துளசிச் செடிகளிடையே கிடந்து பெரியாழ்வாரால் எடுத்து வளர்க்கப்பெற்ற தெய்வக் குழந்தையாவார். ஆண்டாளை வைணவர்கள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி எனப் போற்றுவார்கள். கோதை என்பது இவர் பெயராகும். ஆண்டவனையே ஆண்டவள் ஆதலால் ஆண்டாள் என்றும், பெருமாளுக்கு மாலை சூடிக்கொடுத்தவள் ஆதலால் ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’,‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ என்றும் அழைக்கப்பெற்றார்.

ஆண்டாள் பாடல்களுள், திருப்பாவையே மிகப் பலரால் போற்றிப் பாராயணம் செய்யப் பெறுகிறது.

‘மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்’

எனும் தொடக்கப் பாடல் சிறப்புடைத்ததாகும்.

“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தர்க்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்(து) என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்”

என்ற பாடல் ‘மாயவனை மணப்பதாகக் கனவு கண்ட செய்தியைத் தோழிக்குக் கூறும் முறையில் அமைந்துள்ளது.

## 5.7 குலசேகர ஆழ்வார்

சேரநாட்டினர். திருவஞ்சைக் களத்தில் பிறந்த அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர். "கம்ப மத யானைக் கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று கூறி அரசைத் துறந்தவர்.

தமிழில் பெருமாள் திருமொழியையும் (105), வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். பெருமாள் திருமொழியில் திருவரங்கம், திருவேங்கடம், திருவற்றுக்கோடு ஆகிய தலங்களைப் பற்றிப் பாடிய பாடல்கள் உள்ளன. திருவேங்கடத்தில் பறவையாக, மீனாக, மரமாக, ஆறாக, படியாகவெல்லாம் கிடக்கும் பேறு பெற்றால், அதுவே பெரும் பேறாகுமென ஆழ்வார் பாடுவது பக்தி இலக்கியப் பாடல்களில் ஒப்பற்ற உணர்ச்சிப் பிழம்பாக மதிக்கப்பெறுகிறது.

"ஆனாத செல்வத்து அரம்பயைர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்:
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

என்ற பாடல் அதற்குச் சான்றாகும்.

## 5.8 தொண்டரடிப் பொடியாழ்வார்

சோழ நாட்டில் திருமண்டங்குடி என்னும் ஊரில் அந்தணர் குடியில் தோன்றியவர். இவரின் இயற்பெயர் விப்ர நாராயணன் என்பதாகும். இவர் திருவரங்கத்தில் ஒரு நந்தவனம் அமைத்து,பெரியாழ்வாரைப் போன்று திருமாலுக்குப் பூமாலைகளையும், துளசி மாலைகளையும் சூடித் திருப்பள்ளியெழுச்சியும் பாடினார். இவர் திருமாலின் புகழ்பாடும் அடியவராய்த் தம்மைக் கருதியதால் தொண்டரடிப்பொடியாழ்வார் எனத் தம் பெயரை மாற்றிக் கொண்டார்.

திருவரங்கப் பெருமான் மீது இவர் பாடிய பாடல்கள் பலவாகும். அதில் படிப்போர் அனைவரையும் கவர்ந்த பாடல்

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே".

## 5.9 திருப்பாணாழ்வார்

சோழநாட்டு உறையூரில் பாணர் குலத்தில் பிறந்தவர். இழிந்த குடியினர் என்று கருதப்பெற்ற பாணர் குடியினரால் வளர்க்கப் பெற்றமையால்

"இழிகுலத்தவர்களேனும் எம்மடியார்களாகில்
நின்னோடு மொக்க அருளினாய்"

என்பன தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பாசுர அடிகள். இவை திருப்பாணாழ்வாரைக் குறித்தல் கூடும் என அறிஞர்கள் கருதுகிறார்கள்.

திருவரங்கத்தானைக் கண்ணாரக் கண்டுகளித்த “அமலனாதிப்பிரான்” எனத் தொடங்கும் பத்துப் பாசுரங்களைப் பாடினார். இப்பாடல்கள் அனைத்தும் அரங்க நாதர் மேல் பெண்ணொருத்தி காதல் கொண்ட பாங்கில் அமைந்ததாகும். இப்பாடல்கள் ஆழமும் எளிமையும் மிக்கன.

அமலனாதிப்பிரான் என்ற பாசுரத்தில் பத்தாவது பாடல் இறைவனின் உருவத்தினைத் தெளிவாகச் சுட்டுகிறது.

“கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே”

## 5.10 நம்மாழ்வார்

பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகூரில் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் காரியார் நங்கையர் என்பவர் ஆவார். நம்மாழ்வார் ‘சடம்’ வாயுவைச் சினங்கொண்டெதிர்த்ததால் ‘சடகோபீர்’ என்றும், திருவரங்கனால் ‘நம் சடகோபன்’ என அழைக்கப் பெற்றதால் ‘நம்மாழ்வார்’ என்றும், உலகப் போக்குக்கு மாறாக இருந்தமையால் ‘காரி மாறர்’ என்றும் அருள்மாலை சூடியிருந்தமையால் ‘வகுளா பரணர்’ என்றும் பிறசமயங்களாகிய யானைகட்கு அங்குசமாய்த் திகழ்ந்தமையால் ‘பராங்குசம்’ என்றும் மேலும் குருகைக் காவலன் தமிழ்மாறன் எனும் பல பெயர்களில் அழைக்கப்பெற்றார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரே சிறந்தவர் என்பதை, இவர் ‘அவயவி’ என்றும் மற்ற ஆழ்வார்கள் ‘அவயவம்’ என்றும் வழங்கப் பெறுவது கொண்டு தெளியலாம். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி எனும் நான்கு நூல்களைப் பாடியுள்ளார். இவை நான்கும் இருக்கு. யசுர், சாம, அதர்வண வேதக் கருத்துகளைப் புலப்படுத்தும் என்பர். இவற்றுள் சிறந்தது திருவாய்மொழியாகும். பக்தி உணர்வுக்கும் - தெளிந்த மெய்யுணர்விற்கும் திருவாய்மொழி களஞ்சியமாக விளங்குகின்றது.

நம்மாழ்வார் பக்தியைக் கொண்டு அகப்பாடல்களைப் பாடுவதில் சிறந்தவர் ஆவர். ஆதலால் தன்னைத் தலைவியாக எண்ணிப் பாடல்களைப் பாடினார். பராங்குசநாயகி என்று பெயர் சூட்டிக் கொண்டார்.

மனிதனைப் பாடுதல் தேவை இல்லை. இறைவனையே பாட வேண்டும் என்ற எண்ணத்தில் ஊறியவர்.

“சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என் நாவில் இன்கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா, தெனா என்று வண்டு முதல் திருவேங்கடத்து
என் ஆணை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே”

என்பது நம்மாழ்வார் திருவாய் மொழி.

குறிப்பு

## 5.11 மதுரகவியாழ்வார்

நம்மாழ்வாரின் சீடர் மதுரகவியாழ்வார் ஆவார். இவர் திருக்கோவலூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர், நம்மாழ்வார் திருமாலடி அடைந்தபின்பு, அங்கு அவர் தெய்வத் திருவுருவத்தை நிறுவி வழிபட்டார். நம்மாழ்வாரின் பெருமையை உலகறிச் செய்தவர் ஆவார். செவிகளுக்கு இனிய செய்யுட்களைப் பாடியமையால் 'மதுரகவி' என அழைக்கப் பெற்றார்.

மதுரகவியாழ்வாருக்கு நம்மாழ்வாரின் பாசுரங்களின் மேல் பற்று ஏற்பட்டது. ஆனால் நம்மாழ்வாரையே பதினொன்று பாசுரங்களாலான பாமாலை ஒன்றாற்பாடினார்.

சைவத்தில் திருநாவுக்கரசரைத் தெய்வமாகப் போற்றும் அப்பூதியடிகளைப் போன்று வைணவத்தில் நம்மாழ்வாரைத் தெய்வமாகப் போற்றுபவர் மதுரகவியாழ்வார்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. முதலாழ்வார்கள் யார் ?**

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் முதலாழ்வார்கள் என்று அழைக்கப் பெறுகின்றனர்.

**2. திருமழிசை ஆழ்வாரின் தோழன் யார் ?**

திருமழிசை ஆழ்வாரின் தோழன் கணிகண்ணன் என்பார்.

**3. திருமங்கையாழ்வாரின் இயற்பெயர் யாது ? இவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?**

திருமங்கையாழ்வாரின் இயற்பெயர் நீலன் என்பதாகும். இவருக்கு, கலியன், மங்கையர்கோன், குறையலாளி, அருள்மாரி என்னும் வேறுபெயர்களும் உண்டு.

**4. பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு அடித்தளமாக எந்த ஆழ்வாரின் பாடல்கள் அமைந்திருந்தன?**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு அடித்தளமாகப் பெரியாழ்வாரின் காப்பு, தாலாட்டு, செங்கீரைப் பாடல்கள் அமைந்திருந்தன.

**5. ஆண்டாளுக்கு வழங்கும் பெயர்கள் யாவை ?**

கோதை, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, சூடிக் கொடுத்த நாச்சியார் என்ற பெயர்கள் ஆண்டாளுக்கு வழங்கப் பெறுகின்றன.

**6. ஆண்டாள் பாடிய பாடல்கள் யாவை ?**

திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவை ஆண்டாள் பாடிய பாடல்கள் ஆகும்.

**7. நம்மாழ்வாரின் சீடர் என்று அழைக்கப் பெறுபவர் யார் ?**

நம்மாழ்வாரின் சீடர் என்று அழைக்கப் பெறுபவர் மதுரகவியாழ்வார் ஆவார்.

**8. ஆழ்வார்களில் தாண்டகம் பாடியவர் யார் ?**

ஆழ்வார்களில் தாண்டகம் பாடியவர் திருமங்கையாழ்வார்; திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம் என்பன அவை.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. குலசேகர ஆழ்வார் பற்றி எழுதுக.**

சேரநாட்டினர். திருவஞ்சைக் களத்தில் பிறந்த அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர். "கம்ப மத யானைக் கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று கூறி அரசைத் துறந்தவர்.

தமிழில் பெருமாள் திருமொழியையும் (105), வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். பெருமாள் திருமொழியில் திருவரங்கம், திருவேங்கடம், திருவற்றுக்கோடு ஆகிய தலங்களைப் பற்றிப் பாடிய பாடல்கள் உள்ளன. திருவேங்கடத்தில் பறவையாக, மீனாக, மரமாக, ஆறாக, படியாகவெல்லாம் கிடக்கும் பேறு பெற்றால், அதுவே பெரும் பேறாகுமென ஆழ்வார் பாடுவது பக்தி இலக்கியப் பாடல்களில் ஒப்பற்ற உணர்ச்சிப் பிழம்பாக மதிக்கப்பெறுகிறது.

"ஆனாத செல்வத்து அரம்பயைர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்:
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

என்ற பாடல் அதற்குச் சான்றாகும்.

**2. நம்மாழ்வார் பற்றி விளக்குக.**

பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகூரில் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் காரியார் நங்கையர் என்பவர் ஆவார். நம்மாழ்வார் 'சடம்' வாயுவைச் சினங்கொண்டெதிர்த்ததால் 'சடகோபீர்' என்றும், திருவரங்கனால் 'நம் சடகோபன்' என அழைக்கப் பெற்றதால் 'நம்மாழ்வார்' என்றும், உலகப் போக்குக்கு மாறாக இருந்தமையால் 'காரி மாறர்' என்றும் அருள்மாலை சூடியிருந்தமையால் 'வகுளா பரணர்' என்றும் பிறசமயங்களாகிய யானைகட்கு அங்குசமாய்த் திகழ்ந்தமையால் 'பராங்குசம்' என்றும் மேலும் குருகைக் காவலன் தமிழ்மாறன் எனும் பல பெயர்களில் அழைக்கப்பெற்றார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரே சிறந்தவர் என்பதை, இவர் 'அவயவி' என்றும் மற்ற ஆழ்வார்கள் 'அவயவம்' என்றும் வழங்கப் பெறுவது கொண்டு தெளியலாம். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி எனும் நான்கு நூல்களைப் பாடியுள்ளார். இவை நான்கும் இருக்கு. யசுர், சாம, அதர்வண வேதக் கருத்துகளைப் புலப்படுத்தும் என்பர். இவற்றுள் சிறந்தது திருவாய்மொழியாகும். பக்தி உணர்வுக்கும் - தெளிந்த மெய்யுணர்விற்கும் திருவாய்மொழி களஞ்சியமாக விளங்குகின்றது.

நம்மாழ்வார் பக்தியைக் கொண்டு அகப்பாடல்களைப் பாடுவதில் சிறந்தவர் ஆவர். ஆதலால் தன்னைத் தலைவியாக எண்ணிப் பாடல்களைப் பாடினார். பராங்குசநாயகி என்று பெயர் சூட்டிக் கொண்டார்.

மனிதனைப் பாடுதல் தேவை இல்லை. இறைவனையே பாட வேண்டும் என்ற எண்ணத்தில் ஊறியவர்.

“சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என் நாவில் இன்கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா, தெனா என்று வண்டு முதல் திருவேங்கடத்து
என் ஆணை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே”

என்பது நம்மாழ்வார் திருவாய் மொழி.

**3. பெரியாழ்வார் பற்றி எழுதுக.**

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் வேயர் குடியில் தோன்றினார். வேயர் என்பது பிராமணர் குலத்தின் ஒரு பிரிவாகும். இவர் விட்ணு சித்தர், பட்டர் பிரான் என்றும் அழைக்கப் பெறுகிறார்.

இவர் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் காலத்தவர் என்பர் ஆராய்ச்சியாளர்கள். அம்மன்னன் சீமாறன் சீவல்லவன் (835 – 862) எனக் கொண்டு, இவரின் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு என நிறுவுவர். இவருக்கு வேயர்கோன் என்ற பெயரும் உண்டு. திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழியும் இவர் எழுதிய நூல்களாகும்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு காப்புப் பாடி, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தளர்நடை முதலான குழந்தைப் பருவப் பாடல்களையும் பாடினார். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்திற்கு அடித்தளமாகவும் தோற்றமாகவும் இவர் நூல் விளங்குகிறது.

பெரியாழ்வார் கண்ணனது திருமேனியழகைப் பாதாதி கேசமாகப் பெரியாழ்வார் பாடும் அழகு உள்ளத்தை மகிழ்விக்க வல்லதாகும். மேலும் கண்ணனைத் தாலாட்டும் பாட்டு இலக்கியத் தாலாட்டுப் பாடல்களில் எல்லாம் முதன் முதலில் தோன்றியது, மிக இனிமையானது.

“மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!”

பெரியாழ்வார் பாடல்களைப் பொறுத்தவரையில் இனிமையும், இயல்பான ஓசையழகும் நாட்டுப்புறப் பாடல்மரபும் கொண்ட தனிச் சிறப்புடையனவாகும்.

**4. திருப்பாணாழ்வார் பற்றி விளக்குக.**

சோழநாட்டு உறையூரில் பாணர் குலத்தில் பிறந்தவர். இழிந்த குடியினர் என்று கருதப்பெற்ற பாணர் குடியினரால் வளர்க்கப் பெற்றமையால்

"இழிகுலத் தவர்க ளேனும் எம்மடி யார்க ளாகில்

நின்னோடு மொக்க அருளினாய்"

என்பன தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பாசுர அடிகள். இவை திருப்பாணாழ்வாரைக் குறித்தல் கூடும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். திருவரங்கத்தானைக் கண்ணாரக் கண்டுகளித்த "அமலனாதிப்பிரான்" எனத் தொடங்கும் பத்துப் பாசுரங்களைப் பாடினார். இப்பாடல்கள் அனைத்தும் அரங்க நாதர் மேல் பெண்ணொருத்தி காதல் கொண்ட பாங்கில் அமைந்ததாகும். இப்பாடல்கள் ஆழமும் எளிமையும் மிக்கன.

அமலனாதிப்பிரான் என்ற பாசுரத்தில் பத்தாவது பாடல் இறைவனின் உருவத்தினைத் தெளிவாகச் சுட்டுகிறது.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்

உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை

அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்

கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. முதலாழ்வார்கள் பற்றி விளக்கி எழுதுக.**

விடை : 5.2 என்னும் பகுதியில் உள்ளவற்றைப் படித்து எழுத வேண்டும்.

**2. திருமங்கையாழ்வாரின் தொண்டினை விளக்குக.**

விடை : 5.4 இல் உள்ள பகுதியை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

**1. திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்... என்று பாடிய ஆழ்வார் யார் ?**

**2. நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் யார் ?**

**3. கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் என்று பாடிய ஆழ்வார் யார் ?**

**4. தொண்டரடிப் பொடியாழ்வாரின் இயற்பெயர் என்ன ?**

**5. சடகோபன் என்று அழைக்கப் பெற்ற ஆழ்வார் யார் ?**

# பிரிவு2 - கூறு 6.1 : ஆழ்வார்களின் தமிழ்ப்பணி

குறிப்பு

தமிழ்வளர்ச்சியில் பக்தி இயக்கத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. "ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றும், இலத்தீன் சட்டத்தின் மொழியென்றும் கிரேக்கம் இசையின் மொழியென்றும், செருமன் தத்துவத்தின் மொழியென்றும் பிரெஞ்சு தூதின் மொழியென்றும் இத்தாலியன் காதலின் மொழியென்றும் கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழைப் பக்தியின் (இரக்கத்தன்) மொழியெனல் பொருந்தும்" என்று தனிநாயக அடிகள் சிறப்பித்துக் கூறுவர். பக்தி இலக்கியத்தில் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் மிகச் சிறப்பான இடம் உண்டு.

கி.பி. 5,6 – ஆம் நூற்றாண்டை ஒட்டிக் காரைக்காலம்மையாரும் முதலாழ்வார் மூவரும் தோன்றிப் பத்தி இலக்கிய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டனர். 7,8,9 – ஆம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கம் பேரலையெனப் பரவியதை வரலாற்றின் வழி அறியலாம். இருப்பினும் பக்தி இயக்ககாலம் எனச் சிறப்பாகச் சுட்டுவது கி.பி.7,8,9 – ஆம் நூற்றாண்டு ஆகும். இது பல்லவர் காலமாகும்.

ஆழ்வார்கள் திருமால் மேல் பேரன்பு கொண்டவர்கள். தமிழை மிகவும் நேசிப்பவர்கள். தமிழால் மனிதரைப் பாடுவதைக் காட்டிலும் திருமாலைப் பாடுவதே சிறப்பு என்ற சிந்தனையினை நம்மாழ்வார் தாம் வாழ்ந்த காலத்தில் கூறிய கருத்து இவண் கருதத்தக்கதாகும்.

என் நாவிலிருந்து பிறக்கும் இனிய கவிதையை யான் அவ்வாறு வேறு ஒருவர்க்காக அவருடைய புகழைப் பாடுவதற்காகக் கொடுக்க மாட்டேன். திருவேங்கடமலையில் உள்ள என் அப்பன் எம்பெருமான் இருக்கும்போது, அவன் புகழைப் பாடாமல் வேறு ஒருவர்க்கு என் கவிதைத் திறமையைப் பயன்படுத்த மாட்டேன்" என்று கூறுவார்.

"சொன்னால் விரோதம் இது ஆகிலும்சொல்லுவேன் கேண்மினோ
என்நாவில் இன்கவியான ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா, தெனா என்று வண்டு முரல் திருவேங்கடத்து
என் ஆணை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே"

என்று பாடுகிறார்.

## 6.1.1 பாடல்களின் தொகுப்பு

ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகத் தொகுக்கப்பெற்றது. ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்துத் தந்தவர் நாதமுனி ஆவார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | - | முதல் திருவந்தாதி |
| 2. | பூதத்தாழ்வார் | - | இரண்டாம் திருவந்தாதி |
| 3. | பேயாழ்வார் | - | மூன்றாம் திருவந்தாதி |
| 4. | திருமழிசையாழ்வார் | - | நான்காம் திருவந்தாதி, |

| | | | |
|---|---|---|---|
| | | | திருச்சந்த விருத்தம் |
| 5. | நம்மாழ்வார் | - | திருவிருத்தம் |
| | | | திருவாசிரியம் |
| | | | பெரிய திருவந்தாதி |
| | | | திருவாய்மொழி |
| 6. | மதுரகவியாழ்வார் | - | கண்ணிநுண் சிறுத்தாம்பு |
| 7. | பெரியாழ்வார் | - | திருப்பல்லாண்டு |
| | | | பெரியாழ்வார் திருமொழி |
| 8. | ஆண்டாள் | - | திருப்பாவை |
| | | | நாச்சியார் திருமொழி |
| 9. | திருமங்கையாழ்வார் | - | பெரிய திருமொழி, |
| | | | திருக்குறுந்தாண்டகம், |
| | | | திருநெடுந்தாண்டகம், |
| | | | சிறிய திருமடல், |
| | | | பெரிய திருமடல் |
| 10. | தொண்டரடிப் பொடியாழ்வார் | - | திருமாலை |
| | | | திருப்பள்ளி எழுச்சி |
| 11. | திருப்பாணாழ்வார் | - | அமலனாதிபிரான் |
| 12. | குலசேகர ஆழ்வார் | - | பெருமாள் திருமொழி |

## 6.1.2. ஆழ்வார்களின் இலக்கியத்தொண்டு

திருமால் வழிபாடு தொல்காப்பியத்திலும் சங்க காலத்திலும் நன்கு பயிலப் பெற்றது. எனினும் ஆழ்வார்கள் தோன்றிய பிறகே திருமால் வழிபாடு மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்தது எனலாம்.

ஆழ்வார்களது பாடல்களும் பண் சுமந்த பாடல்கள் ஆகும். தேவாரங்களைப் போலவே இவற்றையும் விண்ணகரங்களில் (கோயில்களில்) ஓதுவதற்காக இராசராசன், இராஜேந்திரன் முதலிய சோழவேந்தர்கள் ஊர்களை முற்றூட்டாகக் கொடுத்த செய்தியைக் கல்வெட்டுக்களின் வழிக் காணலாம்.

அரண்மனைக்கும் அரசிற்கும் இருந்த சிறப்புக்களைக் கோயிலுக்கும் கடவுளுக்கும் மாற்றிவிட்ட பெருமை ஆழ்வார்களுக்கும் உண்டு. இந்நிலைக்குப் பக்தித் தமிழை நன்கு பயன்படுத்தினர். கடவுளுக்கு முன் மக்கள் எல்லோரும் சமமானவர்களே. கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர் என்ற கருத்தை முன் வைத்தனர்.

சைவத்திற்கு மாணிக்கவாசகர் போன்று வைணவத்திற்கு நம்மாழ்வார் என்பர். நம்மாழ்வாரின் பாடல்கள் தமிழ்வேதம் என்று பாராட்டப்பெறுவது குறிக்கத் தகுந்ததாகும்.

பெரியாழ்வாரும் ஆண்டாளும் முறையே தாய் - குழந்தை உறவையும் காதலி காதலன் நேயத்தையும் வைத்து மனதினைக் கவரும் விதத்தில் பாடியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் இருந்த அகப்பொருள் மரபுகளை ஆழ்வார்கள் புதுமை நிலையில் கையாண்டனர். திருமாலை நாயகனாகவும் ஆழ்வார்கள் தங்களை நாயகியாகவும் அமைத்துப்பாடிய பாசுரங்கள் பண்டைத் தமிழ் இலக்கிய மரபை நினைவூட்டுகின்றன. திருமங்கையாழ்வார் சிறிய திருமடல் பெரிய திருமடல் எழுதிய நிலை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் உள்ள மடலேறுதலையே குறிக்கும்.

தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சித் தமிழுக்குச் சாகா வரமளித்து உதவியிருக்கிறது. இப்பாடல்கள் பத்தும் மாணிக்கவாசகரின் பள்ளியெழுச்சிப் பாடல்களுடன் ஒப்பிட்டுக் கருதத்தக்கவை என்பர்.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தருளாயே

ஆழ்வார்கள் புராண இதிகாசக் கதைகளை மிகுதியாகப் பயன்படுத்தினார்கள். தமிழின் தன்மை கெடாமல் தமிழை வளப்படுத்திய பெருமை ஆழ்வார்களுக்கு உண்டு.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு காப்புப்பாடி, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தளர்நடை போன்ற குழந்தைப் பருவப் பாடல்களையும் பாடினார். இவற்றில் பிள்ளைத்தமிழ் என்கிற இலக்கிய வகை வளர்ச்சிக்கு அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார் எனக் குறிப்பிடுவர்.

பெரியாழ்வார் கண்ணனைத் தாலாட்டும் பாட்டு இலக்கியத் தாலாட்டுப் பாடல்களில் எல்லாம் முதன்முதலில் தோன்றியது என்பர்.

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ !
வையம் அளந்தானே தாலேலோ ‘

ஆழ்வார்கள் பல நாட்டுப்புற இலக்கிய மரபுப் பாடல்களைத் தம் இலக்கியங்களில் இணைத்தமை தமிழின் மேன்மையை மேலும் வளப்படுத்தியது.

இவ்வாறு தமிழின் வளர்ச்சிக்கு ஆழ்வார்கள் பல நிலைகளில் பணியாற்றியதை வரலாற்றின் வழி அறியலாம்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. மதுரகவியாழ்வார் பாடிய பாடல்களின் தொகுப்புக்குப் பெயர் என்ன ?**

மதுரகவியாழ்வார் பாடிய பாடல்கள் கண்ணிநுண் சிறுத்தாம்பு எனப்படுகின்றது.

**2. நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார் ?**

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி ஆவார்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. ஆழ்வார்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.**

தமிழ்வளர்ச்சியில் பக்தி இயக்கத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. "ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றும், இலத்தீன் சட்டத்தின் மொழியென்றும் கிரேக்கம் இசையின் மொழியென்றும், செருமன் தத்துவத்தின் மொழியென்றும் பிரெஞ்சு தூதின் மொழியென்றும் இத்தாலியன் காதலின் மொழியென்றும் கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழைப் பக்தியின் (இரக்கத்தன்) மொழியெனல் பொருந்தும்" என்று தனிநாயக அடிகள் சிறப்பித்துக் கூறுவர். பக்தி இலக்கியத்தில் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் மிகச் சிறப்பான இடம் உண்டு.

கி.பி. 5,6 – ஆம் நூற்றாண்டை ஒட்டிக் காரைக்காலம்மையாரும் முதலாழ்வார் மூவரும் தோன்றிப் பத்தி இலக்கிய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டனர். 7,8,9 – ஆம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கம் பேரலையெனப் பரவியதை வரலாற்றின் வழி அறியலாம். இருப்பினும் பக்தி இயக்ககாலம் எனச் சிறப்பாகச் சுட்டுவது கி.பி.7,8,9 – ஆம் நூற்றாண்டு ஆகும். இது பல்லவர் காலமாகும்.

ஆழ்வார்கள் திருமால் மேல் பேரன்பு கொண்டவர்கள். தமிழை மிகவும் நேசிப்பவர்கள். தமிழால் மனிதரைப் பாடுவதைக் காட்டிலும் திருமாலைப் பாடுவதே சிறப்பு என்ற சிந்தனையினை நம்மாழ்வார் தாம் வாழ்ந்த காலத்தில் கூறிய கருத்து இவண் கருதத்தக்கதாகும்.

என் நாவிலிருந்து பிறக்கும் இனிய கவிதையை யான் அவ்வாறு வேறு ஒருவர்க்காக அவருடைய புகழைப் பாடுவதற்காகக் கொடுக்க மாட்டேன். திருவேங்கடமலையில் உள்ள என் அப்பன் எம்பெருமான் இருக்கும்போது, அவன் புகழைப் பாடாமல் வேறு ஒருவர்க்கு என் கவிதைத் திறமையைப் பயன்படுத்த மாட்டேன்" என்று கூறுவார்.

"சொன்னால் விரோதம் இது ஆகிலும்சொல்லுவேன் கேண்மினோ
என்நாவில் இன்கவியான ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா, தெனா என்று வண்டு முரல் திருவேங்கடத்து
என் ஆணை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே"

என்று பாடுகிறார்.

**2. ஆழ்வார் பாடல்களின் தொகுப்புகள் யாவை ?**

ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகத் தொகுக்கப்பெற்றது. ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்துத் தந்தவர் நாதமுனி ஆவார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | - | முதல் திருவந்தாதி |
| 2. | பூதத்தாழ்வார் | - | இரண்டாம் திருவந்தாதி |
| 3. | பேயாழ்வார் | - | மூன்றாம் திருவந்தாதி |
| 4. | திருமழிசையாழ்வார் | - | நான்காம் திருவந்தாதி,<br>திருச்சந்த விருத்தம் |
| 5. | நம்மாழ்வார் | - | திருவிருத்தம்<br>திருவாசிரியம்<br>பெரிய திருவந்தாதி<br>திருவாய்மொழி |
| 6. | மதுரகவியாழ்வார் | - | கண்ணிநுண் சிறுத்தாம்பு |
| 7. | பெரியாழ்வார் | - | திருப்பல்லாண்டு<br>பெரியாழ்வார் திருமொழி |
| 8. | ஆண்டாள் | - | திருப்பாவை<br>நாச்சியார் திருமொழி |
| 9. | திருமங்கையாழ்வார் | - | பெரிய திருமொழி,<br>திருக்குறுந்தாண்டகம்,<br>திருநெடுந்தாண்டகம்,<br>சிறிய திருமடல்,<br>பெரிய திருமடல் |
| 10. | தொண்டரடிப் பொடியாழ்வார் | - | திருமாலை<br>திருப்பள்ளி எழுச்சி |
| 11. | திருப்பாணாழ்வார் | - | அமலனாதிபிரான் |
| 12. | குலசேகர ஆழ்வார் | - | பெருமாள் திருமொழி |

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. ஆழ்வார்களின் இலக்கியத் தொண்டு பற்றி எழுதுக.**

விடை : 6.1.2 பகுதியை எழுத வேண்டும்.

**பயிற்சி வினா :**

**1. பெரியாழ்வாரின் நூல்கள் யாவை ?**

**2. திருப்பள்ளி எழுச்சி பாடிய ஆழ்வார் யார் ?**

**3. பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைக்கு முன்னோடி எனப் புகழப்படும் ஆழ்வார் யார் ?**

# பிரிவு 2 -கூறு 6.2 : பன்னிரு திருமுறைகள்

சைவ நூல்களைப் பிற்காலத்தில் நம்பியாண்டார் நம்பி தொகுத்துப் பன்னிரு திருமுறைகளாக வகுத்துக் கொடுத்தார். நாயன்மார்கள் அறுபத்து மூவர்களுள் பாடியும், பரவியும் சைவத் தொண்டாற்றிய திருஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்கள் தேவாரம் எனப் போற்றப் பெறுகின்றன.

தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. தே- கடவுள், வாரம் - அன்பு இறைவனை அன்பினால் ஏத்தும் பாடல் என்றும் இறைவனை வாரம் என்னும் செய்யுளியக்கத்தால் இசையோடு பாடுவது என்றும் பொருள்படும். இதனை, தே+ஆரம் எனப் பிரித்துத் தெய்வத்திற்காகிய பாமாலை எனவும் விளக்குவர். தேவாரத்தில்தான் விருத்தப் பாக்கள் பெரிதும் எடுத்தாளப் பெற்றுள்ளன. இசைத் தமிழுக்கு ஆக்கம் தருவதும் தேவாரம் ஆகும்.

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியவை. நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியவை. ஏழாம் திருமுறை சுந்தரர் அருளியவை. இவை ஏழும் “அடங்கன் முறை” எனப்படும்.

சைவ உலகில் பெரிதும் போற்றப்படும் மாணிக்கவாசகர் எழுதிய நூல்கள் இரண்டு. அவை திருவாசகம், திருக்கோவையார் என்பன. சிவபெருமானைப் பற்றிய பக்திப் பாடல்களே திருவாசகம் எனப்படும். ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது எனத் திருவாசகத்தை வள்ளலார் பாராட்டுகிறார். இவை எட்டாம் திருமுறையாகப் பகுக்கப் பெற்றுள்ளன.

ஒன்பதாம் திருமுறை ஒன்பதின்மர் பாடியவை. திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி நம்பி, காடவர் நம்பி,திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த்தேவர், வேணாட்டடிகள் என்பவர் ஒன்பதின்மர் ஆவர். திருமாளிகைத் தேவர் இறைவன் வழிபாட்டையும் கருவூர்த் தேவர் இறைவி வழிபாட்டையும் சிறப்பாக மேற்கொண்டனர். கருவூர்த் தேவர் கருவூர்சித்தர் என்றும் அழைக்கப்படுவர். கண்டராதித்தர் தில்லைக்கு மாத்திரமே பதிகம் பாடியவர். வேணாட்டடிகள் தென்திருவாம்பூரினர். இவர் தில்லைக்கு ஒரு திருவிசைப்பாப் பாடியுள்ளார்.

திரு ஆவி என்னும் ஊரில் பிறந்த அமுதனார் பாடிய பதிகங்கள் நான்கு; புருடோத்தம நம்பி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். இவர் நம்பியாண்டார் நம்பிக்கு முந்தியவர் என்று கூறுவர். சேதிராயர் திருக்கோவிலூருக்கு அருகில் உள்ள மெய்ப்பொருள் நாயனாரின் சேதுநாட்டு மன்னர் மரபினர். தில்லைப் பெருமான் குறித்து ஒரு பதிகம் மட்டும் பாடியுள்ளார்.

பத்தாம் திருமுறை திருமூலரின் திருமந்திரம் ஆகும். இவர் அப்பர் சம்பந்தருக்கு முற்பட்ட காலத்தவர் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். திருமந்திரம் திருமூலர் என்னும் சித்தரால் இயற்றப் பெற்றது என்று பெரியபுராணம் சுட்டுகின்றது. பதினோராம் திருமுறை பன்னிருவர் பாடியவை. திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார். நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம்பெருமானடிகள் அதிராடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் ஆவர். பதினோராம் திருமுறையில் 40 நூல்களும் 1400 பாக்களும் உள்ளன. இதற்குப்“பிரபந்த மாலை” என்ற பெயரும் உண்டு.

பதினோராம் திருமுறை பாடியவர்களில் சிலர் சோழர் காலத்தினர். மற்றும் சிலர் சோழர் காலத்திற்கும் முற்பட்டவர். மேற்குறித்த பதினொரு திருமுறைகளும் நம்பியாண்டார் நம்பி தொகுத்தவை. பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் ஆகும்.

## 6.2.1 பன்னிரு திருமுறைகள்

| | | |
|---|---|---|
| 1,2,3 திருமுறைகள் | - | திருஞான சம்பந்தர் பாடியவை |
| 4,5,6 திருமுறைகள் | - | திருநாவுக்கரசர் பாடியவை |
| 7-ஆம் திருமுறை | - | சுந்தரர் பாடியவை |
| 8-ஆம் திருமுறை | - | மாணிக்கவாசகர் பாடியவை |
| 9-ஆம் திருமுறை | - | ஒன்பதின்மர் பாடியவை (திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி காடவநம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த்தேவர், வேணாட்டடிகள்) |
| 10-ஆம் திருமுறை | - | திருமூலரின் திருமந்திரம் |
| 11-ஆம் திருமுறை | - | பன்னிருவர் பாடியவை (திருவாலவாயுடையார், காரைக் காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார்,நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம் பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி) |
| 12-ஆம் திருமுறை | - | சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் |

## 6.2.2 திருஞானசம்பந்தர்

இவர் சோழநாட்டின் சீர்காழிப் பகுதியில் அந்தணர் குலத்தில் சித்திரைத் திருவாதிரை நாளில் சிவபாத இருதயர் – பகவதி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் பதினாறு ஆண்டுகள் ஆகும். இவர்தம் மூன்றாம் வயதிலேயே சிவபெருமான் உமையம்மையோடு விடையின் மேல் எழுந்தருளி ஞானப்பால் ஊட்டினார்,

அதனால் ஞானம் பெற்று ஞானசம்பந்தர் என்று அழைக்கப்பெற்றார். “ஆளுடையபிள்ளை” என்பது இவருடைய இயற்பெயராகும்.



சைவக்கொடியை உயர்த்தித் தமிழ்நாடெங்கும் இருந்த சமண பௌத்தர்களை வென்றவர் சம்பந்தர். இவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் 1,60,000 என்பர். இன்று கிடைப்பன 4,168 பாடல்களே. மூவேந்தர் ஆண்ட நாட்டிலும், தொண்டை நாட்டிலும் பதிகங்கள் பல பாடியுள்ளார். இவர் பாடிய பதிகங்கள் முதல் மூன்று திருமுறையாகப் பகுக்கப்பெற்றுள்ளன. இவர்தம் பதிகங்கள் ஒவ்வொரு தலத்தின் இயற்கை அழகையும், கற்பனைச் சுவையையும் நிரம்பக் காட்டுகின்றன. பதிகம் பாடுவோர் சுவைத்து இன்புறும் வகையில் பாக்கள் அமைந்துள்ளன. அகப்பொருள் அழகு பொருந்திய நாயக நாயகி பாவத்துடன் கூடிய நிலையில் தம்மைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடல்கள் இயற்றியுள்ளார்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றின் எட்டாம் பாடல் இராவணனின் இசைக்கு உருகி இறைவன் அவனுக்கு அருள் செய்தான் என்றும், ஒன்பதாம் பாடல் பிரமனும் திருமாலும் காணவியலாத அடிமுடியைக் கொண்ட சிவபெருமான் பற்றியும் எடுத்துரைக்கின்றன. பத்தாம் பாடலில் சமண பௌத்தத் துறவிகளின் போலி வாழ்க்கையைச் சாடுகின்றார்.

நல்லவர்க்கு இல்லை நாளும் கோளும் எனக் கூறிக் கோளறு பதிகம் என்றொரு பதிகம் பாடினார்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொதுவாக, சம்பந்தரின் பனுவல்கள் சிவநாம ஈடுபாட்டைக் காட்டுவன. இவர் பக்தி இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்பவர். கிரியை என்னும் சத்புத்ர மார்க்கத்தினர். இவருடைய பாடல்களில் சாதிவேறுபாடு, தீண்டாமை, மூடநம்பிக்கை போன்றவற்றிற்கு இடமில்லை.

இவரை “திராவிடசிசு” என்று ஆதிசங்கரர் அழைப்பர். பெரியபுராணம் “ஞானத்தின் திருஉரு”, நான்மறையின் தனித்துணை என்று போற்றுகின்றது. இவர் தம் பாடல்களில் காணப்பெறும் தெளிவும் அஞ்சாமையும் கண்டு, பிற்காலச் சான்றோர் பலர் இவரை முருகன் அவதாரம் எனப் போற்றிப் பாடியுள்ளார்.

### 6.2.3 திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடியைச் சார்ந்த திருவாமூரில் வேளாண்குடியில் புகழனாருக்கும் மாதினியார்க்கும் மகவாகப் பிறந்தவர். இவர் இயற்பெயர் மருணீக்கியார் என்பதாகும். சம்பந்தரின் காலத்தினர் ஆதலால் கி.பி. ஏழாம் நூற்றாண்டினர் ஆவர். இவர் முதலில் சமணத்தைத் தழுவிப் பின்னர் சைவ சமயத் துறவியானவர்.

இவர்தம் சொல்வன்மையால் நாவுக்கரசர், வாகீசர் என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றார். சமணத்தைத் தழுவிய நிலையில் "தருமசேனர்" எனப் பெயர் கண்டார். நீண்ட நாள் வாழ்ந்த முதுமையையும் பெருமையையும் கருதி இவர் "அப்பர்" என்றழைக்கப்பட்டார். திருத்தாண்டகச் செய்யுளில் பாடல்களைப் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தமையால் தாண்டகவேந்தர் எனப் போற்றப் பெற்றார். தாண்டகத்தில் அமைந்துள்ள பாடல்கள் இசையில் நெகிழ்ச்சியை உண்டாக்க வல்லவை. உள்ளத்தை உருக்கும் திறம் பெற்றவை.

அப்பர் சமண சமயத்தைத் தழுவிய நிலையில் இவருடைய தமக்கையார் திலகவதியாரின் சைவப்பற்றால் சிவனின் திருநீறு பெற்றுச் சைவத்தைத் தழுவினார். தம்மை சூலைநோயில் இருந்து ஆட்கொண்ட திருவீரட்டானத் திருக்கோயில் சிவனை வணங்கி முற்பதிகத்தை அப்பெருமான் மீது பாடினார்.

கூற்றாயின வாறு விலக்ககலீர்
    கொடுமை பலசெய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
    பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
    குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
    வீரட்டானத்துறை அம்மானே

சைவநெறியைப் பின்பற்றிய நாவுக்கரசரைச் சமணர்கள் பலவாறு துன்புறுத்தினர். சுண்ணாம்பு நீற்றறையில் இட்டுத் துன்புறுத்தினர்; அப்பொழுது அவர்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று பாடினார். மகேந்திரப் பல்லவன் மனம் மாறிச் சைவநெறியைத் தழுவினான். சிவ தலங்கள் தோறும் சென்று பதிகம் பல இயற்றி, உழவாரப் படைகொண்டு தொண்டாற்றினார்.

இவர் பாடிய பதிகங்கள் 4900 என்று திருமுறைகண்ட புராணத்தால் அறியப் பெறுகின்றது. எனினும் இன்று கிடைப்பன 312 பதிகங்கள் 3066 பாடல்கள். இவை 4,5,6-ஆம் திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன.

## 6.2.4 சுந்தரர்

இவர் திருநாவலூரில் சைவ அந்தணமரபில் சடையனார் இசைஞானியாருக்குப் பிறந்தவர். நம்பியாரூரர் எனப் போற்றப்படுபவர். இறைவனால் வலிந்து ஆட்கொள்ளப் பெற்றமையால் வன்தொண்டர் என்றும் அழைக்கப்பெற்றார். தோற்றப் பொலிவில் திருக்கைலையிலே ஆலால சுந்தரராய் இருந்தமையால் “சுந்தரர்” எனப்பட்டார். தில்லைத் தரிசனத்தில் “தம்பிரான் தோழனானார்”; பெரிய புராணத்தின் காப்பியத் தலைவராக விளங்கும் பேற்றினைப் பெற்றவர்.

இவர் பாடிய “திருத்தொண்டர் தொகை” பெரியபுராணத்திற்கு அடிப்படையாக அமைந்தது. சுந்தரர் பாடிய பதிகங்களாகச் சுட்டப்பெறுவன 3800 ஆகும். அதில் இப்போது கிடைப்பன 1026 பாடல்கள். 18 பண்களில் இயன்றவை. பன்னிரு திருமுறைகளில் இவர்தம் பாடல்கள் 7-ஆம் திருமுறையாக அமைந்துள்ளன.

சுந்தரர் சங்கலியார், பரவையார் என இருவரைத் திருமணம் புரிந்தவர். இல்லற வாழ்வில் இருந்து இறைவனின் அருளால் திருவெண்ணெய் நல்லூர்ப் பகுதியில் ஆட்கொள்ளப்பட்டவர். அவ்வூரில் இறைவனைப் “பித்தா பிறைசூடி” எனத் தொடங்கிப் பாடினார்.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே.

## 6.2.5 மாணிக்கவாசகர்

திருவாதவூரர் என்பது இவருடைய இயற்பெயர். மதுரை நாட்டுத் திருவாதவூரில் சைவ அந்தணர் மரபில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இவர் அரிமர்த்தன பாண்டியன் அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். “தென்னவன் பிரம்மராயன்” என்ற பட்டத்தை அரசனிடம் பெற்றவர்.

இவர் பாடிய சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக 659 பாடல்கள் ஐம்பத்தொரு தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன. தேனூறும் வாசகங்கள் திருவாசகமாகத் திகழ்கின்றது. “திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது திருவாசகத்தின் மெய்ம்மையை விளக்கும்.

### திருவாசகம்

திருவாசகத்தின் சிறப்பினை வள்ளலார் ஊன் கலந்து உவட்டாமல் இனிப்பது எனப் போற்றுகின்றார். திருவாசகம் கருங்கல் மனத்தையும்

கரையச் செய்து உருகச் செய்யும் என்பது நால்வர் நான்மணிமாலைக் கூற்றாகும்.

திருவாசகம் தமிழ் மக்களை மட்டுமின்றிப் பிற மொழியாளர்களையும் கவர்ந்தது. ஜி.யு.போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதற்கு, பத்துக்கும் மேற்பட்டோர் உரை வகுத்துள்ளனர்.

### திருக்கோவையார்

மாணிக்கவாசகர் இயற்றிய நூல்களில் திருக்கோவையாரும் குறிப்பிடத்தக்கது.

## 6.2.6 திருமூலர்

திருக்குறள் போன்று திருமந்திரம் ஓர் ஒப்பற்ற நூலாகும். மந்திரம் போல் சொற்செறிவும், பொருள் நுட்பமும் உடைய பாடல்கள் இந்நூலின்கண் உள்ளதால் இதனைத் "திருமந்திரம்" என்பர். "தமிழ் மூவாயிரம்""திருமந்திரமாலை" எனவும் அழைக்கப்பெறுகிறது. இந்நூல் பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப் பெறுகின்றது. இந்நூல் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. பாயிரம் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டுள்ளது. அதில் திருமூலர் வரலாறும் சுட்டப்பெறுகின்றது.

பக்தியின் சிறப்பை உணர்த்துமிடத்துத் திருமூலர் "அன்பும் சிவமும் இரண்டு பொருள் அல்ல; அன்பே சிவம்" என்பதை உணர்ந்தவர் சிலரே. அவர்கள் ஞானிகள். அவர்கள்தான் கடவுள்தன்மை பெற்றவர்கள் என்கிறார்.

"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

கடவுளுக்கு அன்பு செலுத்துவது மட்டுமல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் அன்பையும் திருமந்திரம் உணர்த்தி நிற்கின்றது. கோயிலில் உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால் நடமாடும் கோயில்களாக உள்ள உயிர்களிடத்தில் அமைந்துள்ள கடவுளுக்கு அது பயன்படுவதில்லை. நடமாடும் உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு ஒன்று தருவதால் கோயிலில்உள்ள கடவுளுக்கும் அது சென்று சேரும்.

"படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. தேவாரம் எனப் பெயர் பெறும் பாடல்கள் யாவை ?**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படுகின்றன.

**2. வள்ளலார் திருவாசகத்தை எவ்வாறு பாராட்டுகிறார் ?**

ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பது திருவாசகம் என்று வள்ளலார் பாராட்டுகிறார்.

**3. பத்தாம் திருமுறை எனப்படும் நூல் எது ?**

பத்தாம் திருமுறை எனப்படும் நூல் திருமந்திரம் ஆகும்.

**4. ஆளுடைய பிள்ளை என்று அழைக்கப்பெறுபவர் யார் ?**

ஆளுடைய பிள்ளை என்று அழைக்கப்பெறுபவர் திருஞானசம்பந்தர்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. மாணிக்கவாசகரின் பெருமையை விளக்குக.**

திருவாதவூரர் என்பது இவருடைய இயற்பெயர். மதுரை நாட்டுத் திருவாதவூரில் சைவ அந்தணர் மரபில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இவர் அரிமர்த்தன பாண்டியன் அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். “தென்னவன் பிரம்மராயன்” என்ற பட்டத்தை அரசனிடம் பெற்றவர்.

இவர் பாடிய சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக 659 பாடல்கள் ஐம்பத்தொரு தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன. தேனூறும் வாசகங்கள் திருவாசகமாகத் திகழ்கின்றது. “திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது திருவாசகத்தின் மெய்ம்மையை விளக்கும்.

**திருவாசகம்**

திருவாசகத்தின் சிறப்பினை வள்ளலார் ஊன் கலந்து உவட்டாமல் இனிப்பது எனப் போற்றுகின்றார். திருவாசகம் கருங்கல் மனத்தையும் கரையச் செய்து உருகச் செய்யும் என்பது நால்வர் நான்மணிமாலைக் கூற்றாகும்.

திருவாசகம் தமிழ் மக்களை மட்டுமின்றிப் பிற மொழியாளர்களையும் கவர்ந்தது. ஜி.யு.போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதற்கு, பத்துக்கும் மேற்பட்டோர் உரை வகுத்துள்ளனர்.

**திருக்கோவையார்**

மாணிக்கவாசகர் இயற்றிய நூல்களில் திருக்கோவையாரும் குறிப்பிடத்தக்கது.

**2. திருமந்திரம் பற்றிக் குறிப்பு வரைக.**

திருக்குறள் போன்று திருமந்திரம் ஓர் ஒப்பற்ற நூலாகும். மந்திரம் போல் சொற்செறிவும், பொருள் நுட்பமும் உடைய பாடல்கள் இந்நூலின்கண் உள்ளதால் இதனைத் “திருமந்திரம்” என்பர். “தமிழ் மூவாயிரம்”“திருமந்திரமாலை” எனவும் அழைக்கப்பெறுகிறது. இந்நூல் பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப் பெறுகின்றது. இந்நூல் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. பாயிரம் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டுள்ளது. அதில் திருமூலர் வரலாறும் சுட்டப்பெறுகின்றது.

பக்தியின் சிறப்பை உணர்த்துமிடத்துத் திருமூலர் “அன்பும் சிவமும் இரண்டு பொருள் அல்ல; அன்பே சிவம்” என்பதை உணர்ந்தவர் சிலரே. அவர்கள் ஞானிகள். அவர்கள்தான் கடவுள்தன்மை பெற்றவர்கள் என்கிறார்.

“அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”

கடவுளுக்கு அன்பு செலுத்துவது மட்டுமல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் அன்பையும் திருமந்திரம் உணர்த்தி நிற்கின்றது. கோயிலில் உள்ள கடவுளுக்கு ஒன்று தந்தால் நடமாடும் கோயில்களாக உள்ள உயிர்களிடத்தில் அமைந்துள்ள கடவுளுக்கு அது பயன்படுவதில்லை. நடமாடும் உயிர்களிடத்தில் உள்ள கடவுளுக்கு ஒன்று தருவதால் கோயிலில் உள்ள கடவுளுக்கும் அது சென்று சேரும்.

“படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே”

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. மூவர் தேவாரம் பற்றி விளக்குக.**

விடை : 6.2.2, 6.2.3, 6.2.4 ஆகிய பகுதிகளை எழுத வேண்டும்.

**பயிற்சி வினா:**

**1. ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்ற பாடல்களைப் பாடியவர்கள் யார் ?**

**2. பன்னிரண்டாம் திருமுறை எனப்படும் நூல் எது? ஆசிரியர் யார் ?**

**3. நாவுக்கரசருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?**

**4. தம்பிரான் தோழர் எனப்படுபவர் யார் ?**

# பிரிவு 2 - கூறு 7 : காரைக்காலம்மையார்

## 7.1 காரைக்காலம்மையார்

இவர் சைவ சமயப் பெண் அடியார்களுள் குறிப்பிடத்தக்கவர். புனிதவதியார் என்பது இவர்தம் இயற்பெயர். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அம்மையார் காரைக்கால் எனும் ஊரில் ஒரு வணிகருக்கு மனைவியாய் இல்லறம் நடத்தி வந்தார். சிவபக்தி நிறைந்த அடியாரின் தெய்வீகத் தன்மையைக் கண்ட கணவர் இவரைவிட்டுப் பிரிந்தார். இல்லற வாழ்வைத் துறந்து அம்மையார் சமய வளர்ச்சியின் பொருட்டுத் துறவு பூண்டார். சிவநெறியில் திகழ்ந்து பேய் வடிவம் பெற்றார்.

சிவதலங்கள் பல சென்று சிவனின் மீது பாக்கள் பல இயற்றினார். கயிலை சென்று சிவபெருமானால் "அம்மையே" என்று அழைக்கும் பேற்றினைப் பெற்றார். இவ்வம்மையார் சிவபெருமானைப் பாடி உருகித் தலைகீழாக நடந்து சென்று "திருவாலங்காடு" என்னும் ஊரினை அடைந்தார். அங்கு ஆடல்வல்லான் சிவனின் அடிக்கீழ் என்றுமிருக்கும் வரம் பெற்று முக்தி பெற்றார்.

இவர் பாடிய பக்திப் பாடல்கள்,"அற்புதத் திருவந்தாதி","திருஇரட்டைமணிமாலை","மூத்த திருப்பதிகம்" என மூன்று நூல்களாக அமைந்துள்ளன. இவர்தம் நூல்கள் சைவ சமயப் பக்திப் பாடல்களுள் மிகப் பழமையானவை. அவை ஞானமும் அருளும் நிரம்பிய பாடல்களாக இன்றும் போற்றப்பெற்று வருகின்றன.

## 7.2 திருமுறைகண்ட வரலாறு

திருமுறைகள் என்ற சொல் பன்னிரு திருமுறைகளையே குறிக்கும். பன்னிரு திருமுறைகளை ஒழுங்கு செய்து வரிசைப்படுத்தி முறையாக வழங்கி இருப்பவர் நம்பியாண்டார் நம்பி. அவர் முதலாம் இராஜ ராஜ சோழன், முதல் இராஜேந்திர சோழன் இருவருக்கும் சமகாலத்தவராக இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் நம்பியாண்டார் நம்பியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார்.

சுருக்கமான அந்தப் புராணத்தில் கற்பனைக் கதைகள் பல உள்ளன. இருப்பினும், நம்பிக்கையிலும் அவருடைய பின்னோர்கள் கையிலும் திருமுறைகள் உருவான முறையைப்பற்றி ஓரளவு சொல்லப் பெற்றிருக்கிறது. இராஜராஜன் ஆட்சிக் காலத்திற்குப் பிந்தியவர்களான நம்பியின் செய்யுட்களும் கருவூர்த் தேவர் முதலிய சிலருடைய பாடல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும், நம்பியாண்டார் நம்பி காலத்தவரான சோழ அரசனுக்கு "அபயன்""குலசேகரன்" என்ற பட்டங்களை உமாபதி கொடுத்திருப்பதும் இவ்வாறு கருதுவதற்குக் காரணங்கள் ஆகும்.

நம்பியாண்டார் நம்பி காலத்திலேயே பாசுரங்கள் முழுவதும் திரட்டிச் சேகரிப்பதற்குச் சிரமங்கள் பல இருந்தன. சான்று, திருவிடைவாயிலைப் பற்றிய ஞானசம்பந்தர் தேவாரம் திருமுறைகளில் சேர்க்கப்பெறவில்லை. அது ஒரு கல்வெட்டிலிருந்து பத்திரமாகக் கிடைக்கின்றது. பாசுரங்கள் எழுதப் பெற்றிருந்த ஓலைச் சுவடிகளின் பெரும்பகுதி கரையான் அரித்து அழிந்துவிட்டதாகவும் ஒரு கதை வழங்குகின்றது.

கோயில்களில் திருப்பதிகம் பாடும்முறை இராஜராஜன் சோழன் காலத்திற்கு முன்பே இருந்திருக்கிறது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன.

சைவத் திருமுறைகளைத் தொகுத்து வரிசைப்படுத்திய நம்பியாண்டார் நம்பி காலம் பத்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது பதினோராம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம். உமாபதி சிவாச்சாரியார் திருமுறை கண்ட புராணத்தில் திருமுறைகளைப் பத்து நூல்களாக வரிசைப்படுத்தியதாகக் கூறியுள்ளார்.

இப்பத்து நூல்களில் முதல் மூன்று 384 பதிகங்களைக் கொண்டது. நான்கு ஐந்து ஆறாம் நூல்களில் திருநாவுக்கரசரின் 307 பதிகங்கள் உள்ளன. எட்டாவது மணிவாசகரின் திருவாசகம். ஒன்பதாவது பத்தாவது நூல்கள், ஒன்பது ஆசிரியர்களால் எழுதப்பெற்ற திருவிசைப்பாக்களும், திருமூலர் திருமந்திரமும் சேர்ந்தன. சித்தி பெறுவதற்கு உதவும் பாசுரம் ஒன்றைச் சிவபெருமானே அருளியிருப்பதாகவும் அதையும் எஞ்சியுள்ள பதிகங்களையும் பதினோராம் திருமுறையாகத் தொகுக்கும்படி அரசன் நம்பியாண்டார் நம்பியைக் கேட்டுக் கொண்டதாகச் செய்தி உண்டு. இவ்வாறு நம்பி பதினோராம் திருமுறையை உருவாக்கினார். இதில் நம்பியின் பாடல்கள் சிலவும், அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களுள் சிலர் உட்படப் பன்னிரண்டு ஆசிரியர்களின் நூல்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக வைத்து எண்ணப் பெறுகின்றது. நூல்களின் அமைப்பு முறை, கால வரிசைப்படியாக இல்லை என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

திருமுறைத் தொகுப்புப் பணியில் நம்பியாண்டார் நம்பியின் பணி குறிக்கத்தக்கதாகும். இவர் தில்லைக்கு அருகில் திருநாரையூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். ஆதி சைவ அந்தணர். இவர் இராஜராஜன் வேண்டுகோளுக்கு ஏற்பத் தில்லையில் மூவர் தேவாரத்தைக் கண்டெடுத்துப் பின்பு எழுந்தவற்றையும் சேர்த்துப் பதினோரு திருமுறைகள் வகுத்தார். இவர் இயற்றிய ஒன்பது நூல்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளன. அவை யாவன, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஏகாதசமாலை, ஆளுடைய பிள்ளையார், திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலா மாலை. திருக்கலம்பகம், திருத்தொகை ஆகியன. இவரைத் தமிழ் வியாசர் என்று சிறப்பிப்பர்.

## 7.3 பாட்டியல் இலக்கண நூல்கள்

"பாட்டியல்" என்றால் பாட்டின் இலக்கணம் என்பது பொருளாகும். பத்துவகை முதற் சீர்ப் பொருத்தத்தையும், செய்யுள் இலக்கண மரபுகளையும் இலக்கிய நூல்களின் இயல்புகளையும் பெரும்பான்மையான பாட்டியல் நூல்கள் எடுத்துரைக்கின்றன. எனினும் இலக்கிய வகைகளின் இயல்புகளை இப்பாட்டியல் நூல்கள் சிறப்பாக விரித்துரைக்கின்றன. அம்முறையில் இலக்கியப் பாகுபாடுகளை வகைப்படுத்தி அறிவதற்குப் பாட்டியல் நூல்கள் நன்கு பயன்படுகின்றன.

### 7.3.1 பன்னிருபாட்டியல்

பாட்டியல் நூல்களுள் பழமையாகக் கருதப்பெறுவது பன்னிரு பாட்டியலாகும். இந்நூல் 358 நூற்பாக்களைக் கொண்டது. இந்நூல்களில் இடம்பெற்ற ஆசிரியர் – அகத்தியர், அவிநயனார், இந்திரகாளியார், கபிலர், கல்லாடனார், கையனார், கோவூர்கிழார், சீத்தலைச் சாத்தனார், சேந்தம்பூதனார், பரணர், பல்காப்பியனார், பெருங்குன்றூர் கிழார், மாபூதனார் என்னும் பதின்மூவர் ஆவர்.

### 7.3.2 பிற்காலப் பாட்டியல் நூல்கள்

குணவீரபண்டிதரால் எழுதப்பெற்ற வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் சிறப்பானதாகக் கருதப் பெறுகிறது. இந்நூல், 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 13-ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்த நூலாகும்.

நவநீதருடர் இயற்றிய நவநீதப் பாட்டியல் கி.பி.14-ஆம் நூற்றாண்டினது ஆகும். புராணத் திருமலைநாதர் குமாரர் பரஞ்சோதி முனிவரால் சிதம்பரப் பாட்டியல் 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகும். இலக்கண விளக்கம் குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்பெறும். வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பெற்ற நூல். இந்நூலில் பாட்டியல் பகுதி உள்ளது. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற பகுதி யாப்பதிகாரத்தின் பகுதியாகத் தனிச் செய்யுள்களின் இலக்கணம் உணர்த்தியதோடு, இலக்கிய மரபுகளையும் தொகுத்துத் தந்துள்ளார். பிரபந்தத் திரட்டு, பிரபந்தமரபியல், பிரபந்த தீபிகை என்னும் நூல்களும் இலக்கியப் பாகுபாடுகளை விளக்கக்கூடிய பாட்டியல் நூல்களாகும்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. சிவபெருமான் 'அம்மையே' என்று யாரை அழைத்தார் ?**

சிவபெருமான் காரைக்காலம்மையாரை அம்மையே என்று அழைத்தார்.

**2. காரைக்காலம்மையார் எழுதிய நூல்கள் யாவை ?**

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் என்பன காரைக்கால் அம்மையார் எழுதிய நூல்கள் ஆகும்.

**3. திருமுறைகளைத் தொகுத்தவர் யார் ?**

திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.

**4. குட்டித் தொல்காப்பியம் எனப்படும் நூல் எது ?**

இலக்கண விளக்கம் என்னும் நூல் குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்பெறுகிறது.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. காரைக்காலம்மையார் பற்றிக் குறிப்பு வரைக.**

இவர் சைவ சமயப் பெண் அடியார்களுள் குறிப்பிடத்தக்கவர். புனிதவதியார் என்பது இவர்தம் இயற்பெயர். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அம்மையார் காரைக்கால் எனும் ஊரில் ஒரு வணிகருக்கு மனைவியாய் இல்லறம் நடத்தி வந்தார். சிவபக்தி நிறைந்த அடியாரின் தெய்வீகத் தன்மையைக் கண்ட கணவர் இவரைவிட்டுப் பிரிந்தார். இல்லற வாழ்வைத் துறந்து அம்மையார் சமய வளர்ச்சியின் பொருட்டுத் துறவு பூண்டார். சிவநெறியில் திகழ்ந்து பேய் வடிவம் பெற்றார்.

சிவதலங்கள் பல சென்று சிவனின் மீது பாக்கள் பல இயற்றினார். கயிலை சென்று சிவபெருமானால் "அம்மையே" என்று அழைக்கும் பேற்றினைப் பெற்றார். இவ்வம்மையார் சிவபெருமானைப் பாடி உருகித் தலைகீழாக நடந்து சென்று "திருவாலங்காடு" என்னும் ஊரினை அடைந்தார். அங்கு ஆடல்வல்லான் சிவனின் அடிக்கீழ் என்றுமிருக்கும் வரம் பெற்று முக்தி பெற்றார்.

இவர் பாடிய பக்திப் பாடல்கள்,"அற்புதத் திருவந்தாதி","திருஇரட்டைமணிமாலை","மூத்த திருப்பதிகம்" என மூன்று நூல்களாக அமைந்துள்ளன. இவர்தம் நூல்கள் சைவ சமயப் பக்திப் பாடல்களுள் மிகப் பழமையானவை. அவை ஞானமும் அருளும் நிரம்பிய பாடல்களாக இன்றும் போற்றப்பெற்று வருகின்றன.

**2. பாட்டியல் நூல்கள் பற்றி எழுதுக.**

"பாட்டியல்" என்றால் பாட்டின் இலக்கணம் என்பது பொருளாகும். பத்துவகை முதற் சீர்ப் பொருத்தத்தையும், செய்யுள் இலக்கண மரபுகளையும் இலக்கிய நூல்களின் இயல்புகளையும் பெரும்பான்மையான பாட்டியல் நூல்கள் எடுத்துரைக்கின்றன. எனினும் இலக்கிய வகைகளின் இயல்புகளை இப்பாட்டியல் நூல்கள் சிறப்பாக விரித்துரைக்கின்றன. அம்முறையில் இலக்கியப் பாகுபாடுகளை வகைப்படுத்தி அறிவதற்குப் பாட்டியல் நூல்கள் நன்கு பயன்படுகின்றன.

**பன்னிருபாட்டியல்**

பாட்டியல் நூல்களுள் பழமையாகக் கருதப்பெறுவது பன்னிரு பாட்டியலாகும். இந்நூல் 358 நூற்பாக்களைக் கொண்டது. இந்நூல்களில் இடம்பெற்ற ஆசிரியர் – அகத்தியர், அவிநயனார், இந்திரகாளியார், கபிலர், கல்லாடனார், கையனார், கோவூர்கிழார், சீத்தலைச் சாத்தனார், சேந்தம்பூதனார், பரணர், பல்காப்பியனார், பெருங்குன்றூர் கிழார், மாபூதனார் என்னும் பதின்மூவர் ஆவர்.

**பிற்காலப் பாட்டியல் நூல்கள்**

குணவீரபண்டிதரால் எழுதப்பெற்ற வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் சிறப்பானதாகக் கருதப் பெறுகிறது. இந்நூல், 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 13-ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்த நூலாகும்.

நவநீதருடர் இயற்றிய நவநீதப் பாட்டியல் கி.பி.14-ஆம் நூற்றாண்டினது ஆகும். புராணத் திருமலைநாதர் குமாரர் பரஞ்சோதி முனிவரால் சிதம்பரப் பாட்டியல் 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகும். இலக்கண விளக்கம் குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்பெறும். வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பெற்ற நூல். இந்நூலில் பாட்டியல் பகுதி உள்ளது. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற பகுதி யாப்பதிகாரத்தின் பகுதியாகத் தனிச் செய்யுள்களின் இலக்கணம் உணர்த்தியதோடு, இலக்கிய மரபுகளையும் தொகுத்துத் தந்துள்ளார். பிரபந்தத் திரட்டு, பிரபந்தமரபியல், பிரபந்த தீபிகை என்னும் நூல்களும் இலக்கியப் பாகுபாடுகளை விளக்கக்கூடிய பாட்டியல் நூல்களாகும்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. திருமுறை கண்ட வரலாறு குறித்து எழுதுக.**

விடை : 7.2-ல் உள்ள பகுதியை அப்படியே எழுதுக.

**பயிற்சி வினாக்கள் :**

**1. காரைக்காலம்மையாரின் இயற்பெயர் என்ன ?**

**2. பன்னிரு பாட்டியலில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை எத்தனை ?**

**3. பிரபந்தம் பற்றிக் கூறும் சில பாட்டியல் நூல்களைக் கூறுக.**

**4. தமிழ் வியாசர் எனப்படுபவர் யார் ?**

# பிரிவு 2 - கூறு 8 :

## 8.1 பிள்ளைத்தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்

குறிப்பு

"குழவி மருங்கினும் கிழவதாகும்" என்பது தொல்காப்பியர் சிந்தனையாகும். பிள்ளைத் தமிழுக்குரிய கரு அச்சிந்தனையில் இருப்பதாக அறிஞர்கள் கருதுவார்கள். எனினும், சங்ககாலம் மற்றும் சமயகால இலக்கியங்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்குரிய கூறுகளே காணப்பெறுகின்றன. அதன் தோற்ற வளர்ச்சியினைப் பருவம் வாரியாக ஆராய்ந்து விளக்குவர். பிள்ளைத்தமிழ் இரண்டு வகைப்படும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்பன அவை. முதல் ஏழு பருவங்கள் இரண்டு நூல்களுக்கும் பொதுவானவை.

### 8.1.1 காப்புப்பருவம்

தொல்காப்பியர் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நானிலத் தெய்வங்களை மக்கள் வாழ்த்தி வழிபட்டதாகக் கூறுவர்.

### 8.1.2 தாலாட்டுப் பருவம்

குலசேகர ஆழ்வார் இராமபிரானின் குழந்தைப் பருவத்தைத் தாலேலோ எனத் தாலாட்டுப் பாடித் தம்பாசுரங்களைப் படைத்துள்ளார்.

### 8.1.3 செங்கீரைப் பருவம்

பெரியாழ்வார் யசோதை நிலையில் கண்ணனாகிய குழந்தையைச் செங்கீரையாடுமாறு பாடல்களில் வேண்டுகிறார்.

### 8.1.4 சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம்

பெரியாழ்வார் கண்ணனாகிய குழந்தையைச் சப்பாணி கொட்ட வேண்டிப் பாடல்கள் பாடியுள்ளார். குலசேகர ஆழ்வாரும் திருமாலின் குழந்தைப் பருவத்தில் ஈடுபட்டு அத்தெய்வக் குழந்தையிடம் முத்தம் தருமாறு வேண்டுகிறார்.

### 8.1.5 அம்புலிப்பருவம்

இப்பருவம் சார்ந்த செய்திகள் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் காணப்பெறுவதாகக் கூறுவர். "ஐயனே! திங்களாகிய குழவீர் நீ இவனுடன் விளையாட வருவாயாக என்று சொல். அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ்தல் இனிது" என்னும் கலித்தொகையில் உள்ளது.

### 8.1.6 சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப்பருவங்கள்

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் இவ்வகைப் பருவங்களுக்குப் பாடல்கள் இடம்பெறுவது மரபாகும். இவ்வகைக் கூறுகளுக்குரிய முன்னோடிச் சிந்தனைகள் பண்டை இலக்கியங்களில் உள்ளன. இப்பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உரியவை என்று கருதப்பெறுகின்றன.

### 8.1.7 நீராடல், அம்மானை, ஊசல் - பருவங்கள்(பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உரியவை)

புறநானூற்றில் சிறுவர்கள் நீராடிக் களிப்புறும் செய்தி உள்ளது. தைத் திங்களில் நீராடல் சிறப்புடையது என்கிற கருத்தினைப் பலசங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. பக்தி இலக்கியக் காலத்தில் திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நூல்கள் நீராடலைச் சிறப்பிக்கின்றன.

பருவங்களை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைத் தமிழின் வளர்ச்சியை மேற்கொண்டவாறு கண்டோம். பொதுவாக நோக்கும்பொழுது தொல்காப்பியர் காலத்தில் பிள்ளைத் தமிழுக்குரிய "கரு" இருந்ததென்றும், நற்றிணை, ஐங்குநுறூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு ஆகிய எட்டுத் தொகை நூல்களிலும் பத்துப் பாட்டு நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் பிள்ளைத் தமிழ்ப்பருவப் போக்குள்ள செய்திகள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. இடைக்கால நூல்களாகிய பெருமாள் திருமொழி, நாச்சியார் திருமொழி, பெரிய திருமொழி,மும்மணிக்கோவை, பெரியபுராணம் ஆகியவற்றில் சங்க கால நூல்களைக் காட்டிலும் விரிவாகப் பிள்ளைத் தமிழ்ப் பொருண்மை உள்ள பாடல்கள் இடம் பெற்றிருப்பதை உணர முடிகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வெளிவந்த ஒட்டக்கூத்தரின் "குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்" எனும் நூல் பிள்ளைத்தமிழ் என்ற பெயரில் கிடைக்கும் முதல் நூலாகும். ஒட்டக்கூத்தரைத் தொடர்ந்து பகழிக் கூத்தர், குமரகுருபரர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலானோர் பிள்ளைத் தமிழ் நூல்கள் இயற்றியுள்ளனர். இவ்வாறு வளர்ச்சி பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்கள் முந்நூறு வரை வெளிவந்துள்ளன. குமரகுருபரர் எழுதிய மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்பவை நினைவில் கொள்ளத்தக்கவை.

## 8.2 பரணியின் தோற்றமும் வளர்ச்சியும்

பரணி என்பது ஒரு அரசன் போர் செய்த போர்க்களத்தையும் அக்களத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் அவன் அடைந்த பெரும் வெற்றிகளையும் சிறப்பித்துக் கூறும் பிரபந்தம் ஆகும். இவ்வாறு போர் நிகழ்ச்சியைக் குறித்துப் பாடுவதற்குக்"களவழி" என்று முற்காலத்தில் வழங்கியுள்ளனர். களவழி என்பது போர்க்கள நிகழ்ச்சியையே குறிக்கும்.

போர்க்களத்தில் தெய்வம் காளி ஆவாள். அவ்வெற்றித் தெய்வத்தை வழிபடும் விழாவே பரணி ஆகும். அத்தெய்வத்திற்குரிய நாளாகிய பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப் பெறுவதால் இலக்கியத்திற்கும் இப்பெயர் ஆயிற்று.

பரணி என்பது ஆயிரம் யானையைக் கொன்ற பெருவீரனுக்குப் பாடுதல் வேண்டும் என்பது இலக்கண நூலார் மரபு.

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி

என்பது இலக்கண விளக்கச் சூத்திரம் ஆகும். ஆயிரம் என்பது மிகப்பல என்பதைக் காட்ட எழுந்த பேரெண் ஆகும். பன்னிரு பாட்டியலில் எழுநூறு யானைகளைக் களத்தில் கொன்ற வீரனுக்குப் பாடுதல் வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் வெண்பாப் பாட்டியல் போன்ற பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் பொதுவாக, போர்க்களத்து யானையைக் கொன்ற வீரனுக்குப் பரணி பாடுதல் மரபு என்று மட்டுமே சுட்டுகின்றன. எத்தனை யானை என்ற எண்ணிக்கையை வரையறுக்கவில்லை.

பரணி என்கிற சிற்றிலக்கியத்திற்கு உள்ள கூறுகள் பண்டைய இலக்கியங்களில் இருந்தாலும், பரணி என்கிற இலக்கிய வகை பிற்காலத்தில் தோன்றுகிறது. அவ்வகையில் செயங்கொண்டார் சோழ நாட்டில் தயங்குடியைச் சேர்ந்தவர். முதற் குலோத்துங்கன் சோழன் சபையில் தலைமைப் புலவராக இருந்திருக்கிறார். சோழனது கலிங்க வெற்றியை நேரில் தெரிந்து இப்பரணியாக இயற்றிச் சோழனுக்கு அளித்தார்.

பிற்காலத்தில் புராணக் கூறுகளைப் பொருளாகக் கொண்டு பரணி பாடும் மரபு தோன்றியது. ஒட்டக்கூத்தர் சிவனைப் பாடியதாக ஒரு பரணி உள்ளது. அது தக்கயாகப் பரணி ஆகும். தக்கனுடைய வேள்வியை அழித்துச் சிவபெருமான் பெற்ற வெற்றியைப் போற்றிப் பாடும் பரணி நூலாகத் தக்கயாகப் பரணி அமைந்துள்ளது. இரணியவதைப் பரணிப் புராணத் தொடர்புடையது. தத்துவ விசாரணை மேலோங்கிய நாளில் அ∴தாவது 12-ஆம் நூற்றாண்டில் தத்துவராயர், மோகவதைப் பரணி என்ற நூலை எழுதினார். பரணிகளைப் பற்றி ஆராய்ந்த ந.வீ. செயராமன் என்பவர் பதினேழு பரணிகள் இருப்பதாகக் குறிப்பிடுவர்.

## 8.3 கலம்பகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பலவகைச் செய்யுட்களும், அகம், புறம் முதலிய பொருட் கூறுபாடுகளும் நகை, பெருமிதம், வெகுளி, உவகை முதலிய பலவகைச் சுவைகளும் நிரம்பிய ஒரு கலவைப் பிரபந்தமே கலம்பகம் என்பர்.

பிரபந்த வகைகளுள் கலம்பகம் சற்றுப் பின்னர்த் தோன்றிய இலக்கிய வகையாகும். கலம்பகம் என்ற சொல்லிற்குக் கலவை என்பது சொற்பொருள்;"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந்தொடையல் என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கில் கலம்பகம் என்ற சொல் வந்துள்ளது. இங்கு நானாவித மலர்கள் என்று பொருள்படும், பலவகையான மலர்களைச் சேர்த்துக் கட்டிய மாலை "கதம்பம்" எனப்பெறும்; இச்சொல் திரிந்து (தில)கலம்பகம் ஆயிற்று என்பர்.

பதினெட்டு உறுப்புக்களை உடையது கலம்பகம் என்றும் பொருள் கூறுவர். இந்நூல் உறுப்புக்கள் நூல்கள் தோறும் வேறுபடுகின்றன. புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சிந்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம், பிச்சியார், கொற்றியார் முதலியன உறுப்பு

வகைகளாகும். ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாக்களும், தாழிசை துறை விருத்தங்களும், மடக்கும் இதில் விரவிவரும்; பல வகை யாப்புக்கள் இதன்கண் வரும் என்பர். இந்நூல் அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் வரை பாடப்பெறும்.

தெள்ளாறு எறிந்த 3-ஆம் நந்திவர்மனைப் பாராட்டிப் பாடும் நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டது ஆகும்.

மதுரைக் கலம்பகம் புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம் போன்றவை சைவசமயம் சார்ந்த கலம்பக நூல்களாகும். பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகம் வைணவப் பரம்பரையில் சிறந்த கலம்பக நூலாகும்.

கலம்பகத்தில் 18 உறுப்புக்கள் என்பது பேசப்பெற்றாலும் எல்லோரும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. திருப்பாதிரிப் புலியூர்க்கலம்பகத்தில் 18 உறுப்புகள் உள்ளன. ஆளுடைய பிள்ளையார் திருவாமாத்தூர்க் கலம்பகம், நந்திக்கலம்பகம் போன்றவற்றில் 18 உறுப்புகளுக்குக் குறைவாகவே உள்ளன.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. பிள்ளைத்தமிழின் வகைகள் யாவை ?**

ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்பன பிள்ளைத் தமிழீன் வகைகள் ஆகும்.

**2. குமரகுருபரர் எழுதிய பிள்ளைத்தமிழ் நூல்கள் யாவை ?**

மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ் என்பவை குமரகுருபரர் எழுதிய பிள்ளைத் தமிழ் நூல்களாகும்.

**3. பரணி யாருக்குக் பாடப் பெறுவது ?**

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்குப் பாடப் பெறுவது பரணி இலக்கியம் ஆகும்.

**4. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார் ?**

கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார் என்னும் புலவர்.

**5. கலம்பகத்தில் காலத்தால் முற்பட்ட நூல் எது ?**

நந்திக் கலம்பகம் காலத்தால் முற்பட்ட கலம்பகம் ஆகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. கலம்பகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.**

பலவகைச் செய்யுட்களும், அகம், புறம் முதலிய பொருட் கூறுபாடுகளும் நகை, பெருமிதம், வெகுளி, உவகை முதலிய பலவகைச் சுவைகளும் நிரம்பிய ஒரு கலவைப் பிரபந்தமே கலம்பகம் என்பர்.

பிரபந்த வகைகளுள் கலம்பகம் சற்றுப் பின்னர்த் தோன்றிய இலக்கிய வகையாகும். கலம்பகம் என்ற சொல்லிற்குக் கலவை என்பது சொற்பொருள்; "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந்தொடையல் என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கில்

கலம்பகம் என்ற சொல் வந்துள்ளது. இங்கு நானாவித மலர்கள் என்று பொருள்படும், பலவகையான மலர்களைச் சேர்த்துக் கட்டிய மாலை "கதம்பம்" எனப்பெறும்; இச்சொல் திரிந்து (தில)கலம்பகம் ஆயிற்று என்பர்.

பதினெட்டு உறுப்புக்களை உடையது கலம்பகம் என்றும் பொருள் கூறுவர். இந்நூல் உறுப்புக்கள் நூல்கள் தோறும் வேறுபடுகின்றன. புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சிந்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம், பிச்சியார், கொற்றியார் முதலியன உறுப்பு வகைகளாகும். ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாக்களும், தாழிசை துறை விருத்தங்களும், மடக்கும் இதில் விரவிவரும்; பல வகை யாப்புக்கள் இதன்கண் வரும் என்பர். இந்நூல் அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் வரை பாடப்பெறும்.

தெள்ளாறு எறிந்த 3-ஆம் நந்திவர்மனைப் பாராட்டிப் பாடும் நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டது ஆகும்.

மதுரைக் கலம்பகம் புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம் போன்றவை சைவசமயம் சார்ந்த கலம்பக நூல்களாகும். பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகம் வைணவப் பரம்பரையில் சிறந்த கலம்பக நூலாகும்.

கலம்பகத்தில் 18 உறுப்புக்கள் என்பது பேசப்பெற்றாலும் எல்லோரும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. திருப்பாதிரிப் புலியூர்க்கலம்பகத்தில் 18 உறுப்புகள் உள்ளன. ஆளுடைய பிள்ளையார் திருவாமாத்தூர்க் கலம்பகம், நந்திக்கலம்பகம் போன்றவற்றில் 18 உறுப்புகளுக்குக் குறைவாகவே உள்ளன.

**2. பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் பற்றி எழுதுக.**

**காப்புப்பருவம்**

தொல்காப்பியர் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நானிலத் தெய்வங்களை மக்கள் வாழ்த்தி வழிபட்டதாகக் கூறுவர்.

**தாலாட்டுப் பருவம்**

குலசேகர ஆழ்வார் இராமபிரானின் குழந்தைப் பருவத்தைத் தாலேலோ எனத் தாலாட்டுப் பாடித் தம்பாசுரங்களைப் படைத்துள்ளார்.

**செங்கீரைப் பருவம்**

பெரியாழ்வார் யசோதை நிலையில் கண்ணனாகிய குழந்தையைச் செங்கீரையாடுமாறு பாடல்களில் வேண்டுகிறார்.

**சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம்**

பெரியாழ்வார் கண்ணனாகிய குழந்தையைச் சப்பாணி கொட்ட வேண்டிப் பாடல்கள் பாடியுள்ளார். குலசேகர ஆழ்வாரும் திருமாலின் குழந்தைப் பருவத்தில் ஈடுபட்டு அத்தெய்வக் குழந்தையிடம் முத்தம் தருமாறு வேண்டுகிறார்.

**அம்புலிப்பருவம்**

இப்பருவம் சார்ந்த செய்திகள் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் காணப்பெறுவதாகக் கூறுவர். "ஐயனே! திங்களாகிய குழவீர் நீ இவனுடன் விளையாட வருவாயாக என்று சொல். அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ்தல் இனிது" என்னும் கலித்தொகையில் உள்ளது.

**சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப்பருவங்கள்**

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் இவ்வகைப் பருவங்களுக்குப் பாடல்கள் இடம்பெறுவது மரபாகும். இவ்வகைக் கூறுகளுக்குரிய முன்னோடிச் சிந்தனைகள் பண்டை இலக்கியங்களில் உள்ளன. இப்பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உரியவை என்று கருதப்பெறுகின்றன.

**நீராடல், அம்மானை, ஊசல் - பருவங்கள்** (பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உரியவை)

புறநானூற்றில் சிறுவர்கள் நீராடிக் களிப்புறும் செய்தி உள்ளது. தைத் திங்களில் நீராடல் சிறப்புடையது என்கிற கருத்தினைப் பலசங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. பக்தி இலக்கியக் காலத்தில் திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நூல்கள் நீராடலைச் சிறப்பிக்கின்றன.

பருவங்களை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைத் தமிழின் வளர்ச்சியை மேற்கொண்டவாறு கண்டோம். பொதுவாக நோக்கும்பொழுது தொல்காப்பியர் காலத்தில் பிள்ளைத் தமிழுக்குரிய "கரு" இருந்ததென்றும், நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு ஆகிய எட்டுத் தொகை நூல்களிலும் பத்துப் பாட்டு நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் பிள்ளைத் தமிழ்ப்பருவப் போக்குள்ள செய்திகள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. இடைக்கால நூல்களாகிய பெருமாள் திருமொழி, நாச்சியார் திருமொழி, பெரிய திருமொழி, மும்மணிக்கோவை, பெரியபுராணம் ஆகியவற்றில் சங்க கால நூல்களைக் காட்டிலும் விரிவாகப் பிள்ளைத் தமிழ்ப் பொருண்மை உள்ள பாடல்கள் இடம் பெற்றிருப்பதை உணர முடிகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வெளிவந்த ஒட்டக்கூத்தரின் "குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்" எனும் நூல் பிள்ளைத்தமிழ் என்ற பெயரில் கிடைக்கும் முதல் நூலாகும். ஒட்டக்கூத்தரைத் தொடர்ந்து பகழிக் கூத்தர், குமரகுருபரர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலானோர் பிள்ளைத் தமிழ் நூல்கள் இயற்றியுள்ளனர். இவ்வாறு வளர்ச்சி பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்கள் முந்நூறு வரை வெளிவந்துள்ளன. குமரகுருபரர் எழுதிய மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்பவை நினைவில் கொள்ளத்தக்கவை.

10 மதிப்பெண் வினாக்கள்

1. பரணியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

விடை : 8.2 ல் உள்ள பகுதியை எழுத வேண்டும்.

பயிற்சி வினாக்கள்

1. பிள்ளைத்தமிழுக்குத் தோற்றுவாயாக அமைந்த தொல்காப்பிய நூற்பா என்ன ?
2. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு மட்டும் உரிய பருவங்கள் யாவை ?
3. ஒட்டக்கூத்தர் எழுதிய பிள்ளைத்தமிழின் பெயர் என்ன ?
4. கலம்பகத்தின் உறுப்புகள் எத்தனை ?
5. தக்கயாகப் பரணி யாரைப் பற்றியது ?
6. கலம்பகம் என்ற சொல்லின் பொருள் யாது ?

# பிரிவு 3 - கூறு 9 : சிற்றிலக்கியம் - உரைநடை - சிறுகதை

## 9.1 அந்தாதி

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து அசை, சொல், சீர், அடி யாதேனும் ஒன்று அடுத்த பாடலின் முதலில் வரும்படி அமைத்துப்பாடுவது அந்தாதியாகும். இறுதிப் பாடலின் முடிவு முதற்பாடலின் தொடக்கமாக இணையும்படி பாடுவதை மண்டலித்து முடிவது என்பர். இதனைத் தொடை வகைகளுள் ஒன்றென யாப்பு நூலார் கூறுவர்.

தமிழில் அந்தாதி வகை இலக்கியங்கள் மிகுதி. விருத்தமே இதன் யாப்பு வடிவமாகும்.

சங்கநூல்களில் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றில் பதினெட்டாம் பத்தும் அந்தாதித் தொடையால் ஆனவை. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியே முதல் திருவந்தாதியாகும். கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டுகளில் இவ்வகை இலக்கிய வகை முகிழ்த்தது. முதலாழ்வார்கள் பாடிய அந்தாதிகளும் முற்பட எழுந்த அந்தாதி அமைப்புக்களாகும். பக்தி இலக்கியத்தில் அந்தாதிகள் மிகுந்திருப்பதை வரலாற்றின் வழி உணரலாம். சேரமான் பெருமாள் நாயனாரின் பொன் வண்ணத்தந்தாதி குறிப்பிடத் தகுந்த நூலாகும்.

## 9.2மடல்

“மடல்” என்பது அகத்திணையில் ஒரு துறையாகும். சங்க நூல்கள் இத்துறையைச் சிறப்பாகப் பாடிய புலவர் “மடல்பாடிய மாதங்கீரனார்” எனச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

மிக்க காமம் இருப்பினும் பெண்பாலார் மடலேறுவது பண்டை வழக்கில் இல்லை. இம்மரபை பக்தி இலக்கியம் பாடிய திருமங்கையாழ்வார் மாற்றியமைத்தார். அவர் பாடிய நூல்கள் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்பனவாகும். திருமாலிடம் பக்திக் காதல்கொண்ட பெண் மடலேறத் துணிவதாகப் பாடப்பெற்ற பாடல்கள். கலிவெண்பா யாப்பில் அமைந்தவை. கலிமடல், வளமடல் போன்றவைகள் மடல் பிரபந்த நூல்களாகும். காளமேகப் புலவர் சித்திரமடல் என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். தத்துவராயர் குருவின் மேல் பக்தி கொண்டு பாடப்பெற்ற நூலிற்குக் கலிமடல் என்று பெயர். வருண குலாதித்தன் மடல் குறிப்பிடத் தகுந்த மடல் நூலாகும்.

## 9.3 கோவை

அகத்துறைப் பாடல்கள் களவு, கற்பு என இருவகையில் அமையும். களவு மற்றும் கற்பு ஒழுக்கம் கைகோள் எனப்பெறும்; அவற்றுள் ஒவ்வொன்றும் பல துறைகள் உடையது. களவில் மதியுடம்படுத்தல், அறத்தொடு நிலை எனப் பல துறைகள் உள்ளன. ஒவ்வொன்றையும் சார்ந்து கூற்றுக்கள் பல வரும். பிற்காலத்தில் இவ்வகைத் துறைக்

கூற்றுக்களை எல்லாம் வரிசைப்படுத்தி, ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலித் தொடர்பு போல ஒரு கோவையாகப் பாடினர். ஒரு பாட்டிற்கும் அடுத்த பாட்டிற்கும் நிகழ்ச்சி வரிசை அமைந்து கதைபோலக் காணப்பட்டதால், இவ்வகைப் பாடல்கள் தொடர்புடையன போன்ற ஒரு மனத் தோற்றத்தை ஏற்படுத்தின என்று கூறுவர்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் நின்ற சீர் நெடுமாறன் மீது பாண்டிக் கோவை பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மாணிக்கவாசகரின் திருக்கோவை சிறப்பானதாகும்.

தஞ்சைவாணன் கோவை பொய்யாமொழிப் புலவரால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது. நம்பியகப் பொருள் என்ற அகப்பொருள் இலக்கண நூலிற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைவாணன் கோவை அமைந்துள்ளது. பாண்டியரின் படைத்தலைவனாகிய தஞ்சை வாணனைப் பற்றிய நூலாகும்.

## 9.4 இசுலாமியரின் சிற்றிலக்கியத் தமிழ்த்தொண்டு

பாண்டியர்கள் தென்னாட்டில் தம் செல்வாக்கை இழந்தனர். அப்போது கி.பி.1300-ஆம் ஆண்டு மாலிக்காபூர் என்னும் தளபதி தென்னாட்டின் மீது படையெடுத்தான். மதுரையை வென்று திறை பெற்றுச் சென்றான். அது முதல் இங்கு முகம்மதியர் குடியேறினர். பலர் இஸ்லாம் சமயத்தில் மாறினர். இஸ்லாமியர் அரபு மொழிப்பயிற்சியோடு தமிழ்மொழிப் புலமையும் பெற்றுப் பல நல்ல தமிழ் நூல்களைப் படைத்தனர்.

### 9.4.1 உமறுப்புலவர்

உமறுப்புலவர் முகம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றை "சீறாப்புராணம்" என்ற காப்பியமாக எழுதினார். காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டாகும்.

### 9.4.2 சவ்வாதுப்புலவர்

சவ்வாதுப்புலவர் வசைபாடுவதில் காளமேகத்தைப் போன்றவர்; இவர் நாகைக் கலம்பகம், மதீனத்தந்தாதி, முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். சையது முகைதீன் கவிராசர் கோட்டாற்றில் முசுலீம் குடும்பத்தில் பிறந்தவர். முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், முகைதீன் பிள்ளைத்தமிழ், மாணிக்கமாலை போன்றவற்றை இயற்றியவர்.

### 9.4.3 குணங்குடிமஸ்தான்

குணங்குடி மஸ்தான் "சுல்தான்" அப்துல் காதிறு (கி.பி1788 – 1835) என்னும் இயற்பெயருடையவர் இளமையிலே துறவு பூண்டு மோனத்தில் ஞானம் பெற்றவர்; தாயுமானவரின் பாடல்களில் ஈடுபாடு கொண்டவர். இவருடைய நிராமயக்கண்ணி தாயுமானவரின் பராபரக்கண்ணியை ஒத்திருக்கிறது என்பார்கள். திருத்தணிகை சரவணப் பெருமாளையர் இவர்மீது நான்மணி பாடியுள்ளார் எனின், இவரது பெருமையைச் சொல்லவும்

வேண்டுமோ? இவர் அகத்தி சதகம், நந்தீசர் சதகம், ஆனந்த களிப்புப் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

### 9.4.4 சர்க்கரைப்புலவர்

சர்க்கரைப் புலவர் நகைச்சுவை தோன்ற உரையாடுவதில் வல்லவர். இவருடைய காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு இவர் மெதீனாவைச் சிறப்பித்து ஓர் அந்தாதி பாடியுள்ளார். சவ்வாதுப் புலவர் சர்க்கரைப் புலவரின் மைத்துனர். இவர் முகம்மது நபியின் மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியுள்ளார். அந்நூல் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என்றும் அழைக்கப்பெறும்.

### 9.4.5 செய்குத்தம்பிப்பாவலர்

செய்குத்தம்பிப் பாவலர் ஒரு சதாவதானி ஆவார். யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரும் கதிரைவேற்பிள்ளையும் வடலூர் வள்ளலாரின் திருவருட்பாவை மருட்பா எனக் கூறிப் போராடிய சமயத்தில் அ∴து அருட்பாவே எனக் கூறி நிலைநாட்டிய புலவர். திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்து, நாயகமான்மிய மஞ்சரி, நீதி வெண்பா, அழகப்பக்கோவை, ஷம்சுத்தா சீம் கோவை போன்ற நூல்களைப் பாடியவர்.

கவிகளஞ்சியப் புலவரின் நபி அவதார அம்மானையும் பிச்சை இபுராகிம் புலவரின் திருபதீனத் தந்தாதியும் தக்கலை பீர் முகம்மது சாகிபின் ஞானமணி மாலை போன்ற நூல்களும் குறிப்பிடத்தகுந்தன.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. அந்தாதி என்றால் என்ன ?**

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்த பாடலின் முதலில் வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி ஆகும்.

**2. திருக்கோவையார் என்னும் நூலைப் பாடியவர் யார் ?**

திருக்கோவையார் பாடியவர் மாணிக்கவாசகர் ஆவார்.

**3. குணங்குடி மஸ்தான் யாருடைய பாடல்களில் ஈடுபாடு கொண்டவர் ?**

குணங்குடி மஸ்தான் தாயுமானவரிடம் ஈடுபாடு கொண்டவர்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. மடல் பற்றிக் குறிப்பு வரைக.**

“மடல்” என்பது அகத்திணையில் ஒரு துறையாகும். சங்க நூல்கள் இத்துறையைச் சிறப்பாகப் பாடிய புலவர் “மடல்பாடிய மாதங்கீரனார்” எனச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

மிக்க காமம் இருப்பினும் பெண்பாலார் மடலேறுவது பண்டை வழக்கில் இல்லை. இம்மரபை பக்தி இலக்கியம் பாடிய திருமங்கையாழ்வார் மாற்றியமைத்தார். அவர் பாடிய நூல்கள் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்பனவாகும். திருமாலிடம் பக்திக் காதல்கொண்ட பெண் மடலேறத் துணிவதாகப் பாடப்பெற்ற பாடல்கள்.

கலிவெண்பா யாப்பில் அமைந்தவை. கலிமடல், வளமடல் போன்றவைகள் மடல் பிரபந்த நூல்களாகும். காளமேகப் புலவர் சித்திரமடல் என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். தத்துவராயர் குருவின் மேல் பக்தி கொண்டு பாடப்பெற்ற நூலிற்குக் கலிமடல் என்று பெயர். வருண குலாதித்தன் மடல் குறிப்பிடத் தகுந்த மடல் நூலாகும்.

**2. கோவை நூல் பற்றி விளக்குக.**

அகத்துறைப் பாடல்கள் களவு, கற்பு என இருவகையில் அமையும். களவு மற்றும் கற்பு ஒழுக்கம் கைகோள் எனப்பெறும்; அவற்றுள் ஒவ்வொன்றும் பல துறைகள் உடையது. களவில் மதியுடம்படுத்தல், அறத்தொடு நிலை எனப் பல துறைகள் உள்ளன. ஒவ்வொன்றையும் சார்ந்து கூற்றுக்கள் பல வரும். பிற்காலத்தில் இவ்வகைத் துறைக் கூற்றுக்களை எல்லாம் வரிசைப்படுத்தி, ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலித் தொடர்பு போல ஒரு கோவையாகப் பாடினர். ஒரு பாட்டிற்கும் அடுத்த பாட்டிற்கும் நிகழ்ச்சி வரிசை அமைந்து கதைபோலக் காணப்பட்டதால், இவ்வகைப் பாடல்கள் தொடர்புடையன போன்ற ஒரு மனத் தோற்றத்தை ஏற்படுத்தின என்று கூறுவர்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் நின்ற சீர் நெடுமாறன் மீது பாண்டிக் கோவை பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மாணிக்கவாசகரின் திருக்கோவை சிறப்பானதாகும்.

தஞ்சைவாணன் கோவை பொய்யாமொழிப் புலவரால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது. நம்பியகப் பொருள் என்ற அகப்பொருள் இலக்கண நூலிற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைவாணன் கோவை அமைந்துள்ளது. பாண்டியரின் படைத்தலைவனாகிய தஞ்சை வாணனைப் பற்றிய நூலாகும்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. இசுலாமியரின் சிற்றிலக்கியத் தொண்டு பற்றி எழுதுக.**

விடை : 9.4-ல் உள்ள பகுதியை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

**1. முதல் அந்தாதி எது ?**

**2. மடலின் வகைகள் யாவை ?**

**3. பாண்டிக் கோவை யார் மீது பாடப்பெற்றது ?**

# பிரிவு 3 - கூறு 10

## 10.1 : உரைநடையின் தோற்றம்

பண்டைக் காலத்தில் உரைநடையை விடச் செய்யுள் வகைகளே மிகுதியாகக் கிடைத்தன. எழுதுவதற்குப் போதிய கருவி வசதிகள் இல்லாத காலம். எனவே, சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் வகையில் செய்யுள்களே பரவலாக இருந்தன. எனினும் உரைநடையும் வழக்கில் இருந்தது.

### 10.1.1 உரைநூல்கள்

சோழர்கள் காலத்தில் உரையாசிரியர்கள் பலர் இருந்தனர். இளம்பூரணர் என்பவர் தொல்காப்பியத்திற்கு முதலில் உரை எழுதினார். சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் போன்றோரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார்கள்.

தொல்காப்பியம் முழுமைக்கும் பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி போன்ற நூல்களுக்கும் நச்சினார்க்கினியார் எழுதிய உரை மிகச் சிறப்பானது. கவிதை சுவைபடத் திருக்குறளுக்கு உரையெழுதியவர் பரிமேல் அழகர் ஆவார். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் என்பவர் உரை எழுதியுள்ளார்.

உரையாசிரியர்களின் உரைநடை, உரைநடை வளர்ச்சிக்கு உதவியது.

### 10.1.2 ஐரோப்பியர் காலத்தில் உரைநடை வளர்ச்சி

ஐரோப்பியர் இந்தியாவிற்கு வந்தபோது, அச்சு இயந்திரப் பணியும் தொடர்ந்து வந்தது. ஐரோப்பியர்கள் அச்சுக் கூடத்தை நிறுவிப் பல உரைநடை நூல்களைத் தமிழில் கொண்டுவந்தார்கள். குறிப்பாகச் சமயப் பணிக்காக வந்த இயேசு சபைக் குருமார்கள் உரைநடை வளர்ச்சிக்கும் உதவியநிலை கருதத் தக்கதாகும்.

### 10.1.3 வீரமாமுனிவரும் உரைநடையும்

வீரமாமுனிவர் தமிழ் உரைநடையின் தந்தை எனச் சிறப்பிக்கப் பெறுகிறார். இவருடைய பரமார்த்தகுரு கதைகள் என்ற உரைநடை நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம் போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

### 10.1.4 உரைநூல் தோன்றல்

சங்க இலக்கியங்களின் சிறப்பை உணர்த்தத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் அவைகளை மக்களுக்கு எடுத்துச்செல்ல விழைந்தன. இடைக் காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்களின் உரைநூல்கள் அம்முயற்சியில் எழுந்தன. சங்க இலக்கியங்களையும் இலக்கணங்களையும் அறிந்து கொள்வதற்கு உரைநூல்கள் நல்ல திறவுகோல்கள் ஆயின. உரை எழுதியதின் வாயிலாக உரைநடையின் வளர்ச்சிக்கும் உரையாசிரியர்கள் வித்திட்டனர். இலக்கண உரை, இலக்கிய உரை, சாத்திர உரை, மணிப்பிரவாள உரை என்று உரைகளை

வகைப்படுத்தலாம். உரையாசிரியர்களில் முதன்மையாகத் திகழ்பவர் இறையனார் அகப்பொருளுக்கு உரை கூறிய நக்கீரர் ஆவார் (கி.பி.8).

### 10.1.5 இலக்கண உரை

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களில் இளம்பூரணர் முதல்வராகக் கருதப்பெறுவார். இவருடைய உரைச்சிறப்பின் காரணமாக உரையாசிரியர் என்று சிறப்பிக்கப் பெறுகிறார். இவரது உரை சுருக்கமானது, எளிமையானது. இவரது காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு ஆகும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த சேனாவரையர் தொல்காப்பியம் சொல்லதிரகாரத்திற்கு உரை கண்டவர். “வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த” சேனாவரையர் எனச் சிறப்பிக்கப் பெறுவார். கல்லாடரும், சேனாவரையரும் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளனர்.

பேராசிரியர் என்பவர் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் சில இயல்களுக்கு உரைகண்டுள்ளார். திருக்கோவையாருக்கும் உரை எழுதியுள்ளார். குறுந்தொகை முதல் இரு செய்யுட்களுக்கு இவர் உரை எழுதியதாகத் தெரிகிறது. இவரது உரையில் சொற்பொருள் விளக்கமின்றி இலக்கியக் கொள்கை விளக்கத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளமை உணரலாம்.

“உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்” என்று நச்சினார்க்கினியர் சிறப்பிக்கப் பெறுவார். இவர் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரத்திற்கும் பொருள் எழுதியுள்ளார்.

### 10.1.6 இலக்கிய உரைகள்

அடியார்க்கு நல்லாரும் பரிமேலழகரும் இலக்கிய உரையாசிரியர்களில் குறிப்பிடத் தகுந்தோர் ஆவர். முற்சுட்டிய இலக்கண உரை ஆசிரியர்களில் நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி போன்ற இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரை ஒன்று உண்டு. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மரில் பரிமேலழகர் குறிக்கத்தக்கவர் ஆவார். வடமொழி அறிவும் சங்க இலக்கியப் புலமையும் பெற்றவர். இவரது காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டு ஆகும்.

### 10.1.7 மணிப்பிரவாள உரை

மணி என்பது தமிழ்ச்சொல் பிரவாளம் (பவளம்) என்பது வடசொல். இதனைப் போல இருமொழிச் சொற்களையும் கலந்து எழுதும்முறை மணிப்பிரவாள உரையாகும். தொடக்கத்தில் சமணர்கள் இம்முறையில் எழுதி வந்தனர். பிற்காலத்தில் வைணவ உரையாசிரியர்கள் இம்முறையைப் பின்பற்றினர். நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திற்கு எழுதப்பெற்ற ஈட்டுரைகள் அனைத்தும் மணிப்பிரவாள நடையைச் சார்ந்ததாகும்.

## 10.2 நாடக இலக்கிய வளர்ச்சி

இயலும் இசையும் சேர்ந்து கதையைத் தழுவி வரும் கூத்தே நாடகம் என்பர். தமிழ் இலக்கியத்தில் முதன்முதலாகத் தோன்றிய நாடகக் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.

மாணிக்கவாசகரின் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டு ஆகும். "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" எனத் தம் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். அம்முறையில் 9-ஆம் நூற்றாண்டிலேயே நாடகம் இருந்ததென அறியலாம். எட்டாம் நூற்றாண்டு வரை "நாடகம்" என்ற சொல் கூத்து (Dance) என்னும் பொருளைத்தான் குறித்துள்ளது.

சோழர்கள் காலத்தில் "இராஜராஜ விஜயம்" என்ற நாடகம் நடிக்கப் பெற்றதாகத் தெரிகிறது. கி.பி. 11-ல் கமலாலயபட்டர் என்பவர் பூம்புலியூர் நாடகம் ஒன்றை இயற்றியுள்ளார். தமிழ் நாட்டில் முதன்முதலில் நடிக்கும் நாடகம் கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பு எனக் கூறலாம்.

### 10.2.1 17-ஆம் நூற்றாண்டின் நாடகம்

இந்நூற்றாண்டில் குறவஞ்சி, நொண்டி நாடகம், இசைப்பாட்டு வடிவத்தில் தோன்றி மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. இவ்வகை நாடகங்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்து வரும் பாமர மக்களின் அன்றாட வாழ்வைச் சித்தரிக்கும் நாடகங்களாகும்.

### 10.2.2 18-ஆம் நூற்றாண்டின் நாடகம்

அருணாசலக் கவிராயர் இயற்றிய "ராமநாடகம்""அசோகமுகி" நாடகம் குறிக்கத்தக்கன. கோபால கிருஷ்ணபாரதியார் இயற்பகை நாயனார் மற்றும் கீர்த்தனை நாடகங்களைப் பாட்டுவடிவில் எழுதியுள்ளார்.

### 10.2.3 19-ஆம் நூற்றாண்டு

இந்நூற்றாண்டில் தோன்றிய நாடகங்களைக் கீழ்க்கண்டவாறு பகுத்து விளக்கலாம்.

**1.நாடோடிக் கற்பனை நாடகங்கள்**

மதுரை வீரன் விலாசம், நல்லதங்கை நாடகம், பவளக்கொடி நாடகம் போன்ற நாடகங்கள் இவ்வகையில் அடங்கும்.

**2. புராண இதிகாச நாடகங்கள்**

புராணம் மற்றும் இதிகாசங்களில் இடையில் வரும் கதைப்பகுதிகளை ஸ்ரீ மகாபாரத விலாசம், அரிச்சந்திர விலாசம், சகுந்தலை விலாசம் என நாடகங்களை இயற்றியுள்ளார்.

**3. வரலாற்று நாடகம்**

"தேசிங்குராச நாடகம்" இவ்வகைக்குரிய எடுத்துக்காட்டாகும்.

**4. சமூக நாடகங்கள்**

சமூகம் மற்றும் சீர்திருத்தங்களை மையமாகக் கொண்டு எழுந்த நாடகங்கள் இவ்வகையில் அடங்கும். காசிவிசுவநாத முதலியாருடைய நாடகங்கள் சீர்திருத்த இயல்பு கொண்ட நாடகங்கள் ஆகும். தாசிகளின்

குறிப்பு

வலையில் சிக்கிச் சீரழியும் செல்வர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் 'டம்பாச்சாரி விலாசம்' முதலில் தோன்றிய சமூக நாடகமாகும்.

**5. நகைச்சுவை நாடகம்**

கி.பி. 19-ல் தோன்றிய "சனமனோல்லாசினி" நாடகம் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## 10.2.4 பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

இவர் மனோன்மணீயம் என்ற நாடகத்தை இயற்றியுள்ளார். நடிப்பதற்காகவும், படிப்பதற்காகவும் எழுதப்பெற்ற நாடகமாகும். பா வடிவில் எழுந்த நாடக நூலாகும். 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாடக அறிஞர்களில் சுந்தரம்பிள்ளை தலைசிறந்தவராகக் கருதப்பெறுகிறார். லார்டு விட்மன் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்ற ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதப்பெற்றது.

## 10.2.5 வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்

நாடக இயல் என்ற நாடக இலக்கண நூலை எழுதியவர்.

## 10.2.6 இருபதாம் நூற்றாண்டு

தமிழ் நாடகக் கலைக்குச் சேவைபுரிந்த சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

பம்மல் சம்பந்த முதலியார் பல நாடகங்களை எழுதியுள்ளார். மனோகரா, லீலாவதி சுலோக்சனா, அடலாதித்தியன், சபாபதி போன்ற நாடகங்கள் தலைசிறந்தன. லீலாவதி சுலோக்சனா உரைநடையில் அச்சிடப்பெற்ற முதல் நாடகமாகும். நாடகச் சுவையை உயர்த்திய பெருமை இவருக்கு உண்டு. சென்னையில் சுகுண விலாச சபை ஒன்றை நிறுவி, பல நாடக சபைகள் தோன்ற வழி காட்டியவர். பம்மல் சம்பந்த முதலியாரை "நாடகத் தந்தை" எனப் போற்றுவர்.

தேசியப் பற்றை மையமிட்டு 20-ஆம் நூற்றாண்டில் பல நாடகங்கள் வளர்ந்தன. தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின் கதரின் வெற்றி, தேசியக்கொடி, பம்பாய் மெயில் போன்றவை குறிக்கத்தகுந்தன. ரா.வெங்கடாசலம் வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை முதல் முழக்கம் என்ற பெயரில் நாடகமாக்கியுள்ளார்.

சமூகச் சீர்திருத்த நாடகங்கள் பல தோன்றின. ராஜம்பாள், மோகன சுந்தரம், சந்திர காந்தா என்பன குறிக்கத்தக்கன.

மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவைகளில் முற்போக்கு நாடகங்கள் குறிக்கத்தக்கன. இவற்றில் கு.சா. கிருஷ்ணசாமியின் அந்தமான் கைதி, நீலகண்டனின் முள்ளில் ரோஜா, சி.என். அண்ணாத்துரையின் வேலைக்காரி, ஓர் இரவு,நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம்,நா. சோமசுந்தரத்தின் இன்ஸ்பெக்டர், எஸ்.டி. சுந்தரத்தின் மனிதனும் மிருகமும், கல்கி கிருஷ்ணமூர்த்தியின் கள்வனின் காதலி, கலைவாணரின் ஐம்பதும் அறுபதும் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன.

இலக்கிய நடையில் அமைந்த நாடகங்களும் சுட்டத்தக்கன. இவற்றில் வ.சு.ப. மாணிக்கத்தின் "மனைவியின் உரிமை", மு.வரதராசனாரின் "பச்சையப்பர்" விபுலாநந்த அடிகளின் "மதங்க சூளாமணி" என்பன அரிய நாடக நூல்களாகும்.

பிறமொழிக் கதைகளைத் தமிழில் தழுவி மேடை நாடகங்கள் எழுந்தன. இந்நாடக நூல்கள் சில. டி.கே. முத்துச்சாமி என்பவரின் குமாஸ்தாவின் பெண், ஆதி மூலம், சோமசுந்தரம் என்பவரின் "மனிதன்" போன்றவை கருதத்தக்கன. மு. கதிரேசன் செட்டியார் மிருச்சகடிகம் எனும் வடமொழி நூலை மண்ணியல் சிறுதேர் என்று மொழிபெயர்த்துள்ளார். மறைமலையடிகளார் கவிகாளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

இன்றைய தமிழ் நாடகங்களை வளர்க்கும் சாதனங்களில் குறிப்பிடத் தக்கனவாக வானொலி, பத்திரிக்கைகள், தொலைக்காட்சி, நாடகக் குழுக்கள் ஆகியன விளங்குகின்றன.

## 10.2.7 கீர்த்தனை நாடகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ச்சி கண்ட இசை வடிவங்களில் ஒன்று கீர்த்தனை. இந்நூற்றாண்டில் கீர்த்தனை, சிந்து முதலிய இசைப்பாடல்கள் இலக்கியங்களில் பெரும்பங்கு வகித்தன. தரம் உடைய இலக்கிய வகையாக இந்நூற்றாண்டில் கீர்த்தனை இலக்கியம் திகழ்ந்தது.

கீர்த்தனை பாடியவர்களுள் கோபாலாகிருஷ்ண பாரதி குறிப்பிடத்தக்கவர். சிவனடியார்களின் வாழ்க்கையைப் போற்றிக் கீர்த்தனைகளாகிய இசைப்பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் பாடிய கீர்த்தனை நூல்கள் திருநீலகண்ட நாயனார் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை என்பனவாகும். இவற்றுள் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை குறிப்பிடும் வகையில் சிறப்பு வாய்ந்தது.

நந்தனார் கீர்த்தனையின் இசைப்பாடல்கள் பலரைக் கவர்ந்ததால் பிற்காலத்தில் கீர்த்தனையின் மெட்டில் பிற பாடல்களைப் பாடத் தொடங்கினர். அந்தளவிற்குத் தமிழ் மக்களிடையே கீர்த்தனைப் பாடல் புகழ்பெற்று விளங்கியது.

கீர்த்தனை நாடகங்களுள் அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகக் கீர்த்தனைகள் போற்றற்குரியவை.

## 10.2.8 குறவஞ்சி

குறவஞ்சி என்பது ஒரு வகையான நாடக இலக்கியம் ஆகும். குறவஞ்சி என்பது குறவர் குலத்துப் பெண்ணைக் குறிக்கும். நாடகத்தில் குறமகள் வந்து குறி சொல்வாள்.



குறி கூறும் குறவஞ்சி தனது மலையின் வளத்தைப் பற்றி முன்னர் உரைப்பாள். தலைவியின் காதல் பற்றிக் குறி கூறுவாள். தலைவனின்

புகழ், மலைவளம் பற்றி உரைப்பாள். தலைவியின் காதல் கைகூடும் என்று குறி கூறி, தலைவி தரும் பரிசு மற்றும் அணிகலன்களைப் பெற்றுச் செல்வாள். புதிய அணிகலன்களைக் கண்ட குறத்தியின் கணவன் வினவ அவள் தலைவிக்குக் குறிபார்த்த செய்தியைக் கூறுவதுடன் நாடகம் முடியும். நாடகத்தின் இடையே கட்டியங்காரன் வந்து நடிக்க வரும் கதைமாந்தர்கள் பற்றிக் கூறிச் செல்வான். இசையுடன் கூடிய வகையில் சிறப்பாக நாடகம் நடிக்கப்படும்.

குறவஞ்சி நூல்களுள் சிறப்பிற்குரியதாக விளங்குவது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். இதனை இயற்றியவர் திரி கூடராசப்பக் கவிராயர் ஆவார்.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த விசுவநாத சாஸ்திரியார் குறவஞ்சி நூல்களான வண்ணக்குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

## 10.3. இலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம்

நாட்டுப்புற இலக்கியம் கட்டுப்பாடு அற்றது. – எளிமையும் இனிமையும் உடையது. எழுத்திலக்கியம் யாப்பிற்குக் கட்டுப்பட்டது. கற்றோர் மட்டும் படித்து இன்புறுவதற்காக எழுந்த எழுத்திலக்கியம் கல்வியோடு தொடர்புடையது. நாட்டுப்புற இலக்கியத்தில் சில வடிவ அமைப்புகளைக் காணலாம். எழுத்திலக்கியம் பெரும்பாலும் செந்தமிழ் நடையில் அமைந்திருக்கும். ஆனால் நாட்டுப்புற இலக்கியம் பெரும்பாலும் பேச்சு நடையில் அமைந்திருக்கும். இத்தகைய தமிழிலக்கியங்களும் நாட்டுப்புற இலக்கியங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டதாகும்.

நாட்டுப்புறப் பாடல்களின் சாயல்களையும், செல்வாக்குகளையும் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. பாரி மகளிர் பாடும் "அற்றைத்திங்கள்" பாடலும், மாண்ட மன்னனுக்காகப் பாடும் "முல்லையும் பூத்தியோ" பாடலும் ஒப்பாரியின் சாயலைக் கொள்வன. ஐங்குறுநூற்றுப் பாடல்களின் திரும்பச் சொல்லல் (சொல்லாட்சி) அல்லது கருத்து முதலியன நாட்டுப்புறப் பாடல்களை நினைவூட்டுவன. நாட்டுப்புறப் பாடல்களில் "ராசாத்தி, தங்கரத்தினமே" என்ற சொற்கள் அடிக்கடி மீண்டும் வருவது போன்று ஐங்குறுநூற்றுப் பாடல்களில் வேழம், எருமை, கண்ணன் போன்ற சொற்கள் மீண்டும் வருகின்றன.

"மாதர் மகளிரும் மைந்தரும் மைந்தற்றுத்
தாதொரு மன்றத் தயர்வர் தழூஉ" (கலி 103, 61-62)

எனும் பாடலடிகள் ஆயர் ஆடும் ஆய்ச்சியர் குரவையினைச் சுட்டுகின்றது.

தாழை வீழ்கயிற்றூசல் தூங்கிக்
கொண்டல் இடுமணல் குரவை முனையின்

என்ற வரிகள் தாழை விழுதில் ஊசலாடியபின் மணற்குன்றில் குரவை ஆடும் பழக்கம் இருந்ததனைச் சுட்டுகிறது. கூத்தும், நாடகமும் சங்க காலத்தில் நிகழ்ந்தன என்பதனை,

"பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்

வெண்ணிலவின் பயன்துய்த்தும்" (பட்டினப்பாலை, 114 – 115)

எனும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

நாட்டுப்புற இலக்கியத்தில் ஒரு வகையான பழமொழியின் செல்வாக்கு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அதிகம் இருக்கக் காணலாம். திருக்குறள் ஒன்றரை அடியில் பழமொழி அமைப்பின் சாயலில் பழமொழிக் கருத்துக்களோடு திகழ்வன. "ஒருவர் பொறை இருவர் நட்பு","கைக்குமாம் தேவரே தின்னினும் கரும்பு" என்று நாலடி நானூற்றிலும் "நாய்பெற்ற தெங்கம் பழம்" பழமொழி நானூற்றிலும்,"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்று திருக்குறளிலும் பழமொழிகளின் செல்வாக்கினை அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரத்தின் திருப்பு மையமாக அமைவது வரிப்பாடலாக அமைந்த இந்த வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப் பாடலேயாகும். சிலப்பதிகார நூல் முழுவதையும் ஆசிரியப்பாவிலேயே பாடிக்கொண்டு வந்த இளங்கோவடிகள் வாய்மொழிப் பாடல் வடிவமாகிய கானல் வரிப்பாடலை மக்கள் எந்நிலையில் பாடினரோ, அந்நிலையிலேயே அமைத்துள்ளார்.

இவ்வாறு காப்பியங்களில் வரிப்பாடல், குரவை, வள்ளை, அம்மானை, கழங்கு, ஊசல், ஏர்மங்கலம், முகவை, ஒப்பாரி போன்ற பாடல்கள் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

கம்பராமாயணத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு உண்டு என்பதைக் கம்பர் பாடல்களால் அறிய முடிகின்றது.

"மூங்கில் இலை மேலே

தூங்கும் பனி நீரே"

என்ற ஏற்றப் பாடலைக் கேட்டுக் கம்பர் மனமகிழ்ந்தார் என்பது செவிவழிச் செய்தியாகும்.

ஆழ்வார்களில் பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோரின் பாடல்களில் நாட்டுப்புறக் கூறுகளின் செல்வாக்கு அதிகம் காணப்பெறுகின்றது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கிப் பாடுகின்றார்.

"மாணிக்கம் கட்டி வயிரம்" இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வைய மளந்தானே தாலேலோ

மன்னரை மேல் கொட்டாய் சப்பாணி
மாயவனே கொட்டாய் சப்பாணி"

என்று சப்பாணிப் பருவத்தைப் பாடுகின்றார். ஆண்டாளின் திருப்பாவைப் பாடல் நாட்டுப் பாடல்களின் வடிவமாகும்.

தாயுமானவர் பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி போன்று ஒன்பது கண்ணிகள் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் ஒரு சொல் இறுதியில் மீண்டும் வரும் பண்பைப் பெறுகின்றது.

"முத்தே பவளமே மொய்த்த பசும் பொற்சுடரே

சித்தே என்னுள்ளத் தெளிவே பராபரமே"

என்று பாடலடிகளில் தாலாட்டின் சிறப்பைக் காணலாம்.

சிற்றிலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு சிறப்பாக இடம் பெற்றுள்ளது. இலக்கிய வகையான அம்மானை, தூது, மாலை, நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி முதலானவை நாட்டுப்புறப் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டவை என்பர் க.நா. சுப்பிரமணியன்.

## 10.4 இசைத்தமிழ் வளர்ச்சி

இசை எனும் சொல்லிற்கு "இசைவிப்பது","வயப்படுத்துவது","ஆட்கொள்வது" என்பது பொருளாகும். எல்லாம் கடந்து எங்குமாய் எல்லாமாய் நீக்கமற நிறைவுற்று விளங்கும் இறைவனையே நம்முன்னோர் இசை வடிவமாகக் கண்டனர். "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் அருள் வாக்காகும்.

தமிழ் மொழியின் மிகப் பழமையான நூலான தொல்காப்பியத்தில் தமிழிசையின் பழமையினைக் காணலாம். தொல்காப்பிய எழுத்ததிகாரம்

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்

உளவென மொழிப இசையொடு சிவணிய

நரம்பின் மறைய என்மனார் புலவர்"

(தொல், எழுத்து, நூன்மரபு, நூற் - 38)

என்ற நூற்பாவில் சுட்டுகிறது. மேலும் பொருளதிகார அகத்திணையியலில் கருப்பொருளைக் கூறுகின்றபொழுது, தமிழிசைக் கருவிகளில் பழமையான யாழினைச் சுட்டியுள்ளார்.

இன்று நமக்குக் கிடைக்கும் இசை பற்றிய குறிப்புகளில் மிகப் பழமையானவை பரிபாடலில் காணலாகும் அரிய இசைக் குறிப்புகளாகும்.

தமிழ்ப்பண்கள் நூற்று மூன்று என்று கொள்ளப்பெறும். இதனை "பண்களாவன பாலையாழ் நூற்றுமூன்று" எனப் பரிமேலழகர் சுட்டுவார். சிலப்பதிகாரத்தில் பழந்தமிழிசையில் நுட்பம் புலப்பெறுகிறது. மேலும், கானல்வரியால் விளங்கும் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முகவரி, திணைநிலவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி முதலிய பல்வேறு இசைப்பாடல்கள் இசையின் மேன்மையினையும்,விரிவினையும் சுட்டுகின்றன. சீவக சிந்தாமணியில் காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் இடைக்காலத் தமிழிசையினைக்

காணமுடிகிறது. மதம்பிடித்த யானையின் சீற்றத்தினை இசையால் தணித்த செய்தி உதயணன் கதையில் பேசப்படுகிறது.

பக்தி இலக்கியத்தில் தமிழிசையின் முழு வளர்ச்சியினையும் காணமுடிகிறது. "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசர், தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி ஆகியோர் கடவுளை இன்னிசையுடன் பாடிப் பரவினர். எண்ணற்ற தேவாரப் பதிகங்களை அருளிச் செய்தனர்.

திருஞானசம்பந்தர் காலத்திலேயே அவரொடு திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரும் சீகாழிப்பதி போந்து, சம்பந்தரை வணங்கி, அவர் பாடியருளிய தேவாரப் பதிகங்களைத் தம் யாழில் இட்டு இசைத்தும், பின்னர்த் தமிழ் நாடெங்கும் சென்று அத்தெய்வப் பாடல்களை இசையுடன் பரப்பியும் போற்றினர் என்பது வரலாறாகும்.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இசை பல்வேறு வகையாக வளர்ந்தது. கி.பி.14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் சந்தப் பாடல்களாலான திருப்புகழை இயற்றினார். பழம் பண்கள் மறைக்கப்பெற்று இராகங்கள் வந்து சேர்ந்தன. மேலும், இராகங்கள் பழைய பண்களிலிருந்து அமைந்து வளர்ந்தவையே என்னும் உண்மை புறக்கணிக்கப் பெற்றது.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட "தியாகையர்" தெலுங்கில் கீர்த்தனங்கள் இயற்றினார். சாகித்தியங்களை உருவாக்கினார். இதுபோன்று சீர்காழி அருணாசலக் கவிராயர் தமிழில் "இராம நாடகம்" எனும் இசைத்தமிழ் நாடக நூலை இயற்றியுள்ளார். கோபால கிருஷ்ண பாரதியார் "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை" எனும் கீர்த்தனை நாடக நூலை இயற்றி இசைத் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன் ஆகிய மூவரும் இசைத் தமிழுக்குரிய பாடல்களை எழுதி உதவினர். இன்றைய தமிழுலகிற்கு யோகி சுத்தானந்த பாரதியார், பெரியசாமித் தூரனார், என்.எஸ்.சிதம்பரம், உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் முதலானவர்களின் கொடை சிறப்புடையதாகும்.

## 10.5 மேடை நாடகங்கள்

படித்து அனுபவிக்கும் கலை என்பதை விடப் பார்த்து அனுபவிக்கும் கலை என்று நாடகக்கலையை வருணிப்பார்கள். இன்றைய நாடகங்களைப் பொதுவாக நூல் வடிவிலான நாடகங்கள் என்றும், மேடை நாடகங்கள் என்றும், வானொலி நாடகங்கள் என்றும் பிரித்துக் காண முடியும். இவற்றில் இன்றைய தமிழ் மேடை நாடகங்கள் ஒளி, ஒலி, காட்சி, அமைப்பு, நாடக அரங்கம் முதலிய துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளது. ஏழெட்டுப் பாடல்களுக்கு மிகாமல் நாடகம் முழுதும் உரைநடையிலேயே நடைபெறுகின்றது. திரைப்படங்களின் போட்டி காரணமாகச் சில திரைப்பட

உத்திகளை எல்லாம் கையாண்டு தமிழ் நாடகம் வளர்ந்து வருகிறது. நாடகத்தையே தொழிலாகக் கொண்டவர்களும், பொழுதுபோக்காகக் கொண்டவர்களும் இன்று பலவித மேடை நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

அன்று தொடங்கி மிக அண்மைக் காலம் வரை நாடகப் பணிக்குத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் டி.கே.எஸ். சகோதரர்கள் ஆவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் “டம்பாச்சாரி நாடகம், தாசில்தார் நாடகம். கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சிகள் நடிப்பு” முதலான சில சமூக நாடகங்கள் அரங்கேற்றம் பெற்றாலும், அந்நாடகங்கள் முழுமையான வளர்ச்சியைப் பெற்று டி.கே.எஸ். சகோதரர்களின் காலத்தில்தான் முழுமை பெற்றது. “குமாஸ்தாவின் பெண்”,“மனிதன்”,“அந்தமான் கைதி”,“முள்ளில் ரோஜா”,“உயிரோவியம்”,“ரத்தபாசம்”, முதலிய பல சமூக நாடகங்களை இவர்கள் நடத்தியுள்ளனர். இவர்களின் “ஔவையார்” என்ற நாடகம் நாடகங்களிலே தனிச் சிறப்பு மிக்கதாகும். நடிக மேதை டி.கே. சண்முகம் “ஔவையாராக” நடித்த இந்த நாடகம் சென்னை வாடகைக் கொட்டகையில் தொடர்ந்து ஆறுமாதங்கள் தினமும் நடந்தது. கல்கியின் “கள்வனின் காதலி”,“சிவகாமியின் சபதம்”, முதலிய நாவல்களையும் இவர்கள் நாடகங்களாக்கி நடத்தி வந்துள்ளனர். இவர்களின் “ராஜ ராஜ சோழன்” தமிழ் நாடக வரலாற்றிலேயே ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய நாடகமாகும். தமிழ் நாடக அமைப்பு, மேடை ஆகியவற்றில் புதுமைகளைச் செய்ததுடன், தமிழ் நாடகங்களுக்கும், நாடக நடிகர்களுக்கும் சமுதாயத்தில் ஒரு சிறப்பான இடத்தைத் தேடித் தந்தவர்களும் இச்சகோதரர்களே ஆவர்.

நாடகத்திற்கெனத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட மற்றொரு பண்பட்ட நடிகர் எஸ்.வி. சகஸ்ரநாமம் ஆவார். என்.எஸ்.கே. நாடக மன்றத்தின் பொறுப்பேற்று இவர் நடத்திய “பைத்தியக்காரன்”,“நாம் இருவர்” ஆகிய நாடகங்களும், சேவா ஸ்டேஜ் மூலமாக இவர் நடத்தி வந்த “வடிவேலு வாத்தியார்”,“பிரசிடென்ட் பஞ்சாட்சரம்”,“தேரோட்டி மகன்”,“நாலுவேலி நிலம்” முதலிய நாடகங்களும் தனிச் சிறப்புடையன.

கே. பாலசந்தரால் எழுதி நடிக்கப்பெற்ற “நீர்க்குமிழி”,“சர்வர் சுந்தரம்”,“எதிர்நீச்சல்”,“மெழுகுவர்த்தி”,“இரு கோடுகள்” ஆகிய நாடகங்களும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் நடிக்கப்பெற்ற “கட்டபொம்மன்”,“வேங்கையின் மைந்தன்”,“வியட்நாம் வீடு” ஆகிய மேடை நாடகங்களும் நன்கு வரவேற்கப்பெற்ற நாடகங்களாகும்.

இன்றைய மேடை நாடகங்களில் தனிக்கவனம் செலுத்திப் புதுமையைச் செய்து வருபவர்களில் “இலங்கேசுவரன்” மனோகர் சிறப்பாகக்

குறிப்பிடத் தக்கவர் ஆவார். இவருடைய "இலங்கேசுவரன்","மாலிக்காபூர்","சூரபத்மன்","சாணக்கியர்" முதலான நாடகங்கள் இன்றைய தமிழ் மேடை நாடக வளர்ச்சிக்குச் சிறந்த பணியாற்றும் நாடகங்களாகும். அகன்ற மேடையில் இப்போது இவர் நடத்தி வரும் நாடகம், மற்றொரு மேடை நாடக வளர்ச்சிப் படியாக அமைந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சமூகச் சீர்திருத்தங்களுக்கும், அரசியல் பிரச்சாரத்திற்கும் தமிழ் மேடை நாடகங்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. விடுதலைக்குப்பின் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஆர்.ராதா போன்றவர்களின் மேடை நாடகப் பணி சிறப்புடையதாகும். நீதி தேவன் மயக்கம், நச்சுக்கோப்பை, இரத்தக் கண்ணீர் முதலான மேடை நாடகங்கள் பொது மக்களில் பெரும்பாலானோரின் மன மாற்றத்திற்குக் காரணமாய் அமைந்தன.

அரசியல்வாதிகளையும், அரசியலையும் கேலி செய்யும் நோக்குடன் பல எள்ளல் நாடகங்கள் இன்றைய தமிழ் நாடக மேடையில் தோற்றம் பெற்றன. அவற்றில் "சோவின் முகமது பின் துக்ளக்". "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" முதலானவை சிறப்பிடம் பெற்றன.

இன்றைய தமிழ்மேடை நாடகங்கள் மறுமலர்ச்சி பெற்று நன்கு வளர்ந்து வந்த போதிலும், மேடை நாடகங்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகக் காணப்பெறுகிறது. அதிலும் சிலவே நூல் வடிவம் பெற்றுள்ளன.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் யாவை ?**

பரமார்த்தகுரு கதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம் போன்ற நூல்கள் வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் ஆகும்.

**2. இலக்கிய உரையாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் யார் ?**

இலக்கிய உரையாசிரியர்களில் அடியார்க்கு நல்லாரும் பரிமேலழகரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

**3. அருணாசலக் கவிராயர் இயற்றிய நாடக நூல்கள் எவை ?**

ராமநாடகம், அசோகமுகி என்பன அருணாசலக் கவிராயர் இயற்றிய நாடகங்கள் ஆகும்.

**4. தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் எனப்படுபவர் யார் ?**

சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர் எனப்படுகிறார்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. இருபதாம் நூற்றாண்டு நாடக வளர்ச்சி பற்றி எழுதுக.**

தமிழ் நாடகக் கலைக்குச் சேவைபுரிந்த சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

பம்மல் சம்பந்த முதலியார் பல நாடகங்களை எழுதியுள்ளார். மனோகரா, லீலாவதி சுலோக்சனா, அடலாதித்தியன், சபாபதி போன்ற நாடகங்கள் தலைசிறந்தன. லீலாவதி சுலோக்சனா உரைநடையில் அச்சிடப்பெற்ற முதல் நாடகமாகும். நாடகச் சுவையை உயர்த்திய பெருமை இவருக்கு உண்டு. சென்னையில் சுகுண விலாச சபை ஒன்றை நிறுவி, பல நாடக சபைகள் தோன்ற வழி காட்டியவர். பம்மல் சம்பந்த முதலியாரை "நாடகத் தந்தை" எனப் போற்றுவர்.

தேசியப் பற்றை மையமிட்டு 20-ஆம் நூற்றாண்டில் பல நாடகங்கள் வளர்ந்தன. தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின் கதரின் வெற்றி, தேசியக்கொடி, பம்பாய் மெயில் போன்றவை குறிக்கத்தகுந்தன. ரா.வெங்கடாசலம் வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை முதல் முழக்கம் என்ற பெயரில் நாடகமாக்கியுள்ளார்.

சமூகச் சீர்திருத்த நாடகங்கள் பல தோன்றின. ராஜம்பாள், மோகன சுந்தரம், சந்திர காந்தா என்பன குறிக்கத்தக்கன.

மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவைகளில் முற்போக்கு நாடகங்கள் குறிக்கத்தக்கன. இவற்றில் கு.சா. கிருஷ்ணசாமியின் அந்தமான் கைதி, நீலகண்டனின் முள்ளில் ரோஜா, சி.என். அண்ணாத்துரையின் வேலைக்காரி, ஓர் இரவு, நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம், நா. சோமசுந்தரத்தின் இன்ஸ்பெக்டர், எஸ்.டி. சுந்தரத்தின் மனிதனும் மிருகமும், கல்கி கிருஷ்ணமூர்த்தியின் கள்வனின் காதலி, கலைவாணரின் ஐம்பதும் அறுபதும் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன.

இலக்கிய நடையில் அமைந்த நாடகங்களும் சுட்டத்தக்கன. இவற்றில் வ.சு.ப. மாணிக்கத்தின் "மனைவியின் உரிமை", மு.வரதராசனாரின் "பச்சையப்பா" விபுலாநந்த அடிகளின் "மதங்க சூளாமணி" என்பன அரிய நாடக நூல்களாகும்.

பிறமொழிக் கதைகளைத் தமிழில் தழுவி மேடை நாடகங்கள் எழுந்தன. இந்நாடக நூல்கள் சில. டி.கே. முத்துச்சாமி என்பவரின் குமாஸ்தாவின் பெண், ஆதி மூலம், சோமசுந்தரம் என்பவரின் "மனிதன்" போன்றவை கருதத்தக்கன. மு. கதிரேசன் செட்டியார் மிருச்சகடிகம் எனும் வடமொழி நூலை மண்ணியல் சிறுதேர் என்று மொழிபெயர்த்துள்ளார். மறைமலையடிகளார் கவிகாளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

இன்றைய தமிழ் நாடகங்களை வளர்க்கும் சாதனங்களில் குறிப்பிடத் தக்கனவாக வானொலி, பத்திரிக்கைகள், தொலைக்காட்சி, நாடகக் குழுக்கள் ஆகியன விளங்குகின்றன.

**2. கீர்த்தனை நாடகங்கள் குறித்து எழுதுக.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ச்சி கண்ட இசை வடிவங்களில் ஒன்று கீர்த்தனை. இந்நூற்றாண்டில் கீர்த்தனை, சிந்து முதலிய

இசைப்பாடல்கள் இலக்கியங்களில் பெரும்பங்கு வகித்தன. தரம் உடைய இலக்கிய வகையாக இந்நூற்றாண்டில் கீர்த்தனை இலக்கியம் திகழ்ந்தது.

கீர்த்தனை பாடியவர்களுள் கோபாலாகிருஷ்ண பாரதி குறிப்பிடத்தக்கவர். சிவனடியார்களின் வாழ்க்கையைப் போற்றிக் கீர்த்தனைகளாகிய இசைப்பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் பாடிய கீர்த்தனை நூல்கள் திருநீலகண்ட நாயனார் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை என்பனவாகும். இவற்றுள் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை குறிப்பிடும் வகையில் சிறப்பு வாய்ந்தது.

நந்தனார் கீர்த்தனையின் இசைப்பாடல்கள் பலரைக் கவர்ந்ததால் பிற்காலத்தில் கீர்த்தனையின் மெட்டில் பிற பாடல்களைப் பாடத் தொடங்கினர். அந்தளவிற்குத் தமிழ் மக்களிடையே கீர்த்தனைப் பாடல் புகழ்பெற்று விளங்கியது.

கீர்த்தனை நாடகங்களுள் அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகக் கீர்த்தனைகள் போற்றற்குரியவை.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. இலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் பற்றி எழுதுக.**

விடை : 10.3 பகுதி முழுவதும் எழுத வேண்டும்.

**2. இசைத்தமிழ் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.**

விடை :10.4 பகுதி முழுவதும் எழுத வேண்டும்.

**3. மேடை நாடகங்கள் பற்றி விவரிக்க.**

விடை : 10.5 பகுதி முழுவதும் எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

**1. சுந்தரம்பிள்ளை எழுதிய நாடக நூல் எது ?**

**2. நாடக இயல் என்ற நூலை எழுதியவர் யார் ?**

**3. தமிழ் நாடகத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார் ?**

**4. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார் ?**

**5. நாடகங்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

# பிரிவு 3-கூறு 11.1 :சிறுகதைகளின் வளர்ச்சி

எட்கர் ஆலன்போ, கோகோல் (Gogal) போன்ற மேலைநாட்டு ஆசிரியப் பெருமக்களால் புதுமை இலக்கியமாகச்“சிறுகதை” உருவெடுத்தது. முதலில் அமெரிக்க நாட்டில் தோன்றிப் பின் உலகெங்கும் பரவியது என்பர். மேனாட்டார் தொடர்பால் தமிழ் இலக்கியத்திலும் சிறுகதை துளிர்த்தது.

## 11.1.1 சிறுகதை

சிறியதாகவும் சுவையில் கதையாகவும் தோன்றிய தனி இலக்கியம் சிறுகதை ஆகும். சிறுகதையென்பது அரைமணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக்கூடிய அளவுடையதாய் இருக்க வேண்டுமெனச் சிறுகதையின் தந்தையான எட்கர் ஆலன்போ குறிப்பிடுவார். கால எல்லையே சிறுகதைக்குரிய இலக்கணமென்று கூற இயலாது;“சிறுகதை என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை ஓர் உணர்ச்சியைக் கருவாகக் கொண்டு உருவாக்கப் பெறுவதாகும். ஒரு பாத்திரம், ஒரு மனவுணர்ச்சி, ஒரு நிகழ்ச்சி என ஏதேனும் ஒன்றை மட்டுமே நிலைக்களனாகக் கொண்டு புனையப் பெறுவது சிறுகதை இலக்கிய வகையாகும். சொற்செட்டு சிறுகதைக்கு அவசியமானதாகும். தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு எனக் கதைப் பின்னல் கூறுகள் செறிவாக இருந்தால்தான் சிறுகதை இலக்கியம் வெற்றிபெறும். வருணனை மிக அளவாக இருத்தல் அவசியம். “சிறுகதை குதிரைப் பந்தயம் போன்று தொடக்கமும், முடிவும், விரைவும் சுவையும் மிக்கதாக விளங்க வேண்டும்” என்று ஸெட்ஜவிக் கூறுவார்.

## 11.1.2 சிறுகதையின் தோற்றம்

வீரமாமுனிவர் பரமார்த்தகுரு கதை என்ற நூலை எழுதியுள்ளார். தாண்டவராய முதலியார் “பஞ்சதந்திரக் கதைகள்” எழுதியுள்ளார். பாரதியார் தாகூரின் கதைகள் சிலவற்றை மொழி பெயர்த்துள்ளார். இவ்வகைக் கதைகள் சிறுகதைகள் உருவாவதற்குரிய சூழலைத் தோற்றுவித்தன.

சிறுகதையில் குணத்திற்கேற்ப வ.வே.சு.ஐயர் எழுதிய “மங்கையர்கரசியின் காதல்” முதலிய கதைகள் அமைகின்றன. இதன் காலம் 1927-ஆம் நூற்றாண்டு ஆகும். இக்கதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள “குளத்தங்கரை அரசமரம்” என்கிற கதை சிறப்பானது.

“மாதவையர்” வ.வே.சு. ஐயர் காலத்தில் வாழ்ந்தவர். “குசிகர் குட்டிக் கதைகள்” என்ற நூலை எழுதியுள்ளார். சிறுகதை வளர்ச்சிக்கு, கல்கி, ராஜாஜி போன்றோரின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

புதுமைப்பித்தன் சிறுகதை இலக்கியத்தில் வரலாறு படைத்தவர். புதுமைப்பித்தன் என்ற பெயருக்கேற்றவாறு எழுத்திலும் கருத்திலும்

உத்தியிலும் புதுமைகள் பல செய்து "சிறுகதை மன்னன்" என்ற சிறப்பினைப் பெற்றவர். அகல்யா, சாபவிமோசனம், பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் போன்ற கதைகள் புதுமைப்பித்தனின் அமர இலக்கியங்களாகும்.

"மணிக்கொடி இதழ்" சிறுகதை வளர்ச்சிக்கு உதவியது. பி.எஸ். இராமையா அவ்விதழைச் சார்ந்து சிறுகதைகள் பல எழுதியுள்ளார். பிச்சமூர்த்தியும், க.நா. சுப்பிரமணியன், சிதம்பர சுப்பிரமணியன், சுகி தேவன் போன்றோர்களும் சிறுகதைத் துறையில் ஈடுபட்டவர்கள் ஆவார்கள்.

தி.ஜானகிராமன் தஞ்சை மக்களை மையமாக வைத்து அன்றாட வாழ்வில் நுட்பமான வாழ்வியல் உணர்வுகளைச் சிறுகதைகளாக்குவதில் வல்லவர். அவருடைய படைப்புகளில் "பசி ஆயிற்று" என்ற படைப்புத் தலை சிறந்ததாகும். லா.ச. ராமாமிர்தம் தனக்கென்று தனி நடையும் தத்துவப் போக்கும் நிறைந்த சிறுகதைகளை எழுதியுள்ளார். அவருடைய படைப்பில் "ஜனனி" குறிப்பிடத் தகுந்த படைப்பாகும். கு. அழகிரிசாமி, அகிலன், மாயாவி, கி.வா. ஜகன்னாதன், தி.ஜ.ர. போன்றோர்கள் புகழ் மிகுந்த எழுத்தாளர்கள் ஆவார்கள். ஆரவாரமற்ற அதே சமயத்தில் அழுத்தமான படைப்புக்களைத் தருவதில் எழுத்தாளர் அகிலன் தலைசிறந்தவர். அவருடைய "நிலவினிலே" என்கிற சிறுகதைத் தொகுப்பு, குறிப்பிடத் தகுந்த படைப்பாகும். ஏதாவது ஒருவகைக் குறிக்கோளுடன் எழுதும் போக்கை மு. வரதராசனிடம் காணலாம்.

### 11.1.3 வ.வே.சு. ஐயர்

வ.வே.சு. ஐயர் சிறுகதையின் கலைவடிவத்துடன் படைப்புக்களைத் தமிழில் தந்தவர் ஆவார். "மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்" (1927) என்ற தலைப்பில் அவர் படைத்த சிறுகதைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை என்னும் அவருடைய சிறுகதை நெஞ்சை உருக்கும் துயரக் கதையாகும். ஒரு பெண் தன் கணவனிடம் மனம் உணராமல் அவன் வேறொருத்தியை மணம் செய்து கொண்டு வாழச் சென்றதாகத் தவறாக எண்ணம் கொள்கிறாள். பின்பு துன்புற்று வருந்தி, தற்கொலை செய்து கொள்கிறாள். இந்நிகழ்ச்சி இக்கதையில் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

### 11.1.4 புதுமைப்பித்தன் (1906 – 48)

சொ. விருத்தாசலம் என்பது இவரது இயற்பெயர் ஆகும். இவர் மேற்கொண்ட புனைபெயர் இவருக்கு முற்றிலும் பொருந்தும் என்ற நிலையில் சிறுகதைகள் அமைந்துள்ளன. இலக்கியத்துறையில் அவருக்கு இருந்த புதுமை ஆர்வமும் படைப்புக் கலையில் அவருக்கு இருந்த பித்தும் பாராட்டாத்தக்கவை. புதிய கருத்துக்கள், அவற்றிற்குப் புதிய வடிவங்கள், அவற்றை எழுதுவதற்கு மேற்கொண்ட புதிய உத்திகள், புதுவகையான நடை, சமுதாய சுகவாசிகளைக் கண்டு ஏங்கிக் கலங்கும் இரக்க நெஞ்சம் போன்றவை இவருடைய சிறுகதைகளுக்குப் புத்தொளி ஊட்டின என்று மு.

வரதராசனார் குறிப்பிடுவார். வழக்கில் உள்ள சொற்களைத் தமிழ்ச் சிறுகதையில் பயன்படுத்தி நடைக்கு மெருகூட்டியவர் புதுமைப்பித்தன் ஆவார். தான் காணும் காட்சிகளையும் கருத்துக்களையும் சிறுகதை வழியாகக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை உடையவர்.நகைச் சுவையும், நையாண்டியும் இயல்பாகவே இவரது சிறுகதையில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மணிக்கொடி பத்திரிக்கையின் காலம் 1933 ஆகும். அக்காலத்தில் இருந்தே இவர் எழுதத் தொடங்கியிருக்கிறார். புராணக் கதைகளோ என்று எண்ணத்தக்கவாறு கதைத் தலைப்புகள் அமைந்திருக்கும். விநாயகர் சதுர்த்தி, பக்த குசேலா போன்றவை எடுத்துக்காட்டுகள் ஆகும்.

தமிழ்ச் சிறுகதைகளில் உலகச் சிறுகதைகளுடன் ஒப்பிடும் அளவு தரமான சிறுகதைகளைப் படைத்தவர் என்று குறிப்பிடுவர். வாழ்க்கையை நேரே பார்த்து எழுதியன என்று மெய்ப்பித்து உயிருடன் துள்ளிக் குதிப்பன போன்றவை புதுமைப்பித்தன் கதைகள். சிறுகதை இலக்கணத்தையே உருவாக்கவல்ல கதைகளை எழுதியவர் அவர் என்று தமிழண்ணல் பாராட்டுவார். எனவே இவரைச் சிறுகதை மன்னன் என்று பாராட்டுவது முற்றிலும் பொருத்தமுடையதாக அமையலாம்.

1933-இலிருந்து 1948 வரை ஏறத்தாழ 15 ஆண்டுகளை எழுத்துப் பணியில் கழித்தவர் புதுமைப்பித்தன்.

### 11.1.5 ஜெயகாந்தன்

புதுமைப்பித்தனைப் போன்றே சிறுகதைத் துறையில் சாதனை படைத்தவர் ஜெயகாந்தன் ஆவார். வாழ்வின் எதார்த்தமான சிக்கல்களைப் படம் பிடித்துக் காட்டுவதில் கைதேர்ந்தவர். இவருடைய சிறுகதைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கோணத்தில் சிறந்து விளங்குகின்றன.

பொருளாதாரத்தின் ஏற்றத்தாழ்வுகளை மனதில் பதியும்படி எடுத்துச் சொல்வதில் வல்லவர். குறிப்பாகக் குடிசை வாழ்க்கையையும், மாளிகை வாழ்க்கையையும் முரண்படுத்தும் திறன் இவருக்கு உண்டு.

தேவன் வருவாரா, பிரம்மோபதேசம் என்னும் கதைகளில் முறையே குழந்தைகளைப் பற்றியும் பிறப்பால் உயர்வு பேசும் சாதி வழக்கம் பற்றியும் பேசுகிறார். சிறுகதைத் துறையில் சிறந்து விளங்குவது போல நாவல் இலக்கியத் துறையிலும் இவர் சாதனை படைத்தவர்.

## 11.2 பத்திரிக்கைகளும் சிறுகதை வளர்ச்சியும்

ஐரோப்பியர் வரவால் தமிழில் உரைநடை வளர்ச்சி சிறப்பினை எய்தியது. உரைநடை வடிவத்தில் உள்ள சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகள் எழுச்சி கண்டன. தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடம் நிறுவியபின் சமயச் சார்பாளர்கள் குறிப்பாகக் கிறித்தவர்கள் இதழ்களைத் தோற்றுவித்தனர்.

விடுதலைக்கு முன் தோன்றிய பல இதழ்களில் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய இதழ்கள் என்ற வரிசையில் மணிக்கொடிக் இதழ்

முன்னிலை வகிக்கிறது. தமிழில் சிறுகதையின் தந்தை என்ற புகழுக்கு உரியவர் புதுமைப்பித்தன் ஆவார். இவர் மணிக்கொடி தொடங்கிய 1933-களிலேயே அவ்விதழில் சிறுகதை எழுதியவர். மணிக்கொடி இதழில் நல்ல கதைகள் வெளியாயின. சிறுகதை வளர்ச்சியில் அதை மணிக்கொடிக் காலம் என்று கூறுவது நோக்கத்தக்கதாகும். இவ்விதழில் எழுதியவர்கள் மணிக்கொடி எழுத்தாளர்கள் என்று சிறப்பிக்கப் பெறுவார்கள். புதுமைப்பித்தன், கு.ப.ராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன், ந. பிச்சமூர்த்தி, ந. சிதம்பரசுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட்ராமன், மௌனி போன்றோர் இக்குழுவில் குறிப்பிடத்தகுந்த சிறுகதை எழுத்தாளர்கள் ஆவார்கள். பி.எஸ். இராமையா மணிக்கொடியின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். இவருடைய நட்சத்திரக் குழந்தை புகழ்பெற்ற சிறுகதையாகும். நட்சத்திரம் ஒன்று விழுவதை குழந்தை காண்கிறது. யாரோ ஒருவர் பொய் சொன்னார்; அதனால் ஒரு நட்சத்திரம் விழுந்தது என்று அழுகிறது. பரந்த உலகியல் அனுபவமும் ஆழ்ந்த பார்வையும் பிறர் இன்ப துன்பங்களை உள்ளவாறு உணரும் உணர்வும் அவருடைய பல சிறுகதைகளிலும் விளங்குகின்றன.

கு.ப. ராசகோபாலன் மணிக்கொடி எழுத்தாளர் குழுவில் ஒருவர். அவர் தெருவில் கிடக்கும் எளிய கற்களைக் கொண்டு அருமையான சிற்பங்களைச் செதுக்கித் தரும் சிற்பி போன்றவர் என்று மு.வ. பாராட்டுவார். க.நா. சுப்பிரமணியன் சிறுகதைகள் எழுதினாலும் விமர்சனத் துறையில் பெரும்புகழ் அடைகிறார். ந. பிச்சமூர்த்தி முள்ளும் ரோஜாவும் என்கிற சிறுகதை படைத்தவர். எனினும் இவர் புதுக்கவிதைகள் துறையிலே சிறந்த பெருமை பெறுகிறார். சிதம்பர சுப்பிரமணியத்தின் “சக்ரவாகம்” முதலிய கதைகள் ஆழம் உடையவை. சிறுகதை வடிவம் தெளிவாக உடையவை என்று கூறுவர்.

“சரஸ்வதி” என்ற இதழ் மணிக்கொடி இதழுக்குப் பிறகு தோன்றியது. இக்கால இலக்கிய வகைகள (Modern Literature) வளர்வதற்குக் களம் அமைத்துத் தந்தது. பிற்காலத்தில் தோன்றிய எழுத்து சி.சு. செல்லப்பாவால் நடத்தப்பெற்றது. 1933-ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் “ஊமைச்சியின் காதல்” என்ற கதையை எழுதிய இராமலிங்கம் என்பார்க்கு முதல் பரிசு கிடைத்தது. கலைமகள், காந்தி, சுதந்திரச் சங்கு, சந்திரோதயம், ஊழியன், தினமணி, ஜோதி, சூறாவளி, தமிழ்மணி. நவசக்தி போன்ற இதழ்களும் சிறுகதைகளின் வளர்ச்சிக்குப் பெருமளவில் துணை நின்றன. பெருமளவில் சிறுகதை இலக்கியப் போட்டிகளை நடத்திச் சிறுகதையை வளர்த்து வருகிறது. தற்போது அமுதசுரபி, கலைமகள், சக்தி போன்ற மாத இதழ்களில் சிறுகதைகள் வருகின்றன. கல்கி, ஆனந்தவிகடன், தினமணிக்கதிர் போன்ற வார இதழ்கள் சிறப்பான முத்திரைச் சிறுகதைகளை வெளியிடுகின்றன.

பத்திரிக்கைகள் (இதழ்கள்) சிறுகதையின் இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல ஊடகமாக உள்ளன.

உலகில் நாவல் இலக்கியத்தின் தாயகமாகத் திகழ்வது இத்தாலி நாடென்பர். 1350-ல் Boccaccio என்பார் Novella Storia of fresh stories என்ற தலைப்பில்“Decameron” என்னும் தன் கதைத் தொகுதிகளை வெளியிட்டார். அது பிற்காலத்தில் உலகெங்கும் பரவியது.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. சிறுகதையின் தந்தை எனப்படுபவர் யார் ?**

சிறுகதையின் தந்தை எட்கர் ஆலன்போ என்பவர்.

**2. வீரமாமுனிவர் எழுதிய சிறுகதையின் பெயர் என்ன ?**

வீரமாமுனிவர் எழுதிய சிறுகதை பரமார்த்தகுரு கதை ஆகும்.

**3. வ.வே.சு ஐயர் எழுதிய சிறுகதை யாது ?**

வ.வே.சு ஐயர் எழுதிய முதல் சிறுகதை மங்கையர்க்கரசியின் காதல் என்பதாகும்.

**4. குசிகர் குட்டிக் கதைகள் என்ற நூலை எழுதியவர் யார் ?**

குசிகர் குட்டிக் கதைகள் என்ற நூலை எழுதியவர் மாதவையா.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. புதுமைப்பித்தன் பற்றிய செய்திகளைத் தருக.**

சொ. விருத்தாசலம் என்பது இவரது இயற்பெயர் ஆகும். இவர் மேற்கொண்ட புனைபெயர் இவருக்கு முற்றிலும் பொருந்தும் என்ற நிலையில் சிறுகதைகள் அமைந்துள்ளன. இலக்கியத்துறையில் அவருக்கு இருந்த புதுமை ஆர்வமும் படைப்புக் கலையில் அவருக்கு இருந்த பித்தும் பாராட்டாத்தக்கவை. புதிய கருத்துக்கள், அவற்றிற்குப் புதிய வடிவங்கள், அவற்றை எழுதுவதற்கு மேற்கொண்ட புதிய உத்திகள், புதுவகையான நடை, சமுதாய சுகவாசிகளைக் கண்டு ஏங்கிக் கலங்கும் இரக்க நெஞ்சம் போன்றவை இவருடைய சிறுகதைகளுக்குப் புத்தொளி ஊட்டின என்று மு. வரதராசனார் குறிப்பிடுவார். வழக்கில் உள்ள சொற்களைத் தமிழ்ச் சிறுகதையில் பயன்படுத்தி நடைக்கு மெருகூட்டியவர் புதுமைப்பித்தன் ஆவார். தான் காணும் காட்சிகளையும் கருத்துக்களையும் சிறுகதை வழியாகக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை உடையவர். நகைச் சுவையும், நையாண்டியும் இயல்பாகவே இவரது சிறுகதையில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மணிக்கொடி பத்திரிக்கையின் காலம் 1933 ஆகும். அக்காலத்தில் இருந்தே இவர் எழுதத் தொடங்கியிருக்கிறார். புராணக் கதைகளோ என்று எண்ணத்தக்கவாறு கதைத் தலைப்புகள் அமைந்திருக்கும். விநாயகர் சதுர்த்தி, பக்த குசேலா போன்றவை எடுத்துக்காட்டுகள் ஆகும்.

தமிழ்ச் சிறுகதைகளில் உலகச் சிறுகதைகளுடன் ஒப்பிடும் அளவு தரமான சிறுகதைகளைப் படைத்தவர் என்று குறிப்பிடுவர். வாழ்க்கையை நேரே பார்த்து எழுதியன என்று மெய்ப்பித்து உயிருடன் துள்ளிக் குதிப்பன

போன்றவை புதுமைப்பித்தன் கதைகள். சிறுகதை இலக்கணத்தையே உருவாக்கவல்ல கதைகளை எழுதியவர் அவர் என்று தமிழண்ணல் பாராட்டுவார். எனவே இவரைச் சிறுகதை மன்னன் என்று பாராட்டுவது முற்றிலும் பொருத்தமுடையதாக அமையலாம்.

1933-இலிருந்து 1948 வரை ஏறத்தாழ 15 ஆண்டுகளை எழுத்துப் பணியில் கழித்தவர் புதுமைப்பித்தன்.

**2. சிறுகதையின் இலக்கணம் குறித்து எழுதுக.**

சிறியதாகவும் சுவையில் கதையாகவும் தோன்றிய தனி இலக்கியம் சிறுகதை ஆகும். சிறுகதையென்பது அரைமணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக்கூடிய அளவுடையதாய் இருக்க வேண்டுமெனச் சிறுகதையின் தந்தையான எட்கர் ஆலன்போ குறிப்பிடுவார். கால எல்லையே சிறுகதைக்குரிய இலக்கணமென்று கூற இயலாது; "சிறுகதை என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை ஓர் உணர்ச்சியைக் கருவாகக் கொண்டு உருவாக்கப் பெறுவதாகும். ஒரு பாத்திரம், ஒரு மனவுணர்ச்சி, ஒரு நிகழ்ச்சி என ஏதேனும் ஒன்றை மட்டுமே நிலைக்களனாகக் கொண்டு புனையப் பெறுவது சிறுகதை இலக்கிய வகையாகும். சொற்செட்டு சிறுகதைக்கு அவசியமானதாகும். தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு எனக் கதைப் பின்னல் கூறுகள் செறிவாக இருந்தால்தான் சிறுகதை இலக்கியம் வெற்றிபெறும். வருணனை மிக அளவாக இருத்தல் அவசியம். "சிறுகதை குதிரைப் பந்தயம் போன்று தொடக்கமும், முடிவும், விரைவும் சுவையும் மிக்கதாக விளங்க வேண்டும்" என்று ஸெட்ஜவிக் கூறுவார்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. பத்திரிகைகளும் சிறுகதை வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வடிவில் எழுதுக.**

விடை : 11.2-ல் உள்ள பகுதி முழுவதும் எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள**

**1. புதுமைப்பித்தன் சிறுகதைகள் சிலவற்றைக் கூறுக.**

**2. சிறுகதை வளர்ச்சிக்கு உதவிய இதழ் எது ?**

**3. சிறுகதை உலகில் புதுமைப்பித்தனைப் போன்றவர் யார் ?**

# பிரிவு 4 – புதினம் – கவிதை – புதுக்கவிதை



## கூறு 12 : இலக்கிய வடிவங்களில் நாவல் பெறும் முதன்மை

மேலை நாடுகளில் புதிதாக வளர்ந்த நாவல் இலக்கியத்துறை தமிழகத்தில் 1879-இல் வேதநாயகம்பிள்ளை என்பவரால் அறிமுகப்படுத்தப் பெற்றது. அவர் எழுதிய நாவலின் பெயர் பிரதாப முதலியார் சரித்திரம் என்பதாகும். அந்நாவலைப் பின்பற்றிக் கமலாம்பாள் சரித்திரத்தை ராஜம் அய்யர் எழுதினார். மாதவ ஐயர் பத்மாவதி சரித்திரத்தை எழுதினார்.

### 12.1 வளர்ச்சி நிலை

வடுவூர் துரைசாமி அய்யங்கார், குப்புசாமி முதலியார், கோதை நாயகி அம்மாள் ஆகியோர் துப்பறியும் கதைகள் மிகுதியாக எழுதினார்கள். மேலை நாட்டில் இதுபோன்ற நாவல்கள் வளர்ச்சியடைந் திருப்பதைப் பார்த்து இவர்களும் இவ்வகை நாவல்களை எழுதினர்.

ஸ்காட் ஆங்கிலத்தில் வரலாற்று நாவல்கள் பல எழுதினார். தமிழில் கல்கி, பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற வரலாற்று நாவல்களைத் தமிழில் எழுதி மக்கள் மனதைக் கவர்ந்த பெரும் எழுத்தாளராக விளங்கினார். கல்கியைப் பின்பற்றி ஜெகசிற்பியன், நா. பார்த்தசாரதி, அரு. இராமநாதன் போன்றோர்கள் பல வரலாற்று நாவல்களை எழுதினார்கள். நாயகி நற்சோணை, பத்தினிக்கோட்டம் போன்ற வரலாற்று நாவல்களை ஜெகசிற்பியன் வழங்கியுள்ளார். பாண்டி மகாதேவி, மணி பல்லவம் போன்ற வரலாற்று நாவல்கள் நா. பார்த்தசாரதியால் எழுதப்பெற்றதாகும். கயல்விழி, வெற்றித்திருநகர், வேங்கையின் மைந்தன் போன்ற முத்திரை பதித்த கதைகளை அகிலன் எழுதியுள்ளமை குறிக்கத் தகுந்ததாகும். அசோகன் காதலி, வீரபாண்டியன் மனைவி போன்ற வித்தியாசமான வரலாற்று நாவல்களை எழுதிச் சாதனை படைத்தவர் அரு. இராமநாதன் ஆவார்.

வரலாற்று நாவல்களை எழுதிப் புகழ்பெற்ற அகிலன், நா. பார்த்தசாரதி ஆகியோர் பாவை விளக்கு, குறிஞ்சி மலர் போன்ற சமூக நாவல்களை எழுதி அதிலும் முத்திரை பதித்துள்ளனர். இலட்சியம் மற்றும் சமுதாயம் சார்ந்த நாவல்களை டாக்டர். மு.வ. எழுதியுள்ளார். கள்ளோ! காவியமோ! மலர்விழி, அகல்விளக்கு, கயமை போன்ற அவரது நாவல்கள் குறிக்கத் தகுந்ததாகும். இவரைப் பின்பற்றிய எழுத்தாளர்களுள் கு. ராஜவேலுவும் ஒருவர்.

சிறுகதை வடிவத்தைவிட மக்கள் பிரச்சனைகளை வெளியிடுவதால் நாவல் என்கிற இலக்கிய வடிவம் முதன்மை பெற்றிருப்பதை நாவல் இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சியினைக் கண்டு கொள்ளலாம்.

## 12.2 வேதநாயகம் பிள்ளையின் புதினங்கள்

தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடி வேதநாயகம் பிள்ளை ஆவார். 1876-ல் தமிழ் நாவல் இலக்கியத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தினார். இவர் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். ஆங்கிலக் கல்வியிலும் ஆங்கிலேயருடனும் தொடர்பு இருந்ததால் ஆங்கிலத்தில் நாவல் இலக்கியம் வளர்ந்திருப்பதை நன்கு கவனித்தறிய முடிந்தது. தமிழிலும் அவ்வாறு நாவல் இலக்கியம் வளர வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு வந்தது. அவர் காலத்தில் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல செய்யுள் இலக்கியங்களை எழுதிக்கொண்டிருந்தார். செய்யுள் இலக்கியத்தை எல்லோராலும் படிக்க முடியாது என்பதற்காக உரைநடை வடிவில் உள்ள நாவல் இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி (1887) போன்ற நாவல்களை எழுதினார். பிரதாப முதலியார் சரித்திரம் காப்பியப் பண்புகளையும், நாவலுக்கு உரிய பண்புகளையும் ஒருங்கே பெற்றுத் திகழ்கிறது. பணக்கார உழவர் போராட்டங்களை இந்நாவல் சுவைபட வளர்த்துச் செல்கிறது. இந்நாவலில் வரும் ஞானம்பாள் என்ற பாத்திரம் வழக்காடியாகக் கதைப் போக்கு அமைகிறது.

சுகுணசுந்தரி வரலாறு தழுவிய அதி அற்புத நாவலாகும் (Histori Ronance) வகையைச் சார்ந்ததாகும். இந்நாவலில் கதைத் தலைவியை ஓர் அரசன் கவர்ந்து செல்கிறான். அவள் ஒரு கன்னி மாடத்தில் புகுந்து கொள்கிறாள. அரசன் தேடிக் கண்டுபிடிக்கிறான். அதற்குள் அரசன் ஆட்சியை அமைச்சன் கைப்பற்ற நினைக்கிறான். போராட்டங்கள் நிகழ்கின்றன.

பிரதாப முதலியார் சரித்திரத்தில் கதாப்பாத்திரம் கதை சொல்லுவது போலவும் (Narration) சுகுண சுந்தரியில் ஆசிரியரே கதை சொல்லுவது போலவும் அமைக்கப் பெற்றுள்ளன. இவரின் தலையூற்று நாவலைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ராஜம் அய்யர் கமலாம்பாள் சரித்திரத்தையும், மாதவையா பத்மாவதி சரித்திரத்தையும் எழுதினார்கள்.

## 12.3 புதினங்களின் வெவ்வேறு வகையான வடிவங்கள்

ஐரோப்பியர் வருகையால் சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகள் தமிழுக்குக் கிடைத்தன. நாவல், புதுமையுடைய இலக்கியம் ஆகையால் புதினம் என்றும் அழைக்கப்பெறும்.

பழங்காலத்தில் காப்பிய வடிவம் கதை கூறுவதற்குப் பயன்பெற்றது. தற்போது காப்பியத்தின் இடத்தைப் புதினம் பிடித்துக் கொண்டதாகக் கூறலாம். முன்னது செய்யுள் வடிவமாகும். பின்னது உரைநடை வடிவமாகும்.



புதினத்திலேயே பல்வேறு வடிவ வகைகள் உள்ளன. பிரதாப முதலியார் சரித்திரம் முதல் நாவலாகும். அந்நாவல் காப்பியப்

பண்புகளையும் புதினத்திற்குரிய பண்புகளையும் பெற்ற கலப்பு வடிவமாகும். பிற்காலத்தில் துப்பறியும் வகையில் நாவல்கள் பல எழுந்தன. வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் போன்றோர் இவ்வகை நாவல்களை எழுதினர். வரலாற்று வகையிலான வடிவ நாவல்களுக்குக் கல்வி முன்னோடி ஆவார். அவரைப் பினபற்றி நா. பார்த்தசாரதி, அகிலன், போன்றோர் எழுதினர். சமூக நாவல் காந்தியம் மற்றும் மார்க்சியம் தழுவி வந்தன. ஜெயகாந்தன் சமூக நாவல் வடிவத்தைக் கையாள்வதில் வெற்றி பெற்றவர். உளவியல் சார்ந்த நாவல் வடிவங்களை ஒரு சிலரே கையாண்டனர். தி. ஜானகிராமன் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். குடும்பப் பாங்கான நாவல் வடிவங்களை லட்சுமி, சிவசங்கரி எழுதினர். இலட்சிய வகை நாவல் வடிவங்களைக் கையாள்வதில் மு.வ. வெற்றி பெற்றவர். அரசியல் வகைப்பாட்டியல் நாவல்கள் பெருக வேண்டும் என்ற “உத்தி முறைக்கு” முக்கியத்துவம் கொடுத்துப் பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டவர் க.நா. சுப்பிரமணியன் ஆவார்.

## 12.4 மேனாட்டு அறிஞர்கள் தமிழ்ப்பணி

### 12.4.1. ராபர்ட்டி நொபிலி

இத்தாலி நாட்டைச் சார்ந்தவர். கி.பி.1606-இல் தமிழகம் வந்தார். இவர் இயேசு சபையைச் சார்ந்த குரு ஆவார். “தத்துவ போதகர்” என்று தம் பெயரையே மாற்றி அமைத்துக் கொண்டவர். இயேசுநாதர் சரித்திரம், தமிழ் போர்த்துக்கீசிய அகராதி போன்றவைகளை இயற்றினார். ஆத்ம நிர்ணயம், ஞானோபதேச காண்டம் போன்ற உரைநடை நூல்களையும் இயற்றியவர்.

### 12.4.2. சீகன் பால்கு

செருமன் நாட்டைச் சேர்ந்தவர். 1709 இல் தரங்கம்பாடி வந்தார். அச்சுப்பொறியைக் கொண்டுவந்து முதலில் தமிழ்ப்புத்தகம் அச்சிட்டு வெளியிட்டவர் இவரே ஆவார். “தமிழ் இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு” (Comparative Study of Tamils Latin Grammer) என்ற நூலையும் தமிழ் இலத்தீன் அகராதி என்ற நூலையும் எழுதியவர்.

### 12.4.3. வீரமாமுனிவர்

கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். இத்தாலி நாட்டைச் சார்ந்த இவர் கி.பி. 1700-இல் தமிழகம் வந்தார். ஏறத்தாழ 37 ஆண்டுகளாகத் தமிழகத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றிய இயேசு சபைக் குரு ஆவார். எ், ஒ் என்பன குறில். புள்ளியை எடுத்துவிட்டால் ஏ.ஓ நெடில் ஆகும். இம்முறையை மாற்றி எ,ஒ – ஏ, ஓ என்ற முறையில் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர். தேம்பாவணிக்காப்பியம் இவரால் இயற்றப் பெற்றதாகும். இவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் குட்டித் தொல்காப்பியம் எனச் சிறப்பிக்கப் பெறும். இவர் எழுதிய சதுரகராதியே தமிழில் தோன்றிய முதல் அகராதி ஆகும். இவருடைய

திருக்குறள் மொழி பெயர்ப்புக் குறிப்பிடத் தகுந்தது. திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை போன்ற செய்யுள் நூல்களையும் பரமார்த்த குருகதை, வேதியர் ஒழுக்கம் போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

### 12.4.4. எல்லீசர்

தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். தமிழ்ச்சுவடிகளைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் வல்லவர். திருக்குறளுக்கு முதல் 13 அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் அரிய உரை எழுதியுள்ளார்.

### 12.4.5. ரேணியஸ்

ஜெர்மன் நாட்டைச் சார்ந்த இவர் லூத்தரன் மிஷனைச் சார்ந்தவர். "வேத உதாரணத் திரட்டு" போன்ற உரைநடை நூல்களை எழுதியவர்.

### 12.4.6. டாக்டர். ஜி.யு.போப்

திருவாசகம், திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுட்கள் சிலவற்றை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்துள்ளார். தம் கல்லறையில் "ஒரு தமிழ் மாணவர்" என்று எழுதுவதைப் பெருமையாகக் கொண்டவர்.

### 12.4.7. கால்டுவெல் ஐயர்

அயர்லாந்து நாட்டைச் சார்ந்தவர். மதுரையிலும், திருநெல்வேலியிலும் சமயப்பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றியவர். "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (The Camparative Grammer of Dravidian Languages) என்ற ஒப்பற்ற நூலை எழுதியவர்.

### 12.4.8. பிற அறிஞர்கள்

கிரால் என்ற செர்மானியர் திருக்குறளின் முப்பாலை மொழி பெயர்த்துள்ளார். உவின்ஸ்போ திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார். ஏரியல், லேமிலேசர் என்பவர்கள் திருக்குறளைப் பிரெஞ்சு மொழியில் தந்துள்ளனர். பெர்சிவல், வின்சுலோ போன்றவர்கள் அகராதிப் பணியில் ஈடுபட்டவர்கள் ஆவார்கள்.

### 12.4.9 தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள்

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களில் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, வேதநாயகம் பிள்ளை, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் போன்றோர் குறிக்கத் தகுந்தவர்கள்.

1827-இல் பிறந்தவர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை. தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய "The Pilgrims Progress" என்ற நூலைத் தழுவி இரட்சண்ய யாத்திரிகம் என்ற நூலை எழுதியவர். கிறிஸ்துவக் கம்பன் என்று சிறப்பிக்கப் பெறுபவர்.

வேதநாயகம் பிள்ளை மாயூரத்தில் இருந்தவர். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் நண்பர். பிரதாப முதலியார் சரித்திரம் என்ற

முதல் தமிழ் நாவலை எழுதியவர். 45 அதிகாரங்களைக் கொண்ட நீதி நூல் இவர் எழுதியிருக்கிறார். பெண்மதிமாலை, தேவமாதா அந்தாதி, சர்வ சமயக் கீர்த்தனை போன்ற 13 தமிழ் நூல்களைத் தமிழுக்கு வழங்கியுள்ள மாண்பாளர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்கிற இசைப் பேரிலக்கண நூலை இயற்றியுள்ளார்.

பெத்லகேம் குறவஞ்சி வேதநாயக சாஸ்திரியாரால் உருவாக்கப் பெற்றதாகும். இவரே சென்னைப் பட்டணப் பிரவேசம் என்கிற நொண்டி நாடகத்தையும் எழுதியுள்ளார்.

இவ்வாறு வெளிநாட்டுக் கிறிஸ்துவத் தமிழ் அறிஞராலும், தமிழ்நாட்டுக் கிறிஸ்துவத் தமிழ் அறிஞராலும் தமிழுக்குப் பல சிறப்பபுக்கள் கிடைத்தன.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. முதல் மூன்று நாவல்கள் யாவை ? அவற்றை எழுதியவர்கள் யார் ?**

பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் என்பவை முதல் மூன்று நாவல்களாகும். அவற்றை முறையே வேதநாயகம் பிள்ளை, ராஜம் ஐயர், மாதவய்யா ஆகியோர் எழுதினர்.

**2. துப்பறியும் நாவல்களை எழுதிய சில எழுத்தாளர்களைக் குறிப்பிடுக.**

வடுவூர் துரைசாமி அய்யங்கார், குப்புசாமி முதலியார், கோதை நாயகி அம்மாள் ஆகியோர் துப்பறியும் நாவல்கள் எழுதியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

**3. டாக்டர் மு. வரதராசனார் எத்தகைய நாவல்களை எழுதினார் ?**

டாக்டர் மு. வரதராசனார் சமுதாயம் சார்ந்த நாவல்களை எழுதினார்.

**4. வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன ?**

வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி என்பதாகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. வேதநாயகம் பிள்ளையின் புதினங்கள் பற்றி எழுதுக.**

தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடி வேதநாயகம் பிள்ளை ஆவார். 1876-ல் தமிழ் நாவல் இலக்கியத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தினார். இவர் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். ஆங்கிலக் கல்வியிலும் ஆங்கிலேயருடனும் தொடர்பு இருந்ததால் ஆங்கிலத்தில் நாவல் இலக்கியம் வளர்ந்திருப்பதை நன்கு கவனித்தறிய முடிந்தது. தமிழிலும் அவ்வாறு நாவல் இலக்கியம் வளர வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு வந்தது. அவர் காலத்தில் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல செய்யுள் இலக்கியங்களை எழுதிக்கொண்டிருந்தார். செய்யுள் இலக்கியத்தை எல்லோராலும் படிக்க முடியாது என்பதற்காக உரைநடை வடிவில் உள்ள நாவல் இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி (1887) போன்ற நாவல்களை எழுதினார். பிரதாப முதலியார் சரித்திரம் காப்பியப் பண்புகளையும், நாவலுக்கு உரிய பண்புகளையும் ஒருங்கே பெற்றுத் திகழ்கிறது. பணக்கார உழவர் போராட்டங்களை இந்நாவல் சுவைபட வளர்த்துச் செல்கிறது. இந்நாவலில் வரும் ஞானம்பாள் என்ற பாத்திரம் வழக்காடியாகக் கதைப் போக்கு அமைகிறது.

சுகுணசுந்தரி வரலாறு தழுவிய அதி அற்புத நாவலாகும் (Histori Ronance) வகையைச் சார்ந்ததாகும். இந்நாவலில் கதைத் தலைவியை ஓர் அரசன் கவர்ந்து செல்கிறான். அவள் ஒரு கன்னி மாடத்தில் புகுந்து கொள்கிறாள. அரசன் தேடிக் கண்டுபிடிக்கிறான். அதற்குள் அரசன் ஆட்சியை அமைச்சன் கைப்பற்ற நினைக்கிறான். போராட்டங்கள் நிகழ்கின்றன.

பிரதாப முதலியார் சரித்திரத்தில் கதாப்பாத்திரம் கதை சொல்லுவது போலவும் (Narration) சுகுண சுந்தரியில் ஆசிரியரே கதை சொல்லுவது போலவும் அமைக்கப் பெற்றுள்ளன. இவரின் தலையூற்று நாவலைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ராஜம் அய்யர் கமலாம்பாள் சரித்திரத்தையும், மாதவையா பத்மாவதி சரித்திரத்தையும் எழுதினார்கள்.

**2. தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் செய்த தமிழ்த்தொண்டு பற்றி எழுதுக.**

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களில் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, வேதநாயகம் பிள்ளை, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் போன்றோர் குறிக்கத் தகுந்தவர்கள்.

1827-இல் பிறந்தவர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை. தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய "The Pilgrims Progress" என்ற நூலைத் தழுவி இரட்சண்ய யாத்திரிகம் என்ற நூலை எழுதியவர். கிறிஸ்துவக் கம்பன் என்று சிறப்பிக்கப் பெறுபவர்.

வேதநாயகம் பிள்ளை மாயூரத்தில் இருந்தவர். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் நண்பர். பிரதாப முதலியார் சரித்திரம் என்ற முதல் தமிழ் நாவலை எழுதியவர். 45 அதிகாரங்களைக் கொண்ட நீதி நூல் இவர் எழுதியிருக்கிறார். பெண்மதிமாலை, தேவமாதா அந்தாதி, சர்வ சமயக் கீர்த்தனை போன்ற 13 தமிழ் நூல்களைத் தமிழுக்கு வழங்கியுள்ள மாண்பாளர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்கிற இசைப் பேரிலக்கண நூலை இயற்றியுள்ளார்.

பெத்லகேம் குறவஞ்சி வேதநாயக சாஸ்திரியாரால் உருவாக்கப் பெற்றதாகும். இவரே சென்னைப் பட்டணப் பிரவேசம் என்கிற நொண்டி நாடகத்தையும் எழுதியுள்ளார்.

இவ்வாறு வெளிநாட்டுக் கிறிஸ்துவத் தமிழ் அறிஞராலும், தமிழ்நாட்டுக் கிறிஸ்துவத் தமிழ் அறிஞராலும் தமிழுக்குப் பல சிறப்பபுக்கள் கிடைத்தன.

குறிப்பு

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. மேலைநாட்டுக் கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பணி குறித்துக் கட்டுரை வரைக.**

விடை : 12.4.1 முதல் 12.4.8 வரை உள்ள பகுதியை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள் :**

1. **கல்கி எழுதிய வரலாற்று நாவல்கள் யாவை ?**
2. **தேம்பாவணியை எழுதியவர் யார் ?**
3. **தம்மை ஒரு தமிழ் மாணவர் என்று குறிப்பிடச் சொன்னவர் யார் ?**
4. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?**
5. **கிறிஸ்தவக் கம்பன் என்றழைக்கப்படுகிறவர் யார் ?**

# பிரிவு 4 –கூறு 13 :இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. எளிமையும் நாட்டுப் பாடல் மரபும், இசையும், சமுதாய உணர்வும் பாட்டிலக்கியத்தில் மறுமலர்ச்சி பெற்றன. "கவிதை" எனும் சொல்லாட்சி இருபதாம் நூற்றாண்டில் பெருவழக்காக மாறியது.

## 13.1 மரபுக்கவிதை

யாப்பின் அடிப்படையில் அமையும் கவிதைகள் மரபுக் கவிதைகள் எனப்படும். குறிப்பிட்ட பாவகையினால் புனையப்பெற்ற கவிதைகள் இவ்வகையில் இடம் பெற்றன. இருபதாம் நூற்றாண்டு மரபுக்கவிதைகள் பொதுவாக "கவிதை" பாட்டிலக்கியம் என்ற சொற்களால் வழங்கப் பெற்றன. இத்தகு கவிதை வளர்ச்சிக்கு எழுச்சியூட்டியவர் பாரதியார் ஆவார். பாரதி, நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல் என்ற நெறியை உருவாக்கினார். சொல் புதிதாய், சுவை புதிதாய் சோதிமிக்க நவ கவிதைகள் படைத்தார். இந்நூற்றாண்டின் கவிதைப் போக்கை மாற்றி அமைத்த பெருமை பாரதியையே சாரும். பாரதியின் கவியில் உந்தப் பெற்று மரபுக் கவிதையாளர்கள் பலர் தோன்றினர். அவர்களில் பாரதிதாசன் குறிப்பிடத் தக்கவர் ஆவார். இருபெரும் கவிஞர்களது ஆளுகையில் மரபுக்கவிதை வளம் கண்டது. தனக்கெனத் தனித்துவப் போக்கை இவ்விதக் கவிதை உருவாக்கிக் கொண்டது. செடியாய்த் துளிர்விட்ட கவிதை பாரதிதாசனைத் தொடர்ந்து கொடிப் பந்தலாய்ப் படர்ந்தது.

பாரதியின் கவிதைகள் அரசியல் விடுதலையையும் பாவேந்தரின் கவிதைகள் சமுதாய விடுதலையையும் இலக்காகக் கொண்டு எழுந்தன. இவர்களது கவித்துவத்தால் மரபுக் கவிதை வரலாறு பரம்பரையாகத் தொடர்ந்தது. பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என மரபுக் கவிதையாளர்கள் பகுத்துரைக்கப் பெற்றனர். பாரதி பரம்பரை என்ற வரிசையில் நாமக்கல் கவிஞர், கவிமணி சுத்தானந்த பாரதியார், ச.து.ச. யோகியார், ரகுநாதன் முதலானோர் அடங்குவர். பாரதிதாசன் பரம்பரையில் சுரதா, முடியரசன், வாணிதாசன், தமிழ் ஒளி போன்றோர் இடம்பெறுவர். மரபுக் கவிதையாளர்களின் திரையிசையில் முத்திரை பதித்தவர் கவிஞர் கண்ணதாசன் ஆவார். இவர்களைப் பற்றிப் பின்வரும் பகுதிகளில் விரிவாகக் காணலாம்.

### 13.1.1 மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882 – 1921)

மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் தலைசிறந்தவர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். எட்டையபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகவாகத் தோன்றியவர். 39 ஆண்டுகளும் முற்றுப் பெற

வாழாத கவிஞர். அவரது கவிதைகளும் உரைநடை நூல்களும் வரலாற்றில் புகழொளியாக நிலைபெற்றுள்ளன.

ஏறத்தாழ 7 மொழிகளைக் கற்றவர். தொடக்கத்தில் தமிழாசிரியராகவும் பின் பத்திரிக்கைகளில் ஆசிரியராகவும் திகழ்ந்தவர்.

### 13.1.1.1 தேசியக் கவிஞர்

கவிஞர் வாழ்ந்த காலத்தில் இந்திய தேசம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது.

என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம்!
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்!

என்று பாடி மக்களுக்குச் சுதந்திர வேட்கையை ஊட்டியவர்.

பாரததேசத்தில் வேறுபாடுகள் மற்றும் பன்மைக்கு இடையில் ஒருமைப்பாட்டினைப் பாடியவர்.

### 13.1.1.2 தமிழ்க் கவிஞர்

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்று தமிழரின் இனிமையைப் போற்றுகிறார்.

### 13.1.1.3 சமுதாயக் கவிஞர்

“எல்லோரும் ஓர் நிறை – எல்லோரும் ஓர் நிலை – எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்ற சிந்தனை உடையவர்.

ஏழை என்றும் அடிமை என்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே

என்று வேற்றுமையற்ற சமுதாயத்தை விரும்பினார். சாதி, சமய வேறுபாடுகளையும் விரும்பவில்லை.

### 13.1.1.4 பக்திக் கவிஞர்

இவர் இயல்பாகவே சக்தி வழிபாட்டில் தோய்ந்தவர். இவருடைய கண்ணன் பாட்டுப் புதுமையான பக்தி இலக்கியமாகும்.

காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்று தாயுமானவர் போன்று அத்வைதச் சிந்தனையுடன் பாடியவர். “பாஞ்சாலி சபதம்” இயற்றிக் காப்பியக் கவிஞராகவும் “குயில்பாட்டு” இயற்றித் தத்துவக் கவிஞராகவும் “புதுக்கவிதை” மற்றும் கதைகள் எழுதி அத்துறையிலும் முன்னோடிக் கவிஞராகவும் திகழ்பவர் பாரதியார். ஆகவே,“மகாகவி” என்ற சிறப்பைப் பெற்றவர்.

## 13.1.2 பாரதிதாசன் (1891 – 1964)

இவரது இயற்பெயர் கனக சுப்புரெத்தினம் ஆகும். 18-ம் வயதில் ஆசிரியர் ஆனவர். புதுவையைச் சேர்ந்தவர். பாரதியின் வேண்டுகோளுக்கு இணங்க "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்ற பாடலை இயற்றினார். இப்பாட்டின் அழகும் பொருளும்தான் இவரைப் பாரதிதாசன் எனத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியது.

### 13.1.2.1 காப்பியக் கவிஞன்

சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல், எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி, பாண்டியன் பரிசு போன்ற சிறு காப்பியங்களை இயற்றிக் காப்பியக் கவிஞனாக விளங்குகிறார்.

### 13.1.2.2 தமிழ்க் கவிஞன்

"தமிழுக்கும் அமுதென்று பேர் எங்கள் உரிமைக்குச் செம்பயிர்க்கு வேர்" என்றும்,"இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது" என்றும் "சங்கே முழங்கு, சங்கே முழங்கு எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்றும் குரல் கொடுத்தவர். தமிழ் - தமிழர் வாழ்வு எனப் பாவேந்தர் படைப்புகள் தமிழுணர்வு மேலோங்கும் வகையில் அமைந்துள்ளன.

### 13.1.2.3 கற்பனைக் கவிஞன்

அழகின் சிரிப்பு இவரது முத்திரைப் படைப்பாகும். பகலவன் ஒளி இப்பாரிலே பட்டுப் பரவும் பொழுது

அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்கொடி, பச்சைப் பட்டே!
குருவிகள், தங்கக் கட்டி!
குளிர்மலர், மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை
நிலவுமேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பாரடா நீ!

எனப் பாவேந்தன் வியந்து உரைக்கின்றார்.

### 13.1.2.4 சமூகக் கவிஞன்

புதிய உலகை அமைப்போம் பழைய சீர்கெட்ட அமைப்பை அழிப்போம் என எழுச்சியுடன் பாடுகிறார்.

"புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"

சாதி சமய வேறுபாடுகளை வெறுப்போடு பாடுகிறார். மூடநம்பிக்கைகளைச் சாடுகிறார். பொருந்தாத் திருமணம், பால்யவிவாகம் போன்றவற்றை

எதிர்த்துப் பெண் சமூக உரிமைக்குக் குரல் கொடுக்கின்றார். விதவைத் திருமணத்தை ஆதரிக்கின்றார்.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதயப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ"

எனப் புரட்சிக்கு வித்திடுகின்றார்.

பாரதிக்குத் தாசனாகி பாரதிதாசனானவர். பிற்காலத்தில் தனக்கென ஒரு பரம்பரையைத் தோற்றுவிக்கின்றார். "புரட்சிக்கவி" என்ற காப்பியத்தைப் பாடியதோடு மட்டுமல்லாமல், புரட்சிக் கருத்துக்களைக் கூறியதோடு மட்டுமல்லாமல் புரட்சிக் கவிஞர் என்ற பேறும் பெற்றார். இசைத் தமிழுக்கு இவர் பாடல் பாடியமை குறிக்கத் தக்கதாகும். "இவருடைய கவிதைகளில் இனிய இசைநயம் உண்டு; உணர்த்தும் கருத்துக்களில் உணர்ச்சிப் புயல் வீசும், அவர் கையாளும் சொற்கள் மக்களுக்கு நன்கு பழக்கமான எளிய சொற்களே. ஆனால் அந்தச் சொற்கள் அவருடைய கவிதையில் அமையும் பொழுது நிகரற்ற வேகம் கொண்டிருக்கும்" என்று டாக்டர் மு.வ. தமது இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

## 13.1.3 நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (1888 – 1972)

திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது என்று இராஜாஜி கூறுவார். பாரதியார் பாரத தேசத்தையும், தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் வாழ்த்திப் பாடியுள்ளார். நாட்டுணர்ச்சியும், மொழியுணர்ச்சியும் வளருவதற்கு அவை உதவியாக இருந்தன. பாரதிதாசன் தமிழைப் போற்றியும் தமிழ்நாட்டைப் போற்றியும் உணர்ச்சியுடன் பாடினார். "தமிழ் இயக்கம்" என்ற தனித் தொகுதியாக மொழியுணர்ச்சிப் பாடல்களும் பாடியுள்ளார். நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையோ "தமிழின் இதயம்" என்று தமிழரிடையே இன உணர்ச்சியை ஊட்டவல்ல பாடல்களைப் பாடியுள்ளார்.

"அவனும் அவளும்" என்பது நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் காப்பியமாகும். சங்கொலி, தமிழ்த்தேர் என்னும் தொகுப்புக்களும் நல்ல பாடல்களைக் கொண்டுள்ளன.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனது மொழியாகும் -
அன்பேஅவனது வழியாகும்"

என்று பாடுவது மனதில் பதிவதாக உள்ளது. அவருக்குப் புகழ் தேடித் தந்தவை "காந்தி அஞ்சலி" என்பதிலுள்ள பாடல்களாகும். காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது,

"கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமின்றி வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்"

"காந்தி என்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே"

என்ற பாடலைப் பாடி தமிழ் மக்கள் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த புலவர் ஆவார். இது ஒரு சந்தப் பாடலாகும். குழந்தைகள் பாடுவதற்கு ஏற்ற இசையின்பம் இவரது பாடல்களில் அமைந்துள்ளன.

தமிழனென்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா

என எழுச்சியூட்டும் வகையில் பாடல்களைப் பாடியுள்ளார். பாரதத் தலைவர்கள் பலரைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. மரபுக்கவிஞர்கள் யாருடைய பரம்பரைகள் என்றழைக்கப்பட்டனர் ?**

பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என்று மரபுக் கவிஞர்கள் அழைக்கப்பட்டனர்.

**2. புதிய உலகு அமைக்கப் பாரதிதாசன் கூறும் செய்தி என்ன ?**

புதிய உலகு அமைப்போம் என்றும் அதற்காகக் கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் என்றும் கூறுகிறார்.

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. மரபுக்கவிதை வளர்ச்சி குறித்து எழுதுக.**

யாப்பின் அடிப்படையில் அமையும் கவிதைகள் மரபுக் கவிதைகள் எனப்படும். குறிப்பிட்ட பாவகையினால் புனையப்பெற்ற கவிதைகள் இவ்வகையில் இடம் பெற்றன. இருபதாம் நூற்றாண்டு மரபுக்கவிதைகள் பொதுவாக "கவிதை" பாட்டிலக்கியம் என்ற சொற்களால் வழங்கப் பெற்றன. இத்தகு கவிதை வளர்ச்சிக்கு எழுச்சியூட்டியவர் பாரதியார் ஆவார். பாரதி, நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல் என்ற நெறியை உருவாக்கினார். சொல் புதிதாய், சுவை புதிதாய் சோதிமிக்க நவ கவிதைகள் படைத்தார். இந்நூற்றாண்டின் கவிதைப் போக்கை மாற்றி அமைத்த பெருமை பாரதியையே சாரும். பாரதியின் கவியில் உந்தப் பெற்று மரபுக் கவிதையாளர்கள் பலர் தோன்றினர். அவர்களில் பாரதிதாசன் குறிப்பிடத் தக்கவர் ஆவார். இருபெரும் கவிஞர்களது ஆளுகையில் மரபுக்கவிதை வளம் கண்டது. தனக்கெனத் தனித்துவப் போக்கை

இவ்விதக் கவிதை உருவாக்கிக் கொண்டது. செடியாய்த் துளிர்விட்ட கவிதை பாரதிதாசனைத் தொடர்ந்து கொடிப் பந்தலாய்ப் படர்ந்தது.

பாரதியின் கவிதைகள் அரசியல் விடுதலையையும் பாவேந்தரின் கவிதைகள் சமுதாய விடுதலையையும் இலக்காகக் கொண்டு எழுந்தன. இவர்களது கவித்துவத்தால் மரபுக் கவிதை வரலாறு பரம்பரையாகத் தொடர்ந்தது. பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என மரபுக் கவிதையாளர்கள் பகுத்துரைக்கப் பெற்றனர். பாரதி பரம்பரை என்ற வரிசையில் நாமக்கல் கவிஞர், கவிமணி சுத்தானந்த பாரதியார், ச.து.ச. யோகியார், ரகுநாதன் முதலானோர் அடங்குவர். பாரதிதாசன் பரம்பரையில் சுரதா, முடியரசன், வாணிதாசன், தமிழ் ஒளி போன்றோர் இடம்பெறுவர். மரபுக் கவிதையாளர்களின் திரையிசையில் முத்திரை பதித்தவர் கவிஞர் கண்ணதாசன் ஆவார். இவர்களைப் பற்றிப் பின்வரும் பகுதிகளில் விரிவாகக் காணலாம்.

**2. பாரதிதாசன் சமூகக் கவிஞன் என்பதை விளக்குக.**

புதிய உலகை அமைப்போம் பழைய சீர்கெட்ட அமைப்பை அழிப்போம் என எழுச்சியுடன் பாடுகிறார்.

"புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"

சாதி சமய வேறுபாடுகளை வெறுப்போடு பாடுகிறார். மூடநம்பிக்கைகளைச் சாடுகிறார். பொருந்தாத் திருமணம், பால்யவிவாகம் போன்றவற்றை எதிர்த்துப் பெண் சமூக உரிமைக்குக் குரல் கொடுக்கின்றார். விதவைத் திருமணத்தை ஆதரிக்கின்றார்.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதயப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ"

எனப் புரட்சிக்கு வித்திடுகின்றார்.

பாரதிக்குத் தாசனாகி பாரதிதாசனானவர். பிற்காலத்தில் தனக்கென ஒரு பரம்பரையைத் தோற்றுவிக்கின்றார். "புரட்சிக்கவி" என்ற காப்பியத்தைப் பாடியதோடு மட்டுமல்லாமல், புரட்சிக் கருத்துக்களைக் கூறியதோடு மட்டுமல்லாமல் புரட்சிக் கவிஞர் என்ற பேறும் பெற்றார். இசைத் தமிழுக்கு இவர் பாடல் பாடியமை குறிக்கத் தக்கதாகும். "இவருடைய கவிதைகளில் இனிய இசைநயம் உண்டு; உணர்த்தும் கருத்துக்களில் உணர்ச்சிப் புயல் வீசும், அவர் கையாளும் சொற்கள் மக்களுக்கு நன்கு பழக்கமான எளிய சொற்களே. ஆனால் அந்தச் சொற்கள் அவருடைய கவிதையில் அமையும் பொழுது நிகரற்ற வேகம் கொண்டிருக்கும்" என்று டாக்டர் மு.வ. தமது இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. பாரதியார் மரபுக்கவிதையில் பெறும் இடம்பற்றி விளக்குக.**

விடை : 13.1.1 முதல் 13.1.1.4 வரை உள்ள கருத்துக்களை எழுதுக.

**2. நாமக்கல் கவிஞர் மரபுக்கவிதை வரலாற்றில் எத்தகைய சிறப்புப் பெறுகிறார் என்பதை விளக்குக.**

விடை : 13.1.3 - இல் உள்ள பகுதியை எழுதுக.

**பயிற்சி வினாக்கள்**

**1. பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் சிலரைக் குறிப்பிடுக.**

**2. என்று தணியும் இந்தச்சுதந்திர தாகம் என்று பாடியவர் யார் ?**

**3. பாஞ்சாலி சபதம் என்ற செய்யுட் பகுதியை எழுதியவர் யார் ?**

**4. காந்தியைப் பற்றி நாமக்கல் கவிஞர் என்ன கூறுகிறார் ?**

# பிரிவு 4 - கூறு 14 :14.1 முடியரசன்

மரபுக் கவிஞர்களுள் இன்றைய நிலையில் மிகச் சிறந்த கவிஞராகப் போற்றப் பெறுபவர் முடியரசன் ஆவார். புதுக்கவிதைத் துறைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தவர். மரபுக் கவிதைகள் எழுதிய கவிஞர்கள் பலர் புதுக்கவிதை எழுதத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்தவர். ஆனால் இவர் மரபு நிலையில் மாறாது கவிதை எழுதினார். “மறந்தும் புறந்தொழா மாந்தர்” போன்று விளங்கினார். பூங்கொடி, வீரகாவியம் என்பன இவர் இயற்றிய காப்பியங்கள். இவரது கவிதைகள் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன.

“ஊன்றுகோல் எனப் பண்டித மணியைப் பற்றி ஒரு காப்பியம் இயற்றியுள்ளார். பாவேந்தர் போன்று தமிழ்ப்பற்று மிக்க பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

முடியரசன் கவிதைகள், கவியரங்கில் முடியரசன் என்பன இவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும்.“பிறைமதியை விண்ணிடத் தெறிந்த வெள்ளைப் பூசணிக் கீற்றோ” என்று கற்பனை நயம் மிகப் பாடுகிறார்.

முடியரசனின் பூங்கொடிக் காவியம் மொழிப் போராட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் எழுந்த தேசியக் காப்பியமாகப் பூங்கொடி விளங்குகிறது. மணிமேகலைக் காப்பியத்தின் மறு வடிவமாக பூங்கொடிக் காப்பியம் அமைந்துள்ளதை உணரலாம்.

## 14.2 புதுக்கவிதை

மேலை நாடுகளில் “Free Verse” என்கிற புதுக்கவிதை வால்ட் விட்மனால் தோற்றுவிக்கப் பட்டது. புதிதாகத் தோன்றிய இலக்கியக் கோட்பாடுகள் புதுக்கவிதையை ஆதரித்தன. ஆங்கிலக் கல்விமுறையால் தமிழுக்குள் புதுக்கவிதை நுழைந்தது. “யாப்பைப் பற்றிக் கவலைப்படாதது, கருத்து வடிவமே வடிவமெனக் கொண்டது, சில சமயம் சித்திரக் கதைகளை ஒப்பது, சிலேடையில் மீண்டும் ஈடுபடுவது, ஒளிவீச்சுப் போல அறிவு வீச்சாக அமைவது, உணர்வில் தைக்குமாறு உரைப்பது புதுக்கவிதை” எனத் தமிழண்ணல் குறிப்பிடுவர்.

தமிழ்க் கவிதை உலகிற்கு எழுச்சியாக இருந்த பாரதியாரே “வசன கவிதை” பாடி புதுக்கவிதையின் முன்னோடி ஆகின்றார். மணிக்கொடி போன்ற பத்திரிக்கைகள் புதுக்கவிதை வளர்ச்சிக்கு உதவின. ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் போன்றவர்கள் தொடக்ககாலத்தில் புதுக்கவிதை முயற்சியில் இறங்கியவர்கள் ஆவார்கள். பிற்காலத்தில் சரஸ்வதி, எழுத்து, வானம்பாடி போன்ற பத்திரிக்கைகள் புதுக்கவிதை இயக்கத்திற்கு ஆதரவு தந்தன.

மு. மேத்தா, அப்துல் ரகுமான், நா. காமராசன், சிற்பி, வைரமுத்து முதலானோர் புதுக்கவிதைக்கு வளம் சேர்த்தார்கள். இனிவரும் பகுதிகளில் புதுக்கவிதையாளர்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

## 14.2.1 ந. பிச்சமூர்த்தி

பாரதிக்குப் பின் புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தவர் ந. பிச்சமூர்த்தி ஆவார். இவருடைய கவிதைத் தொகுப்புகளில் காட்டுவாத்து, வழித்துணை குறிப்பிடத் தக்கவை. ஆழமான சிந்தனைகளைப் புதுக்கவிதைகளில் பரப்பியவர். இவரது படைப்புகள் மணிக்கொடி, எழுத்து போன்ற இதழ்களில் வெளிவந்தன. இவர் தொடக்க காலங்களில் "பிசூ" என்ற புனைப்பெயரில் கவிதை எழுதினார். கிளிக்குஞ்சு, பிரார்த்தனை, தீக்குளி போன்ற கவிதைகள் ஆரம்ப காலத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

ந.பி.யின் கவிதைகள் அழகானவையாகவும் மரபுவழிக் கவிதைபோல் தோற்றம் உடையதாகவும் ஓசை நயமும்,"செவி நுகர் செஞ்சொல் ஓட்டமும்" மிகுந்தவை. இதற்கு "அக்காக்குருவி" சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சித்திரைச் சூரியன் செஞ்சூலம் பாய்ச்சலால்
ஆற்றுமணல் வெள்ளம் அனலாகக் காய்ந்தது
.................
வானப் பகைப்புல சித்திர மூங்கிலும்
மொக்கின் வரிசையும் மலர்களின் சூழ்ச்சியும்
கானமே உயிர்மூச்சாய்க் கொள்ளும் பறவையும்
கொக்கின் வர்ணங்கொல் கரையோர நாணலும்

எனக் கவிதை மேலே மேலே வளர்ந்து அக்காவிற்காக ஏங்கும் ஒற்றைக் குயிலின் சோகத்துடன் முடிகிறது. சமூக நனவுகளை ந.பி.யின. கவிதைகள் உணர்த்துகின்றன.

## 14.2.2. நா. காமராசன்

இவர் தொடக்க காலங்களில் மரபுக்கவிதை எழுதியவர். இவர் தமது சிந்தனைகளைப் புதுக்கவிதைகளில் அள்ளித் தருகின்றார். காமராசனின் கவிதைகள் புதுயுகத்தில் புதிய பரிணாமங்களைத் தேடுகின்றன. பிறமொழிக் கலப்பால் வளர்ந்த புதுக்கவிதையில் தமது சிந்தனைகளையும் மறுமலர்ச்சித் தோற்றங்கள் உருவாக்கியவர். காமராசனின் படைப்புகளில் கறுப்பு மலர்கள் சிறப்புப் பெற்ற கவிதைத் தொகுப்பு ஆகும்.

நா. காமராசனின் இயற்கையை ரசிக்கும் தன்மை வியப்பிற்குரியது. கறுப்பு மலர்கள் தொகுதியில் இடம்பெற்றுள்ள "புல்" என்னும் கவிதையில்

வாள்முளைத்த மண்ணே
வசந்தத்தின் பச்சை முத்திரையே
உடல்மெலிந்த தாவரமே

உன்னைப் பனித்துளிகளின்
படுக்கைஅறை என்பேன்

என அழகாகப் புல்லை வருணிக்கிறார்.

மாளிகைக்குப் பெர்மிட்
சேரிக்குக் கைவிலங்கு

எனச் சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பிறமொழிக் கலப்போடு சாடுகின்றார்.

இவரது படைப்புகளில் அடிமைத்தனம், ஏற்றத்தாழ்வுகள், நீதியின்மை போன்ற பல கருத்துகளை எடுத்துரைக்கின்றார்.

## 14.2.3 மு. மேத்தா

மேத்தாவின் கவிதைகள் ஆழமான சிந்தனைகளைத் திட்டவட்டமாகக் கூறும் வகையில் உள்ளன. இவருடைய கண்ணீர்ப் பூக்கள் சிறந்த படைப்பாக விளங்குகின்றது. இவரது கவிதைகள் வானம்பாடி, தாமரை போன்ற சிறந்த இலக்கிய ஏடுகளில் வெளிவந்தன. தீபம் இதழின் மூலம் வாசகர் உள்ளத்தில் நன்கு அறியப்பட்டார். இவருடைய தேசப் பிதாவிற்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி என்ற கவிதை எல்லோருடைய வரவேற்பையும் பெற்றது. ஊர்வலம், கண்ணீர்ப்பூக்கள் என்னும் கவிதைத் தொகுப்புகள் சிறப்பானவை.

மேத்தா இலக்கண மரபை நன்கு அறிந்தவர். தொடக்க காலங்களில் மரபுக் கவிதைகள் பல இயற்றினார். இருப்பினும் புதுக்கவிதைகள்தான் கவிதை உலகில் அவரை இனம் காட்டியது.

இவருடைய கவிதைகள் அறிவுறுத்தல், ஆழ்ந்த சிந்தனைகள் மட்டுமின்றி இன்புறும் வகையில் காணப்பெறுகின்றன.

## 14.2.4 அப்துல் ரகுமான்

புதுக்கவிதை வரலாற்றில் அப்துல் ரகுமானுக்குச் சிறப்பான இடமுண்டு. புதுக்கவிதைக் கவிஞர்கள் பெரும்பாலும் எழுத்து இதழைச் சார்ந்தும் வானம்பாடி முதலிய பிற இதழ்களைச் சார்ந்தும் புதுக்கவிதைக் கவிஞர்களாக உருவானார்கள். ஆனால் இவர் அவ்வகையைச் சாராமல் தனித்தன்மையுடன் வளர்ந்து புதுக்கவிதைத் துறைக்குப் பங்காற்றியவர்.

இவர் உருது, பாரசீகம் போன்ற மொழிகளை அறிந்தவர். அரபுமொழிக் கவிஞரான கலீல் கிப்ரானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தாகூர், ஹூடன், சேக்ஸ்பியர், பைரன் போன்றோர்களின் படைப்புகளில் தனிப்பட்ட ஆர்வமுடையவர். மரபுக் கவிஞராகத் தோற்றம்பெற்ற இவர் ஆங்கிலக் கல்வியறிவால் புதுக்கவிதைத் துறையில் கவனம் செலுத்திச் சிறப்புப் பெற்றவர். மீமெய்ம்மையியம் போன்ற மேனாட்டுக் கவிதைப் போக்கில் ஆர்வம் காட்டியவர்.

அப்துல் ரகுமான் தம் கவிதையின் பிறப்புக் குறித்து “ஆலாபனை” என்ற கவிதைத் தொகுப்பில் கூறுவதாவது :

என் ஆறாவது விரல்வழியே

சிலுவையிலிருந்து
வடிகிறது ரத்தம்
ஆம்
என் மாம்சம்
வார்த்தையாகிறது

என்று குறிப்பிடுகிறார்.

தன் கவிதைப் படைப்பின் மேன்மை குறித்து “முன்னுரையாக ஒரு விண்ணப்பம்” என்ற தலைப்பில் பாடியுள்ளார். இக்கவிதை இவரது “பால்வீதி”என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

இவரது கவிதை மலர்களில் இருக்கும் மகரந்தம் எடுத்துச் செல்லும் வண்டுகளையே சூலாக்கும் வல்லமை பெற்றிருக்கிறது. அத்தகைய சிறப்புப் பொருந்திய தன் கவிதை மலர்களை அர்ச்சனைக்காகப் பறித்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கின்றார். இவர் இயற்கையைப் பாடும்போது கூடச் சமுதாயச் சிந்தனையுடன் பாடுகிற “சமுதாயக் கவிஞராக” இருக்கிறார்.

இவர் பால்வீதி, நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, முட்டைவாசிகள், ஆலாபனை போன்ற கவிதைத் தொகுப்புக்களை உருவாக்கியுள்ளார். தமிழ் வளர்ச்சி மன்றம் இவருக்குக் “கவிக்கோ” என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்திருக்கின்றது.

## 14.2.5 வைரமுத்து

வைரமுத்து இக்காலப் புதுக்கவிதையாளர்களில் குறிப்பிடத் தக்கவர் ஆவார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் பயின்றவர். இப்பொழுது திரைப்படப் பாடலாசிரியராக உள்ளார். இவர் சிறந்த பாடலாசிரியர் விருதினைப் பலமுறை பெற்றுள்ளார். கற்பனை நயம் சிறக்க கவியாற்றும் வல்லமை உடையவர்.

திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கொடிமரத்தின் வேர்கள், இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, மௌனத்தின் சப்தங்கள் முதலியன வைரமுத்துவின் கவிதைப் படைப்புகள் ஆகும். அகவயம், புறவயம் கலந்த கவிதைகளைத் திறம்பட எழுதியுள்ளார். சமுதாயத்தில் காணப்பெறும் பிளவுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இவரது கவிதைகள்எனில் மிகையாகாது.

குடும்பநிலை, காதல், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, வரதட்சணைக் கொடுமை, அரசியல், தேசம் என வைரமுத்துவின் கவிப்பார்வை விரிந்து செல்கிறது.

வைரமுத்துவின் அரசியல், தேசியம், விடுதலை பற்றிய கவிதைகள் ஒவ்வொன்றும் சாட்டையடியாய் விழுகின்றன.

வைரமுத்துவின் கவிதைகள் அழுத்தமான சொல்லாட்சி, புதிய சொல்லாட்சி ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றன. சமூகவிமர்சனம் அங்கதத்தொனி மேலிடக் காணப்பெறுகிறது. தமிழுக்கும் வாழ்க்கைக்கும்

குறிப்பு

புதிய பரிமாணங்களை வைரமுத்துவின் கவிதைகள் கொடுக்கின்றன. இளைய தலைமுறையினர் உள்ளத்தில் எழுச்சியும் வேகமும் உண்டாக்குவது வைரமுத்துவின் கவித்திறம்.

**2 மதிப்பெண் வினாக்கள்**

**1. முடியரசன் எழுதிய காப்பியங்கள் யாவை ?**

பூங்கொடி, வீரகாவியம் என்பன முடியரசன் எழுதிய காப்பியங்கள் ஆகும்.

**2. புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் யார் ?**

புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் ந.பிச்சமூர்த்தி ஆவார்.

**3. மேத்தாவின் புதுக்கவிதைத் தொகுப்புகள் சிலவற்றைக் கூறுக.**

ஊர்வலம், கண்ணீர்ப்பூக்கள்

**5 மதிப்பெண் வினாக்கள்**

**1. முடியரசன் கவிதைத் தொண்டினைப் பற்றி எழுதுக.**

மரபுக் கவிஞர்களுள் இன்றைய நிலையில் மிகச் சிறந்த கவிஞராகப் போற்றப் பெறுபவர் முடியரசன் ஆவார். புதுக்கவிதைத் துறைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தவர். மரபுக் கவிதைகள் எழுதிய கவிஞர்கள் பலர் புதுக்கவிதை எழுதத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்தவர். ஆனால் இவர் மரபு நிலையில் மாறாது கவிதை எழுதினார். “மறந்தும் புறந்தொழா மாந்தர்” போன்று விளங்கினார். பூங்கொடி, வீரகாவியம் என்பன இவர் இயற்றிய காப்பியங்கள். இவரது கவிதைகள் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன.

“ஊன்றுகோல் எனப் பண்டித மணியைப் பற்றி ஒரு காப்பியம் இயற்றியுள்ளார். பாவேந்தர் போன்று தமிழ்ப்பற்று மிக்க பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

முடியரசன் கவிதைகள், கவியரங்கில் முடியரசன் என்பன இவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும். “பிறைமதியை விண்ணிடத் தெறிந்த வெள்ளைப் பூசணிக் கீற்றோ” என்று கற்பனை நயம் மிகப் பாடுகிறார்.

முடியரசனின் பூங்கொடிக் காவியம் மொழிப் போராட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் எழுந்த தேசியக் காப்பியமாகப் பூங்கொடி விளங்குகிறது. மணிமேகலைக் காப்பியத்தின் மறு வடிவமாக பூங்கொடிக் காப்பியம் அமைந்துள்ளதை உணரலாம்.

**2. புதுக்கவிதை வளர்ச்சிநிலை குறித்து எழுதுக.**

மேலை நாடுகளில் “Free Verse” என்கிற புதுக்கவிதை வால்ட் விட்மனால் தோற்றுவிக்கப் பட்டது. புதிதாகத் தோன்றிய இலக்கியக் கோட்பாடுகள் புதுக்கவிதையை ஆதரித்தன. ஆங்கிலக் கல்விமுறையால் தமிழுக்குள் புதுக்கவிதை நுழைந்தது. “யாப்பைப் பற்றிக் கவலைப்படாதது,

கருத்து வடிவமே வடிவமெனக் கொண்டது, சில சமயம் சித்திரக் கதைகளை ஒப்பது, சிலேடையில் மீண்டும் ஈடுபடுவது, ஒளிவீச்சுப் போல அறிவு வீச்சாக அமைவது, உணர்வில் தைக்குமாறு உரைப்பது புதுக்கவிதை” எனத் தமிழண்ணல் குறிப்பிடுவர்.

தமிழ்க் கவிதை உலகிற்கு எழுச்சியாக இருந்த பாரதியாரே “வசன கவிதை” பாடி புதுக்கவிதையின் முன்னோடி ஆகின்றார். மணிக்கொடி போன்ற பத்திரிக்கைகள் புதுக்கவிதை வளர்ச்சிக்கு உதவின. ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் போன்றவர்கள் தொடக்ககாலத்தில் புதுக்கவிதை முயற்சியில் இறங்கியவர்கள் ஆவார்கள். பிற்காலத்தில் சரஸ்வதி, எழுத்து, வானம்பாடி போன்ற பத்திரிக்கைகள் புதுக்கவிதை இயக்கத்திற்கு ஆதரவு தந்தன.

மு. மேத்தா, அப்துல் ரகுமான், நா. காமராசன், சிற்பி, வைரமுத்து முதலானோர் புதுக்கவிதைக்கு வளம் சேர்த்தார்கள். இனிவரும் பகுதிகளில் புதுக்கவிதையாளர்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**10 மதிப்பெண் வினாக்கள்**

**1. புதுக்கவிதை எழுத்தாளர்கள் பற்றிக் கட்டுரை வடிவில் விடை தருக.**

விடை : 14.2.1 , 14.2.2, 14.2.3, 14.2.4, 14.2.5 இல் உள்ள பகுதிகளை எழுத வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

**1. அப்துல்ரகுமான் எந்த அரபுக் கவிஞரிடம் ஈடுபாடு கொண்டவர்?**

**2. இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல என்னும் நூல் யாருடைய கவிதைத் தொகுப்பு ?**

**3. கறுப்பு மலர்கள் யாருடைய கவிதை நூல் ?**

# அழகப்பா பல்கலைக்கழகம்
# தொலைநிலைக் கல்வி இயக்ககம்
## தாள் : 10733 தமிழிலக்கிய வரலாறு
## மாதிரி வினாத்தாள்

நேரம் : 3 மணி மதிப்பெண் : 75

### பகுதி – அ (10x2=20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :

1. தனிநாயகம் அடிகள் தமிழை எவ்வாறு பாராட்டுகிறார் ?
2. ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் யாவை ?
3. எட்டுத்தொகையில் அகநூல்கள் எத்தனை அவை யாவை ?
4. பழமொழி நானூறின் ஆசிரியர் யார் ?
5. மணிப்பிரவாள நடை என்பது யாது ?
6. நம்மாழ்வாரின் சீடர் என்று அழைக்கப்படுபவர் யார் ?
7. பரணி யாருக்காகப் பாடப்பெறுவது ?
8. வீரமா முனிவர் எழுதிய உரைநடை நூல்கள் யாவை ?
9. முதல் மூன்று நாவல்கள் யாவை ? அவற்றை எழுதியவர்கள் யார்?
10. மரபுக் கவிஞர்கள் யாருடைய பரம்பரையினர் என் அழைக்கப்பட்டனர் ?

### பகுதி – ஆ (5x5=25)

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

11. (அ) தொல்காப்பியத்தின் அமைப்பினை விளக்குக (அல்லது)

    (ஆ) பிற்கால இலக்கண நூல்கள் பற்றி எழுதுக.

12. (அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகநூல்கள் பற்றி எழுதுக (அல்லது)

    (ஆ) நாலடியார் பற்றி விரித்துரைக்க.

13. (அ) இரட்டைக்காப்பியங்கள் பற்றி விளக்கி எழுதுக (அல்லது)

    (ஆ) ஆழ்வார்களின் தமிழ்ப்பணி பற்றி எழுதுக.

14. (அ) திருமந்திரம் பற்றி விளக்குக (அல்லது)

    (ஆ) கலம்பகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

15. (அ) சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் பெறும் இடம் குறித்து எழுதுக

    (அல்லது)

    (ஆ) முடியரசனின் கவிதைத் தொண்டினை விளக்குக.

### பகுதி - இ (3x10=30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக :

16. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து எழுதுக.
17. திருக்குறளைப் பற்றி விளக்கி எழுதுக.
18. இசுலாமியரின் சிற்றிலக்கியத்தொண்டு பற்றி விளக்குக.
19. பாரதியார் மரபுக் கவிதையில் பெறும் இடம் பற்றி எழுதுக.
20. புதுக்கவிதை எழுத்தாளர்கள் பற்றிக் கட்டுரை வடிவில் விடை தருக.